சாண்டில்யன்

ராஜ பேரிகை

வானதி பதிப்பகம்

ராஜ பேரிகை

சாண்டில்யன்

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

வங்கக்கு
பாரதீய பாஷா
பரிஷத்தின் விசஷ
வீருது பெற்ற
நாவல்

ஸ்ரீ சாண்டில்யன்
ஸர்வசிரேஷ்ட கிரந்தம்
வானதி வெளியீடு

இரண்டாம் பாகம்

www.thamizhthenee.blogspot.com

www.thamizhthenee.blogspot.com

1.அல் - அலீம் * (ஜல்)

புதுச்சேரி அன்று மணக்கோலம் பூண்டு நின்றது. நகரெங்கும் தோரணங்களும் பிரெஞ்சுக் கொடிகளும் அற்புதமாகக் காட்சியளித்தன. கிட்டத்தட்ட நகரின் மத்தியிலும் கடற்கரையிலிருந்து அதிக தூரம் இல்லாமலும் கட்டப்பட்டிருந்த புதுவை கவர்னரின் மாளிகையில் பிரெஞ்சு வெற்றிக்கு அறிகுறியாகச் சின்னங்கள் பலவும் காணப்பட்டன. புரவியேறித் துப்பாக்கிகளைத் தூக்கிப் பிடித்துப் பிரெஞ்சு சோல்ஜர்கள் கவர்னரின் அரண்மனையைச் சுற்றிக் காவல் கோஷமிட்டு உலவிக் கொண்டிருந்தனர். யாருக்காவது அடிமைப்பட்டு வாழ்வதென்று உறுதி பூண்டிருந்த தமிழக மக்களும் பிரெஞ்சு உற்சாகத்தைத் தங்கள் சொந்த உற்சாகமாக மதித்து, தங்கள் வீடு களுக்கு முன்னால் நீர் தெளித்துப் பெருங் கோலங்களைப் போட்டிருந்தனர்.

பிரெஞ்சுக்காரர்கள் கீழ் வேலை செய்து கொண்டிருந்த தமிழ் உத்தியோகஸ்தர்கள் தலைப்பாகைகளையும் கோட்டுகளையும் அணிந்து கம்பீரத்துடன் உலாவிக்கொண் டிருந்தாலும், உத்தியோகம், அடிமைத் தன்மை வாய்ந்ததாகையால் பபூன்களைப் போல் காட்சியளித்து அரை குறை பிரெஞ்சு பாஷையில் பேசிக்கொண்டு வீதிகளில் உலாவிக்கொண்டிருந்தனர். அவர்களில் பிரெஞ்சு சிப்பாய்களாகி விட்டவர்கள் எப்போதும் தாங்கள் வெள்ளைக்காரர்களின் பலி ஆடுகள் என்பதை உணர்ந்திருந்தும், அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் பிரெஞ்சுப் படைத்தலைவர்கள் உத்தரவுப்படி நகரின் மர்ம மூலைகளில் காவல் புரிய அணிவகுத்துச் சென்று கொண்டிருந்தார்கள். அந்த அணிவகுப்பு சீராக நடைபெறுவதற்காகப் பிரெஞ்சு டமாரங்கள் ஆங்காங்கு ராணுவ

---

* அல்-அலீம்-அல்லாவின் (ஜல்) 99 நாமங்களில் ஒன்று. எல்லாம் அவருக்குத் தெரியும் என்பது இதன் பொருள். The Quran translated by Palmer - Edited by F. Maxmuller. Page IXVII.

முறையில் ஒலித்துக்கொண்டிருந்தன. நகரின் பெருவீதிகளில் நடுவிலிருந்த கவர்னரின் மாளிகை செல்லும் வீதியில் தோரணங்களின் இடையே பெரும் பூக்கூடைகள் புஷ்பங்களுடன் மூடப்பட்டு வரும் பிரமுகர் தலையில் பூச்சொரியத் தயாராக இருந்தன.

பெரும் தூண்களைக் கொண்ட அகண்டமான பிரெஞ்சுக் கவர்னர் மாளிகையின் நடுமண்டபத்தின் அலங்காரம், நகர அலங்காரத்தைத் தூக்கியடிக்கும் வண்ணம் செய்யப்பட்டிருந்தது. கவர்னர் அமர, சிம்மாசனம் போல் போடப்பட்டிருந்த பெரும் நாற்காலிக்குப் பின்னாலிருந்த சுவரில் பிரெஞ்சுக் கொடியும் பிரெஞ்சுச் சாம்ராஜ்யச் சின்னங்களும் மிக அழகாக அமைக்கப்பட்டிருந்தன. கவர்னர் சிம்மாசனத்திலிருந்து இளம்பிய செம்பட்டு நார்ப் பாய் மண்டபத்தையும் தாண்டி வெளியிலும் சென்று பெரும் பாதைப் போல் ஓடிக்கொண்டிருந்தது.

வெள்ளியாலும் தங்கத்தாலும் இழைக்கப்பட்ட பிடிகளை உடைய கவர்னர் சிம்மாசனத்திலிருந்த மேடைக்குச் சற்றுக் கீழே இன்னும் இரண்டு சிம்மாசனங்கள் போடப்பட்டிருந்தன. அவற்றிலிருந்து சிறிது தூரம் தள்ளி, சிவப்பு நடைபாதையின் இருபுறங்களிலும் சுமார் இருநூறு நாற்காலிகளுக்கு மேல் வரிசையாகப் போடப்பட்டிருந்தபடியால் பெரும் விழாவொன்று நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. அந்த மண்டபக் கூரையிலிருந்து தொங்கிய நானாவித வர்ண ஜால விளக்குகள் அது பகலாயிருந்தும் கூட எரிந்து கொண்டிதானிருந்தன.

இப்படி அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்த மாளிகை மண்டபத்தின் உள்ளறையில் பிரெஞ்சு கவர்னர் டூப்ளே தீவிர சிந்தனையுடன் அங்குமிங்கும் நடமாடிக்கொண்டிருந்தார். ஐம்பது வயதைத் தாண்டியிருந்த அவருடைய வீர வதனத்தில் வயதுக்கான சுருக்கங்களோ வேறு அடையாளங்களோ காணப்படாவிட்டாலும் தலைமயிர் மட்டும் ஓரிரு இடங்களில் வெளுத்திருந்தது. இத்தனைக்கும் அவர் கண்களில் மகிழ்ச்சி தாண்டவமாடிக்கொண் டிருந்தது. ''இனி பயமும் இல்லை, எதிர்ப்புமில்லை'' என்று டூப்ளே பிரெஞ்சு மொழியில் ஒரு முறைக்கு இருமுறை இரைந்தே சொல்லிக் கொண்டார். அத்துடன் சற்று எட்டவிருந்த மேஜையிலிருந்த தமது 'விக்' கையும் எடுத்துத் தலைமீது அழகாகச் செருகிக்கொண்டு எதிரிலிருந்த நிலைக் கண்ணாடியில் அது சரியாகப் பொருந்தியிருக்கிறதா என்றும் பார்த்துக் கொண்டார்.

அதே அறையின் ஒரு மூலையில் ஒரு சுவரில் பிரெஞ்சு வாலிபன் ஒருவன் சாய்ந்து கையை மார்பில் கட்டிக் கொண்டு பூர்ண ராணுவ உடையில் நின்று கொண்டிருந்தான். பிரிட்டிஷ்

தரப்பில் கிளைவ் எத்தனை அறிவாளியோ அத்தனை அறிவாளியென்று புகழ்பட்டவனும், அரும்பெரும் காரியங்களைச் சாதித்தவனும், இன்னும் இந்திய சரித்திரத்தில் இணையிலா இடம் பெற்றிருப்பவனுமாக *காலஸ்தாவ் மான்ஷயா டி புஸ்ஸி மட்டும் எந்த வித உற்சாகத்தையும் முகத்தில் காட்டாமல் நின்று கொண்டிருந்தான்.

அது மட்டுமல்ல. ரட்டிகளைப் பளபளத்த அவன் கண்களில் சிறிது அருவருப்பும் தெரிந்தது. 'விக்' கைத் தலையில் மாட்டிக்கொண்டு முகத்தைச் சுற்றிலும் அழகிய சுருள் மயிர்கள் தொங்கக் காட்சியளித்த கவர்னர் டூப்ளே அவனைத் திரும்பி நோக்கினார், கூர்ந்து பல விநாடிகள். பிறகுக் கேட்டார், ''கேப்டன் புஸ்ஸி ! உனக்கு நமது வெற்றியில் மகிழ்ச்சியில்லை போல் தெரிகிறது'' என்று.

டி புஸ்ஸி உடனடியாகப் பதில் சொல்லவில்லை. சொன்ன போதும் அவன் சொற்களில் உற்சாகமில்லை. ''பூர்த்தியான வெற்றியில் தான் எனக்கு எப்பொழுதும் மகிழ்ச்சி உண்டு'' என்று அவன் கூறிய பதிலில் சற்று எரிச்சலும் கலந்திருந்தது.

கவர்னர் டூப்ளே அவனை மீண்டும் குத்தும் முறையில் கேட்டார், '' ஆம்பூர் போரில் ஆற்காட்டு நவாப் அன்வருதீன் தலை தரையில் உருளவில்லையா ?'' என்று.

'' ஆம். உருண்டது ஆகஸ்ட் 3-ஆம் தேதி'' என்றான் புஸ்ஸி.

'' தேதியைக் கூட நினைவு வைத்துக் கொண்டிருக்கிறாய்'' என்று சிலாகித்தார் டூப்ளே.

''முக்கிய தேதிகளை, நிகழ்ச்சிகளை நான் மறப்பதில்லை'' என்றான் புஸ்ஸி.

''அன்வருதீன் நமது எதிரி... அவனை அழித்துவிட்டோம்.''

'' இல்லை.''

'' இல்லையா ! ''

'' ஆம், இல்லை. இந்த ஆற்காட்டு நவாபுகளை யாரும் அழிக்க வேண்டியதில்லை. அவர்களே ஒருவருக்கொருவர் கொன்று கொள்கிறார்கள்.''

'' இருந்தாலும் பிரெஞ்சு உதவியில்லாவிட்டால் இது சாத்தியமல்ல.''

'' ஆம்.''

---

* "Our Indian Empire" - by C. Mac Furlan - Vol. 1 Page 16. Also refer Index to Colonel Mallesons "Lord Clive".

'' இப்பொழுது நம்து அடிமைகள், இல்லை இல்லை, நண்பர்கள் முஸபர்ஜங்கும் சந்தா சாகிபும் தட்சிண சுபாவையும் ஆற்காட்டையும் ஆளப் போகிறார்கள்.''

''ஏன் ஆண்டு கொண்டிருக்கிறார்கள். ஆனால்...''

''ஆனால்?'' டூப்ளேயின் குரலோடு புருவங்களும் எழுந்தன கேள்வி கேட்கும் முறையில்.

''எத்தனை நாள் ஆளப் போகிறார்கள் என்பது தெரிய வேண்டும்'' என்றான் புஸ்ஸி.

எதற்கும் நிதானத்தை இழக்காத டூப்ளே கூட அன்று நிதானத்தை இழந்தார். ''புஸ்ஸி ! நன்றாகக் கேள். ஆற்காட்டு நவாப் அன்வருதீன் மாண்டுவிட்டான். அவன் மூத்த மகன் சந்தா சாகிபுவிடம் சிறையிலிருக்கிறான். இளைய மகனான * 'கம்பெனி நவாப்' திருச்சிக்கு ஓடிவிட்டான்' என்று சொல்லிக் கொண்டு போன டூப்ளே சிறிது இகழ்ச்சி நகை நகைத்தார்.

டி புஸ்ஸி அந்த நகைப்பில் கலந்து கொள்ளவில்லை. டூப்ளேயே மேற்கொண்டு பேசினார். ''தவிர, பிரிட்டிஷ் அட்மிரல் போஸ் கவானும் தமது கடற்படையுடன் சொந்த நாட்டுக்குப் புறப்பட்டு விட்டார். பிரிட்டிஷாரின் கடல் பலம் இப்போது மிகக் குறைவு. தட்சிணமோ நமது கையில் இருக்கிறது. தட்சிணத்தின் தலைவர்களான முஸபர்ஜங்கும் ஆற்காட்டு நவாப் சந்தாசாகேபும் இன்று நம்மைக் காண வருகிறார்கள். இப்பொழுது கிட்டத்தட்ட பிரெஞ்சு சாம்ராஜ்யம் இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்ட மாதிரி தான்'' என்றார் டூப்ளே உணர்ச்சியுடன்.

இதற்குப் புஸ்ஸி பதில் சொல்ல வில்லை. '' ஏன் வாளாவிருக்கிறாய்? '' என்று வினவினார் டூப்ளே.

''இன்னும் தட்சிண சபாவின் நிஜாம் நாஸிர்ஜங்தான். அவனுக்கு மகாராஷ்டிரர் உதவி இருக்கிறது. பிரிட்டிஷார் தஞ்சை மன்னனுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு தேவிக் கோட்டையைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். திருச்சிக் கோட்டை பலமானது. அதில் ஒளிந்து கொண்டிருக்கிறான் முகம்மது அலி. இந்த இடையூறுகள் இருக்கும் வரையில் பிரெஞ்சு வெற்றி பூர்த்தியில்லை'' என்று விளக்கினான் புஸ்ஸி.

அவன் சொல்வதில் விவேகம் இருந்த போதிலும் வெற்றிக் களிப்பிலிருந்த டூப்ளே, அதை ஒப்புக்கொள்ளவில்லை. அதே சமயத்தில் வெளியிலிருந்த பேரிகைகளும் சப்திக்கவே, ''புஸ்ஸி! முஸபர்ஜங்கும் சந்தாசாகிபும் வந்துவிட்டார்கள். வா, அவர்களை எதிர்கொள்வோம்'' என்று கூறி, அந்த அறையிலிருந்து

* Mohammed Ali remained the willing servant of the British. Hence his sobriquet "Company Nawab" - "Notes on Indian Hisyory" - by Karl Marx - Page 63.

கிளம்பி மண்டபத்துக்கு வந்து தமது சிம்மாசனத்தில் அமர்ந்தார். புஸ்ஸி மட்டும் அவர் ஆசனத்துக்குப் பின்னால் நின்று கொண்டான். வெளியில் மீண்டும் பேரிகை முழங்கியது. ஆரவாரங்கள் பெரிதாகக் கேட்டன. பிரெஞ்சு ராணுவ வாத்தியங்கள் இன்னிசை பாடின. மெள்ள மெள்ளச் சந்தாசாகிபும், முஸபர்ஜங்கும் பல முஸ்லீம் பிரபுக்கள் புடை சூழ மண்டபத்துக்குள் நுழைந்தார்கள். அவர்களுடன் அவர்களுக்கு வெற்றி வாங்கித் தந்த பிரெஞ்சு ஜெனரல்களும் நுழைந்தார்கள். சிறிது நேரத்தில் மண்டபம் நிரம்பியது.

''தக்ஷிண சுபேதார் நிஜாம் முஸபர்ஜங்! ஆற்காட்டு நவாப் சந்தாசாகிப்! உங்கள் இருவரையும் பிரெஞ்சு ஆட்சி வரவேற்கிறது. ஏற்கனவே இருந்த பிரெஞ்சு-ஆற்காட்டு உறவு இன்று மீண்டும் உறுதிப்படுகிறது'' என்று டூப்ளே மிகக் கம்பீரமான குரலில் அறிவித்தார்.

புது நிஜாமும், புது ஆற்காட்டு நவாபும் குனிந்து டூப்ளேக்குச் சலாம் செய்தார்கள். ''இந்த நட்பு வளரப் போகிறது, நமது எதிரிகளின் வீழ்ச்சித் துவங்கிவிட்டது'' என்றார் சந்தாசாகிப்.

''வாழ்க பிரெஞ்சு நட்பு'' என்றார் முஸபர்ஜங்.

பின்பு டூப்ளே கையை அசைக்க, இரண்டு கிரீடங்கள் இஸ்லாம் அடையாளங்களுடன் பக்கத்து அறையிலிருந்து தங்க தாம்பாளங்களில் கொண்டு வரப்பட்டன. அந்தக் கிரீடங்களைத் தமது கைகளாலேயே டூப்ளே சந்தா சாகிப்பின் தலையிலும், முஸபர்ஜங் தலையிலும் கவிழ்த்து அலங்கரித்தார்.

அத்துடன் அந்தச் சபை முழுவதும் கவர்னரின் விருந்து மண்டபத்துக்கு நகர்ந்தது. விருந்து மண்டபத்தின் அலங்காரத்தையும் படாடோபத்தையும் கண்ட புது நிஜாமும், புது நவாபும் பிரமித்தனர். தவிர கவர்னர் தமது இருபக்கங்களிலிருந்த ஆசனங்களில் அவர்களை அமர்த்திக் கொண்டதும் பட்லர்கள் உணவுகளைப் பிளேட்டுகளில் பரிமாறினார்கள். ஆடு மாடுகள் அன்று பலியாகியிருந்தது உணவு முறைகளிலிருந்து புலனாயிருந்ததால் எல்லாரும் மகிழ்ச்சியுடன் உணவருந்தினார்கள். கடைசியில் கண்ணாடிக் கோப்பைகளில் பரிமாறப்பட்ட குடிவகையறாக்களும் பிரமாதமாக இருந்தன. அத்தனையிலும் ஒரு விந்தை நடந்தது. சந்தா சாகிப் உணவை முடித்துக் கையைத் துடைத்துக் கொண்டதும் அவருக்கு ஒரு தனி பிளேட் துணியால் மூடப்பட்டு வந்தது. துணியை நீக்கிப் பார்த்த சந்தாசாகிபின் முகம் வெளுத்தது. பயத்தால் வியர்த்தது. பிளேட்டில் ஒரு சிறுக் காகிதத் துண்டு இருந்தது. அதிலிருந்தது ஒரே ஒரு வாக்கியந்தான். அல்-அலீம் (ஜல்) என்ற வாக்கியத்தைக் கொண்ட அந்தச் சீட்டை எடுத்த சந்தாசாகிபின் கை நடுங்கியது.

2. விட்ட கதை தொட்ட கதை

ஆற்காட்டு நவாப் அன்வருதீனை ஆம்பூரில் முறியடித்ததால் வெற்றி வெறியுடன் வந்திருந்தவரும் பழைய ஆற்காட் நவாப் தோஸ்த் ஆலியின் மூன்றாவது பெண்ணின் கணவரும், குலாம் ஹுசேன் தோஸ்த் கான் என்கிற இயற்பெயரை உடையவரும், திருச்சி, திண்டுக்கல் கோட்டைகளையும் மதுரையையும் முன்பு பிடித்து இஸ்லாமியக் கொடியை அங்கெல்லாம் நாட்டியவரும், மகா வீரனுமான சந்தாசாகிப் உணவருந்தி முடித்ததும் அவரிடம் பட்லர் ஒரு தட்டை நீட்டியதையும் அதிலிருந்து ஒரு சிறு காகிதத்தை எடுத்துப் பார்த்ததும், அவருடைய முகம் வெளுத்துக் கைகள் நடுங்கியதையும் காணத் தவறாத கவர்னர் டூப்ளே, பல கேள்விகளை உதிர்த்த தமது கண்களைச் சந்தாசாகிப்பின் மீது திருப்பினார்.

எதிரே உட்கார்ந்திருந்த புஸ்ஸியின் கூரிய கண்களும் சந்தாசாகிப்பைச் சந்தேகத்துடன் நோக்கின. சாதாரணமாக எதற்கும் கலங்காத சந்தாசாகிப் சட்டென்று அந்தக் கடிதத்தை மறைத்திருந்தாலும், மேற்கொண்டு சிறிது மது வகையறா கொண்டு வரச் சொல்லி அருந்தி தமது உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டிருந்தாலும், கவர்னர் டூப்ளேயின் கண்களை மட்டும் அவர் ஏமாற்ற முடியவில்லை.

விருந்தின் அடுத்த அம்சமாகப் 'பால்' என்ற ஆண்-பெண் நடன வகை துவங்கி அனைவரையும் ஆனந்தத்தில் ஆழ்த்தி, சந்தாசாகிபின் வெற்றிக்கு உச்ச முத்திரை வைத்திருக்க டூப்ளே ஏற்பாடு செய்திருந்தார். அத்தகைய நடனத்தை எதிர்பார்த்துப் பக்கத்து ஹாலில் பியானோவும் பிடில்களும் கூடப் பலமாக முழங்கின. ஆனால் அவை ஆனந்தத்தைக் குலைக்க வந்த சோக கீதத்தையே எழுப்பினாற்ப் போல் தோன்றியது சந்தாசாகிப்பின் செவிகளுக்கு. திடீரென்று தமது நண்பர் நிலை குலைந்ததற்குக் காரணத்தை அறியாத டூப்ளே தமது கண்கள் விடுத்த கேள்விகளுக்குப் பதில் ஏதும் கிடைக்காது போகவே, மெள்ளப் பக்கவாட்டில் குனிந்து, ''ஆற்காட்டின் புது நவாப்பின் அதிர்ச்சிக்கு எனக்குக் காரணம் தெரியவில்லை'' என்றார் மிக மெதுவாக.

அப்படிக் கவர்னர் குனிந்து கேட்டபோது அவர் அணிந்திருந்த 'விக்' கின் சுருள் குழல்கள் சந்தாசாகிப்பின் கன்னத்தைத் தடவியுங்கூட அமைதி ஏற்படவில்லை, ஆம்பூரின் வெற்றி வீரருக்கு. டூப்ளேயின் கேள்விக்குச் சந்தாசாகிப் பதில் ஏதும் சொல்லாமல் கையிலிருந்த சீட்டை மட்டும் நீட்டினார்.

உருது லிபியில் இருந்த அந்த வாசகத்தைப் படிக்க முடியாத டூப்ளே, ''யாரங்கே, நமது துபாஷை (துவிபாஷிகளை) கூப்பிடு'' என்று உத்தரவிட்டார்.

சந்தாசாகிப் உடனடியாகப் பேசினார் குரல் நடுங்க. ''வேண்டாம். யாரையும் அழைக்காதீர்கள்.''

''ஏன்?'' என்று வினவினார் டூப்ளே, அவர் நடுக்கத்திற்குக் காரணம் புரியாமல்.

''அதில் என்ன எழுதியிக்கிறது தெரியுமா?'' என்று மீண்டும் நடுங்கும் குரலில் சொன்னார் சந்தாசாகிப்.

''எனக்கு இந்த மொழி தெரியாதே'' என்றார் டூப்ளே.

'' இதைப் பகிரங்கமாகச் சொல்வதற்கில்லை'' என்றார் சந்தாசாகிப்.

''சரி, காகிதத்தைக் கையில் வைத்துக் கொள்ளுங்கள். நடனத்திற்குப் பிறகு, அதைப் பற்றிப் பேசுவோம்'' என்ற டூப்ளே, ஆசனத்தை விட்டு எழுந்திருக்கவே, மற்ற விருந்தினர்கள் அனைவரும் எழுந்தனர்.

பிரான்சு நாட்டு நாகரிகத்திற்கு ஏற்றபடி படாடோபமான ராணுவ உடையணிந்த பிரெஞ்சுக்காரரும், நானாவித வர்ண ஜாலங்களை உடையனவும், பலவிதமான 'ப்ரில்ஸ்'களை உடையனவுமான சிங்கார உடையணிந்ததால் தேவமகளிர்போல் காணப்பட்ட பிரெஞ்சு நாட்டுச் சிங்காரிகளும், எப்போதும் அதிகாரிகளைப் போல் உடையணிவதிலும் நடனமாடுவதிலும் பெருமை கொண்ட சுதேசிப் படை தலைவர்களும் அனைவருமே கவர்னர் எழுந்ததும் ஆசனங்களைவிட்டு எழுந்தார்கள். அவர் களுக்கு வழிகாட்டி முன் சென்ற கவர்னர் டூப்ளேயின் பின்னால் சந்தாசாகிப்பும் முஸபர்ஜங்கும், அவர்களுக்குப் பின்னால் மகாவீரனான டிபுஸ்ஸியும், அவனுக்குப் பின்னால் மற்றவர்களும் ஒழுங்காக நடனமண்டபத்திற்குள் நுழைந்தார்கள். நடனம் ஆரம்பமாக, கவர்னர் தனது மனைவியின் கையைக் கோத்துக் கொண்டதும், மற்ற வெள்ளைக்காரர்களும் வெள்ளைக்காரிகளும் அவரைத் தொடர்ந்து ஜோடி சேர்ந்து கைகளைக் கோத்துக் கொண்டு நடனத்துக்குத் தயாராயினர்.

அந்த மகோன்னதக் காட்சி யாரையும் மயக்கக் கூடியதானாலும் சந்தாசாகிப்பை மட்டும் அன்று மயக்கமுடியவில்லை. அவர் ஒதுங்கியே சிரமப்பட்டு மயங்கி நின்று கொண்டிருந்தார். அதைக் கண்ட டூப்ளே தமது கண்ணின் அசைப்பினால் டிபுஸ்ஸியை அருகில் அழைத்து, ''புஸ்ஸி! சந்தாசாகிப் ஏன் கலந்துகொள்ள வில்லை?'' என்று வினவினார், காரணம் அவருக்கு முன்னதாகத் தெரிந்திருந்தும்கூட.

''கலந்து கொண்டு விட்டார்'' என்றான் புஸ்ஸி மேலுக்கு மிக மரியாதையுடனும் உள்ளுக்குள் ஏளனச் சிரிப்புடனும்.

''எப்பொழுது?''

''முன்பே.''

''உனக்கு எப்படித் தெரியும்?''

''அதோ பாருங்கள் அவர் கால்கள் நடனமாடுகின்றன'' என்று நடுங்கிக் கொண்டிருந்த சந்தாசாகிப்பின் கால்களைச் சுட்டிக் காட்டினான் புஸ்ஸி.

கவர்னர் அந்த நகைச் சுவையை ரசித்ததால் சற்று இரைந்தே நகைத்தார். அத்துடன் புஸ்ஸியை நோக்கி, ''புஸ்ஸி! நீ அந்த இரண்டு நவாபுகளையும் அழைத்துக் கொண்டு போய் எனது அந்தரங்க அறையில் உட்கார வை. நான் சீக்கிரம் வருகிறேன்'' என்று உத்தரவிட்டார்.

டி புஸ்ஸியின் இதழ்கள் மிக விஷமமாக மடிந்தன. சரி என்பதற்கு அறிகுறியாக அவன் தலையை அசைத்த விதத்திலும் ஏளனம் இருந்தது. கவர்னரைச் சூழ்ந்திருந்த வெள்ளைக் கும்பலை விலக்கிக் கொண்டு எட்ட இருந்த சந்தாசாகிப்பை நெருங்கிய டிபுஸ்ஸி, ''நவாப்! தங்களைத் தமது தனியறைக்கு அழைத்துச் செல்ல கவர்னர் உத்தரவிட்டிருக்கிறார்'' என்றான்.

''ஏன்?'' என்றார் சந்தாசாகிப், மெள்ளத் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு.

''இங்கு ஆண்-பெண்கள் இணைந்தாடும் நடனந்தான் உண்டு'' என்றான் டிபுஸ்ஸி மிகுந்த மரியாதையுடன்.

''அதனால் என்ன?''

''தனி நபர் நடனம் அனுமதிக்கப்படுவதில்லை.''

''நீ சொல்வது எனக்கு புரியவில்லை.''

''உங்கள் கால்கள் நடனமாடத் துவங்கியதைத் தூரத்திலிருந்தே கவர்னர் பார்த்து விட்டார். மற்றவர்களும் பார்த்தால் வித்தியாசமாக நினைத்துக் கொள்வார்கள் என்று கவர்னர் கருதுகிறார்.''

சந்தாசாகிப் தமது கோபக் கண்களைப் புஸ்ஸியின் மீது நிலைக்க விட்டார் சில விநாடிகள். பிறகு சொன்னார்: ''சந்தாசாகிப்புடன் விளையாடுவது அபாயம்'' என்று.

''அது எனக்கு நன்றாகத் தெரியும்'' என்று பயந்தவன் போல் பதிலிறுத்தான் புஸ்ஸி.

''இந்த நாட்டுக்கு நேற்று வந்தவன் நீ, உனக்கு என்ன தெரியும்?'' என்று சீறினார் புது ஆற்காட்டு நவாப்.

''நீங்கள் புது நவாப்...' என்று இழுத்தான் புஸ்ஸி.

''ஆம்''

''பழைய கதைகள் எனக்குத் தெரியும்.''

''என்ன பழைய கதை?''

''ஆற்காட்டுக் கதை.''

''ஆற்காட்டுக் கதையா?''

''அனுமதி கொடுத்தால் சொல்கிறேன்.''

''சொல்,''சந்தாசாகிப்பின் ஆணைக் குரலில் அதிகாரமும் இருந்தது, அச்சமும் இருந்தது.

டி புஸ்ஸி மிகப் பணிவுடன் தொடங்கினான். கதையை.

''1740''-இல் தங்கள் மாமனார் தோஸ்த் ஆலி ஆற்காட்டு நவாபாய் இருந்தார். அவரைத் தாமல்சேரி கணவாயில் மகாராஷ்டிரர்கள் கொன்றார்கள். பிறகு சப்தர்ஆலி நவாப் ஆனார். தாங்கள் சப்தர் ஆலியை நம்பாமல் தங்கள் குடும்பத்தைப் புதுச்சேரியில் தங்க வைத்தீர்கள். சப்தர் ஆலி தனது குடும்பத்தை மதராஸில் ஆங்கிலேயரிடம் தங்க வைத்தார். சப்தர் ஆலிக்கு வேலூரில் இருந்த அவரது மைத்துனர் மூர்த்திசா ஆலி விஷம் வைத்ததாகவும், விஷம் வேலை செய்யத் தாமதமாகியதால் ஒரு பட்டாணியனை விட்டுக் கத்தியால் குத்தி முடித்து விட்டதாகவும் கேள்வி. அவரைக் கொலை செய்த பின்பு மதராஸிலிருந்த அவரது அடுத்த வாரிசு ஸையது முகமத்கான் என்ற குழந்தையும் பரலோகம் நோக்கிப் பறந்தது. பிறகு சமீபத்தில் தங்களால் மாண்ட அன்வருதீன் நவாப் ஆனார். அவரும் மூர்த்திசா ஆலியும் சேர்ந்து பழைய நவாப்பின் சிறுவனைத் தீர்த்து விட்டதாக வதந்தி உலவுகிறது. ஆற்காட்டு நவாப் பதவியைப் போல உயிர் உறிஞ்சும் சக்தி உலகத்தில் வேறெதுவும் கிடையாது போல் தோன்றுகிறது. இப்பொழுது தாங்கள் ஆற்காட்டு நவாப்...'' என்ற புஸ்ஸி அரைகுறையாகப் பேச்சை விட்டான்.

சந்தாசாகிபின் கண்களில் அச்சம் தெரிந்தது. ''அப்படியானால் அடுத்த பலி நான் என்கிறாயா?''என்று குழம்பிய குரலில்.

''சேசே! அப்படியெல்லாம் இருக்காது. கவலைப் படாதீர்கள்'' என்றான் புஸ்ஸி. அவன் சொன்னது ஆறுதலா அல்லது கேலியா என்பது புரியவில்லை சந்தாசாகிப்புக்கு.

இருந்தாலும் அதைப் பற்றிப் பேச்சை வளர்த்தாமல், ''கவர்னர் அறை எங்கே?'' என்று வினவினார்.

''என்னைத் தொடர்ந்து வாருங்கள்'' என்ற புஸ்ஸி மெல்ல அந்த மண்டபத்திலிருந்த ஒரு வாயில் மூலம் வெளியேறினான். அவனைத் தொடர்ந்து சந்தாசாகிப்பும் அவரைத் தொடர்ந்து முஸபர்ஜங்கும் சென்றார்கள். கவர்னர் தனி அறையில் அவர்களைத் தங்க வைத்த பின்பும் புஸ்ஸி வெளியில் செல்ல வில்லை. அவன் அங்கே நிற்பதைக் கண்ட சந்தாசாகிப், ''இனி நீ போகலாம்'' என்று உத்தரவு கொடுத்தார்.

''தங்களைத் தனியாக விட்டுவிட்டுப் போக உத்தரவு இல்லை'' என்றான் புஸ்ஸி.

''இதோ தான் முஸபர்ஜங் இருக்கிறாரே'' என்றார் சந்தாசாகிப் மீண்டும்.

''தாங்கள் பிரெஞ்சுக்காரர்களின் ஆற்காட்டு நவாப்'' என்று உணர்த்தினான் புஸ்ஸி.

''அதனால் என்ன?''

''தங்களைக் காப்பது எங்கள் கடமை.''

''இப்போது எனக்கு என்ன ஆபத்து வந்து விட்டது?''

''ஏதோ வந்திருக்க வேண்டும்.''

''உனக்கு எப்படித் தெரியும்?''

''நீங்கள் வீரர்.''

''அது சரி.''

''ஆனால் ஒரு சீட்டைப் படித்ததும் நடுங்கி விட்டீர்கள்.''

''ஆம்.ஆம். அது பயங்கரச் சீட்டுத்தான்'' என்று ஒப்புக் கொண்டார் சந்தாசாகிப்.

இத்தனைக்கும் முஸபர்ஜங் வாய் திறக்கவில்லை.

அவரையும் சீண்ட முற்பட்ட புஸ்ஸி, ''என்ன புது நிஜாம் வாய் திறக்க வில்லையே?'' என்றான் மெதுவாக.

''நான் இன்னும் நிஜாம் பதவியை அடைய வில்லை. நாஸர்ஜங் அந்த பதவியை வகிக்கிறான்'' என்றார் முஸபர்ஜங் சற்று உஷ்ணத்துடன்.

''அது சரியில்லை போல் இருக்கிறது?'' சீண்டினான் புஸ்ஸி.

''இல்லை.''

''நாஸர்ஜங் பழைய நிஜாமின் புதல்வரல்லவா?''

''ஆம். ஆனால் நான் அவர் பெண் வயிற்றுப் பேரன். என்னைத் தான் பழைய நிஜாம் தட்சிண சுபேதராராக நியமித்தார். அப்படி இருக்க...''

''அவர் மகன் நிஜாம் ஆவது தவறுதான்'' என்று ஒப்புக் கொண்டான் புஸ்ஸி.

''நீ புத்திசாலி'' என்று பாராட்டினார் முஸபர்ஜங்.

''இத்தனை புத்திக் கூட இல்லாவிட்டால் உங்களுக் கெல்லாம் உதவி செய்யும் பாக்கியம் எங்களுக்குக் கிடைக்குமா?'' என்றான் புஸ்ஸி விஷமமாக.

அந்தச் சமயத்தில் உள்ளே நுழைந்த டுப்ளே அறையிலிருந்த மூவரையும் மாறி மாறிச் சில விநாடிகள் கவனித்தார். புஸ்ஸியின் இதழ்களில் விஷமம் இருந்தது. சந்தாசாகிப்பின் வதனத்தில் சீற்றமும் அச்சமும் கலந்த சாயை படர்ந்து கிடந்தது. புஸ்ஸி ஏதோ விஷமம் செய்திருக்கிறான்

என்பதைக் கணப்போதில் புரிந்து கொண்ட டுப்ளே ஏதும் பேசாமல் தமது ஆசனத்தில் அமர்ந்து, ''புஸ்ஸி, கதவைச் சார்த்து'' என்று கட்டளையிட்டார்.

அவர் கட்டளைப்படி கதவைச் சாத்திய புஸ்ஸி அந்தக் கதவிலேயே சாய்ந்து கொண்டு நின்றான்.

கவர்னர் மற்ற இருவரில் சந்தா சாகிபின் மீதே முதலில் கேள்வியைத் தொடுத்தார். ''உமக்கு வந்த காகிதத்தில் என்ன எழுதியிருந்தது?'' என்று வினவினார் சர்வ சாதாரணமாக.

''அல்-அலீம் (ஜல்)'' என்றார் சந்தா சாகிப் குரல் தழுதழுக்க.

''அதற்கு என்ன அர்த்தம்?'' என்று வினவினார் டுப்ளே.

''அல்லா (ஸல்) எல்லாம் அறிந்தவர் என்று பொருள்'' என்று விளக்கினார் ஆற்காட்டு நவாப்.

''உலகத்தின் மதங்கள் எல்லாமே கடவுளைச் சகலமும் அறிந்தவராகத்தான் சொல்கின்றன.''

''ஆம்.''

''அப்படியானால் இந்த கடிதத்தைக் கண்டு ஏன் நடுங்கினீர்கள்?'' என்று சீற்றத்துடன் கேட்டார் டுப்ளே.

சந்தா சாகிபும் நிதானத்தில் இல்லை. ''இது...இது...'' என்று நடுக்கத்துடன் சொற்களை உதிர்த்தார்.

''சொல்லும்.'' டுப்ளேயின் குரல் இடியென முழங்கியது.

டுப்ளேயின் உத்தரவைக் கேட்டதும் இடியைக் கண்ட நாகமென நடுங்கினார் சந்தா சாகிப். அந்த இடி டுப்ளேயின் குரலிலிருந்து உண்டானதல்ல. பழைய நினைவுகள் பல கிளப்பி விட்ட இடியொன்று அவர் இதயத்தைத் தாக்கிச் சென்றது. அதன் காரணமாகச் சுய நிலை இழந்த சந்தா சாகிப் தம்மைத் திடப்படுத்திக் கொள்ளப் பல விநாடிகள் ஓடின. அப்படித் திடப் படுத்திக் கொண்ட பிறகும் கூட அவர் குரல் சற்று நடுக்கத்துடனேயே ஒலித்தது.

''கவர்னர் அவர்களே! அது பழைய கதை, பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பு விட்ட கதை, அது மீண்டும் என்னைத் தொடர்ந்திருக்கிறது. வந்திருக்கிற சீட்டு அதை உணர்த்துகிறது'' என்றார் சந்தா சாகிப் தட்டுத் தடுமாறி.

3. நடுங்கிய நவாப்

சந்தா சாகிபின் தடுமாற்றத்தையும், திகிலையும், சோகத்தையும் கண்டதால் புதிய நவாபின் உள்ளத்தில் பெரும் புயல் மூண்டிருப்பதை உணர்ந்த டூப்ளே, அவரை அனுதாபத்துடன் பார்த்தார். ''விளக்கமாகச் சொல்லுங்கள் நவாப்! எதுவாக இருந்தாலும் காப்பாற்ற நான் இருக்கிறேன்'' என்று ஆறுதலும் கூறினார் கவர்னர்.

ஆனால் சந்தா சாகிபின் இதயத்தில் கவர்னரின் சொற்கள் எந்தவித ஆறுதலையும் அளிக்கவில்லையென்பதை அவர் முகம் சந்தேகத்துக்கு இடமின்றிக் காட்டியது, ''இதிலியிருந்து என்னைக் காப்பாற்ற அல்லாவை (ஜல்)த் தவிர வேறு யாராலும் முடியாது. ஏனென்றால் அது அவர் மீது நான் இட்ட ஆணை'' என்று துன்பக் குரலில் கூறிய சந்தா சாகிப் மெள்ள விவரங்களைக் கூறத் தொடங்கினார்.

''ஆம். பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நடந்த கதை தான். அப்போது நான் திருச்சியை முற்றுகையிட்டிருந்தேன். அந்தத் திருச்சியை ஆட்சி செய்தவள் ஒரு பெண். நாயக்கர் வம்சத்தைச் சேர்ந்தவள். பெயர் மீனாட்சி. பல மாதங்கள் முற்றுகையிட்டும் அந்தக் கோட்டையை என்னால் பிடிக்க முடியவில்லை. போரால் பிடிக்க முடியாததைத் தந்திரத்தால் பிடிக்க முயன்றேன். அப்போது நாயக்கர் வம்சத்தில் அரியணை போட்டியிருந்தது. திருச்சியில் என்னைப் புகவிட்டால் ராணிக்கு நான் சகோதரனாக இருப்பேன், அவள் உறவினர்களை முறியடிக்க உதவுவேன்'' என்று ராணி மீனாட்சிக்குச் செய்தியனுப்பினேன். ராணியிடமிருந்து பதில் வந்தது.

அனுகூலமான பதில் தான். ஆனால் அதில் ஒரு சிக்கலும் இருந்தது. 'குர் ஆன் மீது சத்தியம் செய்தால் உங்களைக் கோட்டைக்குள் அனுமதிக்கிறேன்' என்று ராணி சொல்லி அனுப்பினாள். என் பாடு திண்டாட்டமாகிவிட்டது. குர்ஆன் மீது ஆணையிட்டால் அதை மீற முடியாது. என்ன செய்வது என்று அறியாமல் திண்டாடிய சமயத்தில் ஒரு யோசனை பிறந்தது. ஒரு செங்கல்லைப் பட்டுத் துணியால் மூடி ஒரு பலகையில் வைத்து, அதைக் குர்ஆன் என்று கூறிச் சத்தியம் செய்தால் என்ன என்று நினைத்தேன். அப்படியே செய்யவும் செய்தேன். 'அல்-ஆலீம்' (ஜல்) என்று கூறி ராணி மீனாட்சியையும், அவள் அரசையும் பாதுகாப்பதாக ஆணையிட்டேன். 'ஆல்-அமீன்' (ஜல்) குர் ஆனில் சொல்லப்படும் எல்லாம் வல்ல அல்லாவின் (ஜல்) 99 நாமங்களில் ஒன்று.''

ஆனால் கவர்னர், ''அது ஆணை ஆகாது. ஏனென்றால் பலகையிலிருந்தது குர் அன் அல்ல, செங்கல் வெறும் செங்கல்...'' என்றார். சந்தா சாகிபின் குரல் நடுங்கியது, குரல் தழுதுழுத்தது.

டூப்ளே, நவாபின் நடுக்கத்தையும் குரலில் ஒலித்த திகிலையும் கண்டு வெறுப்புக் கலந்த பார்வையொன்றை அவர் மீது செலுத்தினார். ''பிறகு என்ன நடந்தது?'' என்று அவர் கேள்வியிலும் அந்த வெறுப்பு பூர்ணமாக ஒலித்தது.

''திருச்சிக்கு உள்ளே நுழைந்ததும் கோட்டையை வசப்படுத்திக் கொண்டேன். ராணியைச் சிறையிலிட்டேன்'' என்றார் சந்தா சாகிப்.

''சகோதரராக நடந்து கொண்டீர்!'' என்றார் டூப்ளே இகழ்ச்சி நிரம்பிய குரலில்.

''இல்லை. நான் தவறு ஏதும் செய்யவில்லை. போருக்குத் தேவை தந்திரம். அதைக் கையாண்டேன்'' என்று உளறினார் சந்தா சாகிப். ''ஆனால் அந்தப் பாழும் ராணியும் தீக் குளித்துவிட்டாள்'' என்று ராணி ஏதோ தவறு செய்து விட்டது போல் குளறவும் செய்தார் ஆற்காட்டு நவாப்.

டூப்ளே, நவாபின் அழுகையைத் தாங்க முடியாமல் ஆசனத்திலிருந்து எழுந்து அறையில் சிறிது நேரம் சிந்தனையுடன் உலாவினார். பிறகு கேட்டார் சந்தா சாகிபை நோக்கி, ''அதற்காக இப்போது ஏன் பிராணனை விடுகிறீர்?'' என்று.

''அந்த விட்ட கதை தொட்ட கதையாகத் தொடர்கிறது. இப்பொழுது யாரோ ஒருவன் அதை நினைவுபடுத்துகிறான். என்னைப் பழிவாங்கப் பார்க்கிறான்'' என்றார் சந்தா சாகிப், பரிதாபக் குரலில்.

''யாரவன்?'' என்று வினவினார் டூப்ளே.

''இந்தச் சீட்டை அனுப்பியவன்'' என்று அதைக் கச்சையிலிருந்து எடுத்து மீண்டும் டூப்ளேயிடம் நீட்டினார்.

''அவன் பெயர் தெரியுமா?''

''தெரியாது.''

''பார்த்திருக்கிறீரா?''

''இல்லை.''

அந்தச் சமயத்தில் அறைக் கதவு இருமுறை தட்டப்பட்டதால் புஸ்ஸி ஒதுங்கிக் கதவைத் திறந்தான். டூப்ளேயின் மனைவி வெகு வேகமாக உள்ளே நுழைந்தாள். அவள் அழகிய வதனத்தில் சினம் மண்டிக் கிடந்தது.

''நடனத்தைப் பாதியில் விட்டு ஏன் வந்தீர்கள்?'' என்று கவர்னரை நோக்கி உஷ்ணம் கக்கும் சொற்களை உதிர்த்தாள்.

டூப்ளே அதற்கு உடனடியாகப் பதில் சொல்ல வில்லை. புஸ்ஸியே பதில் சொன்னான்; ''மேடம் நம்மையும் அறியாமல்

நமது மாளிகைக்குள் நமது நவாப்புக்கு ஒரு சீட்டு வந்திருக்கிறது.''

மேடம் டுப்ளேயின் சினம் அவள் முகத்திலிருந்து மறைந்தது. ''நம்மை அறியாமல் வரவில்லை. அதை அனுப்பியது நான் தான்'' என்றாள் அவள்.

''நீயா!'' டுப்ளே வாயைப் பிளந்தார்.

''ஆம். ஒரு வாலிபன் கொண்டு வந்து கொடுத்தான். அதை நவாப்புக்கு அனுப்பச் சொல்லிக் கெஞ்சினான்'' என்றாள் மேடம் டுப்ளே.

''அவன் யார், எப்படி இருந்தான்?'' என்று ஆத்திரத்துடன் வினவினார் சந்தா சாகிப்.

டுப்ளேயும் அதே கேள்வியைக் கேட்டார். மேடம் டுப்ளேயின் முகத்தில் மகிழ்ச்சி விரிந்தது. அழகிய உதடுகளில் மந்தகாசம் மலர்ந்தது. ''அவன் மிக அழகன்'' என்றாள்.

இதைக் கேட்ட டுப்ளே மட்டுமின்றி இரு நவாப்புகளும் கூடக் கவர்னரின் அழகிய மனைவியை வியப்புடன் உற்றுப் பார்த்தார்கள். மிக அபாயத்தைத் தரக்கூடிய ஒரு சீட்டைப் பற்றித் தாங்கள் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கையில், சீட்டை அத்தனை ரகசியமாக மாளிகைக்குள் அனுப்பியவனுடைய அழகைப்பற்றி மேடம் கூறியதும், அந்த மூவருக்கும் வியப்புடன் வெறுப்பும்கூட ஏற்பட்டது. அந்த வெறுப்பை டுப்ளே வெளிப்படையாகவே காட்டி, ''அவன் அழகைப் பற்றி எங்களுக்கு அக்கறையில்லை'' என்றார் சற்றுச் சினம் தொனித்த குரலில். அவர் அப்படிக் கேட்டது இரு நவாப்புகளுக்கும் சிறிது ஆறுதலைத் தந்தாலும் சிறிது நேரத்தில் அந்த ஆறுதல் பறந்தது.

மிக சுயேச்சையான சுபாவமுடையவளும், கவர்னர் டுப்ளேயை ஆட்டிப் படைத்துச் சுதேசிகள் அடிக்கும் சூறையில் தனக்கும் ஒரு பங்கைப் பெற்றுக் கொள்பவளும், மிக அழகியுமான மேடம் டுப்ளே, கவர்னரின் சினத்தைச் சிறிதும் லட்சியம் செய்யாமல், ''என்ன சொன்னீர்கள்!'' என்று மற்றுமொரு முறை வினவினாள்.

''அவன் அழகைப் பற்றி எங்களுக்கு அக்கறையில்லை என்று சொன்னேன்'' என்றார் கவர்னர்.

''எனக்கு அக்கறையிருக்கிறது'' என்றாள் மேடம் டுப்ளே வெகு அசட்டையாக.

''என்ன அக்கறை?'' என்று வினவினார் டுப்ளே.

''ஒரு வாலிபன், உங்கள் கட்டுக் காவல்களையெல்லாம் மீறி எனது அறையின் சமீபத்தில் உலவுகிறான். என்னைக் கண்டதும் அசைவற்று நிற்கிறான். பிறகு என்ன செய்தான்?'' இப்படிக் கேட்ட மேடம் களுக்கென்று சிரித்தாள்.

அப்போது டுப்ளேக்கு ஐம்பத்தைந்து வயது முடிந்தாலும் தேகத்தில் அயர்வோ புத்தியின் துடிப்பில் குறையவோ இல்லாததால் சற்று வேகத்துடன் கேட்டார்; ''என்ன செய்தான்?'' என்று.

மேடம் டுப்ளேயின் முகத்தில் மந்தகாசம் அதிகமாக விரிந்தது. அவள் தன் அழகிய சிற்றிடையைச் சிறிது வளைத்து, தலையை ஒரு புறம் சாய்த்து மிக அழகாக நின்றாள். ''இந்த நவாப்புகளாக இருந்தால் என்ன செய்வார்கள்?'' என்று வினவினாள் மிக மிருதுவான குரலில்.

''தலை தாழ்த்தி வணங்குவோம்'' என்றார் சந்தா சாகிப் கவர்னரைப் பதில் சொல்ல விடாமல்.

''அந்த வாலிபன் அப்படிச் செய்யவில்லை'' என்றாள் மேடம் அன்பு ததும்பும் குரலில்.

இப்படி அந்த இரு நவாப்புகளுக்கும் எதிரில் வேறொரு வாலிபனைப் பற்றி மேடம் டுப்ளே பேசியதால் கோபமுற்ற டுப்ளே, ''வேறு என்ன செய்தான்?'' என்று சீறினான் இரைந்தே.

டுப்ளேயின் கூக்குரலைக் கேட்டுக் கொண்டு கதவுக்கருகில் நின்ற புஸ்ஸியின் இதழ்களில் இந்தக் குடும்ப விவாதத்தைக் கண்டு புன்சிரிப்புத் தவழ்ந்தது. அதுவரையில் உரையாடலில் தலையிடாத அவளும், ''மேடம்! அந்த வாலிபன் நடத்தை தங்களுக்குப் பெரிதும் பிடித்திருக்கிறது'' என்று குத்திக் காட்டினான்.

''ஆம். புஸ்ஸி! அவன் என்ன செய்தான் தெரியுமா?'' என்றாள் மேடம் அன்பு கொட்டிய குரலில்.

''சொல்லுங்கள்.''

''என்னைக் கண்டு அஞ்ச வில்லை.''

''உம்.''

''தலை தாழ்த்த வில்லை.''

''உம்.''

''இவர்களைப் போல் சலாம் அடிக்கவில்லை.''

''அப்படியா?''

''ஆம். நமது பிரான்ஸ் நாட்டுப் பிரபுக்களைப் போல் நடந்து கொண்டான். என்னைப் பார்த்ததும் ஒரு காலை மடித்து மண்டியிட்டான். கௌளின் அடியைப் பிடித்துச் சிறிது தூக்கி அதை முத்தமிட்டான்'' என்று கூறிய மேடம் தனது கௌளின் அடிப்பாகத்தைச் சற்று அதிகமாக எடுத்துக் காட்டியதால் அவள் அழகிய காலின் ஆடசதை வெளேரெனத் தெரிந்தது.

கவர்னர் டுப்ளே சங்கடத்தால் அசைந்தார். அந்தப் பேச்சை ஒரு முடிவுக்குக் கொண்டுவர, ''இந்தச் சீட்டை எப்படிக் கொடுத்தான்?'' என்றார்.

''மிக மரியாதையாகக் கொடுத்தான். சிறிது பிரெஞ்சு மொழியிலும் பேசினான். இதை ரகசியமாக இந்த நவாப்புக்கு அனுப்பும்படி கேட்டுக்கொண்டான்'' என்றாள் மேடம்.

டூப்ளே வெறுப்புடன் அடங்காப்பிடாரியான தமது மனைவியை நோக்கினார் ஒரு விநாடி. ''நீ ஒன்றும் கேட்டுக் கொள்ளவில்லையா?'' என்று வினவினார்.

''விருந்துக்கும் நடனத்துக்கும் இருக்கும்படி கேட்டுக் கொண்டேன், மார்டின்! உனக்கு அடுத்தபடியாக அவனுடன் ஆடுவதாகவும் சொன்னேன். அவன் கேட்கவில்லை. அவசர வேலையிருப்பதாகச் சொல்லிவிட்டு ஓடிவிட்டான்'' என்று துன்பப் பெருமூச்சு ஒன்றை வெளியிட்டாள் மேடம்.

அதற்கு மேல் அந்த பேச்சைப் வளர்த்த இஷ்டப்படாத டூப்ளே அவளைப் போய் மற்ற விருந்தினர்களைக் கவனிக்கும் படியும், தாம் சீக்கிரம் வருவதாகவும் சொல்லி மெள்ளக் கெஞ்சிக் கூத்தாடி வெளியே அனுப்பினார்.

பிறகு இரண்டு நவாப்புகளையும் நோக்கினார். இருவரும் இதுவரை கணவனுக்கும் மனைவிக்கும் நடந்த உரையாடல் களைக் கேட்டதாலும், உரையாடலும் வந்தவன் யாரென்பதை விளக்காமல் வேறு பாதையில் போய்விட்டதாலும், என்ன பேசுவதென்று தெரியாமல் திணறிக் கொண்டிருந்த சமயத்தில் டூப்ளேயின் கோபம் அவர்கள் மீது திரும்பியது. ''சந்தா சாகிப்! முஸ்பர்! எதற்காகக் கோட்டான் மாதிரி விழித்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கூச்சல் போட்டார் கவர்னர்.

சந்தா சாகிபும் சிறிது வெகுண்டார். ''கவர்னர், நவாப்புகளை இகழ்வது பிரெஞ்சு நாட்டுக்கு நல்லதல்ல'' என்று சொன்னார்.

''எனது நாட்டிற்கு எது நல்லது என்பது எனக்குத் தெரியும். ஏன், உமக்கு எது நல்லது என்பதும் எனக்குத் தெரியும். சீட்டைக் கண்டு பிராணனை விடுவது என் வழக்கமல்ல. உருப்படியான வேலையில் ஈடுபட முற்படுங்கள்'' என்றார். அந்த உருப்படியான வேலை எது என்பதை விளக்கினார். அதைக் கேட்ட சந்தா சாகிப் பெரிதும் நடுங்கினார். டூப்ளே தமது வாழ்க்கையின் மிக முக்கியமான முடிவுக்கு வந்திருப்பதை அவர் சொற்கள் சந்தேகமற விளக்கின.

www.thamizhthenee.blogspot.com

4. மேடம் வின்ஸன்ஸ்

சந்தா சாகிபுவுக்கும் முஸபர் ஜங்குக்கும் கவர்னர் டூப்ளே தமது திட்டத்தை விளக்கிய போது, அவர் ஏதோ பெரும் சாம்ராஜ்யக் கனவில் இருக்கிறார் என்பதை இருவருமே புரிந்து கொண்டார்கள். அத்தகைய சாம்ராஜ்யக் கனவுக்கு முக்கிய காரணம் அவருக்கு இருந்த பெரும் கடன் தொல்லையும் அவரது மனைவியுமே என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வில்லை.

*உண்மையில் மேடம் வின்ஸன்ஸுக்கும் டூப்ளேக்கும் நடந்த விவாகம் காதல் விவாகமல்ல. வங்காளத்தில் டூப்ளே இருந்த போது அவர் செய்த வர்த்தகத்தில் பெரும் நஷ்டமடைந்து ஏராளமாகக் கடன் வாங்கியிருந்தார். அந்தக் கடனின் ஒரு பாகம் வின்ஸன்ஸ் குடும்பத்தாரிடம் வாங்கப்பட்டியிருந்தது. அந்தக் கடனைத் தீர்க்க மிஸ்டர் வின்ஸன்ஸ் இறந்ததும் மேடம் வின்ஸன்ஸை டூப்ளே 1741 ஏப்ரல் 17-ஆம் தேதி விவாகம் செய்து கொண்டிருந்தார். அப்போது மேடம் வின்ஸன்ஸுக்கு வயது முப்பத்தைந்து. முதல் கணவன் மூலம் அவளுக்கு எட்டுக் குழந்தைகள் இருந்தன. அந்த எட்டில் மூன்று மாண்டு விட்டதால் மேடத்துடன் அந்த ஐந்து கன்றுகளையும் ஓட்டிக் கொண்டு டூப்ளே புதுச்சேரிக்கு வந்து சேர்ந்தார்.

வீட்டில் சதா மேடம் வின்ஸன்ஸின் தொந்தரவும் ஆர்ப்பாட்டமும் மிக அதிகம். மேலும் அவளுடைய காலஞ்சென்ற கணவரின் குழந்தைகளும் தீராத விளையாட்டுப் பிள்ளைகளாக், கவர்னர் இல்லத்தை ரணகளப்படுத்திக் கொண்டிருந்தனர். டூப்ளேயின் இல்வாழ்க்கை உண்மையில் மல்வாழ்க்கையாகிக் கொண்டிருந்தது. ஆகவே அறிவாளியான டூப்ளே தமது அறிவை அரசியலில் அதிகமாகச் செலுத்தினார். அதன் மூலம் நவாபுகள் அடித்த கொள்ளைகளில் பெரும் பகுதி கவர்னரின் கஜானாவுக்குப் போய்க் கொண்டிருந்தது. மேடத்துக்குப் பரிசு எதுவும் கொண்டுவராத எவனும் பட்டபாடு சொல்ல முடியாது.

இத்தனைக்கும் மேடம் வின்ஸன்ஸ் அழகாகவே யிருந்தாள். இந்த 43-ஆவது வயதிலும் அவள் கவர்ச்சி இணையற்றதாக இருந்தது. அவள் சென்னையில் பிறந்த காரணத்தால் தமிழை மிக அழகாகப் பேசினாள். ஹிந்துஸ்தானியும் அவளுக்கு ஓரளவு தெரியும். அவள் தாய் டி.காஸ்ட்ரோ போர்ச்சுக்கீஸ்; தந்தை ஜேக்ஸ் ஆல்பர்ட் என்ற

* மேடம்டுப்ளேயைப்பற்றிய விவரங்களுக்கு Colonel John Biddulph எழுதிய 'Dupleix" என்றநூலில் 33-34-ம்பக்கங்களை கவனிக்கவும்.

பிரெஞ்சுக்காரர். இப்படிக் கலப்பு மணத்துக்குப் பிறந்ததால் இரண்டு இனத்தின் குணமும் அவளிடம் பொருந்தியிருந்தது. சில சமயங்களில் போர்ச்சுக்கீசியரின் கொடூரமும், சில சமயங்களில் பிரெஞ்சுக்காரர்களின் குழைவும் தென்பட்டன. இத்தகைய இல்லத்தரசியைக் கட்டிக் கொண்ட டூப்ளே அவளைக் கண்டு சதா நடுங்கிக் கொண்டு அவளைத் திருப்தி செய்வதிலுமே குறியாக இருந்து, நரக வேதனையை அனுபவித்தார்.

இருப்பினும் பிரெஞ்சு சாம்ராஜ்யம் விரிவடைய வேண்டிய விஷயங்களை அவர் அலசும்போது திறமையாகவே அலசினார். ஆகையால் இரு நவாபுகளையும் பார்த்துச் சொன்னார்; ''அடுத்தபடி நீங்கள் திருச்சியின் மீது படையெடுக்க வேண்டும்'' என்று.

சந்தா சாகிபும் முஸபர் ஜங்கும் முகத்தில் கலவரத்தைக் காட்டினார்கள். ''ஆம்பூர் போர் முடிந்து இப்போது தானே இரண்டு மாதங்கள் ஆகின்றன?'' என்று சந்தா சாகிப் வினவினார்.

''அதற்குப் பிறகு ஆற்காட்டு நிர்வாகத்தைத் திடப்படுத்தி விட்டு இங்கு வந்திருக்கிறோம்'' என்று இரண்டு மாதத் தாமதத்துக்குக் காரணம் சொன்னார் முஸபர்ஜங்.

டூப்ளே தமது சீரிய கண்களை அந்த இருவர்மீதும் திருப்பினார். ''எந்த விதை உங்களை ஆற்காட்டிலிருந்து விரட்டியதோ, எந்த வித்து உங்கள் ஆற்காட்டுச் சொந்தத்தை இன்னும் பாதிக்கிறதோ அது களையப்படவில்லை'' என்று கூறினார், பார்வையிலிருந்த சீரான நோக்கு குரலிலும் பிரதிபலிக்க.

மேடம் வெளியே சென்றதும் கதவைச் சாத்தி விட்டு அதன் அருகிலேயே நின்று கொண்டிருந்த டி புஸ்ஸி மிக நிதானமான, ஆனால் அழுத்தமான குரலில் சொன்னான், '' அந்த வித்து முகம்மது அலி, கம்பெனி நவாப்'' என்று.

டூப்ளேயின் கண்கள் மகிழ்ச்சியுடன் நோக்கின, தன் வலக் கரம்போன்ற புஸ்ஸியை. அவன் சொன்னதை ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையையும் அசைத்தார் டூப்ளே. ''நீ சொல்வது சரி புஸ்ஸி! முகம்மது அலி இருக்கும்வரை, பிரிட்டீஷ் கிழக்கிந்தியக் கம்பெனியால் நமக்கு ஆபத்திருக்கிறது'' என்றும் கூறினார் தலையாட்டலைத் தொடர்ந்து.

புஸ்ஸி அத்துடன் நிற்கவில்லை. ''இங்கு மழைக் காலம் தொடங்க இருக்கிறது. ஆகவே உடனடியாகப் படையெடுப்பைத் தொடங்கினால் நல்லது'' என்று ஊக்கினான் டூப்ளேயை.

''அது தான் சரி'' என்ற டூப்ளே நவாபுகளை நோக்கி, ''இப்போது அக்டோபர் 15 தேதி ஆகிறது. நல்லவேளை, வடகிழக்குப் பருவ மழை தலைகாட்டக் காணோம். இதுவும் உங்களுக்கு நல்ல சகுனம். ஆகையால் இன்னும் பதினைந்து நாட்களுக்குள் கிளம்பிப் பாருங்கள்'' என்றார்.

''எங்கள் படை...'' என்று இழுத்தார் சந்தாசாகிப்.

''சண்டையிட்டுக் களைத்திருக்கிறது. தவிர சம்பளமும் சென்ற மாதத்திற்குக் கொடுக்கப்படவில்லை'' என்றார் முஸபர்ஜங்.

''ஆற்காட்டு கஜானா பணம் என்னவாயிற்று?'' என்று வினவினார் டூப்ளே.

''பாதியை மேடத்துக்கு அனுப்பிவிட்டோம்'' என்றார் முஸபர்ஜங்.

டூப்ளே வாயைச் சட்டென்று மூடிக்கொண்டார். ஓரக்கண்ணால் புஸ்ஸியின் இகழ்ச்சி முறுவலைக் கண்டார். ஆனால் அதைப் பற்றி உள்ளூற எரிச்சல் உண்டானாலும் அதை வெளிக்குக் காட்டாமல், ''சரி, அது எப்படியிருந்தாலும் இருக்கட்டும். நான் உங்களுக்குச் சிறிது பணமும் கொடுக்கிறேன். துணையும் கொடுக்கிறேன். புறப்படத் தயாராகுங்கள்'' என்று அறிவித்து விட்டு, அவர்கள் போகலாம் என்பதற்கு அறிகுறியாக வலக் கையையும் ஆட்டினார். நவாபுகள் இருவரும் தயங்கினாலும் வேண்டா வெறுப்பாக எழுந்து வெளியே சென்றார்கள். அவர்களை வெளியே அனுப்பக் கதவைத் திறந்த டி புஸ்ஸி தானும் வெளியே செல்ல முயன்றாலும் ''புஸ்ஸி'' என்ற கவர்னரின் சொல் அவனது கால்களைத் தடைப்படுத்தியது.

''எனக்கு ஏதாவது உத்தரவு இருக்கிறதா?'' என்று வினவினான் புஸ்ஸி.

''கதவைச் சாத்திவிட்டு வா'' என்றார் டூப்ளே.

அவர் கட்டளையின்படி கதவைச் சாத்திவிட்டு வந்த டி புஸ்ஸியை ஓர் ஆசனத்தில் உட்காரச் சொல்லிவிட்டுத் தாமும் எதிரே அமர்ந்த டூப்ளே, ''புஸ்ஸி! உன்னை எனது சொந்த சகோதரனாக நினைக்கிறேன்'' என்று துவக்கினார் சம்பாஷணையை.

''பாக்கியம்'' என்றான் புஸ்ஸி புன்முறுவலுடன்.

டூப்ளே மனம் இருந்த நிலையில் அவர் அந்த புன்முறுவலைக் கவனிக்க வில்லை. ''புஸ்ஸி! திருச்சியை முற்றுகையிட்டு முகம்மது அலியைச் சிறைப்படுத்தி விட்டால் சந்தா சாகேபின் பலம் கர்நாடகத்தில் திடப்பட்டு விடும். அப்படித் திடப்படுத்தி விட்டால் பிரெஞ்சு பலம் வேரூன்றி விடும். பிறகு மெள்ள நமது வர்த்தகக் கம்பெனி மூலமே பிரெஞ்சு சாம்ராஜ்யத்தை இந்த நாட்டில் பரவவிடலாம்'' என்ற டூப்ளேயின் கண்கள் அப்போதே சாம்ராஜ்யத்தைக் கண்டுவிட்டன போல் பளபளத்தன.

டி புஸ்ஸியின் சூட்சுமக் கண்கள் டுப்ளேயின் கனவைக் கவனிக்கவே செய்தன. ஆனால் அவன் வாயிலிருந்து ஒரு சொல் கூட உதிரவில்லை. ஆகவே டுப்ளேயே கேட்டார். ''இந்த நிட்டத்தைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன?'' என்று.

''நிட்டம் சரியானது தான்'' என்று இழுத்தான் புஸ்ஸி.

''வேறு எது சரியில்லை?'' என்று வினவினார் டுப்ளே.

''இந்த நவாபுகள்'' என்றார் டி புஸ்ஸி.

''ஏன்? அவர்களுக்கென்ன?''

''உங்கள் நிட்டத்தை நிறைவேற்றுபவர்களாக எனக்குத் தோன்றவில்லை.''

''அதற்கு என்ன செய்ய வேண்டுமென்கிறாய்?''

''நான் அவர்களுடன் செல்லலாமென்று நினைக்கிறேன்.''

இதைக் கேட்ட டுப்ளே யோசித்தார். பிறகு சொன்னார் நிட்டமாக, ''முடியாது புஸ்ஸி, முடியாது. நீ இங்கு எனக்குத் தேவை'' என்று.

''எப்படியிருந்தாலும் இவர்களை மேற்பார்வை பார்க்க ஒரு பிரெஞ்சுப் படைத் தலைவன் தேவை'' என்றான் புஸ்ஸி.

டுப்ளே சிறிது சிந்தனையில் இறங்கினார் மீண்டும். கடைசியாக, ''டி ஆதுனிலைப் பற்றி உன் கருத்து என்ன?'' என்று வினவினார்.

இம்முறை டி புஸ்ஸியும் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான். ''டி ஆதுனில் சிறந்த போர் வீரர், சிறந்த படைத் தலைவர்...'' என்று இழுத்தான்.

''அவரை அனுப்பினால் என்ன?''

''சூது வாது தெரியாதவர். வெளுத்ததையெல்லாம் பால் என்று நினைப்பவர்.''

''அப்படியிருக்கக் கூடாது.''

''நயவஞ்சகனான ஒருவனை அனுப்ப வேண்டும் என்கிறாய்?''

''இல்லை. எதையும் சட்டென்று நம்பிவிடாதவரை அனுப்பவேண்டும் என்கிறேன்.'' இதை மிகத் திட்டமாகக் கூறினான் புஸ்ஸி.

''சரி, யோசிக்கிறேன்'' என்றார் டுப்ளே. ஆனால் அவர் யோசிப்பதற்கு வழி ஏதுமில்லாத ஒரு சதி அதே மாளிகையின் ஒரு மூலையில் நடந்து கொண்டிருந்ததை அவர் அறிய வில்லை. அந்த மாளிகையின் கோடி அறை ஒன்றில் சந்தா சாகிபும் முஸபர் ஜங்கும் மேடம் டுப்ளேயின் மூளையைத் தங்கள் பக்கம் திருப்பிக் கொண்டிருந்தார்கள். மேடத்துடன் பேச முற்படுமுன்பு சந்தா சாகிப் அவள் கைகளில் ஒரு பணமுடிப்பைக் கொடுத்தார்.

முடிப்பை இருமுறை தன் கையில் தூக்கித் தூக்கி எடை பார்த்த மேடம், ''இதில் எத்தனை இருக்கிறது?'' என்று வினவினாள்.

''ஆயிரம் *பகோடாக்கள்'' என்றார் சந்தா சாகிப் ''ஆனால் இது ஆரம்பம்தான். எங்கள் இஷ்டப்படி காரியங்கள் நடந்தால்...'' என்று சொன்னார்.

''என்ன உங்கள் இஷ்டம்?'' என்று வினவினாள் மேடம்.

''இந்த புஸ்ஸி இருக்கிறானே...''

''ஆம்.''

''என்ன செய்கிறான்?''

'' நமது படையெடுப்புகளில் லாபம் சம்பாதிப்பதை ஆட்சேபிக்கிறான்.''

''என்ன அயோக்கியத்தனம்!''

''அது தங்களுக்குத் தெரிந்திருப்பது பற்றி எங்களுக்கு மகிழ்ச்சி. அவன் எங்களுடன் வந்தால் மேடத்துக்குப் போகிய பணம் கிடைப்பது மிகவும் கஷ்டம்'' என்ற சந்தா சாகிப் முகத்தில் வருத்தக் குறி காட்டினார். முஸபர்ஜங் முகம் சோகத்தால் மிக நீண்டுவிட்டதால் அவர் தாடி மார்பில் இடித்தது.

மேடம், ''சரி, நீங்கள் செல்லலாம்'' என்று உத்தரவு கொடுத்து விட்டு நடன மண்டபத்துக்குச் சென்றாள். அங்கிருந்த விருந்தினர்களையெல்லாம் மரியாதையுடன் அனுப்பி வைத்து விட்டுத் தன் பள்ளியறை சென்றாள். அங்கிருந்த பெரும் கட்டிலின் பஞ்சணையில் படுத்துக் கிடந்த டுப்ளேயைப் பார்த்துப் புன்முறுவல் செய்தாள். பிறகு தனது உடைகளை ஒவ்வொன்றாகக் களைந்தாள். டுப்ளேயின் கண்கள் அவள் உடைகள் நழுவ நழுவ வெறி பிடித்தன. முடிவில் அவள் நைட் கௌன் அணிந்து பக்கத்தில் படுத்தாள். ''மார்ட்டின்!'' என்று செல்லமாக அழைத்தாள்.

''என் பெயர் மார்ட்டின் அல்ல, ஜோஸப் பிராங்காய் டுப்ளே'' என்றார் டுப்ளே.

''ஆனால் என் பழைய கணவரை இந்த செல்லப் பெயரால் தான் அழைத்து வந்தேன். அந்தச் செல்லம் முழுவதையும், அதற்கு மேலும் உன் மேல் மாற்றி விட்டேன்'' என்ற மேடம் திரும்பி டுப்ளேயின் மீது தனது கரமொன்றைத் தவழவிட்டாள்.

விளைவு? பிறகு நவாபின் படைகளுக்குத் துணையாக புஸ்ஸி போக வில்லை. டி ஆதுனில் சென்றார்.

---

* பகோடா எனபது ஒரு தங்க நாணயம். அதன் மதிப்பு சராசரி7 ஷில்லிங் 6 பென்ஸ் - "Dupleix" - by Colonel John Biddulph. Page 2.

5. கண்ணாடியில் தெரிந்த உருவம்

அரசுகளின் முக்கியமான முடிவுகள் பல, அரசியல் வாதிகளின் ஆலோசனை சபைகளைவிட, அவர்கள் படுக்கும் பஞ்சணைகளில் கிடைக்கும் மந்திரோபதேசத்தில் தான் எடுக்கப்படுகின்றன என்பதற்கு டூப்ளே உதாரணமாக விளங்கினார்.

இல்லையேல் இந்த நாட்டில் அவர் கண்டிப்பாகப் பிரெஞ்சு சாம்ராஜ்யத்தை நிறுவியிருப்பார். எப்பேர்ப்பட்ட மேதைகளுக்கும் நாட்டாட்சி ஒருபுறம் இருந்தால், பலமான வீட்டாட்சியும் மற்றொருபுறம் இருப்பதால், மேதைகள் பைத்தியங்களாகிறார்கள். அப்படிப்பட்ட பைத்தியக் காரத்தனந்தான் டூப்ளேயின் முதல் முடிவை மாற்றி டி ஆதுனில்லே நவாபுகளுடன் அனுப்பி வைத்தது.

ஆனால் இந்தப் பொது நியதிக்குச் சில விலக்குகளும் உண்டு. அப்படி விலகி நிற்பவர்கள் பல சிக்கல்களிலிருந்தும் தங்களை விடுவித்துக் கொள்கிறார்கள். அவர்கள் அறிவு, காதின் மூலம் கிடைக்கும் மந்திரச் சொற்களால் மயங்காது தெளிவுடன் நிற்கிறது. ஆகவே அவர்கள் முடிவுகளிலும் ஒரு தெளிவு இருக்கத்தான் செய்கிறது. அத்தகைய தெளிவு படைத்தவர் தஞ்சை மன்னர் பிரதாபசிம்மன். தஞ்சை இஸ்லாத்தின் ஆட்சியின் கீழ் வராமல் கடைசி வரை நின்றதற்கு, அவரது தெளிந்த, ஆழ்ந்த அறிவு தான் காரணம். அப்பேர்ப்பட்ட மகாராஜா பிரதாபசிம்மனையும் மூன்று பேர் உஷ்ணத்துடன் பார்த்தார்கள்.

டூப்ளேயின் மந்திராலோசனை புதுவையில் நடந்த மூன்றாம் நாள் இரவில் தஞ்சை அரண்மனையிலும் ஒரு மந்திராலோசனை நடக்கத்தான் செய்தது. என்றும் உஷ்ணத்தையோ பதற்றத்தையோ காட்டாத டபீர் பண்டிதர்கூட அன்று முகத்தில் கோபச் சாயை காட்டினார். ''இவ்வருஷம் வானம் நம்மை ஏமாற்றி விட்டது'' என்று அரசை நோக்கி சொன்னார், அதற்கு அரசன் தான் பொறுப்பாளி போல.

மகாராஜா பதிலேதும் சொல்ல வில்லை. ஆம் என்று ஒப்புக் கொள்வதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் அசைத்தார்.

டபீர் பண்டிதருக்கு மகாராஜாவின் மௌனமும் தலையசைப்பும் அதிக எரிச்சலை உண்டாக்கவே அவர் மேலும் சொன்னார், ''இந்த ஆண்டு மக்களிடமிருந்து போதிய நெல் கிடைக்காது'' என்று குரலிலும் எரிச்சலைக் காட்டியது.

''உண்மை'' என்று மகாராஜாவின் வாயிலிருந்து ஓர் ஒற்றைச் சொல் மட்டும் உதிர்த்தது.

''தவிர, தேவிக்கோட்டையும், அதன் சுற்றுப்புற நிலங்களும் போய் விட்டன'' என்றும் குற்றம் சாட்டினார் டபீர் பண்டிதர்.

''அவை போகவில்லை. நாமாகக் கொடுத்தோம், வெள்ளைக்காரர்களுக்கு'' என்றார் பிரதாபசிம்ம மகாராஜா.

அதுவரை டபீர் பண்டிதருக்கும் மகாராஜாவுக்கும் ஏற்பட்ட சம்பாஷணையில் குறுக்கிடாமல் தமது பெருவாள் இடையில் தொங்க, எட்டவே நின்றிருந்த மானாஜி அப்பா, ''அவசியம் இல்லாத சமயத்தில்...'' என்றார் குரலில் லேசாக வெறுப்பைக் காட்டி.

''எப்படி அவசியமில்லை?'' என்று வினவினார் தஞ்சை மன்னர் தமது படைத் தலைவரை நோக்கி.

''நான் தேவிக் கோட்டையிலிருந்து பின்வாங்கியதற்குக் காரணம் தோல்வியல்ல'' என்றார் மானாஜி.

''தெரியும் எனக்கு'' என்றார் மகாராஜா சர்வசகஜமாக.

''தேவிக்கோட்டையில் இருக்கும் வரை பிரிட்டிஷாருக்கு அவர்கள் கப்பற்படையின் உதவி இருந்தது.''

''ஆம்.''

''அதிலிருந்து அவர்களை இழுக்கவே ஆச்சாள்புரம் கோவிலுக்குள் படைகளை நிறுத்தினேன். மனதின்மீது நமது பீரங்கிகளையும் பொருத்தினேன்.''

''ஆம்.''

''தாங்கள் சிறு உதவி அனுப்பியிருந்தாலும், அல்லது சில நாட்கள் அவகாசம் அளித்திருந்தாலும் பிரிட்டிஷ் படையை முறியடித்திருப்பேன்.'' இந்த சொற்களைச் சிறிது உஷ்ணத்துடன் சொன்னார் மானாஜி.

''இது எதிலும் சந்தேகமில்லை'' என்றார் மகாராஜா.

''நமது கை ஓங்கியிருந்த சமயத்தில் துணைப்படை அனுப்புவதற்குப் பதில் தூதனை அனுப்பினீர்கள், பிரிட்டிஷ் படையுடன் சமாதானத்துக்கு'' என்று சுட்டிக் காட்டினார் மானாஜி.

பிரதாபசிம்ம மகாராஜா மானாஜியைச் சிறிது நேரம் உற்று நோக்கினார். ''மானாஜி! நீங்கள் சொல்வது எதிலும் தவறில்லை. ஆனால் மன்னனாக இருப்பவன் தனது ராஜ்யத்தின் ஒரு திசையை மட்டும் கவனிப்பதற்கில்லை'' என்றார்.

டபீர் பண்டிதர் துணிவுடன் இடை புகுந்து, ''ஆனால் நீங்கள் கவனித்த திசையில் கிட்டத்தட்ட ஒன்பதாயிரம் கலம் நெல் கைவிட்டுப் போய்விட்டது'' என்று கட்டினார்.

''வருமான வரி அமைச்சர் வருமானத்திலேயே கண்ணாயிருக்கிறார்'' என்ற மன்னர், மீண்டும் டபீரைப் பேச விடாமல் கையமர்த்தி, ''மானாஜி! நீங்கள் ஆச்சாள்புரத்தில்

இருந்த போது தான் சந்தாசாகிப் பெரும் படையுடன் ஆற்காட்டை வெற்றி கொண்டார். அங்கு நமக்கிருந்த ஆதரவு போய்விட்டது. அடுத்தபடி சந்தா சாகிபுவும் டுப்ளேயும் கண் வைக்கக் கூடிய இடம் திருச்சிதான். அங்கு ஓர் இடத்தில்தான் நமது நண்பர் முகமது அலி இருக்கிறார். திருச்சி பிரெஞ்சுக்காரர் கையில் விழுந்தால் தஞ்சையைப் பிடிப்பது பெரிய காரியமல்ல. தவிர, சந்தா சாகிபுக்குத் திருச்சியை விடத் தஞ்சை மீது அன்பு அதிகம்'' என்றார்.

மானாஜி புரிந்ததற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார். இருப்பினும் அவர் சொன்ன காரணத்தை முழுவதும் ஆமோதிக்காததால் வினவினார்; ''திருச்சியைப் பிடித்துக் கொண்டு இங்கு வருவதற்கு மூன்று மாத காலம் ஆகும். அதற்குள் இங்கு நாம் நிலைமையைத் திடப்படுத்திக் கொள்ள முடியாதா? அதற்காகத் தேவிக்கோட்டையை விட்டுக் கொடுக்க வேண்டுமா?'' என்று.

பிரதாபசிம்ம மகாராஜா அவருக்கு உடனடியாக விடையளிக்கவில்லை. சற்றுத் தூரத்தே சாளரத்துக்கு அருகில் நின்று கொண்டிருந்த விஜயகுமாரனை கூர்ந்து நோக்கினார். ''விஜய குமாரா! நமது தளபதியின் யோசனை பற்றி உன் கருத்து என்ன?'' என்று வினவினார்.

விஜயகுமாரன் சாளரத்திலிருந்து மெல்ல நடந்து அறையின் நடுவுக்கு வந்தான். ''பெரியவர்கள் முடிவுகளில் எதற்கும் அபிப்பிராயம் சொல்லக்கூடிய தகுதி எனக்கு இல்லை. நான் சிறுவன், அனுபவமற்றவன். அதிக போர்களைக் கண்டறியாதவன்'' என்று தப்பிக் கொள்ள முயன்றான்.

''உன் அனுபவத்தைப் பற்றிக் கேட்கவில்லை, அபிப்பிராயத்தைப் பற்றிக் கேட்கிறேன்'' என்றார் மகாராஜா மீண்டும்.

விஜயகுமாரன் சில விநாடிகள் சிந்தனையில் இறங்கினான். ''இப்போது நாட்டில் நடக்கும் போர் இஸ்லாத்துக்கும் ஹிந்துக்கும் அல்ல'' என்றான் மெதுவாக.

''வேறு யாருக்குள் நடக்கிறது?'' என்றார் மானாஜி.

''பிரிட்டிஷ்காரர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் நடக்கிறது'' என்றான் விஜயகுமாரன்.

அதற்குமேல் அவனைப் பேசவிடாத மகாராஜா, ''அதுவே உண்மை. இந்த இரண்டு விதேசிகளும் இங்கே தங்கள் சாம்ராஜ்யத்தை நிறுவப் பார்க்கிறார்கள். அதற்கு நம்மைக் கருவிகளாகப் பயன்படுத்த முயல்கிறார்கள். இப்போது பிரெஞ்சுக்காரர் கை ஓங்கி நிற்கிறது. சந்தாசாகிபை இங்கு நிலைக்கவிட்டால் நாம் பிரெஞ்சு சாம்ராஜ்யத்தை நிலைக்க

விடுகிறோம்'' என்று கூறியதுடன் நிற்காமல், ''அதை தவிர்க்க வேண்டுமென்றால் நாம் ஒரு கட்சியில் சேர்ந்து தானாக வேண்டும். ஆகையால் சந்தாசாகிப் ஆற்காட்டைப் பிடித்தவுடன் பிரிட்டிஷாரின் கையைப் பலப்படுத்த முடிவு எடுத்தேன். இல்லையேல் நாம், சந்தாசாகிப், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் ஆகிய மூன்று விரோதிகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும். வழி ஒன்றுதான் இருந்தது. ஒருஎதிரியை நமது நண்பராக்கிக்கொள்ளும் வழி. அந்த வழியைக் கையாண்டேன். அதனால் தான் தேவிக் கோட்டையில் நமது வெற்றி நிச்சயமாயிருந்தும் சமாதானம் செய்து கொண்டேன்'' என்றும் விளக்கினார்.

மானாஜி அப்பா பதிலேதும் கூறவில்லை, இந்த விளக்கத்துக்கு. ஆனால் விஜயகுமாரன் மட்டும் ஒரு சந்தேகம் கேட்டான். ''வேறு வழியில்லையா?''

பிரதாபசிம்ம மகாராஜாவின் கண்கள் மட்டுமின்றி மற்ற இரு அமைச்சர் கண்களும் விஜயகுமாரனை வியப்புடன் நோக்கின. ''வேறு வழி இருக்கிறதா?'' என்றார் மகாராஜா.

''இருந்தது. இன்னும் இருக்கிறது. ஆனால்...'' என்று சற்றுத் தயங்கினான் விஜயகுமாரன்.

''தைரியமாகச் சொல்'' என்று ஊக்கினார் மன்னர்.

விஜயகுமாரன் மன்னரையும் நோக்கினான்; மற்றோரையும் நோக்கினான். ''உண்மையைப் பேசுவதற்கு மன்னிக்க வேண்டும்'' என்று தன் உரையையும் தொடங்கினான் துணிவுடன்.

''மகாராஜா, தாங்கள் நினைப்பது போல் இன்று இந்த நாட்டில் இருக்கும் பெரும் சக்திகள் இரண்டு தான். அதில் ஒன்று நசிந்து விட்டது. மிகத் திறமைசாலியான அவுரங்கசீப்புக்குப் பிறகு டில்லியின் சக்தி ஒடுங்கிக் கிடக்கிறது. இரண்டாவது சக்தியான மகாராஷ்டிர சாம்ராஜ்யத்தின் சக்தி இன்று உச்சநிலையில் இருக்கிறது. முன்பே அதன் சக்தியை ரகோஜி போன்ஸ்லா இந்தத் தென்திசையில் உடைத்திருக்கிறார். இன்று கூட இந்த வெள்ளைக்காரர்கள், தொண்டை மண்டலத்தை அடுத்துள்ள மலைச்சாரலில் தங்கியிருக்கும் முராரிராவின் படையைக் கண்டு அஞ்சுகிறார்கள். இந்தத் தஞ்சை ராஜ்யம் ஆதியிலிருந்து மகாராஷ்டிர தாயகத்திலிருந்து பிரிந்து தனித்து நிற்கிறது. அத்துடன் இது இணைய வைக்க சிவாஜி மகாராஜா முயன்றார்; முடியவில்லை. இந்தத் தஞ்சை ராஜ்யம் தனித்து நிற்காமல் மகாராஷ்டிரப் பேரரசுடன் இணைந்து விட்டால் இதை அணுகவும் பிறர் அஞ்சுவார்கள்'' என்று கூறினான் விஜயகுமாரன்.

இதைக் கேட்ட பிரதாபசிம்ம மகாராஜாவின் முகம் உணர்ச்சியற்ற கல்லாகிவிட்டது. சிறுது நேரம் ஆலோசனை

அறையில் நிலவிய மௌனத்தை மகாராஜாவே கலைத்து, ''இது வரை அரசாக இருந்து வரும் தஞ்சை ராஜ்யத்தை ஸதாராவின் சிற்றரசாக்கப் பார்க்கிறாய்'' என்றார் மிக மெதுவாக. அந்த மெதுவில் கடினம் கலந்திருப்பதை உணர்ந்தான் விஜயகுமாரன். ஆனால் இளங்கன்று பயமறியாது என்ற மூதுரைக்கும் விளக்கம் தரத் தொடங்கி, சொரூபத்தைக் காட்டத் தொடங்கி, ''மகாராஜா! தந்தை தனயர்களுக்குள் ஆண்டான்-அடிமை உறவு கிடையாது. மகாராஷ்டிர அரசுகளுக்குள் பேரரசு - சிற்றரசு என்ற வேறுபாடு கிடையாது. ஆதி முதல் நமது பாரத மன்னர்கள் தாயாதிச் சண்டையாலும் வீண் பெருமைகளாலும் தங்கள் அரசுகளை இழந்திருக்கிறார்கள். மகாராஷ்டிரர்கள் எங்கிருந்தாலும் ஓர் இனந்தானே! அவர்கள் பிரிந்து எதிராளிகளுக்கு வலுவை அளிப்பானேன்?'' என்று வினவினான்.

மகாராஜா இதைக் கேட்டுக் கோபிக்க வில்லை. இதழ்களில் இள நகையே கூட்டினார். ''சிறுவனே! நீ நினைப்பதுபோல் அரசியல் சிக்கல்கள் அத்தனை சுலபமாகத் தீருவதில்லை. சாம்ராஜ்யங்கள் உருவாவதும் அழிவதுங்கூட ஒரு தனி மனிதனின் நிறமையாலும், திறமையின்மையாலுமே நடை பெறுகின்றன. சிவாஜி மகாராஜா சின்னஞ்சிறு மலைக்கூட்டங்களைக் கொண்டு சாம்ராஜ்யத்தைச் சிருஷ்டித்தார். அவுரங்கசீப் சக்கரவர்த்தி பெரும் படையிருந்தும் தமது சாம்ராஜ்யத்தை அழித்தார். ஆகவே, எண்ணிக்கையும் அரசுகளின் சேர்க்கையும் பலத்தை நிர்ணயிப்பதில்லை. தனி மனிதர்களின் தீர்க்காலோசனை, துணிவு, ஊக்கம், சமயமறிந்த ராஜதந்திரம்-இவை அரசுகளைத் தப்ப வைக்கின்றன. இந்தத் தஞ்சை அரசையும் தப்ப வைக்க அப்படித்தான் முயலுகிறேன். எனக்குத் தெரிந்த ராஜதந்திரத்தின்படி இப்போது இந்தப் பகுதியில் நமக்கு வேண்டியது ஸதாராவின் துணையல்ல. இதை நீயே காலத்தில் புரிந்து கொள்வாய்'' என்று கூறிய பிரதாபசிம்மன் மானாஜியை நோக்கி, ''மானாஜி, நமதுக் கோட்டை நீண்ட கால முற்றுகையைத் தாங்க ஏற்பாடு செய்யுங்கள். பண்டிதரே! அதற்கு வேண்டிய உணவு வகையறாக்களைச் சேர்க்க நீர் முனைந்து பணி செய்யும்'' என்று உத்தரவிட்டார்.

அத்துடன் மீண்டும் சிந்தனையிலும் இறங்கினார். மன்னர் அதற்கு மேல் ஏதும் பேச விரும்ப வில்லை என்பதை உணர்ந்த மூவரும் அறையை விட்டு வெளியேறினார்கள். அறைக்கு வெளியே வந்ததும் இரு அமைச்சர்களும் ஒருவருக்கொருவர் ஏதோ பேசத் தொடங்கினாலும் அதில் கலந்து கொள்ளாத விஜயகுமாரன் நேராகத் தனது அறைக்குச் சென்றான்.

அறையிலிருந்த கட்டிலில் சிறிது நேரம் படுத்துச் சிந்தனையில் ஆழ்ந்தான். பிறகு ஏதோ முடிவுக்கு வந்தவன்போல் துள்ளி எழுந்து உடைகளை ஒரு மூட்டையாகக் கட்டி ஆயுதங்களையும் அணிந்து கொண்டான். அத்துடன் அங்கிருந்த கண்ணாடியில் அழகு பார்த்துக் கொண்டான். அந்தக் கண்ணாடியில் அவனுக்குப் பின்னாலும் ஓர் உருவம் நின்று கொண்டிருந்தது. அதன் கையில் ஒரு கைத்துப்பாக்கியும் இருந்தது. அதுவும் நன்றாக எழுந்து அவள் முதுகை நோக்கிப் பிடிக்கப்பட்டு இருந்தது. கைத்துப்பாக்கியின் குதிரை மெல்ல இழுக்கப் படுவதையும் விஜயகுமாரன் கண்ணாடியில் பார்த்தான். தவிர, அந்த உருவத்தின் கண்களில் கொலைப் புரியக்கூடிய உக்கிரமும் உறுதியும் இருந்ததை அவன் புரிந்து கொண்டான்.

6. கோட்டை மருந்து

கண்ணாடியில் தெரிந்த உருவத்தைக் கண்டதும் கணநேரம் திகைத்து விட்ட விஜயகுமாரன் வதனத்தில் அந்தத் திகைப்பு வந்த நேரத்தில் மறைந்து, மந்தகாசம் அது இருந்த இடத்தைப் பிடித்துக் கொள்ளவே சரேலெனத் திரும்பினான். பின்னாலிருந்த உருவத்தை நோக்கி, ''இது சௌகரியம்'' என்றும் சொல்லிச் சிரிப்பை லேசாக உதிரவிடவும் செய்தான், தன் வலிய உதடுகளிலிருந்து. அத்துடன் கதவு பக்கம் திரும்பி அது தாளிடப் பட்டிருப்பதையும் நோக்கிப் புன்முறுவலும் கொண்டான். பிறகு அவன் பேசவில்லை. அந்த உருவத்தின் ஒவ்வோர் அம்சத்தையும் கண்களால் விழுங்கவே செய்தான்.

நந்தினி மிக அழகாக அலங்காரம் செய்து கொண்டிருந்தாள். அவள் தலைக் குழலை அலங்கரித்த தஞ்சை முல்லைச் சரம் அவள் கண்களிலிருந்த உக்கிரத்தைக் கேலிக் கூத்தாக அடித்துக் கொண்டிருந்தது. அவள் கழுத்தைச் சுற்றிக் கிடந்த மாணிக்க மாலை, அவள் கன்னத்தில் ஏறிக் கிடந்த கோபச் சிவப்பைப் பார்த்துத் தனது செவ்விய கிரணங்களைக் கொண்டு போராடிக் கிடந்தது. அவள் அணிந்திருந்த காசிப் பட்டுச் சேலைக் கூட உடல் முழுவதையும் மறைக்க முடியாததால், அவள் உடல் வழவழப்பின் முன்பு தனது வழவழப்பு அர்த்த மற்றது என்பதை நிரூபித்துக் கொண்டிருந்தது. அவள் கையிலிருந்த தங்க வஸ்திரங்கள் நான்கும் சர்ப்பங்களைப் போல் செய்யப் பட்டிருந்தாலும், அவள் கொல்லும் விழிகளின் முன்பு தங்கள் விஷம் பயனளிக்காது என்ற நினைப்பால் சத்தமின்றித் தலைகளைச் சாய்த்து எதிர் கணுக்களைக் கவ்விக் கொண்டிருந்தன.

கோபம் அவள் கண்களில் மட்டுந்தான் தோன்ற முடியும் என்ற நியதியில்லையென்பதை, கூரிய முனைகளுடன் நின்ற அவள் மார்புகள் இரண்டுங்கூட எடுத்துக் காட்டின. அவள் கை நீட்டிய துப்பாக்கியின் முனையுமாகச் சேர்த்து மூன்று முனைகள் அந்த வாலிபனைக் கடுமையுடன் பார்க்கவே செய்தன. அத்தனையிலும் ஒரு பலவீனம் மட்டும் அவளிடம் இருந்ததை ஒருக்களித்த அவள் சிற்றிடை நிரூபித்தது. 'எனக்கு அத்தனை திராணியில்லை' என்பதைக் கூறுவது போல், இடை துவண்டு ஒருக்களித்து, கீழ்ப் பெரும் பகுதிகளை ஒருபுறமாக ஒதுக்கிவிட்டதால் எந்த இளைப்பையும் அடுத்துப் பலம் தர மலை போன்ற சக்திகள் வாழ்வில் உண்டு என்ற பெரிய தத்துவம் அவள் அழகிய உடலில் விளங்கிக் கொண்டிருந்தது.

இப்படி அலைந்த அவன் கண்களை நந்தினியும் பார்க்கவே செய்ததால், அவள் உக்கிரம் முன்னைவிட அதிகப்பட்டது. தவிர தன்னை அலசிப் பார்க்கும் முன்பு அவன், ''இது சௌகரியம்'' என்று சொன்ன வார்த்தைகளின் பொருள் என்ன என்று ஆராயவும் செய்தாள். 'நேராகத் திரும்பி விட்டால் என்னைப் பார்க்க சௌகரியமாயிருக்கும் என்று சொல்கிறார். சே! வெட்கமின்றிச் சொல்கிறாரே இந்த ஆண்மகன்' என்று தன்னைக் கேட்டுக்கொள்ளவும் செய்தாள் நந்தினி, வெட்கம் விஜயகுமாரனுக்கு மட்டுமே இருக்க வேண்டுமென்ற எண்ணத்தில். என்ன ஊடுருவும் கண்கள்! சேசே! ஆண் வர்க்கமும் ஒரு வர்க்கமா? அந்த விழிகளைத் தோண்டினாலென்ன?' என்று தன்னை மீண்டும் கேட்டுக் கொண்டாள் தஞ்சை மன்னன் மகள். 'அதிருக்கட்டும் அவர் பார்ப்பதை நான் ஏன் சகித்துக் கொள்ள வேண்டும்?' என்றும் கேட்டுக் கொண்டாள். அதற்கு மேல் ஓடிய எண்ணங்களை நினைக்கவும் வெட்கம் கொண்டாளாகையால் நந்தினி தன் கைத்துப்பாக்கியின் குதிரையைச் சற்று அதிகமாகவே இழுத்து, ''இது சௌகரியம் என்று சொன்னீர்களே, என்ன சௌகரியம்?'' என்றாள்.

விஜயகுமாரன் இதழ்களில் இளநகை அளவுக்கு அதிகமாகவே விரிந்தது. ''இப்படி நான் இங்கே எதிராக நிற்பது'' என்று மெள்ளக் கூறினான் முறுவலின் ஊடே.

''இதில் என்ன சௌகரியத்தைக் கண்டு விட்டீர்கள்?'' குரலில் சீற்றத்தைக் கூட்டிக் கேட்டாள் நந்தினி.

''முன்பு நான் கண்ணாடியைப் பார்த்து நின்று கொண்டிருந்தேன்...'' என்றான் விஜயகுமாரன்.

''ஆம். அழகு பார்த்துக் கொண்டிருந்தீர்கள்'' எனறாள் நந்தினி இகழ்ச்சியுடன்.

''ஆம்'' என்று ஒப்புக் கொண்டான் விஜயகுமாரன்.

''என்ன ஆம்?''

''அழகு பார்த்துக் கொண்டிருந்தேன். அதாவது...''

''அதாவது?''

''பின்னால் தோன்றிய அழகைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.''

இதைக் கேட்ட நந்தினியின் முகம் கோபத்தில் அதிகமாகவே சிவந்தது. ''உங்களுடன் நான் விளையாட வரவில்லை'' என்ற அவள் குரலிலும் கோபம் உச்சத்தில் தெரிந்தது.

''இல்லை.''

''என்ன இல்லை?''

''விளையாட வரவில்லை.''

''புரிந்து கொண்டீர்களா அதை?''

''புரிந்து கொண்டேன், கைத்துப்பாக்கியைப் பார்த்ததும்.''

''அப்படியும் ஏன் திரும்பினீர்கள்?''

''முதுகில் சுடுவதைவிட...'' என்று கூறிச் சற்று நிதானித்த விஜயகுமாரன், அவள் மார்பைக் காட்டி, ''இங்கு சுடுவது சௌகரியம் என்றும் சொன்னேன்'' என்று கூறினான்.

நந்தினி சுயநிலையை அறவே இழந்தாள். அடுத்த விநாடி இடக் கை தன்னைச் சுற்றி வளைத்துவிட்டதாலும், தனது கையிலிருந்த கைத்துப்பாக்கியை நழுவ விட்டாள் நந்தினி. அந்தச் சமயத்தில் அவன் அவள் காதுக்கருகில் குனிந்து, ''நந்தினி'' என்று ரகசியமாக உதிர்த்த பிறகு கழுத்தில் ஆழப் புதைந்து விட்ட அவன் முரட்டு உதடுகளும் அவள் சுய உணர்வை யெல்லாம் பறித்துக் கொண்டதால், ''நந்தினி'' என்று அழைப்பதற்குப் பதிலும் சொல்லவில்லை அவள்.

என்ன காரணத்தாலோ அவன் கைகள் அன்று அவளை அளவுக்கு அதிகமாக நெறித்தன. கழுத்தில் புதைந்த உதடுகள் மீண்டும் ஒரு கன்னத்திலும் புதைந்து விலகின. ''நந்தினி! நந்தினி!'' என்று மீண்டும் இரு முறை அழைத்தன.

'உம்' என்று உம் மட்டும் கொட்டினாள் நந்தினி, உணர்ச்சிகளின் கொந்தளிப்பால் அந்த உம்முக்குக் காரணங்கூடப் புரிய வில்லை அவளுக்கு.

ஆனால் அந்த 'உம்'மிலிருந்த குழைவு வீணையின் கமகம்போல் இழைந்து ஒலித்தது அவன் செவிகளில். ஆகவே அவளைத் தழுவி நின்ற நிலையிலேயே அவன் சொன்னான்! ''நந்தினி! நீ கைத்துப்பாக்கியைக் கீழே போட்டிருக்கக் கூடாது.''

''ஏன்?'' அவள் கேள்வியில் ஆவேசமில்லை இப்போது ஆசைதான் இருந்தது.

''இந்த நிலையில் சுட்டு விட்டால் ஆனந்தத்துடன் இறப்பேன்'' என்றான் விஜயகுரான்.

''உங்களைச் சுட என்னால் எப்படி முடியும்?'' என்று வினவினாள் அவள் பெருமூச்சின் ஊடே.

''பின் எதற்காகக் கைத் துப்பாக்கியை நீட்டினாய்?''

''உங்களைத் தடை செய்ய.''

''எதிலிருந்து?''

''என்னை விட்டு ஓடுவதிலிருந்து.''

''யார் சொன்னது ஓடப் போவதாக?''

அத்தனை துன்பத்திலும் அவள் இனிமையாக நகைத்தாள். அவன் பிடியிலிருந்து மெல்ல விலகி அவள் பஞ்சணையைப் பார்த்தாள். கையால் அங்கிருந்த மூட்டையைச் சுட்டிக் காட்டி, ''இதற்கு என்ன அர்த்தம்?'' என்று வினவினாள்.

விஜயகுமாரன் மீண்டும் ஒரு முறை வலிய அணைத்தான். பிறகு அவளை அழைத்துக் கொண்டு பஞ்சணையில் தனது மூட்டைக்குப் பக்கத்தில் உட்கார வைத்தான். அவள் எதிரே நின்று அவளை உற்றுப் பார்த்து விட்டுச் சொன்னான்: ''இந்தப் பயண மூட்டையைப் பார்த்துத் தவறாகப் புரிந்து கொண்டாய், நந்தினி.''

அவள் அழகிய விழிகள் அவனை ஏறெடுத்து நோக்கின. ''இந்த மூட்டை மட்டுமல்ல, உங்கள் அலங்காரமும் பயணத்துக்கு அத்தாட்சி கூட்டுகிறது'' என்றாள் நந்தினி.

''அதனால்?'' என்று வினவினான் விஜயகுமாரன்.

''உங்களைத் தடுப்பது என் கடமையாயிற்று.''

''என்ன கடமை அது?''

''ஒரு பெண்ணைத் தொட்டுவிட்டுச் சொல்லாமல் கொள்ளாமல் ஓடும் வாலிபர்களைத் தடுப்பது ஒவ்வொரு பெண்ணின் கடமையாகும்.''

இதற்குப் பிறகு இரண்டு விநாடிகள் சிந்தனையில் இறங்கினான் விஜயகுமாரன். ''ஆமாம் நந்தினி! பயணமெல்லாம் ஓட்டமாகுமா?'' என்று வினவினான் முடிவில்.

''எதுவும் சந்தர்ப்பத்தைப் பொறுத்தது'' என்று விளக்கினாள் நந்தினி.

''எந்த சந்தர்ப்பத்தைக் குறிக்கிறாய்?''

''இந்தச் சந்தர்ப்பம் தான்... இப்பொழுது நடுநிசி.''

''ஆம்.''

''நீங்கள் என் தந்தை அறையிலிருந்து படைவீடு வந்த போது மிக வேகமாக வந்தீர்கள்.''

''அதை நீ பார்த்தாயா?''

''பார்த்தேன். இந்தப் படைவீடுகளில் ஏற்படும் எந்த அசைவும் என் உப்பரிகை அறையிலிருந்து தெரியும்.''

''அந்தப்புரம் வேவு பார்க்கும் அரங்கம் போலிருக்கிறது.''

''அப்படி நினைத்துத்தான் எந்த அந்தப்புரத்திற்கும் காவல் போடப்படுகிறது.''

''காவல் அதற்காக அல்ல நந்தினி.''

''வேறு எதற்காக?'' என்று கேட்டாள் நந்தினி.

விஜயகுமாரன் கண்களில் விஷமம் சொட்டியது. ''பெண்களைப் பாதுகாப்பதற்கு.''

''பெண்கள் நள்ளிரவில் ஓடிவிடுவார்களென்ற பயமா?'' என்று கேட்டாள் அவளும் விஷமமாக.

''மாட்டார்கள். ஓடுபவர்களைத் தடுப்பார்கள்'' என்றான் விஜயகுமாரன். அத்துடன் அவளை அணுகிப் பஞ்சணையில் அவள் பக்கத்தில் அமர்ந்து கொண்டான். பிறகு இருவருமே நகைத்தார்கள்.

அந்தச் சிரிப்பு ஒரு விநாடிதான் நிலைத்தது. அடுத்த கணம் இருவருமே சீரிய எண்ணங்களுக்கு இலக்காயினர். ''ஆம். எதற்காக தந்தை அறையிலிருந்து கோபத்தடன் வந்தீர்கள்? இங்கு வந்ததும் ஏன் மூட்டை கட்டத் தொடங்கினீர்கள்?'' என்று வினவினாள் நந்தினி.

விஜயகுமாரன் அடுத்திருந்த தனது உடைப் பையின் மீது அவளைச் சாத்தினான். அவள் அழகைப் பருகிக் கொண்டே சொன்னான், ''நந்தினி! உன் தந்தையின் அரசியல் முடிவுகள் எனக்குப் பிடிக்க வில்லை'' என்று.

''அதனால்?''

''நான் வேறிடத்துக்குப் போகிறேன்.''

''அங்குள்ள அரசியல் முடிவுகள் பிடிக்குமா உங்களுக்கு?''

''சொல்ல முடியாது. ஆனால் என் சபதம் நிறைவேற அங்கே கிடைக்கும் பயிற்சி உதவும். அது மட்டுமல்ல, பின்னால் அது உன் தந்தைக்கும் உதவும்.''

''அப்பேர்ப்பட்ட இடம் எதுவோ?''

''ஸெய்ன்ட் டேவிட் கோட்டை.''

இதைக் கேட்டதும் துடித்து எழுந்தாள் நந்தினி. அவளை மீண்டும் உடைப் பையின் மீது சாய்த்த விஜயகுமாரன் அவள் மீது தானும் லேசாகச் சாய்ந்தான். அந்த நிலையில் சொன்னான், ''இனி என் சபதம் நிறைவேற அங்கே தான் இருக்கிறது மருந்து'' என்று.

நந்தினியின் அழகிய விழிகள் அவன் விழிகளை நன்றாகச் சந்தித்தன. அவள் கைகள் அவன் கழுத்தை வளைத்து தலையை எடுத்து மார்பின் மீது சாய்த்துக் கொண்டன. ''என்னை விட்டுப் போகிறீர்கள்...'' என்ற அவள் முணுமுணுப்பில் வேதனை நிரம்பி நின்றது.

''ஆம். ஆனால் மீண்டும் திரும்பிவர... உன்னை நிரந்தரமாக என் சொத்தாக்கிக் கொள்ள...'' என்ற விஜயகுமாரன் குரலிலும் சோகம் ததும்பி நின்றது.

''அப்படி என்ன மருந்து இருக்கிறது ஸெய்ண்ட் டேவிட் கோட்டையில்?'' என்று மெதுவாக வினவினாள் அவள்.

அவள் மார்பிலிருந்து முகத்தை நிமிர்த்திய விஜயகுமாரன் அவள் காதுக்கருகில் மருந்தின் பெயரைச் சொன்னான். அவன் சொற்களைக் கேட்ட அவள் அம்புஜ விழிகளில் வியப்பு மிதமிஞ்சி நின்றது. அந்த வியப்பைப் போக்கவோ என்னவோ அவன் உதடுகள் அந்தப் பங்கஜ விழிகளின் மீதும் மாறிமாறிப் பதிந்தன.

7. காலத்தின் துரத நடை

உடலோடு உடல் இழைந்ததால் உலகை மறந்த நிலை; உணர்ச்சிகளின் சுழற்சியால் காதல் விரித்த வலை; இவை இரண்டையுமே விஜயகுமாரன் அவள் காதில் உதிர்த்த மந்திரச் சொல் கத்தரித்துவிடவே, அவள் விழிகளில் அவன் இதழ்கள் மாறி மாறிப் பதிந்த போதுகூட அவள் பழைய மயக்கத்தின் வசப்படாமல் வியப்பின் வசமே சிக்கியதால், ''அந்த மருந்தின் பெயரை இன்னொரு முறை சொல்லுங்களேன்'' என்று மெள்ள வினவினாள், சொர்க்கத்திலிருந்து சாதாரண நிலைக்குத் திரும்பி.

''கிளைவ்'' என்று மீண்டும் சொன்ன விஜயகுமாரன் அவள் மீது சாய்ந்த நிலையிலிருந்து மீண்டும் அவள் பக்கத்தில் உட்கார்ந்து அவள் இடையைத் தனது இரு கைகளாலும் வளைத்தான்.

அவன் உடை மூட்டையில் சாய்ந்து படுத்த வண்ணம் அவனைக் கூர்ந்து நோக்கிய நந்தினி, ''யார்? திருச்சிச் சாலை சத்திரத்தில் நமது உதவிக்கு வந்தானே அந்த வெள்ளைக்காரனா?'' என்று வினவினாள். கண்களிலே விரிந்த வியப்பின் சாயை உதடுகளிலும் பரவ.

''ஆம், அவன் தான்'' என்றான் விஜயகுமாரன், அவள் அழகைப் பருகிய வண்ணம்.

அவன் அப்படிப் பதில் கூறிய சமயத்திலும் அவன் கண்கள் மட்டும் தனது ஆடையை ஊடுருவிப் பார்ப்பது போன்ற பிரமை தஞ்சை மன்னன் மகளுக்கு ஏற்பட்டதால் அவள் முகத்தில் மீண்டும் நாணத்தின் சாயை படர்ந்தது. உடலின் கவர்ச்சி அம்சங்களை அவன் கண்களிலிருந்து மறைக்கவோ என்னவோ அவள் லேசாகத் திரும்பிப் படுத்தாள். அதனால் வேட்கை

அதிகமாகவே செய்தது. திரும்பியதால் அவள் மார்பு அவன் கண்களிலிருந்து மறைந்தாலும் இடைக்கும் கீழே எழுந்த ஒரு புறத்து அழகு அவன் இதயத்தைச் சிதைத்ததால் அவன் கையொன்று அதன் மீது தவழ்ந்தது. இதனால் நந்தினி நகைத்தாள்.

ஒரு கண் உடை மூட்டையில் பதிந்திருந்ததால் இன்னொரு கண்ணால் பார்க்கவும் செய்தாள். இரு கண்களின் பார்வையைவிட ஒரு கண்ணின் பக்கப் பார்வையின் வேகம் எத்தன்மையது என்பதைப் புரிந்து கொண்ட விஜயகுமாரன் இதயம் மிக வேகமாக அடித்துக் கொண்டதால், அந்த ஆபத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளக் கையை எடுத்துக் கொண்டான் அவன். படுக்கையிலிருந்து எழுந்து எட்ட நின்று கொண்டான்.

நின்ற நிலை படுத்த நிலையைவிட எந்த விதத்திலும் ஆதரவு அளிக்கவில்லை அவனுக்கு. பஞ்சணையில் கிடந்த அந்த மோகன உருவத்தின் வளைந்த நிலையும் கண்ணைக் கவர்ந்த பல்வேறு அம்சங்களும் அவனை மீண்டும் வெறி பிடிக்கும் நிலைக்கு அழைத்துச் சென்று கொண்டிருந்தன. அதனால் அவன் அவளைப் பார்ப்பதைவிட்டு அறையில் அங்குமிங்கும் உலாவினான் சில விநாடிகள். அந்த உலாவலால் சிறிது உணர்ச்சிகள் ஒரு கட்டுக்குள் அடங்கவே அவன் கனவில் பேசுவது போல் பேசினான். ''ஆம், அவன் தான், நந்தினி! அந்த வெள்ளைக்கார வாலிபன் தான். அவன் தான் என் கவலைக்குத் தகுந்த மருந்து. அவன் சாதாரண மனிதனல்ல. எதோ பெரிய காரியத்தைச் சாதிக்கப் பிறந்தவன்'' என்று கூறினான்.

நந்தினி படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். ''ஏதோ சொப்பனத்தில் இருக்கிறீர்கள். தஞ்சை ராஜ்யம் அளிக்க முடியாத உதவியை அந்த வாலிபன் உங்களுக்கு எப்படி அளிக்க முடியும்?'' என்று வினவினாள் குனிந்த தலை நிமிராமலே.

விஜயகுமாரன் உலாவலை நிறுத்தி அவளை உற்று நோக்கினான். குனிந்த நிலையிலும் அவள் அழகு அவன் கண்களைப் பறித்தது. உடை மூட்டையில் தலை உருண்டதால் தலையிலிருந்த மலர்ச் சரத்தில் பாதி நார் மட்டும் தெரிந்தது. குழலும் கலைந்து விட்டது. கலைந்ததிலும், மலர் சிதறலிலுங்கூட அழகு இரட்டிப்பாக முடியும் என்பதை அந்த நேரத்தில் புரிந்து கொண்டான் விஜயகுமாரன். குனிந்த தலை அவன் கழுத்தின் வெளுப்பை எத்தனை மடங்கு அதிகமாக அறை வெளிச்சத்தில் காட்டமுடியும் என்ற ஆராய்ச்சியும் அவன் சித்தத்தில் சுழன்றது. மீண்டும் உணர்ச்சிப் பிரவாகத்தில் தான் இழுபடுவதைத் தவிர்க்க உரையாடலின் உதவியை நாடிய அந்த வாலிபன் சொன்னான்:

www.thamizhthenee.blogspot.com

''தஞ்சை ராஜ்யத்தின் உதவி தற்சமயம் மிகவும் பஞ்சை, பயனற்றது. உன் தந்தையின் உள்ளம் ஸதாரா அரசின் உதவியை, அதன் கத்தியைப் பயன்படுத்திக் கொள்ள மறுக்கிறது. இந்த அரசர்களுக்குள்ள வீண் கௌரவம் தஞ்சை அரசின் அஸ்திவாரத்தைத் தோண்டிக் கொண்டிருக்கிறது. ராகோஜி போன்ஸலாவும் முராரிராவும் உதவிக்கு வராவிட்டால் பல ஆண்டுகளுக்கு முன்பே தஞ்சை ராஜ்யம் மகாராஷ்டிரர் கைகளை விட்டுப் போயிருக்கும். அந்தப் படிப்பினையைக்கூட உன் தந்தைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இப்போது மீண்டும் சந்தாசாகிபின் கை உயர்ந்து விட்டது. அந்தக் கையை வலுப்படுத்த டூப்ளே கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார். வெள்ளைக்காரர் போர் முறை நமது போர் முறையை விடப் பல மடங்கு உயர்ந்தது என்பதைப் பாரடிஸ் என்ற பிரெஞ்சு என்ஜினீயர் சென்னைக்கருகில் நடந்த அடையாற்றுப் போரில் நிரூபித்து விட்டார். ஆகையால் அவர்கள் அணிவகுப்பு, படை நடத்தும் முறை, இவற்றை நாம் கற்றாலொழிய நமக்கு நாடு நிலைப்பது கஷ்டம். அதை மானாஜி நன்றாக அறிவார். ஆனால் அவர் இஷ்டப்படி இப்போது தஞ்சையில் விவகாரங்கள் நடைபெறவில்லை. ஆகவே, தஞ்சை வெகு சீக்கிரம் எதிரிகளின் தாக்குதலுக்கு இலக்காகும். சந்தாசாகிபின் படைகளையும், பிரெஞ்சு படைகளையும் ஒரே சமயத்தில் சமாளிக்கும் அளவுக்குத் திராணியில்லை. வெளி உதவி அவசியம். அதை உன் தந்தை ஏற்க மறுக்கிறார்.''

இப்படி விடுவிடு என்று உணர்ச்சியுடன் விஜயகுமாரன் பேசியதால் நந்தினியின் சித்தமும் அரசியலுக்குத் திரும்பவே, அவளும் மெல்ல பஞ்சணையிலிருந்து எழுந்து நின்று அவனை நேருக்கு நேர் நோக்கினாள். ''தந்தையின் போக்கு உங்களுக்குப் பிடிக்கவில்லை?'' என்றும் கேட்டாள் சினத்துடன்.

''ஆம்''என்றான் விஜயகுமாரன் திட்டத்துடன்.

''அவர் எத்தனை அபாயங்களைச் சமாளித்திருக்கிறார் தெரியுமா?''

''தெரியும்.''

''அவர் அநுபவம்...?

''மிக அதிகம்.''

''உங்களை விட அவருக்கு அநுபவம் அதிகம்.''

''மறுக்க வில்லை நான்.''

''அப்படியிருக்க நீங்கள் அவரிடம் நம்பிக்கை வைத்து இங்கேயே தங்கினால் என்ன? தஞ்சைப் படையில் இப்போதுள்ளப் பதவியைத் தொடர்ந்து வகித்தால் என்ன?'' இந்தக் கேள்வியை நந்தினி மிக உக்கிரத்துடன் கேட்டாள்.

விஜயகுமாரன் முகம் சிந்தனைக் கடலாயிருந்தது. ஆனால் அக் கடலில் அலைகள் கொந்தளிக்க வில்லை. சேதுவைப் போல் நிச்சலமான தடாகம் போலிருந்தது. அந்த நிதானத்துடன் மெள்ளப் பதில் கூறத் தொடங்கிய விஜயகுமாரன் தன் இடக் கையால் வலக் கையைப் பிடித்துக் கொண்டான்.

''நந்தினி! நான் எனது ஊரை விட்டு வந்தது பதவி ஏற்க அல்ல. இந்த நாட்டைக் காப்பாற்றக் கூட அல்ல. எனது சபதமொன்றை அரங்கன் சந்நிதானத்தில் செய்ய, அதை நிறைவேற்ற, அந்த லட்சியத்துக்கு எந்த ராஜ்யம் இடம் கொடுக்கிறதோ அந்த ராஜ்யத்தில் நான் இருப்பேன். எந்த இனம் அது நிறைவேற உதவுகிறதோ அந்த இனத்துடன் சேருவேன். எந்தப் பயிற்சி நிறைவேற்றத் தேவையோ அந்தப் பயிற்சியை மேற்கொள்வேன். எனக்கு மாட்ச் லாக்கால் சுடத் தெரியும். மகாராஷ்டிரர்களின் வளைவு வாளால் தலைகளைச் சீவத் தெரியும். புரவிப் படையை இயக்கத் தெரியும். வேலைக் கூடக் குறி தவறாமல் ஓடும் குதிரையிலிருந்து எறிவேன். இலக்குத் தவறாமல் அம்பெய்யவும் முடியும். ஆனால் தற்காலப் போர்முறைக்கு இவை மட்டும் போதா. படை அணிவகுப்பு முறைகளில் வெள்ளையர் சில புதுமுறைகளைக் கையாளுகிறார்கள். அதை நான் அறிய வேண்டும். அந்தப் பயிற்சி சுதேச மன்னர்கள் மீது எனக்கொரு புது உயர்வை அளிக்கும். அதைப் பெற நான் ஸெய்ன்ட் டேவிட் கோட்டையை நாடிச் செல்கிறேன். அங்கே கிளைவிடம் சேர்ந்து அந்தப் பயிற்சியை முழுதும் பெறுவேன். அப்படிப் பெற்று இங்கே திரும்புவேன் ஒரு நாள். அந்த நாள் தஞ்சை ராஜ்யத்துக்குப் பொன்னாளாகும். எனக்கும் நன்னாளாகும். எனது சபதம் நிறைவேற அந்த நாளில் இந்தச் சோழமண்டல மண்ணில் வித்துடுவேன்'' என்று ஆவேசத்துடன் கூறினான் விஜயகுமாரன்.

''இந்தப் பயிற்சிக்கு கிளைவை ஏன் தேர்ந்தெடுத்தீர்கள்? பிரெஞ்சுக்காரர் உதவாதா?''

''உதவாது. அவர்கள் தஞ்சை மண்டலத்தின் விரோதிகள்.''

''பிரிட்டிஷார்?''

''தற்சமயம் அவர்களுடன் நாம் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறோம். தவிர, கிளைவ் மகாவீரன்.''

திரும்பத் திரும்ப அவன் கிளைவைப் பற்றிச் சொன்னது அவளுக்கு எரிச்சலாக இருந்தது. ''கிளைவ் என்ன மந்திரவாதியா இந்த மாநிலத்தை மாற்றிப் படைக்க?'' என்றாள்.

''இல்லை! தந்திரவாதி. தவிர அவன் கண்களில் சதா ஒரு கனவு இருக்கிறது'' என்றான் விஜயகுமாரன்.

''பகற்கனவா?'' அவள் குரலில் கேலியும் கோபமும் இருந்தன.

விஜயகுமாரன் இதழ்களில் இளநகை அரும்பியது அவள் சினத்தைப் பார்த்து. ''கனவு அர்த்தமற்றதல்ல அரசகுமாரி. வாழ்க்கையே கனவென்று தத்துவம் இருக்கிறது. ஆனால் வாழ்க்கையே அர்த்தமற்றதாக ஆகவில்லையே. நீயும் நானும் வருங்கால வாழ்க்கை பற்றிக் கனவு காண்கிறோம். அது அர்த்தமற்றதா? பயனற்றதா? கனவு காண்பவள் காரியங்களைச் சாதிக்கிறாள். என் மனத்தில் ஏதோ ஒன்று சொல்கிறது, கிளைவின் கனவுடன் என் சபதமும் சம்பந்தப் பட்டிருக்கிறதென்று. ஆகவே அவனை நாடி நான் செல்கிறேன். ஆனால்...?

''திரும்பவும் வருவேன் உன்னை அழைத்துச் செல்ல'' என்று கூறிய விஜயகுமாரன், அவளை நெருங்கி இரு தோள்களையும் பிடித்தான். அத்துடன் கேட்கவும் செய்தான், ''நந்தினி, என்னுடன் வடக்கு வாசல் வரையில் வருவாயா?'' என்று.

''எதற்கு? நம்மிருவர் உறவையும் பறைசாற்றவா?'' என்று வினவிப் புன்னகை பூத்தாள் அவள்.

''இல்லை. அதை இனிமேல் பறைசாற்றத் தேவையில்லை.''

''ஏன்? உலகமறிந்த கதை போல் இருக்கிறது?'' என்றாள் அரசகுமாரி.

''ஆம்.''

''அப்படியானால் நான் வருவானேன்?''

''நான் வெளியில் செல்ல உதவியாயிருக்கும். தவிர, தஞ்சை ராஜ பேரிகை சப்திக்கும், அரசகுலத்தவளாவ நீ வருவதால்.''

''ராஜபேரிகை முழக்கமா?''

''ஆம்.''

''நான் உங்களை வெளியே அனுப்புவது தந்தைக்குத் தெரிய வேண்டுமா?''

''அதுவும் ஒரு காரணம். அந்தப் பேரிகை ஒலியைக் காதில் வாங்க ஆசைப்படுவதும் ஒரு காரணம்.''

''எதற்கு அந்த ஆசை?''

''ராஜ பேரிகை பின்னால் ஒரு காலத்தில் ஒலிக்கும்.''

''எப்பொழுது?''

''என் சபதம் நிறைவேறும் போது.''

''அதற்காக?''

''அந்த ஒலி இப்பொழுது என் காதில் மட்டுமல்ல இதயத்திலும் விழும். அந்த வேகம் என் சிந்தனையை இலக்கை விட்டுத் தடம் புரளாதிருக்கச் செய்யும்.'' மிகுந்த உணர்ச்சியுடன் சொன்னான் விஜயகுமாரன்.

அவள் பதிலேதும் சொல்லவில்லை.தனது தலைப்பை எடுத்து முக்காடு போட்டுக் கொண்டாள். விஜயகுமாரன் தனது உடை மூட்டையை எடுத்துக் கொள்ள அவனைத் தொடர்ந்தாள் அரசகுமாரி.

வடக்கு வாசலை அரசகுமாரி அடைந்ததும் ராஜபேரிகை தடதடவென முழங்கியது. அந்த முழக்க அடிகள்-அல்ல, இடிகள். அரசகுமாரியின் இதயத்தைத் தாக்கினாலும் அதை அவள் வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை. புரவியின் முதுகின் மீதிருந்த அவள் கையை அவன் பிடித்த போது அவள் கண்கள் அவனை நோக்கித் திரும்பின. கண்களில் ஏதோ யோசனை பிறந்தது. சட்டென்று கையை எடுத்துக் கொண்டு அவள் தனது தலைச் சுட்டியை எடுத்து அவன் கையில் திணித்துவிட்டு விலகி நின்றாள். சுட்டியை ஒரு முறை விளக்கொளியில் பார்த்த விஜயகுமாரன் அதை தனது கச்சையில் பத்திரப்படுத்திக் கொண்டான். பிறகு புரவிமீது திடீரெனத் தாவி ஏறி அதைச் செல்ல விட்டான் மெதுவாக.

புரவியின் நடையில் அசைய அசைய மிகக் கம்பீரமாகச் சென்ற விஜயகுமாரனின் வீர உருவத்தைப் பார்த்துக் கொண்டே நீண்ட நேரம் நின்றாள் நந்தினி. அவள் கண்களில் நீர் திரளவில்லை, இதயத்தில் திரண்ட காரணத்தால்.

8. சந்திப்பு

காலம் அத்தனை துரித நடை போடும், கர்நாடகத்தின் சரித்திரம் அத்தனை சீக்கிரம் மாறும் என்பதை அரசகுமாரி நந்தினி என்ன, அவளைப் பிரிந்து சென்ற விஜயகுமாரனும் அந்த இரவில் உணரவில்லை. அரசகுமாரி அரண்மனையின் வடக்கு வாயிலுக்கு வந்ததால் ஒலித்த ராஜபேரிகை சத்தம் மட்டும் டமடம வெனப் பலமாக அவர்கள் காதுகளில் விழுந்தாலும் அந்தப் பேரிகை சப்தத்திலும் ஒரு துரிதம் இருப்பதை அவர்கள் இருவருமே கவுனிக்கவுமில்லை, உணரவுமில்லை, உணர்ச்சிகள் தங்கள் சொந்த ஆசாபாசங்களில் லயித்திருந்த காரணத்தால்.

புரவி கண்ணுக்கு மறையுமட்டும் அவன் செல்வதைப் பார்த்துக் கொண்டே நின்ற அரசகுமாரி, திரும்பவும் அந்த புரத்துக்குச் சென்று பஞ்சணையில் துன்பத்தோடு விழுந்த போது,

அவள் மார்புகூட வேகமாக அடித்துக் கொண்டது. காலம் வேகமாக ஓடப் போகிறது என்பதை அறிவுறுத்த. வாலிபனான விஜயகுமாரனின் புரவிகூடக் காற்று வேகத்தில் பறந்து சென்றது.

தஞ்சையின் நெடுஞ்சாலையை அடைந்த பின்பு குளம்புகள் தரையில் பாவுவதுகூடத் தெரியாமல் அம்புபோல் அது பாய்ந்து சென்ற வேகத்தில் தன்னை மறந்த விஜயகுமாரனை, காலம் மறக்காமல் இரண்டாவது நாளே ஸெயின்ட் டேவிட் கோட்டையின் அருகே கொண்டு சேர்த்திருந்தாலும், தான் தேடி வந்த கிளைவ் அங்கில்லை என்பதையும் சென்னைக்குச் சென்றுவிட்டான் என்பதையும் அறிந்ததால், மீண்டும் தனது பயணத்தைத் துவக்கினான் விஜயகுமாரன். அப்படிப் பயணத்தைத் துவக்கிய போது பழைய உடைகளை மாற்றிக் கொண்டு வாணிப வேடம் பூண்டு கிளம்பினான். வழியில் பிரெஞ்சுப் படைகள் நடமாட்டம் அதிகமாயிருக்கிறதென்று ஸெயின்ட் டேவிட் கோட்டையில் கிடைத்த செய்தியின் விளைவாக, புரவிக்கு இரு புறத்திலும் தொங்கவிட்ட தோற் பைகளுக்குள் பல விற்பனைப் பொருள்களை வாங்கி அடைத்துக்கொண்டும், தனது வாளைப் பல துணிகளில் சுற்றிப் புரவியின் வயிற்றில் லேசாகக் கட்டி மறைத்தும், கைத்துப்பாக்கியை மட்டும் அங்கிக்குள்ளிருந்த பையில் போட்டுக் கொண்டும் ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டையை நோக்கி விரைந்தான்.

ஸெயின்ட் டேவிட் கோட்டையில் கிடைத்த எச்சரிக்கை சரியானதென்பதை வழியில் பல இடங்களில் கண்ட விஜயகுமாரன் எந்த விநாடியிலும் ஸெயின்ட் டேவிட் கோட்டையோ தஞ்சைக் கோட்டையோ தாக்கப் படலாமென்பதை உணர்ந்திருந்தது. எங்கும் படைகள் நடமாட்டம் மிக அதிகமாயிருந்தது. புதுச்சேரியை அணுகாமல் அதன் எல்லைக் கிராமங்களில் அவன் புகுந்து சென்றபோதும் கூட ஆங்காங்கு பலமான பாதுகாப்பு இருந்ததை அவன் கவனித்தான். அவன் உணவோ, சிற்றுண்டியோ அருந்த தங்கிய விடுதிகளில் கூடப் படையெடுப்புப் பேச்சே அதிகமாக இருந்ததால், அதைப் பற்றி மேலும் தகவல் அறிய புதுவையிலிருந்து அரை காத தூரத்துக்கு அப்பாலிருந்த சாலைச் சத்திரமொன்றில் அடுத்த நாள் இரவு வேண்டுமென்றே தங்கினான்.

பழங்காலத்து மன்னர்கள் கட்டி வைத்த சத்திரமாதலால் அங்கு எந்த விதமான சௌகரியத்துக்கும் குறைவில்லாததால், தனது புரவியை லாயத்தில் கட்டி விட்டு நீராடி, புத்தாடை அணிந்து, உணவருந்தச் சத்திரத்துக் கூடத்தின் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தான். சத்திரம் முழுவதிலும் சாதாரண மக்களைவிடப் போர் வீரர்களே அதிகமாயிருந்ததால் அவன் உணவருந்திய சமயத்திலும் பேச்சு போரைப் பற்றியதாகவே இருந்தது. கூடத்தின் மத்தியில் உட்கார்ந்திருந்த இஸ்லாமிய வீரனொருவன் சற்று அதிகமாகக் குடித்து விட்டிருந்த காரணத்தால், ''நம்ம நவாப் பத்து நாளில் கிளம்பரான். ஒழிந்தான் தஞ்சாவூர் ராஜா!'' என்று கூறிவிட்டுப் பெரிதாக நகைத்தான்.

''அரே! நவாப் தனியாகப் போகலை. அந்தப் பிரெஞ்சுப் படைத் தலைவர் ஆதுனில்லை அவமரியாதையாகப் பேசாதே'' என்று.

''ஆதுனில் நவாபா?'' என்றான் முதல் வீரன்.

''நவாபின் ஆள். நவாப் சம்பளம் கொடுக்கிறானில்லே?'' என்றான் இரண்டாமவன்.

இந்த வழியில் சம்பாஷணை முற்றவே விஜயகுமாரன் அவசரமாக உணவருந்திக் கையலம்பி அவர்கள் இருந்த இடத்துக்கு வந்து, ''ஆதுனில் எப்போது கிளம்புகிறார் தஞ்சைக்கு?'' என்று அவர்கள் சம்பாஷணையில் கலந்து கொண்டான்.

அவன் வந்துங்கூட முதல் இரு இஸ்லாம் சிப்பாய்களும் பேச்சை நிறுத்த வில்லை. குடிக்காத மூன்றாவது வீரன் மட்டும் கேட்டான். ''எப்போது கிளம்பினால் உனக்கென்ன?'' என்று.

''நானும் அவருடன் போக வேண்டும்'' என்று கூறினான் விஜயகுமாரன் கவலையைக் காட்டி.

''நீ சிப்பாயா?'' என்று கேட்ட அந்த வீரன், விஜயகுமாரனின் உடையைச் சந்தேகத்துடன் பார்த்தான்.

''இல்லை. அவர் ஒற்றன்.''

''வணிகன் மாதிரி இருக்கிறாய்.''

''ஒற்றர்கள் பல வேஷங்கள் போடுகிறார்கள்.''

''அச்சா!'' என்று கூறியவன் ஏதோ நினைத்துக் கொண்டு, ''ஆனால், சரி வா. அவரிடம் அழைத்துப் போகிறேன்'' என்று கூறியபடி சரேலென்று தனது கைத்துப்பாக்கியை எடுத்து விஜயகுமாரனின் மார்பை நோக்கி நீட்டினான்.

''இதற்கென்ன அர்த்தம்?'' என்று சிரினான் விஜயகுமாரன்.

''சொல்கிறேன், இப்படி வா'' என்ற அந்த வீரன் விஜயகுமாரன் மார்புக்கு எதிரில் கைத்துப்பாக்கியைக் குறி வைத்துக் கொண்டே கூடத்தின் பவர் விளக்கு தொங்கிக் கொண்டிருந்த இடத்துக்கு வந்து, ''இப்பொழுது என்னை நன்றாகப் பார்'' என்றான்.

அவனைப் பார்த்த விஜயகுமாரன் கண்கள் பிரமிப்பைக் காட்டாவிட்டாலும் உள்ளத்தில் வியப்பு மிதமிஞ்சி நின்றது. ''உன்னை எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறது'' என்றான்.

''நன்றாக நினைவுபடுத்திப் பார்'' என்று கூறி பயங்கரமாக நகைத்தான் அந்த இஸ்லாமிய வீரன்.

சிந்தனைக்குத் தேவையில்லாதிருந்தாலும் சிந்தனைக் குறியை முகத்தில் காட்டிய விஜயகுமாரன், சில விநாடிகளுக்கு பிறகு, ''இந்த ஏழை தங்களை எங்கே பார்த்திருக்கப் போகிறான்?'' என்று வினவினான்.

''உன் மூளை வேலை செய்ய வில்லை'' என்றான் இஸ்லாமிய வீரன்.

''தங்கள் மூளை வேலை செய்கிறது போலிருக்கிறது?''

''ஆம். அதனால் தான் உன்னை யாரென்று கண்டுபிடித்தேன்.''

''யார்?''

''ஒற்றன்.''

''அதை நானே கூறிவிட்டேனே.''

''கூறியதில் ஒரு தவறு இருக்கிறது.''

''என்னவோ?''

''நீ ஒற்றன் தான். ஆனால் பிரெஞ்சு ஒற்றனல்ல. பிரிட்டிஷ் ஒற்றன்'' என்று கூறிய அந்த வீரன், ''இந்த ஏழை இப்ரஹீமை நீ இதற்குள் மறந்திருக்கமாட்டாயென்று நினைக்கிறேன்'' என்று கூறி நகைத்தான். ''அன்று நீ அந்தப் பிரிட்டிஷ்காரனுடன் ஒரு பெண்ணுடனும் வந்தாய். அந்தப் பெண் அழகாயிருந்தாள். அவள் எங்கே?'' என்றும் ஏளனமாகக் கேட்டான்.

விஜயகுமாரன் மனசில் மெள்ள திகில் உதயமாயிற்று. சந்தா சாகிபின் வலக் கரமான இப்ரஹீமை அத்தனை நாள் கழித்துப் புதுவைக்கருகில் சந்திக்க முடியும் என்பதை அவன் சொப்பனத்தில் கூட நினைக்க வில்லை. சமயபுரத்திலிருந்து தப்பியோடிய போது தஞ்சைச் சாலைச் சத்திரத்தில் பல நாட்களுக்கு முன்பு சந்தித்த இப்ரஹீம் தன்னை அத்தனை நினைவு வைத்துக் கொண்டிருக்கிறான் என்பதும் விஜயகுமாரனுக்கு வியப்பாயிருந்தது. ஆனால் அது எதையும் வெளிக்குக் காட்டாமல், ''நவாப் அவர்களின் வலக் கை போன்ற வீரரை இன்று சந்திக்கும் பாக்கியம் பெற்றது எனது அதிர்ஷ்டம்'' என்றான். ''இல்லை. அதிர்ஷ்டமில்லை'' இப்ரஹீமின் சொற்கள் இகழ்ச்சியுடன் வெளிவந்தன.

''ஏன்?''

''உயிர் இழப்பது துரதிருஷ்டமல்லவா?'' என்ற இப்ரஹீம் சரேலென்று கைத்துப்பாக்கியின் குதிரையை இழுத்து விட்டான்.

அப்படி வேகமாகவும் வெகு அருகாமையிலும் குதிரையை இழுத்தும் துப்பாக்கி ரவை விஜயகுமாரன் இதயத்தில் பாயவில்லை. இப்ரஹீமின் நோக்கத்தை உணர்ந்திருந்த விஜயகுமாரன் சரேலென அவன் கையைப் பிடித்து உயரத் தூக்கி விட்டபடியால் அடுத்து வந்த இரு ரவைகளும் மேலே இருந்த பவர் விளக்கில் பாய்ந்து சிம்னியை உடைத்து விடவே, கூடத்தில் அந்தகாரம் சூழ்ந்தது. அடுத்த விநாடி இரும்புக் குண்டு போல் இப்ரஹீமைக் குடை சாய்த்து விடவே அவன் பின்னால் இருந்த இரு குடிகார்கள் மீது விழுந்தான். விழும் போது ''பிடியுங்கள் அவனை தப்ப விடாதீர்கள்'' என்றும் இரைந்தான்.

அவன் போட்ட கூச்சலால் ஏற்பட்ட குழப்பத்தில் அங்குமிங்கும் குடி வெறியில் தள்ளாடி ஓட முயன்ற வீரர்கள் மத்தியில் புகுந்து சத்திரத்துப் பின்கட்டு வழியாகத் தப்பிய விஜயகுமாரன், லாயத்திலிருந்த தனது புரவியை அவிழ்த்துக் கொண்டு வெகு வேகமாக அதன் மீது பாய்ந்து வெளியிலிருந்த பெருஞ்சாலையில் காற்றெனப் பறந்து சென்றான். குடித்திருந்த வீரர்கள் வேகத்துடன் தன்னைத் தொடர முடியாதென்று நினைத்தான். ஆனால் எங்கிருந்தோ பீரிட்ட பெரும் பிகிலின் ஓசை பக்கத்துத் தோப்பிலிருந்த பல வீரர்களைக் கிளப்பிவிட்ட படியால் அவனைப் பிடிக்க புரவி வீரர்கள் பலர் வேகமாக விரைந்தனர். பின்னாலிருந்தும் பல துப்பாக்கிகள் தன்னை நோக்கிச் சப்திப்பதை அறிந்த விஜயகுமாரன், அங்கிக்குள்ளிருந்த தனது கைத்துப்பாக்கியை எடுத்துப் பின்னால் தன்னைத் துரத்தி வந்த புரவி வீரரைக் குறிப் பார்த்துச் சுட்டான். அந்தச் சுடுகையில் ஒரு வீரன் மாண்டாலும் மற்றும் பலர் துரத்துவதை உணர்ந்ததால் விஜயகுமாரன் தான் சிறைப்படுவது நிச்சயம் என்றே நம்பினான்.அந்த நம்பிக்கையின் விளைவாகவும் சிறைப்பட்ட சில விநாடிகளில் இப்ரஹீம் தன்னைத் தீர்த்துக் கட்டிடுவான் என்ற எண்ணத்தாலும், தனது புரவியைச் சாலையை விட்டுக் குறுக்கு வழியொன்றில் இறக்கி விரைந்தான்.

எதிரிகளிடமிருந்து குண்டுகள் அவனை நோக்கிச் சீறி வந்தன. அவனும் மீண்டும் பவுடரையும், ரவைகளையும் பொருத்தித் திரும்பச் சுட்டுக் கொண்டே புரவியைப் பறக்க விட்டான். அப்படிப் பறக்க விட்டவன் சற்றுத் தூரத்தில் ஒரு விளக்கொளி தெரிவதைக் கண்டு புரவியைச் செலுத்தினான்.

விளக்குத் தெரிந்த இடம் அவனை விரைந்து அணுகி வந்தது. அவன் புரவியும் இந்த இடத்தின் வேலியை ஒரே தாவில் தாவி உள்ளேயிருந்த தோப்பை ஊடுருவி, அதன் மரத்திலிருந்த பங்களாவை நோக்கி விரைந்தது. அந்தப் பங்களாவுக்கு முன்பு தனது புரவியை நிறுத்திக் கீழே குதித்த விஜயகுமாரன் தான் வந்த

சாலையை நோக்கினான். எதிரிப் புரவிகள் எதையும் காணோம். புரவியின் லகானை அதன் முதுகில் எறிந்து விட்டுப் பங்களாவின் கதவைத் தட்டினான். கதவும் மெல்லத் திறந்தது. திறந்த கதவின் மூலம் ஒருவன் தள்ளாடித் தள்ளாடி மயக்கத்துடன் வெளியே நடந்து வந்தான். ''ஹீ யூ? நீ... யார்? தும் கோன்?'' என்று மூன்று மொழிகளால் வார்த்தைகளைக் குளறிக் கொட்டித் திடீரென அவன் மீது சாய்ந்து விட்டான்.

அவனைத் தாங்கிப் பிடித்த விஜயகுமாரன், 'வந்த இடத்தில் இதென்னடா இழவு?' என்று உள்ளூறச் சபித்துக் கொண்டே அந்த மனிதனைத் திடமாகப் பிடித்தான் விழாமல். அந்த மனிதன் உடம்பு தணலாகக் கொதித்துக்கொண்டிருந்தது. மெள்ள அவனைப் பங்களாவுக்குள் அழைத்துச் சென்ற விஜயகுமாரன் பங்களா கூடத்திலிருந்த மஞ்சத்தில் கிடத்தினான். அப்படிக் கிடத்தியபோது, கூடத்தின் விளக்கு அந்த மனிதன் முகத்தில் நன்றாக விழவே திக்பிரமைக்கு உள்ளானான் வீரனான விஜயகுமாரன். மஞ்சத்தில் கிடந்தவன் கிளைவ்!

9. காதலுக்கும் கண் உண்டு

எந்த மனிதனைக் காண தஞ்சையைவிட்டு, காதலித்த வஞ்சியையும் துறந்து வந்தானோ, அந்த மனிதனை அந்த நிலையில், சென்னைக்கு வெகு தூரத்துக்கு முன்னே சந்திக்கப் போகிறோம் என்ற நினைப்பு சிறிதளவும் இல்லாததால், அந்தப் பங்களாவின் கூடத்தின் பவர் விளக்கின் வெளிச்சத்தில் அவன் முகத்தைக் கண்டதும் பெரும் பிரமிப்புக்கே உள்ளானான் விஜயகுமாரன்.

மஞ்சத்தில் கண்களை மூடிப் படுத்துக் கிடந்த அந்த முகத்தில் அழகு அதிகம் இல்லையானாலும் வீரக் களைச் சுடர் விட்டதைக் கண்ட விஜயகுமாரன், ''உறங்கினாலும் மயங்கினாலும் விழித்திருந்தாலும் வீரன் வீரன்தான்'' என்று உள்ளூறச் சொல்லிக் கொண்டு, மஞ்சத்தின் பக்கத்தில் மண்டியிட்டு உட்கார்ந்து அந்த வெள்ளை வாலிபனின் நெற்றியின் மீது தனது கையை வைத்துப் பார்த்தான். அளவுக்கு மீறிய சுரம் அந்த வாலிபனை வாட்டிக்கொண்டிருப்பதை உணர்ந்த விஜயகுமாரன் தானிருந்த நிலையையும் மறந்து, ''யாரங்கே! பாத்திரத்தில் சிறிது சுடுநீர் கொண்டு வா'' என்று இரைந்து உத்தரவிட்டு, கிளைவின் அங்கியையும் பிரித்து விட்டு இதய வேகத்தையும் பரிசோதித்தான். பிறகு நாடியைப் பார்த்துத் தானாகத் தலையை ஆட்டிக்கொண்டு தனது தலைப்பாகைத்

துணியை அவிழ்த்துத் துணியின் ஒரு பக்கத்தால் கிளைவின் முகத்தில் துளிர்த்திருந்த வியர்வைத் துளிகளைத் துடைத்தான். அதற்குள் ஒரு பாத்திரத்தில் சுடுநீர் அவனிடம் நீட்டப்பட்டதால், அதை யார் நீட்டுகிறார்கள் என்பதை அறியத் தலையைத் திரும்பாமலே தனது தலைப்பாகைத் துணியின் மற்றொரு பாகத்தை அந்தச் சுடுநீரில் தோய்த்துத் தனது நண்பனின் முகத்தில் இதமாக ஒற்றி ஒற்றித் துடைத்தான்.

பாத்திரத்தை பக்கவாட்டில் ஏந்தியவன், ''சுரத்தை இறக்கப் பனிக்கட்டி அல்லது குளிர் நீரைத்தான் தலையில் உபயோகிக்க வேண்டும். சுடுநீரை உபயோகிக்கக் கூடாது'' என்று ஆங்கிலத்தில் மொழிந்தான்.

''எங்கள் வைத்தியம் வேறு. உஷ்ணம் உஷ்ணேன சாம்யதே.... அதாவது உஷ்ணத்தை உஷ்ணத்தால் குணப்படுத்த வேண்டும் என்பது ஆயுர்வேதம்'' என்ற விஜயகுமாரன் தலையைத் திருப்பாமலே கூறிவிட்டு, சிகிச்சையைத் தொடர்ந்தான்.

அப்புறமோ இப்புறமோ திரும்பாமல், நண்பன் அவஸ்தையில் இருக்கிறான் என்ற ஓர் எண்ணத்தைத் தவிர வேறு எண்ணாமல், துணியை வெந்நீரில் பிழிந்து கிளைவின் நெற்றியிலும் கண்ணிலும் பல முறை ஒற்றி எடுத்து, அவனது வயிற்றையும் விஜயகுமாரன் லேசாக அழுத்திக் கொடுத்தான். பிறகு அவன் கச்சையிலிருந்த கைத்துப்பாக்கியை எடுத்துக் கீழே வைத்து விட்டுக் கச்சையைத் தளர்த்தி விட்டான். கிளைவின் சட்டைப் பையிலிருந்த பெரிய சிமிழ் ஒன்றையும் அவன் எடுக்க முயன்ற போது தான் மயங்கியிருந்தவன் கை அவன் கையைப் பிடித்துத் தேக்கியது. ''அது அங்கேயே இருக்கட்டும்'' என்று. கண்களை மூடியிந்தாலும் உதடுகளை அசைத்துக் கூறினான் வியாதியஸ்தன். பிறகு விழிகளை மெல்ல விரித்து அரை மயக்கத்தில், தன் முகத்தை நோக்கியிருந்த விஜயகுமாரன் முகத்தைக் கவனித்தான். மீண்டும் அவன் கண்கள் மூடி முகத்தில் சிந்தனை ஓடுவதற்கான சாயை நன்றாகத் தெரிந்தது. நெற்றி ஒரு முறை சுருங்கி மீண்டது. மறுமுறை விழித்த கண்களில் தெளிவு இருந்தது. பழைய ஒளியும் பளிச்சிட்டது. ''யார்? நீயா!'' என்ற சொற்களும் சற்றுத் துடிப்புடனும் சந்துஷ்டியுடனும் சுரக்காரன் வாயிலிருந்து உதிர்ந்தன.

தன்னை இன்னாரென்று கிளைவ் புரிந்துகொண்டு விட்டதை உணர்ந்ததால் முகத்தில் ஏற்கனவே இருந்த கவலையுடன் மகிழ்ச்சியையும் படரவிட்டுக் கொண்ட விஜயகுமாரன், ''ஆம், நான் தான்! நீங்கள் இங்கு எப்பொழுது வந்தீர்கள்? எதற்காக வந்தீர்கள்? அருகில் பிரெஞ்சுப் படை

www.thamizhthenee.blogspot.com

இருப்பது உங்களுக்குத் தெரியுமா?'' என்று மெதுவாகக் கேள்விகளை உதிர்த்தான்.

கிளைவ் அத்தனை சுரத்திலும் தனது இதழ்களில் புன்முறுவலைப் படர விட்டுக் கொண்டான். ''தெரியும். ஆனால் அவர்கள் இந்தப் பங்களாவிலிருந்து இரண்டு பர்லாங்கு தள்ளியே இருப்பார்கள்'' என்று கூறிவிட்டு, லேசாக ஏதோ சிந்தித்து மீண்டும் வினவினான். ''ஆம். நீ எப்போது இங்கு வந்தாய்? எதற்காக இங்கு வந்தாய்?'' என்றும் கேட்டான்.

பதில் சொல்லத் துவங்கிய விஜயகுமாரன், ''நீங்கள்...'' என்று ஏதோ ஆரம்பிக்கவே தனது கையை உயர்த்தி அவன் பேச்சைத் தடுத்த பிரிட்டிஷ் லெப்டினன்ட், ''நீ என்று சொன்னாலே போதும். நண்பர்களுக்குள் மரியாதை அவசியமில்லை'' என்று கண்டித்துச் சொன்னான்.

விஜயகுமாரன் வியப்பு மிதமிஞ்சியது. வெள்ளைக்காரனான கிளைவ் தமிழ் மொழியை நன்றாகப் பேசக் கற்றுக் கொண்டு விட்டதையும், ஆங்கிலமும் தமிழும் கலந்த பழைய மணிப்பிரவாளம் அவனிடமிருந்து மறைந்து விட்டதையும் கண்டதால் வியப்புடன் சந்துஷ்டியையும் அடைந்து, ''முன்னை விடத் தமிழை நன்றாகப் பேசுகிறாய்'' என்று சிலாகிக்கவும் செய்தான்.

''ஹிந்துஸ்தானிகூட நன்றாகப் பேசுவேன். அதையும் பழகிக் கொண்டிருக்கிறேன்'' என்று கிளைவ் பதில் சொல்லி விட்டுத் தலையைச் சிறிது திருப்பி, ''நீங்கள் போகலாம்'' என்று கூறி விட்டு, எட்மண்ட் நீ கூடப் போ. கீப் தி வெஸல் ஆன் தி ப்ளோர்'' என்று உத்தரவிட்டான். அதற்கு பிறகே அந்த அறையில் மேலும் பலர் இருப்பதையும் பக்கத்தில் வந்த சுடுநீர்ப் பாத்திரத்தை அலாவுதீன் அற்புதவிளக்கு கொண்டு வரவில்லை என்பதையும் உணர்ந்த விஜயகுமாரன் தனது பார்வையை அக்கம் பக்கத்தில் திருப்பினான். சுமார் பத்துப் பதினைந்து வெள்ளைக்காரர்கள் அந்தக் கூடத்தில் நின்றிருப்பதையும், தனது பக்கத்தில் கிளைவின் வயதுக்கு ஈடான வயதுடைய ஒரு வாலிபன் பாத்திரமேந்தி நிற்பதையும் கண்ட விஜயகுமாரன் பாத்திரமேந்தி நிற்பவனை நோக்கி, ''உங்கள் பெயர் எட்மண்டா?'' என்று வினவினான்.

அந்த வாலிபன் கையிலிருந்த சுடுநீர் பாத்திரத்தைக் கீழே வைத்துவிட்டு, ''தட்ஸ் ரைட்'' என்று கூறியதன்றிச் சிறிது புன்முறுவலும் காட்டினான்.

''தென் யூ மஸ்ட் பி எட்மண்ட் மாஸ்கலீன்'' என்று விஜயகுமாரன் ஆங்கிலத்தில் கூறினான்.

இதற்கு மேல் எட்மண்ட் எதுவும் பேசாவிட்டாலும் அவன் முகத்தில் ஆச்சரிய ரேகை படர்ந்தது. ''உங்களுக்கு எப்படி என்னைத் தெரியும்?'' என்று தமிழில் வினவினான்.

''சில நாட்களுக்கு முன்பு திருச்சிக்கருகில் கிளைவ் தனது சுயசரிதையைச் சொன்னார். அது தவிர கிளைவுக்கு ஒரு நெருங்கிய நண்பன் உண்டு. அவர் பெயர் எட்மண்ட் மாஸ்கலீன் என்று பலரிடம் கேள்விப்பட்டிருக்கிறேன். ஒரு மனிதன் பெயர் பிரசித்தமாகும் போது அவன் நண்பர்கள் பெயரும் சேர்ந்து அடிபடுகிறது. ஆகவே...'' என்று இழுத்தான் விஜயகுமாரன்.

''ஆகவே...?''

''என் பெயரும் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். நான் தான் விஜயகுமாரன்.''

இதை கேட்ட எட்மண்ட் ஸ்தம்பித்து நின்றான். பிறகு விஜயகுமாரனின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு, ''எனது நண்பனின் உயிரைக் காப்பாற்றியவர்'' என்றும் கூறினான், நன்றி குரலில் நன்றாக ஒலிக்க. பிறகு எட்மண்ட் பாத்திரத்தைத் தரையில் வைத்துவிட்டு அவ்விடத்தை விட்டு நகரவே மற்ற வெள்ளையரும் கூடத்திலிருந்து வெளியேறினர். கூடத்தில் இரு நண்பர்கள் மட்டும் தனித்து விடப்பட்டார்கள். எனினும் இருவரும் நீண்ட நேரம் பேசவில்லை. அந்த மௌனத்தை கடைசியில் விஜயகுமாரனே கலைத்து, ''கிளைவ்! இதென்ன சுரம்? வாட் இஸ் தி ரீஸன் ஃபார் திஸ். இதற்கு என்ன காரணம்?'' என்று ஆங்கிலமும் தமிழுமாகக் கலந்து வினாசினான்.

கிளைவின் கண்களும் சிரிப்பைக் கக்கின. ''இது ஒரு புதுமாதிரி சுரம். இதற்குக் காரணம் எங்கள் வைத்தியர்களுக்குத் தெரியவில்லை. இந்த ஊர் சுரம் மாதிரி தெரிகிறது'' என்றான் புன்முறுவலை உதட்டில் காட்டி.

''எப்படி வருகிறது?''

''முதலில் வயிற்று வலி வருகிறது. தாங்க முடியவில்லை. பிறகு சுரம் வருகிறது.''

''அதற்கு வைத்தியம்?''

''கொஞ்சம் அபின் சாப்பிடுகிறேன், வலி அடங்க.''

''உம்.''

''பிறகு மயக்கத்தில் படுத்து விடுகிறேன். மயக்கம் வலியை, ஏன் உலகத்தை, சுரத்தை, சகலத்தையும் மறக்க அடிக்கிறது.'' இதைச் சொன்ன கிளைவ் லேசாக நகைத்தான்.

விஜயகுமாரன் முகத்தில் கோபம் மிதமிஞ்சி உதயமாயிற்று. ''வலியை அடக்க அபின் சாப்பிட்டால் உடம்பு குட்டிச் சுவராகப் போய்விடும்'' என்று கடுமையுடன் இரையவும் செய்தான்.

கிளைவ் தனது கையொன்றால் விஜயகுமாரன் கையைப் பற்றிக் கொண்டான். ''ஃப்ரண்ட்! உனக்கு அந்த வலி எத்தனை கடுமையானதென்பது தெரியாது'' என்று பரிதாபத்துடன் சொன்னான்.

''ஒரு கொடுமையை இன்னொரு கொடுமையால் அழிக்க முயல்வது அறிவீனம்'' என்று கடுமையுடன் சொன்ன விஜயகுமாரன், ''உன் சுரம் ச்லேஷ்ம சுரம். அதற்கு ஆயுர்வேதத்தில் மருந்து இருக்கிறது. ஆனால் இந்த அபின் சாப்பிடுவதை விட்டால் தான் உன்னைக் குணப்படுத்த முடியும்'' என்று விளக்கினான். ''சரி, இந்தப் பங்களாவில் ஏன் தங்கியிருக்கிறாய்? எங்கே போகிறாய்?'' என்று மீண்டும் கேட்டான்.

''திருச்சிக் கோட்டைக்கு உணவுப் பொருள் கொண்டு போகிறேன், விஜயகுமாரா! இப்போது கிளைவ் சோல்ஜரல்ல, ஒரு வியாபாரி. அது தெரியுமா உனக்கு?'' என்று வினவினான் கிளைவ்.

''வியாபாரியா! நீயா?'' நம்பிக்கை அறவே இல்லாத குரலில் கேட்டான் விஜயகுமாரன்.

''உனக்கு வியப்பாக இருக்கலாம். ஆனால் கவர்னர் ப்ளாயருக்கு வியப்பாயில்லை. தேவிக்கோட்டையை நான் பிடித்த பிறகு இந்த உத்தியோகத்தைத்தான் கொடுத்தார், எக்ஸலன்ஸி. ஆனால் இதில் நல்ல லாபமிருக்கிறது. பணம் நிறைய சேர்த்திருக்கிறேன்'' என்று இகழ்ச்சிக் கலந்த நகைப்பை உதிரவிட்டுக் கூறினான்.

''பணத்தால் என்ன லாபம்?'' என்று எரிச்சலுடன் கேட்டான் விஜயகுமாரன்.

''பணத்தால் எதையும் வாங்கலாம். சந்தாசாகிப் பிரெஞ்சுக்காரை விலைக்கு வாங்கியிருக்கிறார். பிரிட்டிஷ்காரரை விலைக்கு வாங்க முகம்மது அலி முயல்கிறார். இப்போது கர்நாடக அரசியலே வியாபாரமாக மாறியிருக்கிறது. ஒன்று தெரியுமா உனக்கு? இந்த உணவுப் பொருள்களை நான் திருச்சியில் சேர்த்ததும் முகம்மது அலி எனக்கு மட்டும் ஆயிரம் பகோடா கொடுப்பார்'' என்று கூறி மீண்டும் நகைத்தான்.

விஜயகுமாரன் அந்தச் சிரிப்பில் கலந்துகொள்ள வில்லை. ''திருச்சிக்கு நானும் வருகிறேன். முதலில் உன் உடல் நலத்தைக் கவனிப்போம். பிறகு மற்ற விஷயங்களைச் கவனிப்போம்'' என்ற விஜயகுமாரன், ''உன் ஷர்ட் பையிலிருக்கும் சிமிழை எடுத்துக் கொடு'' என்று கையை நீட்டினான்.

கிளைவ் ஒரு விநாடி சிந்தித்தான். பிறகு கேட்டான், ''அது எதற்கு உனக்கு?'' என்று.

''அதிலிருக்கிற அபினியைக் குப்பையில் கொட்ட'' என்று சீறினான் விஜயகுமாரன்.

''அதில் அபின் இல்லை'' என்றான் கிளைவ்.

''வேறென்ன இருக்கிறது?''

''அதை விட பெரிய மயக்கப் பொருள்.''

''அப்படியானால் அதை நான் அவசியம் பார்த்தாக வேண்டும்.''

''பார்க்கலாம், ஆனால் ஒரு நிபந்தனை.''

''என்ன நிபந்தனையோ?''

''அதை எட்மண்டிடம் காட்டக் கூடாது. அது என்னிடம் இருப்பதாக அவனுக்குத் தெரியவும் கூடாது.''

''ஏன்?''

கிளைவ் மிக விசித்திரமான பதிலைச் சொன்னான், சிறிது தயக்கத்திற்கு பிறகு. ''அது எட்மண்டுக்குச் சொந்தம். நான் திருடினேன்'' என்று கூறினான்.

விஜயகுமாரன் முகத்தில் வியப்பு விரிந்தது. ஆனால் கிளைவ் பையில் கையை விட்டுக் கொணர்ந்த வஸ்துவைப் பார்த்ததும் அவன் வியப்பு அதிகமாகியது. அது வெறும் சிமிழல்ல. லாக்கெட்டைப் பிரித்தான். அதற்குள் இரு பாகங்களிலும் தீட்டப் பட்டிருந்தன, இரு ஓவியங்கள். இரண்டும் ஒரு வெள்ளை அழகியின் உருவங்கள்; வெவ்வேறு நிலையில் இருந்தன. அந்த அழகி விஜயகுமாரனைப் பார்த்துச் சிரித்தாள் படத்திலிருந்து. விஜயகுமாரன் வியப்பு எல்லை கடந்தது, ''இவள்...'' என்று துவங்கினான் மெள்ள.

''என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவள். எட்மண்டின் சகோதரி. பெயர் மார்கரெட் மாஸ்கலின்'' என்ற சொற்கள் கிளைவின் உதடுகளிலிருந்து மிக மிருதுவாக உதிர்ந்தன.

விஜயகுமாரன் பதில் கூறவில்லை. வியப்பு நிரம்பிய விழிகளைக் கிளைவ் மீது திருப்பினான். ''ஏன்? கிளைவுக்குக் கூடக் காதலா என்று திகைக்கிறாயா விஜயகுமாரா? அந்த விபரீதம் கூட என் வாழ்க்கையில் ஏற்பட்டு விட்டது'' என்று கூறினான் கிளைவ்.

''விஜயகுமாரா, இந்த லாக்கெட்டைச் சென்னையில் தன் மேஜையின் மீது போட்டிருந்தான் எட்மண்ட். பிரித்துப் பார்த்தேன்; இவள் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டாள். ஆகவே லாக்கெட்டை நான் கொள்ளை அடித்தேன். ஒரு கொள்ளை இன்னொரு கொள்ளையைச் சரிப்படுத்தி விட்டது. ''யூ ஸி லவ் ஈஸ் நாட் ப்ளைண்ட். இட் ஹாஸ் ஐஸ் - பார்த்தாயா? காதலுக்கு கண்ணில்லை என்பது பொருத்தமில்லை. கண் இருக்கிறது இல்லாவிட்டால் இது என் கண்ணில் படுமா?''

10. 1750

அந்த இரவில் கிளைவும் சரி, விஜயகுமாரனும் சரி இருவருமே உறங்க வில்லை. தமிழகத்தின் நவீன வரலாற்றில் பங்கு கொண்டு விதி வசத்தால் அதிலேயே ஆழ்ந்து விட்ட இருவரும், தஞ்சையிலிருந்து தாங்கள் பிரிந்து விட்ட பிறகு ஏற்பட்ட நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசி மகிழ்ந்து கொண்டே காலத்தைக் கழித்தார்கள். அந்த உரையாடலின் விளைவாகக் கிளைவ் தனது வயிற்று வலியையும் சுர வேகத்தையுங்கூட ஓரளவு மறந்தான். விஜயகுமாரன் கையிலிருந்த லாக்கெட்டை வாங்கி மீண்டும் பையில் திணித்துக் கொண்டான்.

மறுநாட் காலை கிளைவின் ஜுரம் ஓரளவு இறங்கியிருந்ததால் இரு நண்பர்களும் அந்தப் பங்களாவுக்குப் பின்னாலிருந்த மாந்தோப்பில் உலாவவும் சென்றார்கள். அந்த உலாவலின் போதுதான் கிளைவ் மெள்ள விஜயகுமாரன் பிரெஞ்சுக்காரர்களிடம் சிக்கியக் காரணத்தை விசாரிக்கத் துவங்கி, ''விஜயகுமாரா! நீ எதற்காக இந்தப் பக்கம் வந்தாய்? யாரைப் பார்க்க?'' என்று கேட்டான்.

''உன்னைப் பார்க்கத் தான் வந்தேன், கிளைவ். இந்தப் பக்கமாக வந்தால் சென்னையை எளிதில் அடையலாம் என்று நினைத்தேன். மாறுவேடத்தில் இருந்ததால் என்னை யாரும் கண்டு பிடிக்க மாட்டார்கள் என்றும் எண்ணினேன். மூன்றும் தவறாகி விட்டது'' என்று விஜயகுமாரன் பதிலளித்தான்.

''இரண்டுதானே சொன்னாய். மூன்று என்கிறாயே?'' என்று வினவினான் கிளைவ், பக்கத்திலிருந்த ஒரு மாமரத்தின் கிளையிலிருந்த இலையில் ஒன்றைப் பிய்த்துக் கொண்டு.

''மூன்று இருக்கிறது...''

''எப்படி?''

''ஒன்று சென்னையை எளிதில் அடைய இப்பக்கம் வந்தது. இரண்டு, மாறுவேடம் பூண்டது. மூன்றாவது உன்னைச் சென்னையில் சந்திக்கப் போவதாக நினைத்தது'' என்று கூறிய விஜயகுமாரன், ''கிளைவ்! எல்லாமே கதை போல் இருக்கிறது'' என்று வாசகத்தை முடித்தான்.

''அந்த எல்லாமேயில் இன்னும் ஏதோ தொக்கி நிற்பது போல் தெரிகிறது'' என்று கூறினான் கிளைவ்.

''ஆம். உன் காதல் விஷயம்'' என்று விஜயகுமாரன் புன்சிரிப்புக் கொண்டான்.

''அதில் என்ன புதுமை இருக்கமுடியும்? நான் காதல் புரியக் கூடாதா? அதற்குண்டான வயது எனக்கு இல்லையா?'' என்று கேட்ட கிளைவ் புன்முறுவல் கொண்டான்.

விஜயகுமாரன் சிந்தனையில் இறங்கினான். பிறகு கூறினான் நிதானமாக: ''கிளைவ்! உன் வாழ்க்கையில் காதலுக்குப் பிரதான இடம் இருக்குமென்று எனக்குத் தோன்றவில்லை. காரணம் கேட்காதே. உன் பார்வையில் கனவு இருக்கிறது. ஆனால் அது கனவு அல்ல. அதை விடப் பெரிய மகத்தான சாதனை எதையோ உன் உள்ளம் எதிர்பார்ப்பதாகக் கண்கள் சதா சொல்கின்றன.''

இதைக் கேட்ட கிளைவின் கண்களும் கனவில் இறங்கின. ''யூ ஆர் ரைட். மார்க்கரேட் மாஸ்கலீனிடம் என் இதயம் பெரிதும் பறிபோயிருக்கிறது. ஆனால் அதையும் அழித்துக் கொண்டு டூப்ளேயின் உருவம் அடிக்கடி என் மனசில் தோன்றுகிறது. டூப்ளேயையும் பிரெஞ்சுக்காரரையும் அடக்காவிட்டால் என் மனத்தில் சாந்தி இருக்காது போல் தோன்றுகிறது'' என்று சுற்றிலுமிருந்த மரங்களின் மீது கண்களை ஓட்டிக் கொண்டே சொன்னான்.

அவன் சொற்களிலிருந்த வெறியையும் வேகத்தையும் கண்ட விஜயகுமாரன் தன் மனத்திலும் அத்தகைய வெறியொன்று வேரூன்றிருப்பதையும், அது டூப்ளேயைப் பற்றியில்லா விட்டாலும் வேறொரு மனிதனைப் பற்றியதென்பதையும் எண்ணியதால், தங்கள் இருவருக்கும் உள்ள ஒற்றுமையை எண்ணிப் பார்த்தான் 'இவன் காதலைப் பிரெஞ்சு பலம் மறைக்கிறது. எனது காதலைப் பழி வாங்கு படலம் மறைக்கிறது' என்று தனக்குள் கூறிக் கொண்டான்.

இத்தகைய யோசனை கிளைவின் புத்தியிலும் ஓடிக் கொண்டிருந்ததால் இருவரும் சிறிது நேரம் ஏதும் பேசாமலே தோட்டத்தில் உலாவினார்கள். பிறகு அந்தச் சிந்தனையைக் கலைத்துக் கொண்டு கிளைவ் வினவினான்.

''என்னை எதற்காகப் பார்க்க கிளம்பினாய்?'' என்று.

''உன்னிடம் சிப்பாயாகச் சேர்ந்து போர் பயிற்சி பெற'' என்று கூறினான் விஜயகுமாரன்.

''ஏன்? உங்கள் போர் முறைக்கு என்ன?''

''மகாராஷ்டிரப் போர் முறை, புரவிகளின் வேகத்தையும் வாள் வீச்சையும் பொறுத்ததாக இருக்கிறது. ஆனால் உங்கள் போர் முறையில் படைகளின் அணிவகுப்பு, கட்டுப்பாடான முன்னேற்றம், பீரங்கிகளின் பலம் இத்தனையும் இருக்கின்றன. இதை நாங்கள் உணர்ந்தாலொழிய உங்களை வெற்றி கொள்ள முடியாது'' என்று பதிலிறுத்தான் விஜயகுமாரன்.

கிளைவ் திடீரெனத் திரும்பி விஜயகுமாரனை நோக்கி, ''எங்களிடமிருந்து நீ போரைக் கற்றால் எங்களைத் தானே அழிப்பாய்?'' என்று கேட்டான்.

''ஆம். எங்கள் சுதந்திரத்தைக் காக்க அது தான் வழி'' என்ற விஜயகுமாரன், ''கிளைவ், நீ எதற்காக இந்த வர்த்தகத் தொழிலை...?'' என்று கேட்டான்.

''நான் வெறுக்கிறேனென்று யார் சொன்னது?'' என்று வினவினான் கிளைவ், குரலில் வியப்பைக் காட்டி.

''நேற்றிரவு உன் குரல் சொல்லியது. அத்தனை சுரத்திலும் நீ வீரன் என்பதைக் காட்டினாய்; உனக்கும் வர்த்தகத்துக்கும் சம்பந்தமில்லை. நீ காண்பது பணக் கனவல்ல. சாம்ராஜ்யக் கனவு. பிரெஞ்சு பலத்தை அடக்கிப் பிரிட்டிஷ் பலத்தை இங்கு நிறுவப் பார்க்கிறாய், உங்கள் நாட்டுச் சிறப்புக்காக. நான் அதை எதிர்க்கப் பார்க்கிறேன். எங்கள் நாட்டுச் சுதந்திரத்துக்காக. இருவருக்கும் நோக்கம் சொந்த நாட்டு நன்மை ஒன்று தான். பாதைகள் தான் வித்தியாசம்...''

கிளைவின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது, கொஞ்ச நஞ்சமிருந்த சுரம் கூட அவனை விடுவதை அவன் முகத்திலிருந்த வியர்வைத் துளிகள் நிரூபித்தன. அந்த மகிழ்ச்சியின் விளைவாக, நண்பனின் கையொன்றைப் பற்றிக் கொண்ட கிளைவ், ''எனக்குத் தெரிந்த போர் முறையை உனக்குச் சொல்லி கொடுக்கிறேன் விஜயகுமாரா. ஆனால் நான் அறிந்தது அதிகமல்ல. அதுவும் தற்சமயம் வணிகத் தொழில் புரிகிறேன். இருப்பினும் இதிலும் சிறிது போருக்கு வாய்ப்பு இருக்கும். முகம்மது அலிக்கு உணவுப் பொருள் செல்வதை டூப்ளே தடுக்க முயல்வார். அதனால் சண்டை ஏற்படலாம் சிறிதளவு. அதுவும் இப்போது பிரான்ஸுக்கும் இங்கிலாந்துக்கும் சமாதானம் இருப்பதால் நேரிடையாக அவர் எங்களுடன் போரில் இறங்க முடியாது. நவாபுகளுக்கு உதவுவதைச் சாக்காக வைத்துக் கொண்டு சிறு சச்சரவுகளில் ஈடுபடலாம். அந்த வாய்ப்புதான் உனக்கும் கிடைக்கும். ஆனால் நிலைமை இப்படியே இருக்காது. வெடிக்கும் ஸ்திதிக்கு ஒரு நாள் வரும். யூ ஹாவ் டு வெய்ட் டில் தேன்...' என்றான்.

கிளைவின் சொற்களுக்கு உடன்பட்டதாகத் தலையை அசைத்தான் விஜயகுமாரன். நண்பன் கையைக் குலுக்கிய கிளைவ், ''விஜயகுமாரா! ஆனால் நீ ஒரு சத்தியம் செய்ய வேண்டும்'' என்றான்.

விஜயகுமாரன் முகத்தில் வியப்பின் சாயை மெல்ல படர்ந்தது. ''என்ன சத்தியம்?''

''எந்தக் காரணத்தை முன்னிட்டும் பிரிட்டனுக்கு எதிராக நீ போரிடக் கூடாது.''

விஜயகுமாரன் இதற்கு உடனடியாகப் பதில் சொல்ல வில்லை. பிறகு கூறினான்:

''ஒரு நிபந்தனையின் பேரில் நான் சத்தியம் செய்ய முடியும்.''

கிளைவ் நண்பனை நோக்கினான். ''என்ன நிபந்தனை?''

''ஒரு நவாபைக் கொல்வதாக நான் அரங்கன் முன்பு ஆணையிட்டிருக்கிறேன். அந்த ஆணைக்கு விரோதமில்லாத எந்தச் சத்தியத்தையும் நான் செய்ய முடியும்.''

''அந்த நவாப் யார்?''

''தற்சமயம் அது என் ரகசியம்'' என்றான் விஜயகுமாரன்.

''சரி, அப்படி இக்கட்டு ஏற்படுமானால் என்னிடம் சொல்லி விட்டு எங்களிடமிருந்து விலகு.''

இதை ஒப்புக் கொண்ட விஜயகுமாரன் நண்பனைக் கட்டித் தழுவிக் கொண்டான். ''கிளைவ், என் உயிருள்ளவரை உன்னை எதிர்க்க மாட்டேன். பிரிட்டனுக்கு எதிராகக் கத்தியையும் உருவமாட்டேன். இப்போதுள்ள நாட்டுச் சூழலை நோக்கினால் எங்கள் நாட்டுச் சுதந்திரம் அதிக நாள் நிலைக்காது. ஆனால் ஒரு வேளை எங்கள் மன்னர்களுக்குப் புத்தி சீர்பட்டு அவர்கள் ஒன்று பட்டுச் சுதந்திரத்தை நிலை நிறுத்த முற்பட்டால் அப்போது உயிரை நாட்டுப் பணியில் விடத் தயங்கமாட்டேன். அந்த ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும் பிரிட்டனை என்ன, உலக நாடு எதுவாயிருந்தாலும் அதற்கு எதிராகப் போராடுவேன்'' என்று வேகத்துடன் கூறினான்.

கிளைவ் நண்பனின் வேகத்தைக் கண்டு மகிழ்ச்சி கொண்டான். ஆனால் கர்நாடகம் இருக்கும் நிலையில் அத்தகைய ஒற்றுமை ஒரு நாளும் ஏற்படாதென்ற தீர்மானத்தில் நண்பன் சத்தியத்தை அவன் சொன்ன நிபந்தனையுடன் ஏற்றான். அதன் விளைவாக, பங்களா திரும்பியதும் எட்மண்டை அழைத்து விஜகுமாரன் பிரிட்டிஷ் படையில் சேர்ந்து விட்டதாக அறிவித்தான். அத்துடன் அவனைச் சுதேசியாக நினைத்து யாரும் நடத்தக் கூடாதென்றும் தனது வர்த்தகப் படைப் புரிவில் எட்மண்டுக்கு அடுத்த ஸ்தானம் விஜயகுமாரனுக்கு இருக்குமென்றும் கூறினான்.

இந்த ஏற்பாட்டுடன் துவங்கிய விஜயகுமாரன் - பிரிட்டிஷ் உறவு, காலக் கிரமத்தில் மெள்ள மெள்ள உயர்ந்தது. திருச்சிக்கு உணவுப் பொருள்களைக் கொண்டு சேர்த்ததும் அங்குள்ள சிறந்த ஆயுர்வேத வைத்தியங்களைக் கொண்டு கிளைவின் சுரத்துக்கும் வலிக்கும் சிகிச்சையும் செய்தான் விஜயகுமாரன்.

மெள்ள மெள்ள அடிக்கடி வந்த சுரவேகம் குறைந்தது கிளைவுக்கு. விஜயகுமாரன் கிளைவின் அருகிலேயே இருந்ததால் அபினி சாப்பிடுவதும் பெரிதும் குறைந்தது. இப்படி மெள்ள

உடல் குணப்பட்டதால் அதிக வாணிபத்தில் கிளைவ் இறங்கினான். திருச்சிக்குச் செல்லப் பல புதுவழிகளையும் கண்டுபிடித்தான். கிளைவின் பணபலமும் பெருகியது. 1750-ஆவது ஆண்டின் ஆரம்பத்தில் கிளைவ் சிறிது ஓய்வு பெறவும் வைத்தியத்தைத் தொடரவும் வங்காளத்துக்குச் சென்றான்.

அந்த 1750-ஆவது ஆண்டில் பிரெஞ்சு பலம் உச்சியை எட்டியது. கர்நாடகத்தில் முகம்மது அலிக்கு ஆற்காடு அரசு வந்து வந்து போய்க்கொண்டிருந்தது. மூன்று லட்சம் வீரர்களுடன் சந்தாசாகிபுவையும் முஸபர்ஜங்கையும் முறியடிக்க வந்த நிஜாம் நாஸிர் ஜங், டூப்ளேயின் வஞ்சகத்தாலும் டி புஸ்ஸியின் தந்திரத்தாலும் கொல்லப்பட்டார். எந்தச் செஞ்சிக் கோட்டையை யாரும் தகர்க்க முடியாதென்று கர்நாடகம் நினைத்ததோ அந்தச் செஞ்சிக் கோட்டையைப் புஸ்ஸி அநாயாசமாகப் பிடித்து முகம்மது அலியை அங்கிருந்து மீண்டும் திருச்சிக்கு விரட்டினான். முஸபர் ஜங்கை நிஜாமாக்க ஹைதராபாத்துக்குப் புஸ்ஸி செல்லுகையில், வழியில் முஸபர் ஜங்கைக் கர்நூல் நவாப் கொன்றதுடன், பழைய நவாபின் சிறுவனான ஸலபத்ஜங்கை நிஜாமாக்கிவிட்டான், புஸ்ஸி. ஆற்காட்டில் சந்தா சாகிப் அமர்க்களத்துடன் அரியணை ஏறினார். பிரெஞ்சுக்காரரான டூப்ளேகூடச் சுதேசி உடைகளை அணிந்து கர்நாடக சுபேதாரராக விளங்கினார். டூப்ளேயின் தந்திரத்தால் யாரும் அசைக்க முடியாத சாம்ராஜ்யத்துக்குப் பிரான்ஸ் அடிகோலி விட்டது. அதை நோக்கி டூப்ளே உள்ளம் பூரித்தார்.

ஆனால் எந்த மேதாவியும் ஏதோ ஓரிடத்தில் தவறு செய்கிறான். அந்தத் தவறால் அவன் வீழ்கிறான். அந்தத் தவறின் அஸ்திவாரம் சுயநலமாகவும் இருக்கலாம்; பொறாமையாகவும் இருக்கலாம். இரண்டும் இணைந்தும் இருக்கலாம். அத்தகைய ஓர் இணைப்பு டூப்ளேயின் இதயத்தில் ஏற்பட்டிருந்தது. பிரெஞ்சு சாம்ராஜ்ய அஸ்திவாரத்தை அது மெல்ல அரிக்கலாயிற்று. அது மட்டுமல்ல, 1751-ஆவது ஆண்டின் ஸெய்ன்ட் டேவிட் கோட்டைக்கு ப்ளாயருக்குப் பதில் ஒரு புது கவர்னர் வந்து சேர்ந்தார். அவர் பெயர் ஸாண்டர்ஸ்.

www.thamizhthenee.blogspot.com

11. இரும்பு மனிதன்

கவர்னர் தாமஸ் ஸாண்டர்ஸ் ஸெயிண்ட் டேவிட் கோட்டைக்கு வந்ததிலிருந்து அங்கிருந்த நிலைமை அடியோடு மாறிவிட்டதை அந்தக் கோட்டையில் இருந்தவர்கள் மட்டுமல்லாமல் புதுவையிலிருந்த பிரெஞ்சுக்காரரும் உணர்ந்து கொண்டார்கள். அவர் வந்ததும் வராததுமாக மதுபானமும் சீட்டாட்டமும் பெரிதும் அடங்கிவிட்டதையும் கோட்டையில் கெடுபிடி மிக அதிகமாகிவிட்டதையும் கோட்டையில் இருந்தவர்கள் கண்கூடாகக் கண்டதால், 'கவர்னர் ப்ளாயர் காலத்திலிருந்த கோலாகலம் கவர்னர் ஸாண்டர்ஸ் காலத்தில் நடவாது' என்று ஆங்காங்கு ரகசியமாகப் பேசிக் கொண்டார்கள்.

கவர்னர் ஸாண்டர்ஸ் தாம் வந்த அன்றே தாம் இன்னாரென்பதைச் சொற்களால் அறிவிக்கவில்லை; முகத்தாலேயே காட்டினார். கப்பலிலிருந்து இறங்கியதும் தமக்கு மரியாதை செய்ய அணிவகுத்து நின்ற ஆங்கில, ஸ்விஸ் சோல்ஜர்களைக் கூர்ந்து நோக்கினார். ஸ்விட்ஸர்லாந்தைச் சேர்ந்தவனும் ஆங்கிலப் படையின் பிரதான கேப்டனுமான ஜின்ஜின்ஸ் முகத்தில் புன்சிரிப்பைக் காட்டிக் கூறிய வரவேற்பு மொழிகளை மிகுந்த வெறுப்புடனும் மௌனத்துடனும் ஏற்றுக் கொண்டார் கவர்னர் ஸாண்டர்ஸ்.

பிறகு ராணுவ நடை நடந்து கோட்டையை நோக்கிச் சென்ற போது அப்புறமும் இப்புறமும் கண்களைச் செலுத்திக் கொண்டே சென்றதையும், அப்படிச் செலுத்திய சமயங்களிலெல்லாம் அவர் முகத்தில் அருவருப்பு அதிகமாயிருந்ததையும் காப்டன் ஜின்ஜின்ஸும் மற்ற சோல்ஜர்களும் கண்டாலும், ஏதும் பேசாத அந்த மௌன கவர்னரைப் பின் தொடர்ந்து, 'யதா ராஜா ததா ப்ரஜா' என்ற வடமொழிப் பழமொழியில் எத்தனை உண்மையிருக்கிறது என்பதை வலியுறுத்த, அவர்களும் பேசாமலே கவர்னரைத் தொடர்ந்தார்கள். கோட்டையை அடைந்து கவர்னர் தமது மாளிகைக்கு வந்ததும், காப்டன் ஜின்ஜின்ஸும் மற்றவர்களும் தம்மைத் தொடர அவசியம் இல்லையென்பதை அறிவுறுத்தத் தமது கையை மட்டும் அசைத்துச் சைகை செய்துவிட்டு மாளிகைக்குள் நுழைந்து விட்டார்.

அவர் மாளிகைக்குள் நுழைந்து சென்ற பிறகு தனது சோல்ஜர்களை, ''டிஸ்மிஸ்!'' என்று உத்தரவிட்ட ஜின்ஜின்ஸ் அந்த மாளிகை வாயிலையே பார்த்துக் கொண்டு நின்றான். ''இவருக்கு இங்கு வந்ததில் அதிகத் திருப்தியில்லை

போலிருக்கிறது?'' என்று பக்கத்திலிருந்த காப்டன் கோப்பை நோக்கிக் கேட்கவும் செய்தான்.

''இங்குள்ள உபத்திரவத்தில் மாட்டிக் கொள்ள யாருக்குத் தான் திருப்தியிருக்கும்?'' என்று காப்டன் கோப் வினவினான்.

அன்று காலையிலிருந்து இது வரை ஸெயின்ட் டேவிட் கோட்டையிலிருந்த சோல்ஜர்களும் சிப்பாய்களும் புது கவர்னரின் சிடுமூஞ்சித்தனத்தைப் பற்றியே பேசிக் கோண்டார்கள். அவர் அடுத்த இரண்டு நாட்கள் மாளிகையை விட்டு வெளிவராதது, அவர்களது முடிவை ஊர்ஜிதப்படுத்தவே செய்தது. ஆனால் மூன்றாவது நாளிலிருந்து, புதிதாக வந்திருக்கிற கவர்னர் ப்ளாயரைப் போல் கலகலப்போ சோம்பேறித்தனமோ உள்ளவர் அல்லவென்பதையும், இதயத்தில் கடினம் மிக்க ஓர் இரும்பு மனிதருடன் தாங்கள் பழக வேண்டிருப்பதையும் சந்தேகமற உணர்ந்து கொண்டார்கள்.

மூன்றாவது நாள் விடியற்காலை ஐந்து மணிக்கு ஓசைப் படாமல் பூனை போல் வந்த கவர்னரைக் கவனிக்காமல் ஒரு சாய்வு நாற்காலியில் கால் மேல் காலைப் போட்டுக் கொண்டு படுத்திருந்த காப்டன் ஜின்ஜின்ஸ் கவர்னர் அருகில் வந்ததுமே அலறிப் புடைத்து எழுந்திருந்து மிலிடரி சல்யூட் அடித்தான்.

*கவர்னர் ஸாண்டர்ஸ் பூரண ராணுவ உடையில் கையில் ஒரு சிறு பிரம்புடன் அவனெதிரே அவனைப் பல விநாடிகள் நோக்கிக் கொண்டே நின்றார். அந்த மௌனத்தின் சங்கடத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்ற காப்டன் ஜின்ஜின்ஸ், ''யுவர் எக்ஸலென்ஸி, நீங்கள் உலாவ வருவது எனக்குத் தெரியாது'' என்றான் நடுக்கத்தைக் காட்டி.

ஸாண்டர்ஸ் அதற்குப் பதிலேதும் சொல்ல வில்லை. தமது பையிலிருந்த ஒரு வெள்ளிக் கெடிகாரத்தை எடுத்து மணியைக் கவனித்தார். அதைத் திருப்பி ஜின்ஜின்ஸிடம் காட்டினார்.

''எஸ் யுவர் எக்ஸலென்ஸி. இப்போது காலை ஐந்து மணி'' என்று அறிவித்தான் மரியாதையுடன்.

''எஸ். இது பரேட் டைம். சோல்ஜர்கள் அணிவகுத்து நடை போடும் சமயம்...'' என்று கூறிய கவர்னர் சாய்வு நாற்காலியைச் சுட்டிக் காட்டி, ''வாட் ஈஸ் திஸ்?'' என்று வினவினார்.

''ஈஸி சேர்'' என்று அறிவித்தான் ஜின்ஜின்ஸ்.

''வீ ஆர் நாட் ஹாவிங் ஆன் ஈஸி டைம் ஹியர் (இங்கு நமது நிலை அத்தனை சுலபமானதல்ல)'' என்று கூறிவிட்டு, தமது

* Governor Saunders was dour and silent with a will of steel - Lawfords 'Clive' - Page 2.

கைகளாலேயே காப்டன் ஜின்ஜின்ஸின் சாய்வு நாற்காலியை எடுத்து மடித்துக் கீழே போட்டுவிட்டுக் கடற்கரையை நோக்கி ஒரே சீராக நடை போட்டுத் தாம் சோல்ஜரென்பதைக் காட்டிக் கொண்டு சென்றார்.

நடந்தது இந்த ஒரு நிகழ்ச்சி மட்டுமல்ல. அன்றிரவு சோல்ஜர்களின் சாப்பாட்டுக் கூடத்தில் கவர்னர் திடீரென நுழைந்து சோல்ஜர்களுடன் தாமும் உணவருந்த ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார். கவர்னர் வந்ததால் அனைவரும் எழுந்து அணிவகுப்பு நிலையில் நின்றார்கள். கவர்னர் அவர்களை உட்காரச் சொல்லிக் சைகை மட்டுமே காட்டிப் பட்லரை உணவு தமக்கும் பரிமாறும்படி சிரக் கம்பத்தால் உத்தரவிட்டார். முதலில் அவருக்கு விஸ்கியை ஓர் அழகிய கிளாசில் ஊற்றிக் கொடுத்த பட்லரைக் கவர்னரின் ஈட்டிக் கண்கள் நோக்கின. பிறகு, ''இது அதிகம். இன்று முதல் உணவுடன் மதுபானம் அளவுடன் பரிமாற வேண்டும்'' என்று உத்தரவிட்டு, சாப்பிடு முன்பு எத்தனை மது அருந்தலாம் என்பதை நிரூபிக்கத் தமது கிளாசிலிருந்த விஸ்கியில் பாதியை வேறொரு கிளாசியில் ஊற்றி, காப்டன் ஜின்ஜின்ஸிடம் நீட்டினார். பிறகு அனைவருடன், ''டு ஹிஸ் மெஜஸ்டி த கிங்'' என்று கூறிவிட்டு ஒரே உறிஞ்சில் விஸ்கியைப் பருகினார். பிறகு எதையோ கவனிக்கச் சுற்றுமுற்றும் நோக்கினார்.

''யுவர் எக்ஸலென்ஸி! என்ன தேவை?'' என்று வினவினான் காப்டன் ஜின்ஜின்ஸ்.

''இங்கு யாரும் சிப்பாய்கள் இல்லையே?'' என்றார் ஹிஸ் எக்ஸலென்ஸி.

''அவர்கள் உணவுக் கூடம் தனி'' என்றான் ஜின்ஜின்ஸ்.

கவர்னர் அதற்குமேல் ஏதும் பேசாமல் அவர்களுடன் உணவருந்திவிட்டுச் சென்றார். அவர் சென்றதைப் பிரமிப்புடன் கண்ட சோல்ஜர்களுக்கு மறுநாள் அதைவிட அதிகப் பிரமிப்புத் தரும் செய்தி கிடைத்தது. கவர்னர் சம்பிரதாயத்தை அடியோடு உடைத்து விட்டதையும் அவர் சுதேசி சிப்பாய்களுடன் அவர்கள் உணவுக் கூடத்தில் உணவருந்தியதையும் பற்றிக் கேள்விப் பட்டதும், உண்மையிலேயே வெள்ளைக்கார சோல்ஜர்கள் கொதிப்படைந்தார்கள். அதைப்பற்றித் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கவும் தீர்மானித்துக் கவர்னரிடம் ஜின்ஜின்ஸை அனுப்பினார்கள்.

காப்டன் ஜின்ஜின்ஸ் தான் வருவதை அறிவித்துவிட்டுக் கவர்னர் அனுமதி கிடைத்ததும் அவர் அறைக்குள் நுழைந்த போது, கவர்னர் நெட்டுக்குத்தாக விறைத்து உட்கார்ந்து கொண்டு ராணுவ தஸ்தாவேஜுகளைப் புரட்டிக் கொண்டிருப்பதைக்

கண்டான். நீண்டநேரம் அவளை ஏறெடுத்துப் பார்க்காமலிருந்த கவர்னர், ஏடுகளிலிருந்து கண்களை உயரத் தூக்கிக் கண்களாலேயே, ''என்ன விசேஷம்?'' என்று கேள்வியை எழுப்பினார்.

காப்டன் ஜின்ஜின்ஸ் ஹாட்டைக் கழற்றிக் கையில் பிடித்துக் கொண்டு அதன் ஓரங்களைப் பிடித்து நடுங்கும் விரல்களுடன் திருப்பினான். பிறகு மெள்ளத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, ''இங்குள்ள பிரிட்டிஷ் சோல்ஜர்கள்...'' என்று துவங்கி மேலே பேச முடியாமல் தயங்கினான்.

கவர்னர் மௌனமாக அவனைத் தமது ஈட்டிக் கண்களால் நோக்கிக் கொண்டிருந்தார். மேலே சொல்லலாம் என்ற அனுமதி அவர் பார்வையிலிருந்தது. ஆகவே தொடர்ந்து ஜின்ஜின்ஸ், ''தாங்கள் சுதேசி சிப்பாய்களுடன் பழகுவதை விரும்பவில்லை'' என்று சொல்லி முடித்தான்.

''ஐ ஸீ!'' என்ற கவர்னரின் இதழ்களில் அவர் பார்வையை விடக் கடுமையான புன்முறுவல் விரிந்தது.

''இது சம்பிரதாய விரோதம் என்று பிரிட்டிஷ் சோல்ஜர்கள் கருதுகிறார்கள்'' என்றான் ஜின்ஜின்ஸ்.

''யூ ஆர் பிரிட்டிஷ்?''(நீ பிரிட்டிஷ்காரனா?)''என்றார் கவர்னர்.

இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாததால் ஜின்ஜின்ஸ் விழித்தான். பிறகு, ''நான் அவர்கள் சார்பில் பேச வந்திருக்கிறேன்'' என்றான் தட்டுத் தடுமாறி. ''நாம் சுதேசிகளுடன் நெருங்கிப் பழகக்கூடாதென்பது பழைய கவர்னரின் அபிப்பிராயம். நாம் உயர்ந்தவர்கள், வெள்ளையர் கறுப்பர்களுடன் சகவாசம் நமது கௌரவத்துக்கு உகந்ததல்லவென்று பழைய கவர்னர் சொல்லியிருக்கிறார்.''

கவர்னர் தொடர்ந்து மௌனம் சாதித்தார். கையிலிருந்த ராணுவ தஸ்தாவேஜுகளைப் புரட்டினார். திடீரென ஓரிடத்தில் நிறுத்தி, ''யாரது பிரதாப் சிங்?'' என்றார்.

''தஞ்சாவூர் ராஜா.''

''நேடிவ்? (சுதேசியா?)''

''எஸ்''

''முகம்மது அலி?''

''அவரும் சுதேசி...''

''அவர்கள் நட்பு எதற்கு?''

''அவர்கள் நட்பு இல்லாமல் நாம் பிரிட்டிஷ் ஆதிக்கத்தைப் பரவச் செய்ய முடியாது.''

''அப்படியானால் அவர்களுடன் பழக வேண்டாமா?''

ஜின்ஜின்ஸ் மேற்கொண்டு பேசவில்லை. பேசா மடந்தையாக நீண்ட நேரம் நின்றான். அவன் போகலாமென்று ஸாண்டர்ஸ் சைகை செய்தார்.

ஏதும் பேசாமல் ஜின்ஜின்ஸ் மற்ற வெள்ளைக்கார சோல்ஜர்கள் இருந்த இடத்திற்கு வந்தான் மிகுந்த வெறுப்பை முகத்தில் காட்டிய வண்ணம். ''என்ன சொன்னார் கவர்னர்?'' என்று பல சோல்ஜர்கள் ஒரே குரலில் வினவினார்கள்.

அது வரை அடக்கி வைத்திருந்த சீற்றத்தை அவர்கள் மீது திருப்பினான் காப்டன். ''நம்மை நமது வேலையைப் பார்க்கச் சொன்னார்'' என்று சீறி விழுந்தான்.

''சம்பிரதாயம்?''

''குப்பையில் கொட்ட சொன்னார்'' என்று எரிந்து விழுந்த ஜின்ஜின்ஸ், தனக்கும் கவர்னருக்கும் நிகழ்ந்த உரையாடலைத் தெரிவித்தான்.

அதை கேட்ட சோல்ஜர்கள் வியப்பும் ஆத்திரமும் அடைந்தார்கள்.

அன்று பகல் அதிக ஆத்திரமூட்டும் செய்தி கிடைத்தது கவர்னரிடமிருந்து. கவர்னரின் மெய்காப்பாளரில் ஒருவன் அவர்கள் உணவருந்தும் நேரத்தில் வந்து அந்த உணவுச் சாலையின் சுவரில் ஒரு நீண்ட காகிதத்தை ஒட்டினான். அதில் பிரதி தினமும் கோட்டையின் நிகழ்ச்சிகள் எப்படியிருக்க வேண்டும் என்பதைப்பற்றி மணிக்கணக்கில் குறிப்பிடப் பட்டிருந்தது.

'நாலரை மணிக்கு ப்யூகில், 5 மணிக்கு சோல்ஜர்கள் அணிவகுப்பு, 8 மணி - சிற்றுண்டி, 9 மணிக்குத் துப்பாக்கி பீரங்கிப் பயிற்சி, 12 மணிக்கு உணவு, ஓய்வு; 2 மணிக்கு மீண்டும் ராணுவப் பயிற்சி, 4 மணிக்கு மாலை ட்ரில், 3 மணிக்கு மேல் கவர்னர் அனுமதியுடன் கோட்டையை விட்டு ஊருக்குள் யாராவது நான்கு பேர் செல்லலாம். இரவு 10 மணிக்குப் படுக்கை' எனறு தினசரி நடவடிக்கைகள் குறிப்பிடப் பட்டிருந்தன. அத்துடன் கவர்னரை, யாரும் பகல் 1 மணிக்குச் சந்திக்கலாம் என்றும் ஒரு குறிப்பும் இருந்தது.

இந்தக் காகிதத்தைச் சுவரில் ஒட்டிய மெய்காப்பாளன் அதே மாதிரி நான்கு காகிதங்களுடன் சிப்பாய்கள் உணவு விடுதிக்கும் சென்றான். அன்றிரவு சோல்ஜர்கள் பாசறையிலும் சிப்பாய்களுடன் பாசறையிலும் இதைப் பற்றிப் பலபடி விவாதம் நடந்தது. ஆனால் கவர்னரும் அந்தக் கட்டுப்பாட்டுகளை ஏற்று நடப்பதைக் கண்டதும் சோல்ஜர்கள் சிறிது ஆறுதலடைந்தார்கள்.

காலை ஐந்து மணிக்குச் சரியாக ராணுவ உடையுடன் வந்த ஸாண்டர்ஸ் அணிவகுப்பையும் அதைத் தொடர்ந்து பீரங்கிப் பிரயோகப் பயிற்சியில் தாமும் பங்கெடுத்துக் கொண்டார். இப்படி

அவர் துப்பாக்கிச் சுட்டுக் கொண்டிருந்த ஒரு நாள் ஒரு பொதி வண்டித் தொடர் கோட்டைக்குள் நுழைந்தது. அவற்றை அழைத்துக் கொண்டு அவற்றுக்கு முன்னால் புரவியில் மராட்டிய உடையணிந்த ஒரு சுதேசி வீரன் வந்தான்.

வண்டிச் சாரி எட்ட நிறுத்தப்பட்டது. அந்த வீரன் மட்டும் கவர்னரை அணுகி ராணுவ முறையில் ஸல்யூட் அடித்தான். கவர்னர் துப்பாக்கிப் பயிற்சியை ஒரு விநாடி நிறுத்தித் திரும்பி நோக்கினார்.

''நான் விஜயகுமாரன்'' என்றான் வந்தவன்.

''அப்படியா?'' என்றார் கவர்னர், கண்களில் சிறிது சிரத்தை ஒளியை வெளியிட்டு.

''யுவர் எக்ஸலென்ஸி! என்னை உங்களுக்குத் தெரியாது'' என்றான் விஜயகுமாரன்.

''தெரியும்'' என்றார் கவர்னர்.

இதைக் கேட்ட விஜயகுமாரன் ஒரு விநாடி பிரமித்தான். பிறகு, ''லெப்டினண்ட் கிளைவின் உத்தரவுப்படி...'' என்று ஏதோ சொல்ல முற்பட்டான்.

கவர்னரின் ஒரே பார்வை விஜயகுமாரனை ஸ்தம்பிக்கச் செய்தது. ''சோல்ஜர்...'' என்று குறிக்கிட்டான் விஜயகுமாரன்.

''நீ போரிடுகிறாயா?''

''ஆம்.''

''அப்படியானால் சிப்பாய்க்கும் சோல்ஜருக்கும் பணி ஒன்று தான். ஆனால் ஒரு விஷயம் நீ புரிந்து கொள்ள வேண்டும்.''

''என்ன விஷயம்?''

''அதிகாரிகளின் பதவிகளைச் சரியாக உச்சரிக்க வேண்டும்.''

''எதைத் தவறாக உச்சரித்தேன்?''

கவர்னர் ஒரு விநாடி யோசிப்பதாகப் பாசாங்கு செய்தார். ''டிட் யூ ஸே லெப்டினண்ட் கிளைவ்'' என்ற கவர்னர் மீண்டும் துப்பாக்கிப் பயிற்சியில் ஈடுபடத் துப்பாக்கியில் மருந்தைத் திணித்தார்.

அந்தச் சமயத்தில் அங்குத் தோன்றிய கிளைவ், ''யுவர் எக்ஸலென்கஸி, ''லெப்டினண்ட் கிளைவ் ரிபோர்ட்டிங்'' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கோண்டார்.

''எஸ் காப்டன் கிளைவ்?''

''எப்போது காப்டனானேன்?''

''சற்று முன்பு.''

''எனக்கு அறிவிக்கப்பட வில்லையே!''

''நீ நேரில் வராததால்....''என்ற கவர்னர், ''கம் வித் மி'' என்று கிளைவை அழைத்துக் கொண்டு தமது மாளிகையை நோக்கிச் சென்றார். தமது அறைக்குள் நுழைந்ததும் தமது மேஜை அறையைத் திறந்து ஒரு காகிதத்தை எடுத்துக் காட்டினார்.

அதைக் கண்டதும் கிளைவ் பெருவியப்படைந்தான். ''இதனால் எனக்குப் பண நஷ்டம்'' என்றான்.

''பிரிட்டனுக்கு லாபம்'' என்ற கவர்னர் ஸாண்டர்ஸ் தமது கண்களைக் கிளைவின் கண்களுடன் கலந்தார். ஓர் இரும்பு மனிதனைத் தான் சந்தித்து விட்டதைக் கிளைவ் உணர்ந்தான்.

12. சொல்லம்பு

கவர்னரின் கண்களைச் சந்தித்த சில விநாடிகளிலேயே எதற்கும் அசையாத திடமனம் உள்ள ஒரு சிறந்த அறிவாளியைத் தான் சந்தித்து விட்டதை உணர்ந்ததால் உள்ளத்தில் சிறிது சாந்தியையும் பூரிப்பையுங்கூட அடைந்த ராபர்ட் கிளைவ் மீண்டும் ஒருமுறை தனது கையிலிருந்த காகிதத்தை நோக்கினான். அதில் பல வெள்ளைக்காரர்களின் பெயர்களைச் சிவில் ஜாபிதாவிலிருந்து மிலிடரி ஜாபிதாவிற்கு மாற்றப்பட்டிருப்பதையும், அந்த ஜாபிதாவின் தலைப்பில் தனது பெயர் 'காப்டன் கிளைவ்' என்று பெரிய எழுத்தில் பொறிக்கப்பட்டிருப்பதையும் கவனித்த கிளைவ், அந்த ஜாபிதாவிலிருந்து நீண்ட கோடுகளுடன் காட்சியளித்த கையெழுத்தும் கவர்னருடையதாகத்தான் இருக்க வேண்டுமென்று ஊகித்ததால், புதிய கவர்னர் பல வேலைகளைத் தாமே ரகசியத்தில் செய்யக் கூடியவர் என்பதைப் புரிந்து கொண்டான். அத்துடன் திடீரெனத் தன்னைக் காப்டன் பதவிக்கு அவர் உயர்த்த வேண்டிய அவசியம் என்னவென்ற சிந்தனையில் இறங்கியதால், காகிதத்தில் நீண்டநேரம் பதித்துவிட்ட கண்களை மீண்டும் உயர்த்திக் கவர்னரை நோக்கினான்.

கவர்னர் ஒரு விநாடிதான் அந்தக் கனவுக் கண்களைச் சந்தித்தார். பிறகு ஏதோ யோசித்துவிட்டுத் தமது நாற்காலியில் செங்குத்தாக உட்கார்ந்து கொண்டு, மேஜை டிராயரைத் திறந்து மீண்டும் ஒரு சிறு காகிதத்தை எடுத்து மேஜைமீது போட்டுவிட்டு, மேஜை அறையிலிருந்த தமது புகைபிடிக்கும் நீண்ட குழாயை வாயில் கவ்விக் கொண்டு அதில் புகையிலைத் தூள்களை நிதானமாக அடைத்து, நெருப்புப் பெட்டியொன்றிலிருந்து குச்சியொன்றையும் கிழித்துப் பற்றவைத்துப் புகையை லேசாக விட்ட வண்ணம் நாற்காலியில் அலட்சியமாகச் சாய்ந்தார்.

கிளைவ் அவரது அசைவு ஒவ்வொன்றிலும் ஓர் உறுதியும் தீர்மானமும் இருப்பதைக் கவனித்தான். பிறகு அவர் மேஜை மீது போட்ட சிறு காகிதத்தையும் எடுத்துப் படித்தான். அவன் முகத்தில் எல்லை மீறிய பிரமை தட்டியது. அந்தப் பிரமை பிரதிபலித்த கண்களைக் கவர்னர் முகத்தில் நாட்டிவிட்டு, ''இதில் ஏதோ தவறு இருக்கிறது...'' என்று தயக்கத்துடன் அறிவிக்கவும் செய்தான்.

கவர்னர் வாயிலிருந்து ஒரு சொல்கூட உதிரவில்லை. ''என்ன தவறு?'' என்பதைக் கேட்பதற்கான அறிகுறி மட்டும் நிதானமாக மேலெழுந்த அவருடைய புருவங்களில் தெரிந்தது.

''இவன் ஒரு சுதேசி'' என்று தனது கையிலிருந்தக் காகிதத்தைத் தட்டிக்காட்டிக் கூறினான் கிளைவ்.

அப்பொழுதும் கவர்னர் பேசவில்லை. விருப்பம் இல்லாததாலோ அல்லது வாயிலிருந்த பைப் இடங்கொடாததாலோ ஆமென்பதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் ஆட்டினார். ஆகையால் கிளைவே மேற்கொண்டு உரையாடலைத் தொடர்ந்து, ''இந்த விஜயகுமாரன்...'' என்று இழுத்தான்.

''எஸ் காப்டன்?'' என்ற இரு சொற்கள் கவர்னர் வாயிலிருந்து முத்துக்களாக உதிர்ந்தன, புகைக் குழாய் சிறிது அசைய.

அந்த இரு சொற்களையும், அவை உதிர்ந்த திடத்தையும் வேறு யார் கேட்டிருந்தாலும் அந்த இடத்திலேயே உணர்ச்சிகள் உறைந்து நின்றிருப்பார்கள். ஆனால் கிளைவும் தனது குரலில் கவர்னருக்குச் சமதையான கடுமையைக் காட்டி, ''யுவர் எக்ஸ்லென்ஸி! யூ காண்ட் டூ திஸ் (நீங்கள் இதைச் செய்ய முடியாது)'' என்று திட்டமாக அறிவித்தான்.

''என்னை யார் தடுக்க முடியும்?'' என்று கவர்னர் மீண்டும் ஆங்கிலத்தில் வினவினார்.

''சுதேசிகளுக்கு லெப்டினன்ட் பதவி கொடுப்பது கிடையாது; வழக்கமல்ல'' என்றான் கிளைவ்.

''ஆனால் அவன் உனக்கு அடுத்தபடி பதவி வகிக்கிறான். உணவுப் பொருள்கள் சப்ளை வட்டத்தில்...'' என்று கவர்னர் குறிப்பிட்டுக் கிளைவின் ஆச்சரியத்தை அதிகப்படுத்தினார்.

'' ஹி இஸ் மை ப்ரண்ட்'' என்று அதற்குச் சமாதானம் சொன்னான் கிளைவ்.

''எஸ், ஹி இஸ் எ ப்ரண்ட் ஆப் தி பிரிட்டிஷ் ஆல்ஸோ (அவன் பிரிட்டிஷ்காரருக்கும் நண்பன்)'' என்றார் கவர்னர் பதிலுக்கு.

இதற்கு என்ன பதில் சொல்தென்று கிளைவுக்குப் புரியாததாலும், விஜயகுமாரனை லெப்டினட் ஆக்கினால் பிரிட்டிஷ் சோல்ஜர்களுக்கிடையே ஏற்படக்கூடிய கசப்பை அவன் உணர்ந்திருந்ததாலும் கவர்னரின் பிடிவாதத்தை அகற்ற முற்பட்டு, ''யுவர் எக்ஸலென்ஸி! இட் ஈஸ் பெட்டர் டு கோ ஸ் லோ (தாங்கள் சிறிது மெதுவாகக் காரியங்களைச் செய்வது நல்லது)'' என்று குறிப்பிட்டான். அவன் குரலில் தெளிவும் உறுதியும் இருந்ததையும், தமக்கு ஆலோசனை சொல்லும் தொனியும் காணப்பட்டதையும் கவர்னர் கவனிக்கவே செய்தார்.

அதனால் கவர்னர் சிறிதும் அசைந்ததாகத் தெரியவில்லை. ''ஆர் வீ ஃபாஸ்ட் நௌ? (இப்பொழுது வேகமாகச் செயல் படுகிறோமா)?'' என்று வினவினார் கவர்னர். அதைக் கேட்டு விட்டுக் கிளைவின் முகத்தைக் கூர்ந்து அவன் உள்ளத்தை ஊடுருவி விடுவது போல் பார்த்தார்.

அவர் கேள்வியின் பொருள் மிகத் தெளிவாகத் தெரிந்தது கிளைவுக்கு. பிரிட்டிஷ்காரர்களின் தாமதத்தையும் அதனால் சீர்கேடாகிவிட்ட அவர்கள் நிலைமையையும் கவர்னர் குறிப்பிடுகிறார் என்பதைச் சந்தேகமறத் தெரிந்து கொண்டாலும் அதை வெளிக்குக் காட்டாமல், ''கவர்னர் எதைக் குறிப்பிடுகிறார் என்பது தெரியவில்லை எனக்கு'' என்றான் மெதுவான குரலில்.

கவர்னர் அதற்குப் பதிலேதும் சொல்ல வில்லை. நாற்காலியிலிருந்து டிரில் செய்யும் முறையில் செங்குத்தாக எழுந்து, சற்று எட்ட சுவரருகிலிருந்த ஒரு மரப் பீரோவைத் திறந்து நீண்ட காகிதச் சுருள் ஒன்றை எடுத்து வந்து, மேஜை மீது அதைப் பிரித்து டிராயரிலிருந்து இரண்டு மூன்று இரும்புக் கட்டிகளை எடுத்து அதன் ஓரங்களில் வைத்தார், காகிதம் மீண்டும் சுருண்டு விடாதிருக்க. பிறகு வாயிலிருந்த புகைக் குழாயை எடுத்து அதனால் நான்கு இடங்களைச் சுட்டிக் காட்டினார் பிரிக்கப்பட்ட காகிதத்தில்.

மேஜை மீது விரிக்கப்பட்டிருந்த தென்னிந்தியப் படத்தில் அவர் காட்டிய இடங்களைப் பார்வையிட்ட கிளைவ், ''ஆம்! ஆற்காடு, வேலூர், செஞ்சி, பாண்டிச்சேரி'' என்று அவ்விடங்களைக் கவனித்து, தான் புரிந்து கொண்டதையும் கவர்னருக்கு உணர்த்தினான்.

கவர்னர் முகத்தில் லேசாக மகிழ்ச்சி உதயமாயிற்று. கடுமை ஒரு விநாடி மறைந்தது. அவர் குரலில் கூடச் சிறிது மென்மையிருந்தது. ''காப்டன்! யூ அண்டர்ஸ்டாண் க்விக்'' என்று கவர்னர் சிலாகிக்கவும் செய்தார். அத்துடன் நிறுத்தவில்லை. ''இந்த ஆற்காட்டிலிருந்து பாண்டிச்சேரிக்கு ஒரு கோடு இழுத்தால் சென்னை துண்டிக்கப் படுகிறது. இன்னொரு கோடு செஞ்சிக்கு இழுத்தால் வேலூர் ஒதுக்கப்படுகிறது. தஞ்சையும் திருச்சியும் வெட்டப்படுகிறது'' என்று ஆங்கிலத்தில் விவரித்துப் படத்தின் மீது மீண்டும் கண்களை நாட்டித் தமது புகைக்குழாயால் ஒரு வட்டம் போட்டு, ''ஆல் தீஸ் ஆர் ப்ரெஞ்ச் (இவையெல்லாம் பிரெஞ்சுக்காரரிடம் இருக்கின்றன)'' என்று குறிப்பிட்டார்.

கவர்னர் கர்நாடகத்தில் காலடி எடுத்து வைத்த மூன்று நாட்களுக்குள் எத்தனை விஷயங்களைப் புரிந்து கொண்டிருக்கிறார் என்பதை அறிந்த கிளைவ் பெரு வியப்பில் ஆழ்ந்தான். ஆகவே அவர் சொன்னதை ஆமோதிக்கும் பாணியில் தலையை ஆட்டினான். கவர்னர் அதற்கு மேல் நாற்காலியை லேசாகப்

பின்னால் சாய்த்துப் புகைக் குழாயை வாயில் வைத்து இரு முறை அலட்சியமாகப் புகையை ஊதினார். ஏதும் பேசாமல் கிளைவைக் கூர்ந்து நோக்கிப் புருவங்களை உயர்த்தினார்.

''ஆம். நமது நிலை பரிதாபமானது தான்'' என்று ஒப்புக் கொண்டான் கிளைவ், அவருக்குப் பதில் சொல்லும் முறையில்.

''ஏன் அப்படி?'' என்று விசாரித்தார் எக்ஸலென்ஸி.

''பிகாஸ்...'' என்று காரணம் சொல்லத் துவங்கிய கிளைவை இடைமறித்த கவர்னர், ''பிகாஸ் யூ ஆர் ஸ்லோ, (நீங்கள் மிக நிதானம்) டூப்ளேக்கு உங்களை விட முன்னோக்கு அதிகம். அவர் வெள்ளைக்காரர்—சுதேசிகள் என்று வித்தியாசம் பார்க்கவில்லை. சுதேச நவாப்புகளை நண்பர்களாக்கிக் கொண்டார். அவர்களுக்குப் பதவிகளைப் போரினாலும், தந்திரத்தாலும் வாங்கிக் கொடுத்தார். அவரே நவாபுகள் போல் உடையணிந்து கர்நாடக நவாப் என்றும், தம்மை அழைத்துக் கொள்கிறார்'' என்று சொல்லிக் கொண்டு போன கவர்னர், ''ஒரு நாட்டுக்கு நீங்கள் வரும்போது அந்த நாட்டவருடன் இணைய வேண்டும். இம்ப் நாட் யூ வில் பீ ஜஸ்லேடட் (இல்லாவிட்டால் நீங்கள் ஒதுக்கப்படுவீர்கள்) அது தான் இப்பொழுது நடந்திருக்கிறது.''

''ஸோ?'' என்று வினவினான் கிளைவ்.

''திஸ் விஜயகுமார் வில் பி லெப்டினண்ட்.''

''எக்ஸலென்ஸி...!''

''அது மட்டுமல்ல. எனி ப்ரெவ் நேடிவ், வீரனான எந்தச் சுதேசியும் ராணுவத்தில் எடுத்துக் கொள்ளப்படுவான். சமமாக நடத்தப்படுவான். இன்னும் பலருக்குச் சந்தர்ப்பம் வரும் போது பிரமோஷன் கொடுப்போம்...''

''இதனால் பிரிட்டிஷ் சோல்ஜர்கள்...''

''காப்பாற்றப்படுவார்கள். வீணாக எலிப்பொறியில் அகப்பட்டவர்கள் போல் சாகமாட்டார்கள்.'' இதை முக்கிய திட்டமாக அறிவித்த கவர்னர் மேலும் சொன்னார், ''காப்டன்! இரண்டு நாட்களாகப் பாரேடைக் கவனித்து வருகிறேன். திருப்தியாயில்லை. தட் காப்டன் ஜின்ஜின்ஸ் ஈஸ் எ யூஸ்லெஸ் பெல்லோ... உதாவாக்கரை'' என்று.

கிளைவ் திகைத்தான். ''காப்டன் ஜின்ஜின்ஸ் இருப்பவர்களில் அதிக அநுபவமுள்ளவர்'' என்று கூறவும் செய்தான்.

''அந்த அநுபவம் நமக்குப் பலனேதும் கொடுக்கவில்லை. கோப், தேவிக்கோட்டையில் தோற்றுத் திரும்பியவன். இங்குள்ள ராணுவ தஸ்தாவேஜுகள் எல்லாவற்றையும் படித்து விட்டேன். இங்கு நிலைமையைக் குட்டிச் சுவராக அடித்துவிட்டீகள். ஆற்காடு நவாபின் மீது படையெடுப்பதற்குப் பதில் தஞ்சாவூர் ராஜா மீது

அதாவது தேவிக்கோட்டை மீது படையெடுத்தீர்கள். மேஜர் லாரன்ஸுக்குச் சம்பளத்தை உயர்த்தவில்லை. ராணுவ அநுபவமுள்ள அந்த ஒரு மேஜர் இங்கிலாந்துக்குப் போய்விட்டார். தி ஹோல் திங் ஈஸ் எ மெஸ்'' என்று கடுமையிலும் நிதானத்துடன் நிலைமையை விளக்கினார் கவர்னர்.

மிக நிதானஸ்தனான கிளைவே வாயைப் பிளந்து கொண்டு நின்றான். சிறிது நேரம் இருவரும் பேசாததால் அறையில் பயங்கர அமைதி நிலவியது. கவர்னர் நாற்காலியை விட்டு எழுந்திருந்து அறையில் அங்குமிங்குமாகத் தீர்க்காலோசனையுடன் புலி நடை போட்டார். சில விநாடிகள் கழித்து ஏதோ முடிவுக்கு வந்தவர் போல் கிளைவை நோக்கித் திரும்பி, ''காப்டன்!'' என்று அழைத்தார்.

''எஸ் யுவர் எக்ஸலென்ஸி!'' கிளைவின் குரலிலுங்கூடச் சிறிது ஆட்டம் இருந்தது.

''இனி மேல் இங்கு விவகாரங்கள் பழையபடி நடக்காது.''

''அதைப் பற்றிக் கேள்விப்பட்டேன்.''

''எதைப்பற்றி?''

''விவகாரங்கள் பழையபடி இருக்காதென்று.''

''யார் சொன்னது? மற்றவர்களிடம் பேசக்கூட உனக்கு அவகாசமில்லையே?''

''நான் தங்களைத் தொடருமுன்பு விஜயகுமாரன் என் காதில் இரண்டொரு வார்த்தைகள் சொன்னான்.''

''தட் பெலோ ஈஸ் ஷ்ரூட்'' என்று கூறிய கவர்னர், ''ஐ நோ ஹி இஸ் யுவர் ப்ரண்ட்'' என்றும் குறிப்பிட்டார்.

''ஆம்.''

''அது மட்டுல்ல.''

''வேறு எது எக்ஸலென்ஸி?''

எக்ஸலென்ஸி உடனடியாக பதில் கூறவில்லை. ''அவன் யாரையோ வெறுக்கிறான்'' என்றார்.

கவர்னருக்கு ஜோஸ்யம் கூடத் தெரியுமோ என்று வியந்த கிளைவ், ''தங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று வினவினான்.

''அவனைப்பற்றி நேற்று ஆர்டர்லியிடம் விசாரித்தேன்.''

''உம்.''

''அவன் கதை இங்கு ஆர்டர்லிக்குக் கூடத் தெரிந்திருக்கிறது.''

''அப்படியா!''

''ஆம்... அதனால் தான் பிரிட்டிஷ் படையில் சேர்ந்திருக்கிறான்.''

''எக்ஸலென்ஸி!''

''அவனால் கொல்லப் பட வேண்டியவன் நம்மிடம் இருந்தால் அதே விஜயகுமார் பிரெஞ்சுப் படையில் சேர்ந்திருப்பான்.''

''அப்படியானால் அவன் யாரைக் கொல்ல விரும்புகிறான்?'' என்றான் கிளைவ்.

''யூ டு நாட் நோ?''

''நோ.''

''தென் கால் ஹிம்'' என்று கூறி, ''ஆர்டர்லி!'' என்று குரல் கொடுத்தார். உள்ளே வந்த ஆர்டர்லியை நோக்கி,: ''லெப்டினண்ட் விஜயகுமாரனை இங்கு அனுப்பு'' என்று உத்தரவிட்டார்.

ஒரு விநாடி ஆர்டர்லி பிரமித்தான். ''லெப்டினண்ட்...'' என்று இழுத்தான் காதால் கேட்டதை நம்பமுடியாமல்.

''விஜயகுமார்'' சுள்ளென வந்தது கவர்னரின் பதில்.

ஆர்டர்லி வெளியே பறந்தான். சற்று நேரத்திற்கெல்லாம் விஜயகுமாரன் உள்ளே நுழைந்து கவர்னருக்குத் தலை தாழ்த்தி, ''லெப்டினண்ட் விஜயகுமார் அட் யுவர் ஸர்விஸ் எக்ஸலென்ஸி'' என்று சுத்தமான ஆங்கிலத்தில் சம்பிரதாயம் வழுக்காமல் பதில் சொன்னான். அவன் கடையிதழ்களில் சிறிது புன்முறுவலும் இருந்தது. ஆனால் கவர்னர் வீசிய அடுத்த கேள்வியால் அந்தப் புன்முறுவல் மறைந்தது. அவன் என்ன? கிளைவ்கூடக் கல்லெனச் சமைந்து நின்றான்.

''சந்தா சாகேபை ஏன் கொல்ல விரும்புகிறாய்?'' என்ற சொல்லம்பைச் சர்வசாதாரணமாக வீசினார் கவர்னர்.

13. புதுக் கதை

இப்படியொரு கேள்வியைப் புதுக் கவர்னர் கேட்பா ரென்பதை விஜயகுமாரன் சொப்பனத்தில்கூட எண்ணிப் பார்க்காததால் பதில் சொல்ல திராணியற்றுப் பல விநாடிகள் திகைத்து நின்றுவிட்டானென்றால், எதற்கும் அசையாத கிளைவின் நிலையும் விஜயகுமாரன் நிலையை விட எந்த விதத்திலும் வித்தியாசப் படவில்லை. ஆகவே அவனும் பிரமை தட்டிய விழிகளைக் கவர்னரின் மீது நாட்டவே செய்தான். கவர்னர், கிளைவை அடியோடு புறக்கணித்து விஜயகுமாரனை நோக்கி, ''உன்னை ஒரு கேள்வி கேட்டேன்'' என்று தமிழில் சொன்னார்.

அவர் கேள்வியை விடத் தமிழைக் கவனித்ததால் அதிக அதிசய வசப்பட்ட விஜயகுமாரன், ''நீங்கள் நன்றாகத் தமிழ் பேசுகிறீகள்'' என்று சிலாகித்தான்.

கவர்னர் அதற்கு நேரிடையாகப் பதில் சொல்லவில்லை. ''எந்தக் காரியத்தை ஒரு மனிதன் மேற்கொண்டாலும் அதற்குத் தன்னைத் தகுதி ஆக்கிக் கொள்ள வேண்டும்'' என்று ஒரு பெரிய சித்தாந்தத்தைச் சொன்னார்.

''தாங்கள் இங்கே கவர்னராக வரப் போவது...'' என்றான் சற்றுத் தயக்கத்துடன் விஜயகுமாரன்.

''முன்னதாகத் தெரியாது. இந்த ஸப் காண்டினண்டில்... ஐ ஆம் ஸாரி... இந்த உப கண்டத்தில் நடக்கும் விஷயங்கள் சில வருஷங்களாகப் பிரிட்டனில் பெரிதும் அடிபடுகின்றன. நம்முடைய பலவீனமும் புத்திக் குறைவும் டூப்ளேயினுடைய திறமையும் யுக்தியும் வெற்றிகளும் பகிரங்கமாகப் பேசப்படுகின்றன. ஆகையால் இந்த நாட்டுக்கு வருவதென்று தீர்மானித்தேன். தீர்மானித்ததும் தமிழும் ஹிந்துஸ்தானியும் இங்கிருந்து வரும் வணிகரிடம் அரை குறையாகப் பயின்றேன். பிறகு மெள்ள மெள்ளத் திருத்தி மொழி உச்சரிப்பைச் சரிப்படுத்திக் கொண்டேன். இங்கே புது கவர்னரை அனுப்ப முயற்சி நடந்த போது ஒருவன் தான் அதற்குத் தகுதியாயிருந்தான். பிரிட்டிஷ் ஈஸ்ட் இந்திய கம்பெனி டைரக்டர்கள், போர் முறைகளிலும் வாணிபத்திலும் இந்த நாட்டு மொழிகளிலும் ஓரளவு பயிற்சியுள்ளவர்களைத் தேடினார்கள். நான் தான் கிடைத்தேன்...'' என்று சொல்லிக் கொண்டு போன ஸாண்டர்ஸ் சட்டென்று தமது சரிதையை நிறுத்தி, ''கம்பெனி சீப் டைரக்டர் என்னை என்ன கேட்டார் தெரியுமா?'' என்று வினவினார், இம்முறை கிளைவை நோக்கி.

''என்ன யுவர் எக்ஸலென்ஸி?'' என்றான் கிளைவ், கவர்னர் இங்கு வருமுன்பு செய்து கொண்ட முன்னேற்பாட்டினால் பெரு வியப்படைந்து.

கவர்னரின் இதழ்களில் ஒரு புன்னகை அரும்பியது. ''இங்குள்ள கன்ஃப்யூஷனை... இதற்குச் சரியான தமிழ்? எஸ்... எஸ்... குழப்பத்தை, குளறுபடிகளைச் சரியாக்க முடியுமா என்று கேட்டார்கள்'' என்று புன்னகையின் ஊடே அறிவித்தார்.

''தாங்கள்.....?'' என்று கிளைவ் துவக்கினான்.

''முடியும் என்று பதில் சொல்லவில்லை.''

''வேறு என்ன சொன்னீர்கள்?''

''பிரெஞ்சு பலத்தை ஒடுக்குவதாகச் சொன்னேன்'' என்ற கவர்னர், தாம் அதிகம் பேசிவிட்டதை உணர்ந்து, '' ஸோ ஐ ஸடீட் த டஸ்பாசஸ் ஃப்ரம் ஹியர்'' என்று ஆங்கிலத்தில் இறங்கி, ''இங்குள்ள கதையின் நுணுக்கங்களை அறிந்து தான் வந்தேன்'' என்று முடித்தார். முடித்து எதிரேயிருந்த இருவரையும் ஒரு முறை மாறி மாறி நோக்கினார்.

அதற்கு மேல் கிளைவ் ஏதும் பேசாவிட்டாலும் விஜயகுமாரன் மட்டும் கேட்டான், ''நான் சந்தா சாகேபைக் கொல்லப் போவதாக யார் சொன்னது உங்களுக்கு?'' என்று.

கவர்னர் அவன் கேள்வியை காதில் வாங்கிக் கொண்டாலும் அதற்கு நேரிடையாகப் பதில் சொல்ல வில்லை; ''யூ ஆர் லைக் மி'' என்று மட்டும் பதில் சொன்னார்.

அந்தப் பாராட்டுதலைக் கேட்ட விஜயகுமாரன் தலை வணங்கி, ''ஹௌ யுவர் எக்ஸலென்ஸி?'' என்று ஆங்கிலத்திலேயே கேட்டான்.

''உனக்குப் பிரெஞ்சு மொழித் தெரியுமா?''

''தெரியாது.''

''தென் யூ ஆர் நாட் குட்.''

''யுவர் எக்ஸலென்ஸி!'' என்ற விஜயகுமாரன் குரலில் சிறிது சினம் தெரிந்தது.

கவர்னர் அவன் சினத்தை லட்சியம் செய்யாமல் அவனைக் கூர்ந்து நோக்கி விட்டுச் சொன்னார். ''நீ எங்களிடம் சேர இங்கிலீஷ் பழகியிருக்கிறாய். தட் ஈஸ் குட். ஆனால் சந்தா சாகேபை அழிக்க பிரெஞ்சு மொழி பழகவில்லை. தட் ஈஸ் பாட். நாம் யாரை நசுக்கப் பார்க்கிறோமோ அவர்களுடைய போக்கைப் புரிந்து கொள்ள வேண்டும். போக்கைப் புரிந்து கொள்ள மொழியைப் புரிந்து கொள்ள வேண்டும். நீ சந்தா சாகேபைக் கொல்லத் தீர்மானித்திருக்கிறாய். அது தவறல்ல. அவர் உன் தாயைக் கொன்றிருக்கிறார்.''

விஜயகுமாரன் கண்கள் பெரியதாக மலர்ந்தன. வாயை இரு முறை திறந்து மூடினாலும் சொற்கள் வெளிவர வில்லை. கவர்னரே விளக்கினார் மேற்கொண்டு. ''சந்தா சாகேப் உன் தாயார் ராணி மீனாட்சியை நேரிடையாகக் கொல்ல வில்லை. ராணி மீனாட்சியை சந்தா சாகேப் காப்பதாகச் சத்தியம் செய்தார். ஆனால் சத்தியத்தை மீறினார், அவளைச் சிறையிட்டார். அதனால் அவள் தற்கொலை புரிந்து கொண்டாள் என்ற ஒரு கதை உலாவுகிறது பிரிட்டனில். அவளுக்கொரு வளர்ப்பு மகன் இருந்ததாகவும் அவன் பெயர் விஜயகுமாரன் என்றும் பேசிக் கொண்டார்கள். ஐ ரிக்காடட் தட் ஸ்டோரி இன் மை மைண்ட். அப்படியொருவன் இருந்தால் அவனை ஒரு கருவியாகக் கொண்டு சந்தா சாகேபையும் அவர் மூலம் பிரெஞ்சு பலத்தையும் அழிக்கலாமென இங்கிலாந்திலேயே திட்டம் போட்டேன். யூ ஸி தேர் ஈஸ் நோ பெட்டர் வெபன் தான் எ டிட்டர்மிண்ட் மான் (உள்ளத்தில் ஒரு தீர்மானத்தை ஏற்படுத்திக் கொண்ட மனிதனைவிட பெரிய ஆயுதம் கிடையாது எதிரிகளைத் தொலைக்க). ஸோ ஐ டிஸைடட் டு யூஸ் யூ.'' அத்துடன் முடிக்க

வில்லை, கவர்னர். ''அண்ட் யூ (உன்னையுந்தான்)'' என்று கிளைவையும் நோக்கி ஆள் காட்டி விரலைக் காட்டினார்.

கிளைவோ, விஜயகுமாரனோ நீண்ட நேரம் பேசவில்லை. கவர்னர் மீண்டும் தனது நாற்காலிக்குச் சென்று அமர்ந்து கொண்டு இருவரையும் நோக்கிய வண்ணம் மௌனம் சாதித்தார். அறையில் பல விநாடிகள் நிலவிய அந்த மௌனத்தைக் கிளைவ் கலைத்தான். ''என்னை எப்படி உபயோகப்படுத்த உத்தேசம்?'' என்று வினவினான்.

''என் பிரதிநிதியாக'' என்றார் கவர்னர்.

''நான் காப்டனாகி ஒரு மணி நேரங்கூட ஆகவில்லை.''

''நேரம் வீரனைச் சிருஷ்டிப்பதானால், புத்திசாலிகளை சிருஷ்டிப்பதானால், கிழவர்கள் அத்தனை பேரும் வீரர்களாகவும் புத்திசாலிகளாகவும் இருப்பார்கள்'' என்றார் கவர்னர்.

''எனக்கு அதிக ராணுவ அநுபவம் கிடையாது.''

''மூளையிருக்கிறது. வெற்றிக்கு அது தான் முக்கியம்.''

கிளைவ் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. கவர்னர் தாமதிக்காமல் உத்தரவுகளைப் பிறப்பித்தார். ''கிளைவ்! நீ சென்னை சென்று அங்குள்ள கோட்டையைத் திடப்படுத்து. பிரெஞ்சு ஒற்றர்கள் கோட்டையிலிருந்ததால் சுட்டுவிடு. சுதேசிகளைத் தேவையான அளவு சேர்த்துக் கொள். அவர்களுக்கு நமது போர் பயிற்சியை அளி. அங்கு ஒரு பலமான ராணுவம் தேவை நமக்கு. விஜயகுமார்! நீ தஞ்சைக்குச் செல். தஞ்சை அரசரிடம் நாம் அவரை முழுமூச்சுடன் காப்பதாகச் சொல். அதிக நாள் அங்கே தாமதிக்காதே. அங்கே யாரோ ஒரு பெண் இருப்பதாக நேற்று ஆர்டர்லி சொன்னான். ஐ டோண்ட் மைண்ட் யுவர் லவ் அஃபேர்ஸ். இருந்தாலும் இப்போது போர் முக்கியம். லவ் கேன் வெய்ட். அங்கிருந்து ஆற்காட்டுக்கு அப்பாலுள்ள மலைச் சாரலுக்குச் செல். அங்கு முராரிராவைச் சந்தித்து, புதிய கவர்னர் அவருக்கு ஆதரவு அளிப்பார் என்று என் சார்பில் உறுதி கூறு. தட்ஸ் ஆல்.''

இந்தச் சமயத்தில் விஜயகுமாரன் ஒரு சந்தேகம் கேட்டான். ''நாம் தஞ்சை மன்னருக்குப் பல சமயங்களில் உதவ மறுத்திருக்கிறோம். சந்தாசாகேபும் முஸபர் ஜங்கும் ஆதுனில், க்விஸ்னோ இவர்களுடன் தஞ்சையை முற்றுகையிட்டபோதுகூட பிரிட்டிஷார் கையை அசைக்க வில்லை.. தஞ்சை மன்னரிடம் நான் என்ன சொல்ல?''

''கதை மாறிவிட்டதென்று சொல். வெகு சீக்கிரம் வால் கொண்டா, வேலூர், ஆற்காடு அனைத்தும் தாக்கப்படும் என்று கூறிவிடு.''

www.thamizhthenee.blogspot.com

கிளைவ் பேச நா எழாமல் நின்றான். ''நமது நடுநிலைமைக் கொள்கை பாதிக்கப்படும்'' என்றான் மெல்ல.

''இரண்டு புலிகளுக்கிடையில் மனிதன் இருப்பது தான் நடுநிலைக் கொள்கை. ஒன்று மனிதன் அவற்றை அழிக்கிறான்; இல்லையேல் அவன் அழிந்து போகிறான்'' என்று ஓர் உவமையைக் கூறிய கவர்னர், அவர்கள் இருவரும் போகலாமென்பதற்கு அறிகுறியாகக் கையை அசைத்து விட்டு, ''ஆர்டர்லி!'' என்று அழைத்தார்.

ஆர்டர்லி தலையை நீட்டினான். ''காப்டன் கிளைவும் லெப்டினன்ட் விஜயகுமாரும் கிளம்புகிறார்கள். கெட் மை ப்ரெக் பாஸ்ட்'' என்று இரும்புக் குரலில் உத்தரவிட்டார். அத்துடன் எழுந்திருந்து, ''தாங்யூ ஜென்டில்மென்'' என்றார்.

புதுக் கவிதைத் தொடங்குவதைக் காப்டனும், லெப்டினண்டும் சந்தேகமற அறிந்தார்கள்.

14. பிரதிநிதி

தஞ்சை அரண்மனையின் மூன்றாவது உப்பரிகையின் தனிப்பெரும் அறையொன்றைச் சாளரத்தின் மூலம் எட்டிப் பார்த்த முழுமதி துன்பப் பெருமூச்சு விட்டான். இல்லாவிட்டால் தன் குளிர் கிரணங்களைத் தென்றலுடன் கலந்து அனுப்புவானா? அனுப்பினாலும் பஞ்சணையில் படுத்துக் கிடந்த பைங்கிளி நந்தினியின் உடலைக் குளிர்க்கிரணங்களால் தழுவத்தான் தழுவுவானா? தழுவினவன் தன் வல்லமையின் எல்லையை உணரத்தான் செய்தானா? இல்லையே!

ஓராண்டுக் காலமாக அந்தக் கட்டழகியின் உள்ளத்தைக் குளிரச் செய்ய இம்மாதிரி முயன்று முயன்று தோற்றுப் போனவன் மீண்டும் ஏன் அதே முயற்சியில் ஈடுபடுகிறான்? உடல் குளுமைப்பட்டுவிடும் என்ற வீண் நினைப்பினால் விடாமுயற்சியில் இறங்கினானா, அல்லது காலத்தின் நடையும் தன் கிரணத்தின் வலுமையும் இணைந்தால் அவள் இதயத்தை இன்பத் தடாகமாக அடித்துவிட முடியும் என்ற வீண் பிரமையால் அவள் உடலை மீண்டும் தடவிக் கொடுத்தானா? பலன் எப்படியானாலும் அவனுக்கு அந்தக் கட்டழகியிடம் மிகுந்த ஆசை இருக்க வேண்டும். ஆகையால் தான் அன்று கூட அவள் மீது பூர்ணமாகத் தன் கிரணங்களை ஏவினான். இப்படித்தானே கலையிழந்தான் முன்பு? மீண்டும் எதற்காக அந்தத் துர்புத்தி அவனுக்கு? ஆனால் புத்தி யாருடைய இஷ்டப்படி இயங்குகிறது? புத்தி கர்மானுஸாரேணே என்று கர்மத்தின் வழியே அது இயங்குகிறதல்லவா?

ஆனால் திடீரென்று தனம் கிடைத்த மனிதன் அடுத்தபடி காத்திருக்கும் அனர்த்தத்தை எண்ணிப் பார்க்காதது போலப் பூர்ணமாகக் கலைகளைப் பெற்ற முழுமதி மறுநாள் முதல் கலையை இழக்கப் போகிறோமே என்ற நினைப்பு சிறிதுமின்றி, தனது செயலைத் திறம்படவே செலுத்தினாலும், பஞ்சணையில் கிடந்த நந்தினி அவன் செய்கையால் சிறிதும் பாதிக்கப்பட்டாளில்லை. தன்மீது விழுந்திருந்த பட்டு நிலவை அவள் நினைத்துக்கூடப் பார்க்கவில்லையாதலால் அது தன் மேனிக்கு எத்தனை அழகைத் தந்திருக்கக் கூடும் என்ற யோசனையும் சிறிதுமில்லை அவளுக்கு. யோசனை அவளுக்கு இல்லாவிட்டாலும் அந்த அறை வாசலில் ஆஜானுபாகுவாக நின்றிருந்த உருவத்துக்கு இருக்கவே செய்தது.

பளிங்கு நிலவில் வெளேரென்று கிடந்த நந்தினியின் உருவம் பெரிதும் இளைத்து விட்டதைக் கவனித்த அந்த உருவம் தன்னையே வெறுத்துக் கொண்டதற்கு அடையாளமாக அதன் கண்களில் ஒரு மந்தச் சாயையும் பெருத்த மீசையின் கீழிருந்த வலுத்த, உதடுகளில் ஒரு மடிப்பும் காணப்பட்டன. அதன் விளைவாக விசாலமான வதனத்தில்கூடத் துன்பச் சாயை பிரதிபலிக்கத்தான் செய்தது. எந்தத் துன்பத்தையும் தாங்கவல்ல அந்தத் திடச் சரீரமும் மனமும் இந்தக் குழந்தையின் வேதனையை, வேதனை விளைவித்த இளைப்பைத் தாங்க முடியாமல் தவித்தனவென்பதை அது நின்றிருந்த தோரணையே நிரூபித்தது. இப்படி நீண்ட நேரம் நின்றிருந்த உருவத்தை அதற்குப் பின்னாலிருந்த மற்றோர் உருவம், ''நேரமாகிறது, அரசகுமாரியை எழுப்புங்கள்'' என்று கூறவே, திடகாத்திர உருவம் பஞ்சணையை நோக்கி மெள்ள நகர்ந்து நந்தினியின் நெற்றியின் மீது கையை வைத்தது மெல்ல.

நந்தினியின் உதடுகள் மெல்லத் திறந்து, ''மகாராஜா!'' என்றன.

மகாராஜா பிரதாப்சிங்கின் பெருத்த மீசை சிறிது அசைந்தது உதடுகளின் அசைவால். ''மகளே! விழித்துக் கொண்டா இருக்கிறாய்?''

''ஆம் மகாராஜா!'' என்ற நந்தினியின் உதடுகள் லேசாக விரிந்தன, புன்முறுவலைக் காட்ட. அந்தப் புன்முறுவல் அழகாகத் தான் இருந்தது. ஆனால் வேதனையும் சிலருக்கு அழகு தருகிறதல்லவா?

அந்தப் புன்முறுவலைக் கவனித்த மகாராஜா பிரதாப்சிங்கின் வதனத்திலும் வருத்தம் படர்ந்தது. ''கண்களை விழிக்கவில்லையே நீ?'' என்றார் மகாராஜா வருத்தத்தின் ஊடே.

''ஆம்... மகாராஜா!''

''அப்படியானால் நான் வந்திருப்பதை எப்படி அறிந்து கொண்டாய்?''

''புலன்கள் விழித்திருந்தன.''

''அப்படியா!''

''ஆம் மகாராஜா! நீங்களும் டபீர் பண்டிதரும் படிகளில் ஏறி வரும் சத்தம் கேட்டது'' என்ற நந்தினி மெல்லத் தனது கண்களையும் விழித்தாள்.

மகாராஜா மட்டுமல்லாமல் அவருக்குப் பின்னால் அறைக்குள் நுழைந்த டபீர் பண்டிதரும் அரசகுமாரியின் சொற்களைக் கேட்டதும் பிரமித்து நின்றார். ''காலடிகளின் ஒலி வித்தியாசங்கள் கூட அரசகுமாரிக்குத் தெரியும் போல் இருக்கிறது?'' என்றார்.

''ஆம்... தெரியும்.''

படுக்கையில் அவளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்ட மகாராஜா பிரதாப், ''மிக விசித்திரம் நந்தினி!'' என்று கூறி அவளது தலைமயிரைக் கோதி விட்டார்.

''இதில் விசித்திரம் ஏதுமில்லை. தங்களது திடமான புலியின் நடை, படிகளில் ஏறும் போது திட்டமாகத் தெரிந்தது. அடுத்தும் ஒரு ஒலி ஏதோ மெதுவாகப் பூனை நடப்பது போலக் காதில் விழுந்தது'' என்று விளக்கினாள் நந்தினி.

இதைக் கேட்ட மகாராஜா தமது துன்பத்தை மறந்து இறைந்தே நகைத்தார். அந்த நகைப்பு டபீர் பண்டிதருக்குத் திருப்தியளிக்கக் காரணமில்லையாதலால், ''அரசகுமாரி! நான் பூனையா?'' என்று வினவினார்.

''குழந்தை சொல்வதை அப்படியே எடுத்துக் கொள்ள வேண்டாம்'' என்று மகாராஜா சமாதானப்படுத்த முயன்றார்.

''பின் எப்படி எடுத்துக் கொள்வது? குள்ளநரி என்று எடுத்துக் கொள்ளட்டுமா?'' என்று சற்றுக் குரலில் எரிச்சலைக் காட்டினார் டபீர் பண்டிதர்.

''அதுவும் பொருந்தலாம்'' என்ற நந்தினி மெள்ள படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டாள் தந்தையின் அருகில்.

அதற்கு மேல் தாங்காத டபீர் பண்டிதர், ''மகாராஜாவின் சந்நிதானத்தில் நான் அவமானப்பட விரும்பவில்லை'' என்று சற்றுச் சினத்துடன் கூறிவிட்டுத் திரும்ப முயன்றார்.

''சற்றுப் பொறுங்கள் அமைச்சரே!'' என்றாள் நந்தினி.

திரும்பிச் செல்ல முயன்ற டபீர் பண்டிதர், ''அரசகுமாரிக்குப் பெயர் சரியாகத்தான் ஏற்பட்டிருக்கிறது'' என்று தமக்கும் பேச்சுத் திறமை உண்டென்பதை உணர்த்த முற்பட்டார்.

''என்ன பெயர் பண்டிதரே?'' என்று வினவினாள் அரசகுமாரி.

''வாள் மகள்.''

''அதைச் சொல்கிறீர்களா!''

''ஆம்... வாளால் வெட்டுவது போல் மனிதர்களைச் சொல்லால் வெட்டுகிறீர்கள்.''

நந்தினி அவரை நோக்கவுமில்லை, நேரிடையாகப் பேசவுமில்லை. தந்தைப் பக்கம் தனது கண்களைத், திருப்பி, ''தந்தையே! சந்தா சாகிபும் பிரெஞ்சுப் படைகளும் மூன்று மாதங்கள் இந்தக் கோட்டையை முற்றுகையிடவில்லையா?'' என்றாள்.

''ஆம்.''

''அந்த மூன்று மாத காலமும் போர் நடந்ததா?''

''இல்லை.''

''ஏன் இல்லை?''

''சமாதானம் பேசினோம்.''

''சமாதானம் பேச மூன்று மாதம் எதற்கு?'' இதைக் கேட்ட நந்தினி டபீர் பண்டிதர் மீது கண்களை நாட்டினாள். ''பண்டிதரே! உமது தந்திரத்தின் எல்லையை இந்த முற்றுகையில் தான் கண்டேன். முதல் ராஜ பேரிகையைக் கொட்டச் செய்தீர். பிறகு வெள்ளைக் கொடியேந்திச் சமாதானம் பேசச் சொன்னீர்... இல்லையா?''

டபீர் பண்டிதர் அவள் சொல்லை ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் அசைத்தார். அரசகுமாரி அடுத்த கேள்வியையும் தொடுத்தாள், ''அங்கே போய் என்ன சொன்னீர் சந்தாசாகிபுவிடம்?'' என்று.

அரசகுமாரியின் மூளை எந்தத் திக்கில் பாய்கிறதென்பதை நொடிப் போதில் ஊகித்துக் கொண்ட டபீர் பண்டிதர், ''மகாராஜா சொல்லச் சொன்னதைச் சொன்னேன்'' என்றார்.

''மகாராஜா என்ன சொன்னார்?'' என்று மீண்டும் கேட்டாள் நந்தினி.

''சமாதானத்தைக் கோருவதாகச் சொல்லச் சொன்னார்'' என்றார் பண்டிதர்.

''சந்தா சாகேப் அதை ஒப்புக் கொண்டார்?''

''ஆம். ஆனால் நாம் ஆற்காட்டுக்குச் செலுத்த வேண்டிய பகுதிப் பணத்தைக் கட்டும்படி கேட்டார்.''

''தொகை எத்தனையோ?''

''இரண்டு கோடி ரூபாய்.''

''கொடுத்தீரா?''

''இன்று வரையில் இல்லை.''

''ஏன் கொடுக்க வில்லை? முன்பணமாக மூவாயிரம் கொடுக்க வில்லையா?'' என்று மகாராஜா சங்கடத்துடன் கேட்டார் பண்டிதரை நோக்கி.

''இரண்டு கோடிக்கு மூவாயிரம் அதிகம் தான்'' என்ற டபீர் பண்டிதர் தமது முழு விஷமத்தைக் காட்டினார்.

இந்த இடத்தில் நந்தினி குறிக்கிட்டு, ''சமாதானம் ஏற்பட்ட பிறகு மூன்று மாத காலம் முற்றுகை நடப்பானேன்?'' என்று வினவினாள்.

டபீர் பண்டிதர் உற்சாகத்தைக் காட்டினார் முகத்தில். ''பேரம் பேசினோம் பதினைந்து நாட்கள். ஒரு நாள் நாலைந்து வைரக் கற்கள், இன்னொரு நாள் பொற்கிண்ணங்கள் இரண்டு, அடுத்த நாள் வெள்ளிக் குடங்கள் பதினைந்து, அதற்கும் அடுத்த நாள் இருபது புரவிகள், இப்படியாகக் கொண்டு காட்டினோம், மகாராஜா உத்தரவுப்படி. விலையில் சிறிது தகராறு, அதாவது அவர்கள் போட்ட மதிப்புக்கும் நமது மதிப்புக்கும் ஏற்ற தாழ்வுகள் அதிகமாக இருந்தது...'' என்று டபீர் பண்டிதர் உற்சாகத்துடன் கூறினார்.

''அதாவது உங்களுக்குப் பணம் கொடுக்க இஷ்டமில்லை. பேரம் பேசி இழுக்கடித்து நாளைப் போக்கினீர்'' என்று நந்தினி விளக்கினாள்.

''போக்கினீர் என்பது சரியல்ல'' என்று பொய்த் துன்பத்தை முகத்தில் காட்டினார் பண்டிதர்.

''என்ன தவறோ?''

''இது என் யோசனையல்ல.''

''வேறு யார் யோசனை?''

பண்டிதரின் இதழ்கள் இகழ்ச்சியுடன் மடிந்தன. ''மாகாராஜாவை விட யோசனை மிகுந்த யாரையும் நான் இங்கும் பார்க்க வில்லை, எங்கும் பார்க்க வில்லை'' என்றார்.

இதைக் கேட்ட பிரதாப் சிம்ம மகாராஜா சிறிது பலமாகவே நகைத்தார். ''சபாஷ் பண்டிதரே! கடைசியில் பழியை என் மீதே போடுகிறீர்'' என்றும் கூறினார்.

''பழியா! நாஸர்ஜங் பெரும் படையுடன் கிளம்பி விட்டார் கர்நாடகத்தின் மீது என்ற செய்தியைக் கேட்டதுமே நாடகத்தைத் துவங்கினீர்கள் . காலங்கடத்த என்னைத் தினமொரு தரம் ஏதாவது பொருளைக் கொடுத்துப் பேரம் பேசச் செய்தீர்கள். நாஸர்ஜங் வருவதை அறிந்ததும் பிரெஞ்சுக்காரர்கள் வடக்கு வாசல் காவலைத் தகர்த்து உள்ளே நுழைந்தார்கள். அதனால் மூவாயிரம் ரூபாயைக் கண்ணில் காட்டினீர்கள். அதை வாங்கிக் கொண்டு சந்தா சாகேபும், முஸபர்ஜங்கும் பிரெஞ்சுக்காரரும் புதுவைக்கு ஓடினார்கள். வாலு போச்சு கத்தி வந்தது டும் டும் என்று நாஸர் வந்தார், சந்தா போனர். பிறகு புஸ்ஸி வந்தார், நாஸர் போனார்... போனார்...அடுத்தபடி...'' என்று வரலாற்றை விளக்கிக் கொண்டு போன பண்டிதரை மடக்கிய மகாராஜா, ''பண்டிதரே! வளர்த்த வேண்டாம். விஷயத்துக்கு வாருங்கள்'' என்றார்.

பண்டிதர் இளநகை பூத்தார். ''போன மச்சான் திரும்பி வந்தான்'' என்று பழமொழியை எடுத்து வீசினார்.

''யாரது?'' என்று வினவினாள் நந்தினி ஆத்திரத்துடன். அந்த ஆத்திரத்தில் கட்டிலிலிருந்து கீழே குதித்துப் பண்டிதரை நோக்கினாள் சீற்றத்துடன். பண்டிதர் தாம் அடைத்துக் கொண்டிருந்த வாயிற்படியை விட்டு விலகி, ''மச்சான் வாருங்கள்'' என்று உபசாரமாக அழைக்க விஜயகுமாரன் பூர்ண ராணுவ உடையில் உள்ளே நுழைந்தான்.

நந்தினி பிரமை பிடித்து நின்றாள் ஒரு விநாடி. அடுத்த விநாடி பண்டிதரையும் பார்த்துத் தந்தையையும் பார்த்தாள். ''இவர்...'' என்று ஏதோ கேள்வியை வீசினாள்.

மகாராஜா பிரதாப்சிங்கும் கட்டிலிலிருந்து இறங்கித் தரையில் நின்றார். ''பிரிட்டிஷ் பிரதிநிதி லெப்டினண்ட் விஜயகுமார்!'' என்று மகளுக்கு அறிமுகப்படுத்தினார். ''மேற்கொண்டு இவரையே நீயே விசாரித்து முடிவு சொல்'' என்று கூறி, பண்டிதருடன் அறையை விட்டு அகன்றார்.

15. அந்தப்புர அரசியல்

'பிரிந்தவர் கூடினால் பேச வேண்டுமோ?'' என்ற கம்பன் காவிய உரை காலத்தால் மறையவில்லையென்பதை, தனித்து விடப் பட்ட விஜயகுமாரன், நந்தினி இருவருமே நிரூபித்தார்கள் அன்று, அந்த மூன்றாவது உப்பரிகையில் அரச குமாரியின் அந்தரங்க அறையில்.

நீண்ட நேரம் இருவரும் ஏதும் பேசாவிட்டாலும் இருவர் உள்ளங்களும் தனித்தனியாக ஏதோ பேசிக் கொண்டுதான் இருந்தன. அரச மகளின் அந்தப்புரத்துக்குள் யாரும் அனுமதிக்கப் படுவதில்லையென்பதும், அப்படித் தவறி வந்துவிடுபவருக்குக் கூடக் கடுமையான தண்டனை உண்டென்பதும், அறையில் நின்ற இருவருக்குமே நன்றாகத் தெரியும். அதுவும் அரண்மனையின் அடிப்பகுதியிலிருக்கும் அரச மகளிர் வாசஸ்தலத்துக்கு வருவதே பெரும் குற்றமாயிருக்க, தோழியரையும் தாய்மார்களையும் தவிர, வேறு யாருமே வர முடியாத, வரக்கூடாத மூன்றாவது உப்பரிகைக்கு மன்னர் எப்படி இவரை அழைத்து வந்தார் என்று அரசகுமாரி தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

அரண்மனை விதிகளை அரசரே தகர்க்க முற்பட்டால் வேலியே பயிரை மேயும் கதையாகாதா என்றுகூட வினவிக் கொண்டாள். 'எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போல், பாலுக்குப் பூனையைக் காவல் வைத்த கதையாக இவரை எனக்குக்

காவல் வைத்து விட்டுப் போயிருக்கிறாரே தந்தை, இதை விட விசித்திரம் என்ன இருக்க முடியும்?' என்ற வினாவையும் மனத்தில் எழுப்பிக் கொண்டாள். இத்தகைய நினைப்புகளால் ஏற்பட்ட சங்கடத்தால், நாணத்தால், பொய்க்கோபத்தால், நந்தினி சட்டென்று திரும்பிச் சாளரத்தை நோக்கிச் சென்று முழுமதியை உற்று நோக்கினாள் காரணமின்றி.

விஜயகுமாரன் மனநிலையும் பெரும் சங்கடத்தில் தான் இருந்தது. பிரிட்டிஷ் கவர்னரிடமிருந்து தான் தூது வந்ததைச் சொன்னதும் மகாராஜா, டபீர் பண்டிதரை வரவழைத்ததும், அவரிடம் தனது தூதைப் பற்றி எடுத்துரைத்து யோசனை கேட்டதும், அவர் இதைத் தன்னைக் கேட்பதில் பயனில்லை என்று கூறியதும், பிறகு மகாராஜா ஏதோ தீவிர யோசனை செய்து விட்டு, 'அப்படியானால் வாருங்கள்' என்று தங்கள் இருவரையும் அந்தப் புரத்துக்கு அழைத்து வந்ததும் பெரும் வியப்பை அளித்தது விஜயகுமாரனுக்கு.

'போர் விஷயங்களைப்பற்றி ஆலோசனை கேட்க வேண்டுமானால் மானாஜியைக் கேட்டிருக்க வேண்டும் மன்னர். அதற்குப் பதில் டபீர் பண்டிதரைக் கேட்கிறார். பண்டிதர் அதற்குப் பதில் சொல்லாத போது அவரையும் சேர்த்து அந்தப்புரத்துக்கு இழுத்து வருகிறார். இங்கே தூதைக் கேட்டு முடிவு செய்யும்படி அரசகுமாரியிடம் சொல்லி விட்டுச் செல்கிறார். மன்னரின் அபிப்பிராயம் தான் என்ன?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். அந்தப்புரத்துக்குள் நுழையுமுன்பு டபீர் பண்டிதர் ஆட்சேபித்ததும், அதற்கு மன்னர் தந்த பதிலும் கூட அந்தச் சமயத்தில் அவன் அகத்தே எழுந்தது பெரிதாக அவன் உதடுகளில் லேசான புன்முறுவலும் உதயமாயிற்று.

பண்டிதர் ஆட்சேபணை கிளப்பி, ''மகாராஜா! இது அந்தப்புரம்...'' என்று குறிப்பிட்டார்.

''என் அந்தப்புரம் எனக்கே தெரியாதென்று நினைக்கிறீரா?'' என்று முன்னே சென்ற மகாராஜா திடீரென்று திரும்பிப் பின்புறம் பார்த்துப் பண்டிதரை நோக்கி வினவினார்.

''ஏன், தங்களுக்குத் தெரியாமல் என்ன?'' என்று இளக்காரமாகப் பதில் சொன்னார் பண்டிதர்.

''தெரிந்து நான் செய்வதை நீர் தடை செய்ய வேண்டிய அவசியம் என்ன?'' என்று பிரதாப் சிங் வினவினார்.

''அரசியல் விஷயங்களை முடிவு செய்ய அந்தப்புரத்தில் என்ன வேலையென்று யோசித்தேன்'' என்றார் பண்டிதரும் தமது விஷமத்தை விடாமலே.

மகாராஜா புன்முறுவல் கோட்டினார், ''பண்டிதரே!'' என்றும் விளித்தார் முறுவலின் ஊடே.

''மகாராஜா!'' பண்டிதர் அதிகப் பணிவைக் காட்டினார்.

''இப்போது இந்த நாட்டில் யார் பலம் ஓங்கி நிற்கிறது?''

''பிரெஞ்சு பலம்.''

''யாரால் ஓங்கி நிற்கிறது?''

''டுப்ளேயால்.''

''டுப்ளேயின் பிரதான ஆலோசகர் யார்?''

''மகாராஜா...'' என்று இழுத்தார் பண்டிதர் மகாராஜாவின் நோக்கத்தைப் புரிந்து கொண்டு.

''கேள்விக்குப் பதில் சொல்லுங்கள் அமைச்சரே!''

''டுப்ளே மனைவியார் மேடம் வினிஸன்ஸ்.''

''இப்பொழுது ஒப்புக் கொள்கிறீரா!''

''எதை?''

''அந்தப் புரத்து ஆலோசனை அவசியமென்பதை'' என்ற மகாராஜா அத்துடன் விடவில்லை. ''பண்டிதரே! முக்கால் வாசி விவகாரங்கள் உலகத்தில் படுக்கையறைகளில் தான் முடிவாகின்றன'' என்றும் உணர்த்தினார் பண்டிதருக்கு.

பண்டிதர் பெரிய வட்டாவுடனிருந்த தலையை மிக மரியாதையாகவும் ஏளனமாகவும் அசைத்தார். ''மகாராஜாவின் சிறந்த பல முடிவுகளுக்கு வித்து எங்கிருக்கிறது என்பதை இன்று தான் புரிந்து கொண்டேன்'' என்று கூறவும் செய்தார். இதை கேட்ட மகாராஜா லேசாக நகைத்து விட்டு மாடிப்படிகளில் ஏறலானார்.

அவருடன் தானும் பண்டிதரும் ஏறி வந்ததையும் மகாராஜா தன்னை நந்தினியின் அறையில் விட்டுப் போய்விட்டதையும் எண்ணிப் பார்த்த விஜயகுமாரன், மகாராஜாவின் நடவடிக்கைகளுக்கு ஏதோ ஆழ்ந்த கருத்து இருக்க வேண்டும் என்று மட்டும் அறையில் நின்ற அந்த சில விநாடிகளில் தீர்மானித்துக் கொண்டான். இத்தகைய யோசனைகளில் அவன் திளைத்திருந்த சமயத்திலும் சாளாரத்தண்டை நின்ற நந்தினியின் பேரழகை அவனால் பருகாதிருக்க முடியவில்லை.

நந்தினி சாளரத் தண்டை நாணியோ ஒடுங்கியோ, சாளரத்தை இரண்டாகப் பிரித்த நடுக்கட்டையில் சாய்ந்தோ நிற்காமல் செங்குத்தாகச் சாளரத்தின் ஒரு பகுதியில் முழு நிலவு அவள் பூவுடலைக் குளிப்பாட்டத் திடமாக நின்றிருந்த கோலத்தில் காதலியின் கோலத்தை விட அரசகுமாரியின் தோரணையே அதிகமாக இருந்தது. முழுமதியின் கிரணங்கள் அவள் முன்புறத்தை என்ன செய்தனவோ, அவனுக்குத் தெரியாது, பின் பகுதிகளுக்குப் பெரும் மெருகை ஊட்டிவிட்டதை மட்டும் அவன் புரிந்து கொண்டான். அத்தனை நேரம் படுத்துக் கிடந்ததால் தலையின் மல்லிகைச் சரம் ஓரளவு கசங்கியும் சில மலர்கள் உதிர்ந்தும் இருந்ததாலும் நிலவொளியில் அது ஈடு இணையற்ற அழகைப்

பெற்று இயற்கை வெளுப்பை விட அதிக வெளுப்பைப் பெற்றிருந்தது. அதற்குப் பின்னணியாக இருந்த கருத்த குழல் திரைக்கூடக் கண்ணைப் பறிக்கும் வண்ணம் பளபளத்தது. நிலவு முன் பக்கம் இருந்ததன் விளைவாக அவள் கழுத்தின் பின்புறத்தின் முழுவெண்மை தெரியாவிட்டாலும், கழுத்தின் இருபுறங்களின் வழவழப்பும் வெளுப்பும் அவன் கண்களுக்கு ஏதோ ஒரு புதுவித விருந்தை அளித்தன.

ரவிக்கைக்கும் சிற்றிடையில் இழுத்துக் கட்டப்பட்டிருந்த சேலைக்குமிடையே தெரிந்த சதைப்பற்றின் உறுதியும் வழவழப்பும் அவன் சித்தத்துக்கு என்னென்ன இம்சைகளை அளித்துக் கொண்டிருந்தன என்பதை விவரிக்க முடியவில்லை. அந்த இடைக்குக் கீழே முன்பு லேசாகப் பருத்திருந்த பகுதிகள் இப்பொழுது சற்று அதிகமாகப் பருத்திருந்ததால் அவன் உள்ளம் உன்மத்தத்தை அடைந்தது. அந்த உன்மத்தத்தின் விளைவாகவோ என்னவோ அவன் மெல்லப் பூனை போல் நடந்து அவளை அணுகி இடையை ஒரு விநாடி இறுகப் பிடித்தான். பிறகு அவள் திரண்ட தோள்களைப் பிடித்துத் தடவி, அவள் உடலுடன் தன் உடலை லேசாக இணைய விட்டு, ''அரச குமாரி!'' என்று அவள் காதுக்கருகில் குனிந்து குழைந்தான்.

அரசகுமாரி. அவனுக்குப் பதில் சொல்லவும் இல்லை, திரும்பவும் இல்லை. குளிர் மதி சற்று முன்பு கிரணங்களால் செய்த கொடுமையை விட அதிக இம்சையை அந்த ஆண்மகனின் அண்மையும் கைகளும் அவளுக்கு அளித்து உடலில் நெருப்பை வாரிக் கொட்டின. அவன் தன்னை நோக்கி நகர முற்பட்டதுமே தனது இதயம் படபடவென அடிக்கத் துவங்கிவிட்டதை அறிந்த அரசகுமாரி, 'அருகில் வந்து எத்தனை சொந்தமாக இடையைத் தொட்டார்? உம்... நல்ல வேளை தோளுக்கு உயர்த்தினாரே கைகளை... ஆனால் என்ன பயன், இவர் உடல் அநாவசியமாகப் படுகிறதே பின்னால் என்மேல்...' என்று அவன் ஒவ்வொரு செய்கையையும் அநுபவித்தாலும், என்ன காரணமாகவோ கோபத்தினால் ''உம்'' என்று உம் கொட்டினாள் அவன் கேள்விக்கு.

''நீண்ட காலம் கழித்து வந்திருக்கிறேன்'' என்ற விஜயகுமாரன் தோளிலிருந்த கைகளால் அவள் உடல் பூராவையும் தடவினான்.

அரச குமாரியின் முகம் முன்பிருந்ததால், அவள் இதழ்களில் காதல் பிரவகித்த முறுவல் படர்ந்ததை விஜயகுமாரனால் பார்க்க முடியாததால் அவள் முறுவலை அடக்கி வேகத்துடன் கேட்டால், ''அதற்காக என்ன செய்யச் சொல்கிறீர்கள்?'' என்று.

விஜயகுமாரன் சங்கடம் அதிகமாயிற்று. ''இதென்ன கேள்வி நந்தினி?'' என்று அரசகுமாரி என்பதைக் கைவிட்டு

உரிமையைக் காட்டினான் விஜயகுமாரன், அத்தனை சங்கடத்திலும்.

அரசகுமாரி கடுமையான குரலிலேயே கேட்டாள் தலையை தூக்கி முழுமதியை நோக்கிய வண்ணம். ''வேறென்ன கேள்வியை எதிர் பார்க்கிறீர்கள்?''

மதியை நோக்கி அவள் தலை உயர்ந்ததால் கழுத்தும் சற்று நீண்டு உயர்ந்ததையும், அது மதி ஒளியில் எத்தனையோ இன்ப ஜாலங்களை அள்ளி வீசியதையும் கவனித்த விஜயகுமாரன் அது வரை அடக்கி வைத்திருந்த உணர்ச்சிகளை வெளியிலிருந்து வந்து கொண்டிருந்த தென்றலில் பறக்க விட்டுத் தன் இதழ்களைத் துணிவுடன் அவள் கழுத்தில் புதைத்தான்.

அப்படிப் புதைத்த இதழ்களை அரசகுமாரி தடுக்க முயலவில்லை. அவன் இதழ்கள் அளித்த இன்ப வேதனையில் நெளியக்கூடச் சக்தியற்றவளானாள். நெளிந்தால் பின்னால் லேசாக அழுத்திய அவன் சரீரம் அதிகமாக அழுந்திவிடுமே என்ற பயமும், ஏன் அழுந்தவில்லை என்ற ஏக்கமும், ஏக்கம் விளைவித்த பலவிதக் எதிர்பார்ப்புகளும், அவள் எண்ணங்களுக்கு ஏதேதோ விபரீத கற்பனைகளைக் கற்றுக் கொடுத்திருந்ததால், பெருமூச்சு மட்டும் விட்டாள் நந்தினி. அதன் பொருள் அவனுக்குப் புரிந்திருந்ததால் உதடுகளை நீக்காமலே, ''நந்தினி!'' என்று அழைத்தான் மெதுவாக.

''உம்.''

''எத்தனை நாளாகிறது?''

''உம்?''

''இது தான் நந்தினி...''

''ஓ...''

''நந்தினி!''

''என்ன நந்தினிக்கு?''

''நமக்குள்...''

''நமக்குள்?''

''ஒளிவு மறைவு...''

''வேண்டாமென்கிறீர்கள்'' என்ற நந்தினி சரேலென்று கைகளில் சுழன்று திரும்பினாள். இருவர் கண்களும் சந்தித்தன. ஆயிரம் கதைகளைச் சொல்லின. நேருக்கு நேர் இருந்ததால் இடையே அது வரை அவர்களை மறைத்திருந்த சங்கடத் திரையும் அகன்றது. விஜயகுமாரன் கண்கள் அவள் பங்கய விழிகளிலிருந்து சற்றுத் தாழ்ந்து வேறு இரு பங்கயங்களை நோக்கின. அந்த ஆண்மகனின் துணிவைக் கண்ட நந்தினி வியந்தாள். ''என்ன பார்க்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''உன்னைத்தான்.''

''இல்லையே.''

www.thamizhthenee.blogspot.com

''ஏன் இல்லை?''

''முகத்தைப் பார்க்க மறுக்கிறீர்கள்.''

''முகம்... முகம்.''

''அத்தனை அழகாயில்லை?''

''சே சே! யார் சொன்னது?''

''எனக்கே தெருகிறது.''

''எப்படி?''

''நீங்கள் என் முகத்தைப் பார்க்க மறுப்பதிலிருந்து, உங்கள் கண்கள் வெட்கத்தால் தாழ்ந்து விட்டதிலிருந்து... வெட்கத்தால்தானே வீரரே?'' என்று கேட்ட அரசகுமாரி திடீரென நகைத்தாள் வாய்விட்டு.

அவன் சட்டென்று அவளைச் சுற்றியிருந்த கைகளை நீக்கினான். ''இப்படி இன்னொரு சிரிப்பு சிரித்தால்... நான் கடமையை மறந்து விடுவேன், பண்பாட்டைக் கூடக் காற்றில் விட்டு விடுவேன்...'' என்று அச்சத்துடன் சொல்லிக் கொண்ட விஜயகுமாரன் நந்தினியை விட்டு மெள்ள விலகி நின்று, ''அரசகுமாரி!'' என்று மரியாதையுடன் அழைத்தான்.

அவன் திடீரென விலகியதற்கும் காரணம் புரிந்திருந்தது. அவன் அரசகுமாரியென மரியாதையுடன் மீண்டும் அழைத்ததற்கும் காரணம் புரிந்திருந்தது. அந்த ஒரு சொல் அவளிடமும் திடீர் மாற்றத்தை விளைவித்தது. குழைந்து கிடந்த அவள் முகம் திடீரெனத் தனிக் கம்பீரத்தை அடைந்தது.

''எஸ், லெப்டினண்ட்...!'' என்று அவள் கூறினாள், அரசகுமாரி என்ற அதிகாரத் தோரணையில்... தான் அரசாங்க விஷயங்களைப் பேசத் தயாராயிருப்பதை அறிவுறுத்த.

அவள் திடீரென அரசியல் பேசும் பெருமாட்டியாகி விட்டதைக் கவனித்த விஜயகுமாரன் வியப்படைந்தாலும் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், ''இனி...'' என்று ஏதோ துவங்கினான்.

''மன்னர் விஷயத்தைப் பேசுவோம். அதாவது உங்கள் தூது விஷயத்தைப் பேசுவோம்'' என்ற நந்தினி, ''பேச இதுவும் சரியான இடம் தான். அந்தரங்க ஆலோசனைக்கும் அந்தப்புர ஆலோசனைக்கும் அதிக வித்தியாசம் இல்லை. சரி, சொல்லுங்கள்! ஸாண்டர்ஸ் என்ன எதிர்பார்க்கிறார்?'' என்ற கேள்வியைத் திடமாக வீசினாள்.

விஜயகுமாரன் பிரமித்து நின்றான். ''ஸாண்டர்ஸ், ஸாண்டர்ஸ்'' என்று குழறவும் செய்தான்.

''எஸ்... தாமஸ் ஸாண்டர்ஸ், கவர்னர் ஆஃதி பிரிட்டிஷ் ஸெட்டில் மெண்ட்ஸ் இன் இண்டியா'' என்று ஆங்கிலத்திலேயே வெளுத்து வாங்கினாள் நந்தினி.

''விஜயகுமாரன் பிரமை மேலும் அதிகமாயிற்று. ''உனக்கு ஆங்கிலம்...?'' என்று இழுத்தான்.

''நன்றாகத் தெரியும். ஐ ஹாவ் எ ட்யூடர் நௌ.''

''எதற்கு நீ ஆங்கிலம் படிக்க வேண்டும்?''

'எதற்கு நீங்கள் பிரிட்டிஷ் படையில் சேர வேண்டும்?''

''ஐ ஹாவ் மை ரீஸன்ஸ்'' என்றான் விஜயகுமாரன் கடுமையாக.

''ஐ ஆல்ஸோ ஹாவ் மை ரீஸன்ஸ், கம் நௌ லெப்டினண்ட்! வாட் டஸ் ஸாண்டர்ஸ் வாண்ட்?'' என்ற நந்தினி விஜயகுமாரனை ஏறெடுத்து நோக்கினாள்.

விஜயகுமாரன் பிரமை பிடித்து அவளை நோக்கினான். இன்னொரு இடி அவன் தலையில் இறங்கியது ''கவர்னருக்கு வேண்டியது எனக்குத் தெரியும். ஹி வாண்ட்ஸ் அவர் ஹெல்ப்'' என்று திட்டவட்டமாக அறிவித்தாள் நந்தினி. அந்தப்புர ஆலோசனை தன் மூளையையும் மீறி ஆழத்தில் செல்வதை அறிந்த விஜயகுமாரன் பேச நா எழுமால் நின்றான்.

''வாட் லெப்டினண்ட்! ஆர் யூ டம்? (நீங்களென்ன ஊமையா?)'' என்று கேட்ட அரசகுமாரி சற்று இரைந்தே நகைத்தாள், எதிரே நின்ற வாலிப வீரனை நோக்கி.

16. காதில் ஒலித்த ரகசியம்

சில விநாடிகளுக்கு முன்பு சித்தினியாக, தன் கைப்பாவையாக வளைந்த அரசகுமாரி திடீரென அரசியலில் இறங்கிவிட்டதையும், தான் வந்த காரியத்தை முன்கூட்டியே ஊகித்து விட்டதையும், ஆங்கிலத்தில் கேள்விகளைப் போட்டு வெளுத்து வாங்கியதையும் எண்ணிப் பார்த்துப் பிரமையடைந்த விஜயகுமாரன், பேச சக்தியற்று நின்ற நிலையில், ''ஆர் யூ டம்? என்று கேட்டு, தன்னை அரசகுமாரி ஊமைக் கோட்டானாக்கி விட்டதை நினைத்ததும் அவன் உள்ளத்திலிருந்த காதல் மயக்கம் சட்டென்று விலகி, சினம் அந்த இடத்தைப் பிடித்துக் கொள்ளவே, அவன் கோப விழிகளை அவள் மீது நாட்டினான். பிறகு அவளுக்கும் தனக்கும் எந்த விதச் சம்பதமும் இல்லாதது போலவே நடந்து, ''ஆம் அரசகுமாரி! நான் ஊமையாகத்தான் ஆகிவிட்டேன்'' என்று சொல்லவும் செய்தான் சினத்தைக் குரலிலும் காட்டி.

''பேச்சில் வல்லவரான நாயக்கர் வம்ச வீரர் திடீரென ஊமையாவதற்குக் காரணம்?'' என்று வினவினாள் அரசகுமாரி. அவன் சினத்தைக் கண்டு வெளியில் லட்சியம் செய்யாமலும், உள்ளூற நகைத்துக் கொண்டும்.

விஜயகுமாரன் மிகுந்த பணிவுடனும் கம்பீரத்துடனும் சொன்னான். ''சில சமயங்களில் எப்பேர்ப்பட்ட மனிதனும் ஊமையாகிறான்'' என்று.

''கொஞ்சம் விளக்கலாமா?'' என்று கேட்டான் நந்தினி ஏளனக் குரலில்.

''விளக்கலாம்.''

''விளக்குங்களேன்.''

''அபரிதமான அழகைப் பார்க்கும் போது...''

''பெண் அழகை?''

''ஆம் ஆம்.''

''மனிதன் சிலையாகி விடுகிறான்?''

''ஆம்!''

''சிலை பேசாது. சரி, அடுத்த சந்தர்ப்பம்?''

''எதிர்பாராத கேள்விகள் பிறக்கும் போது மனிதன் திகைப்படைகிறான். அதுவும் எதிர்பாராத இடத்திலிருந்து பிறக்கும் போது'' என்ற விஜயகுமாரன் மெல்ல நகைத்தான்.

நந்தினி நகைக்கவில்லை, புன்முறுவல் கொண்டாள். ''மூன்றாவதும் ஒன்றிருக்க வேண்டும்?'' என்றாள்.

''இருக்கிறது.''

''திடீரெனப் பழமொழி நம்மீது வீசப்படும் போது.''

''இதைக் கேட்ட நந்தினியின் முகத்தில் சிறிது சிந்தனை பிறந்தது. ''சில நேரங்களில் சொந்த மொழி பயனற்றதாகி விடுகிறது'' என்றும் குறிப்பிட்டாள் அவள் சில விநாடிகளுக்குப் பிறகு.

''அந்த நேரங்களை நான் அறிந்து கொள்ளலாமா?''

''தெரிந்து கொள்ளாம்.''

''சொல்லுங்கள் அரசகுமாரி'' என்று பணிவுடன் கேட்டான் விஜயகுமாரன்.

''தம் நாட்டவர், பிற நாட்டாரின் தூதராக வரும் போது...''

''உம் உம்...''

''அவர் பிற மொழியில் வல்லவராகி விடும்போது.''

''உம், சொல்லுங்கள்.''

''மூன்றாவதாக அரசியல் பேச அவர் அந்தப்புரத்துக்கு வரும் போது...'' இந்தக் கடைசிச் சொற்களைச் சொன்ன அரசகுமாரி மெல்ல நகைத்தாள்.

விஜயகுமாரன் சங்கடத்தால் இருந்த இடத்திலேயே அசைந்தான் சில விநாடிகள். ''அரசகுமாரி! அரசியல் பேச இங்கு வந்தது என் எண்ணத்தாலல்ல...'' என்று சமாதானம் கூறினான் சங்கடத்துக்கிடையில்.

''தந்தை உத்தரவை முன்னிட்டு அவருடன் வந்தீர்கள்.''

''ஆம்.''

''அவர் இங்கு வந்து பேசவேண்டும் என்று சொன்னதை ஆட்சேபித்தீர்களா?''

இந்தக் கேள்விக்கு விடை சொல்லத் தெரியாமல் திகைத்த விஜயகுமாரன், ''ஏன் ஆட்சேபிக்க வேண்டும் நந்தினி; அரசரின் ஆணையை ஆட்சேபிக்கவோ மீறவோ நான் யார்?'' என்று வினவினான்.

''ஐயோ பாவம்! ஒன்றுமறியாத குழந்தை!'' என்றாள் நந்தினி.

''நந்தினி!'' சீற்றத்துடன் எழுந்தது விஜயகுமாரன் குரல்.

ஆனால் அந்தச் சீற்றத்தை லட்சியம் செய்யவில்லை அரசகுமாரி. ''வீரரே!'' என்று மெள்ள அழைத்தாள்.

''என்ன நந்தினி!''

''அங்கு மரம் மாதிரி நிற்க வேண்டாம்.''

''பின் என்ன செய்யச் சொல்கிறாய்?''

''இப்படி அமருங்கள்'' என்ற நந்தினி தனது பஞ்சணையை நோக்கி நடந்து அதில் உட்கார்ந்து கொண்டு, தன் பக்கத்தில் உட்கார அவனுக்கும் இடத்தைக் காட்டினாள். ஏதோ கனவில் நடப்பவன் போல் அந்த அறை மூலையிலிருந்த பஞ்சணையை அடைந்த விஜயகுமாரன் அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள், உட்கார்ந்தவன் கை மெள்ள அவள் இடையில் தவழ்ந்தது.

அதனால் சற்றே நெளிந்த நந்தினி, ''அரசியல் பேசும் முறை இது வல்ல'' என்று மிக மெதுவாகக் கூறினாள்.

''இடமும் இது வல்ல நந்தினி.'' இதைச் சொன்ன போது அவன் கை அவளைத் தன்னை நோக்கி இழுத்துக் கொண்டது.

''தூதர் அத்து மீறுகிறார்'' என்று எச்சரிக்கை செய்தாள் அரசகுமாரி.

''தூதர் என்பது நினைப்பில்லை; அத்து எதுவென்றும் புரியவில்லை'' என்றான் விஜயகுமாரன்.

''புரியாது புரியாது! தஞ்சை மன்னரைப் போல் ஒரு இளிச்சவாயர் இருந்தால் எப்படிப் புரியும்?'' என்றாள் நந்தினி குழைந்த குரலில்.

''அவர் இளிச்சவாயரா?''

''ஆம். இல்லாவிட்டால் உங்களை இங்கு விட்டுப் போவாரா?''

''காரணத்துடன் தான் விட்டுப் போயிருக்கிறார்.''

''என்ன காரணமாம்?''

''இவன் இந்த இடத்தில் அடிமை. எதையும் ஒப்புக் கொள்வான் என்பது மன்னருக்குத் தெரியும். என்னைக் கட்டக் கூடிய கயிறு இங்கிருப்பது அவருக்குத் தெரியும்.''

''கயிறா?''

''ஆம்'' என்ற விஜயகுமாரன் இடக் கையை இடையில் பலமாக நெருக்கி, அவள் இரு கைகளையும் தனது வலக் கையால் தொட்டுக் காட்டினான். ''இக் கயிறுகள் பிணைத்தால் நான் மீள முடியாதென்று மன்னருக்குத் தெரியும்'' என்றும் கூறினான்.

தலையை கவிழ்த்துக் கொண்டாள் நந்தினி. அவன் சமீபத்தாலும் அவன் கரங்களின் சேஷ்டையாலும் உதிர்ந்த உணர்ச்சிப் பரவசத்தால் அந்த நிலையிலேயே மெள்ளக் கேட்டாள், ''என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள்'' என்று.

''நந்தினி! இப்பொழுது...''என்று துவங்கிய விஜயகுமாரன் பேச்சு மேலே ஓட வில்லை.

''சொல்லுங்கள்'' என்று ஊக்கினாள் நந்தினி.

''இப்போது நாட்டில் இரண்டு விதேச சக்திகள் இருக்கின்றன...'' என்றான் விஜயகுமாரன் மெள்ள.

''ஆம். பிரெஞ்சு ஒன்று, பிரிட்டிஷ் இரண்டு'' என்றாள் நந்தினி.

''அதே மாதிரி சுதேசி சக்திகளும் இரண்டு இருக்கின்றன'' என்று குறிப்பிட்டான் விஜயகுமாரன்.

''ஒன்று ஆற்காடு நவாப் வம்சம், மற்றொன்று மகாராஷ்டிரர் இனம்'' என்ற நந்தினி கூறினாள்.

''ஆம். இங்குள்ள மாகாராஷ்டிரர் வம்சம், அரசு எல்லாம் தஞ்சை ஒன்று தான். அதைக் கபளீகரம் செய்வது ஆற்காட்டு நவாப் சந்தாசாகிபின் உத்தேசம். சந்தாசாகிப் தஞ்சை அரசுக்கு இழைந்திருக்கும் தீமை சொல்ல முடியாது. பல முறை படையெடுத்திருக்கிறான். பல முறைச் சுற்றுப்புறங்களைச் சூறையாடி இருக்கிறான். இந்த நிலையிலும் நாம் சேர வேண்டியது சந்தாசாகிபின் எதிரியை. அந்த எதிரி பிரிட்டிஷ்'' என்று விளக்கினான் விஜயகுமாரன்.

நந்தினி சிறிது நேரம் சிந்தனையில் இறங்கினாள். ''பிரிட்டிஷ்காரர்கள் இதுவரை நம்முடன் தான் போரிட்டிருக்கிறார்கள். தேவிக் கோட்டையைத் தான் பிடித்திருக்கிறார்கள். ஆகையால் அவர்களும் நமக்கு விரோதிகள் தான். தவிர, இது வரை சந்தாசாகிபை எதிர்க்கவில்லை. மசமசவென்று உட்கார்ந்திருக்கிறார்கள். ஆனால் பிரெஞ்சுக்காரர் சண்டைகளில் நுழைந்தார்கள். சந்தாசாகிபை ஆதரித்தார்கள். இன்று அவர்கள் பலம் உச்ச ஸ்தாயியில் நிற்கிறது...'' என்ற விளக்கினாள் அரசகுமாரி.

இதைக் கேட்ட விஜயகுமாரனும் சிந்தனையில் இறங்கினான். பிறகு மெள்ளச் சொன்னான். ''அரசகுமாரி! பிரிட்டிஷ்காரர்களைக் குறைவாக மதிப்பிட வேண்டாம். சிங்கம் உறங்குவது போல் இருக்கும். எழுந்த பின்பும் மெதுவாகத்தான்

நடக்க ஆரம்பிக்கும். ஆனால் பாயும் நேரத்தில் அதை எதிக்கக் கூடிய மிருகம் சிருஷ்டியில் எதுவுமே கிடையாது.''

''இத்தனை நாள் கழித்து, அதுவும் பிரெஞ்சு பலம் திடப்பட்ட பின்பு, சிங்கம் விழித்துக் கொண்டு விட்டதாக்கும்?'' என்ற நந்தினியின் கேள்வியில் ஏளனமிருந்தது.

''ஆம் நந்தினி! இப்பொழுதுதான் விழித்துக் கொண்டிருக்கிறது.''

''காரணம்?''

''தாமஸ் ஸாண்டர்ஸ்'' என்ற விஜயகுமாரன் மேலும் சொன்னான்; ''ஸாண்டர்ஸ் ஏற்கனவே இருந்த கவர்னர் ப்ளாயரைப் போலல்ல. பேச்சாளரல்ல. செயல் வீரர். இப்போது நீ ஸெய்ன்ட் டேவிட் கோட்டையைப் பார்த்தால் தெரியும்; அதன் ராணுவம் பல மடங்கு உயர்த்தப் பட்டிருக்கிறது. இரும்பு மனிதர். பிரெஞ்சு பலத்தை ஒடுக்கத் திட்டமிட்டிருக்கிறார். அதற்காகப் பிரான்ஸுக்கு எதிரான சக்திகளையெல்லாம் திரட்டியிருக்கிறார். நண்பர்களுக்குப் பாதுகாப்பும் அளித்திருக்கிறார்...''

இப்படிச் சொல்லிக் கொண்டுப் போன விஜயகுமாரனை இடை மறித்த நந்தினி, ''என்ன பாதுகாப்பு?'' என்று வினவினாள்.

''திருச்சிக்கு ஓடிவிட்ட முகம்மத அலிக்கு உதவக் காப்டன் கோப்பை அனுப்பியிருக்கிறார், சிறுபடையுடன். வெகு சீக்கிரம் ஆற்காடும் தாக்கப்படும்'' என்று விளக்கினான் விஜயகுமாரன்.

''அத்தனை பலம் இருக்கிறதா பிரிட்டிஷ்காரருக்கு?'' என்று கேட்டாள் அரசகுமாரி.

''பலம் என்றால் எதைக் குறிப்பிடுகிறாய்?''

''படை பலம்.''

''முன்னை விட அதிகமாக இருக்கிறது. இன்னும் சுதேசிகளைச் சேர்த்துப் பயிற்சி அளித்துக் கொண்டிருக்கிறார் ஸாண்டர்ஸ். காப்டன் ஜின்ஜின்ஸின் கீழ் பிரிட்டிஷ் படையும் பிரதி தினம் போர்ப் பயிற்சி பெற்று வருகிறது. அது வெகு சீக்கிரம் நகரலாம்...''

''ஸாண்டர்ஸ் எங்கள் உதவியை எதிர்பார்க்கிறாரா?'' திடீரென குறுக்கே பாய்ந்தது நந்தினியின் கேள்வி.

''உடனே எதிர்பார்க்க வில்லை. ஆனால் தஞ்சை அரசு எப்போதும் போருக்குத் தயாராக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். போரில் முதலில் பிரிட்டிஷ் படை நுழையும். அவசியம் வரும் போது தஞ்சையும் இணைய வேண்டும். அவர் முக்கியமாக எதிர்பார்ப்பது நீங்கள் முகம்மது அலிக்கு உதவ வேண்டுமென்பது. அப்படி ஒரு நட்புறவு ஒப்பந்தத்தை எதிர் பார்க்கிறார். இந்த ஒப்பந்தம் ரகசியமாக இருக்க வேண்டும். டூப்ளே இதை அறிந்தால் தஞ்சை மீது அவரே பாய்வார். கர்நாடக

யுத்தத்தின் உச்சக் கட்டம் வரும் போது இது வெளியாகும். தஞ்சைப் படையும், முகம்மது அலியின் படையும், பிரிட்டிஷ் படையும் இணைந்த பெரும் சக்தியை டூப்ளே சமாளிக்கும்படி இருக்கும். இது தான் ஸாண்டர்ஸின் திட்டம்'' என்று விளக்கினான் விஜயகுமாரன்.

''திட்டம் அழகாக இருக்கிறது. பயனும் தரலாம்...'' என்ற அரசகுமாரி தனது பஞ்சணையிலிருந்து இறங்கி நின்று கொண்டாள் அவள் எதிரே. அப்பொழுது சொன்னாள், ''இந்த ஒப்பந்தத்துக்குத் தஞ்சை தயார். உச்சக் கட்டம் வரும் போது நாங்கள் தவறமாட்டோம் என்று நீங்கள் ஸாண்டர்ஸிடம் சொல்லலாம்'' என்று. அத்துடன் அவள் அவனைக் கூர்ந்து சில விநாடிகள் நோக்கிப் புன்முறுவலும் கொண்டாள். ''தஞ்சை சேருவதற்கான முக்கிய காரணத்தையும் நீங்கள் சொல்லலாம்'' என்றாள்.

''எது முக்கிய காரணம்?''

''இது!'' என்று அவள் அவன் மார்பில் குத்தினாள்.

அவன் கைகள் அவளைச் சுற்றின. ''இதில் எனக்கென்ன லாபம்?'' என்று உதடுகள் முணுமுணுத்தன.

அவள் அவனை நோக்கி நன்றாகக் குனிந்தாள். காதில் ரகசியமாக ஏதோ சொன்னாள். விஜயகுமாரன் முகத்திலிருந்த காதல் பறந்தது. வியப்பு குடிகொண்டது. திக்பிரமையால் அவளைச் சுற்றிய கைகள் கூடச் செயலற்றுப் போயிற்று. ''இந்த மர்மத்தை இவள் எப்படி அறிந்தாள்?'' என்ற கேள்வி திரும்பத் திரும்ப எழுந்தது அவன் மனத்தில்.

17. விளக்கில் தெரிந்த முகம்

கட்டிலில் உட்கார்ந்த நிலையில் கட்டழகி நந்தினி காதில் சொன்ன ரகசியம் விஜயகுமாரனுக்குத் திக்பிரமையை விளைவித்ததென்றால், அதற்குக் காரணம் இருக்கவே செய்தது. செய்ன்ட் டேவிட் கோட்டையில் ஸாண்டர்ஸ் கேள்வியாகக் கேட்டதை நந்தினி செய்தியாகச் சொன்னாள். ''உங்கள் சபதம்'' என்ற இரு சொற்களில் அந்த ரகசியம் அடங்கியிருந்ததென்றாலும், நந்தினி அந்தச் சொற்களை உச்சரித்த போது இருந்த தொனி அவற்றுக்கு முழு பலத்தைக் கொடுக்கவே செய்ததால் விஜயகுமாரன் அதிர்ச்சியால் பல விநாடிகள் செயலற்று உட்கார்ந்திருந்தான். முடிவில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, ''என் சபதமா?'' என்று ஏதும் அறியாதவன் போல் அவளை நோக்கி வினவினான்.

அவன் திண்டாட்டத்தையும் திகைப்பையும் கண்ட நந்தினி மெல்ல நகைத்தாள். ''ஆம், சபதந்தான். சபதம் இல்லாவிட்டால் கூச்சலில்லை. கூச்சல் இல்லாவிட்டால் தனிமையில்லை. தனிமை இல்லாவிட்டால் அக்கிரமமில்லை, அக்கிரமம் இல்லா விட்டால் காதலில்லை, இந்த நிலையுமில்லை'' என்று கூறிய அவள் சொற்களில் கூட நகைப்பின் ஒலி பரம திட்டமாகத் தெரிந்தது.

விஜயகுமாரன் அவள் அருகாமையிலிருந்து நகர்ந்தான். ''புதிர் போடுகிறாய் நந்தினி!'' என்றும் கூறினான் சங்கடத்துடன்.

நந்தினி பக்கவாட்டிலிருந்த விஜயகுமாரன் கடைக் கண் அம்பு ஒன்றை வீசிவிட்டுச் சொன்னாள், ''புதிர் போடவில்லை, சரித்திரம் சொல்லுகிறேன்'' என்று.

விஜயகுமாரன் கட்டிலை விட்டுக் கீழே இறங்கி அவள் எதிரே தலை குனிந்து நின்றான் சில விநாடிகள். பிறகு அவன் பேசிய போது அவன் குரலில் காதல் இல்லை, கனிவில்லை கடுமையிருந்தது. ''என்ன சரித்திரம் நந்தினி?'' என்று வினவினான்.

''சரித்திரம் என்று சொல்லட்டுமா? அல்லது கதை என்று சொல்லட்டுமா?'' என்று வினவினாள் நந்தினி, அவன் கேள்வியின் உஷ்ணத்தைப் பற்றிச் சிறிதும் லட்சியம் செய்யாமல்.

''சரித்திரம் எது? கதை எது?''

''சரித்திரம் பூராவும் உண்மை. கதை பொய்யாகவும் இருக்கலாம், இரண்டும் கலந்தும் இருக்கலாம். ஆனால் ஒன்றிலிருந்து இன்னொன்று பிறக்கிறது.''

''புதிர் வலுக்கிறது'' என்றான் விஜயகுமாரன் சிக்கலான அவள் பதிலைக் கேட்டு.

''இதில் புரியாத புதிர் ஏதுமில்லை வீரரே. தனி மனித ஆசாபாசங்கள் அவர்களைப் பற்றியது கதை. அந்தக் கதை நாட்டு நிகழ்ச்சிகளோடு கலக்கும் போது சரித்திரம் உதயமாகிறது'' என்ற நந்தினி அத்துடன் இல்லாமல், ''ஏன், உங்கள் வாழ்க்கையையே எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் அன்னையைச் சந்தாசாஹிப் வஞ்சித்துத் திருச்சியைக் கைப்பற்றினார். அன்னை தீக்குளித்தாள். அதற்கு வஞ்சம் தீர்க்க அவர் தலையை வெட்டிக் கொணர்வதாக நீங்கள் அரங்கன் முன்பு சபதம் செய்தீர்கள்...'' என்று வாசகத்தை முடிக்காமல் விட்டாள் அவள். விஜயகுமாரன் முகம் கல்லாயிருந்தது. ''சொல் மேலே'' என்ற ஆணையிலும் கடுமை ஒலித்தது.

''அந்தச் சபதத்தைச் செய்ய நீங்கள் கூச்சலிட்ட போது நானும் டபீர் பண்டிதரும் ஆலயத்துள் வந்தோம். உங்களைச் சிறை செய்ய உத்தரவிட்டார் டபீர் பண்டிதர். அப்படி உத்தரவிடாவிட்டால்...'' என்ற அரசகுமாரி புன்முறுவல் கொண்டாள்.

''உத்தரவிடாவிட்டால்?'' விஜயகுமாரன் கேள்வி வறண்டக் குரலில் வெளிவந்தது.

''என்னை அப்படிப் பலவந்தமாக தூக்கிச் சென்றிருக்க மாட்டீர்கள். கிளைவைச் சந்தித்திராவிட்டால் தஞ்சை சுணங்குவதைக் கண்டதும் பிரிட்டிஷ் படையில் சேர்ந்திருக்க மாட்டீர்கள். சேர்ந்திராவிட்டால் இப்பொழுது தஞ்சையைப் பிரிட்டனுடன் இணைக்கத் தூதும் வந்திருக்க மாட்டீர்கள்'' என்ற அரசகுமாரி அவனை கூர்ந்து நோக்கினாள்.

அவனும் தலை நிமிர்ந்து அவளை நோக்கி அவள் அறிவின் ஆழத்தை வியந்து, ''தூது வராவிட்டால்?'' என்று வினவினான்.

''தூது வராவிட்டால் சரித்திர புருஷனாக ஆகியிருக்க மாட்டீர்கள்'' என்றாள் நந்தினி.

''நான் சரித்திர புருஷனாகிவிட்டதாக யார் சொன்னது உனக்கு?'' என்று வினவினான் விஜயகுமாரன்.

''நிகழ்ச்சிகள் சொல்லுகின்றன. எங்கும் உங்கள் பேச்சாகவே இருக்கிறது. எதற்கும் மசியாத என் தந்தை கூட இந்த அரசின் விமோசனம் உங்கள் கையில் இருப்பதாக நம்புகிறார். நேற்று தான் சொல்லிக் கொண்டிருந்தார். 'அந்த நாயக்கர் வம்ச வாலிபன் காரணமாகத்தான் பிரிட்டிஷாரோடு சேர்ந்திருக்கிறான். சந்தாசாகிபைத் தீர்த்துக் கட்டுவதுதான் அவன் நோக்கம். நமது நோக்கமும் அது தான். அதை நாம் தனித்துச் செய்ய முடியாது. பிரிட்டிஷ் உதவி வேண்டும். அதை நமக்கு அளிக்க அந்த வாலிபன் தேவை' என்று நேற்று தான் தந்தை சொன்னார். இன்று நீங்கள் வந்து நிற்கிறீர்கள். இதை விதியின் நோக்கு என்று சொல்லவா? சரித்திரத்தின் சம்பவம் என்று விளக்கவா?'' என்று வினவினாள் நந்தினி.

விஜயகுமாரன் சற்று நேரம் அந்த அறையில் உலாவினான். பிறகு அவள் எதிரே நின்றான். ''நந்தினி! விதி தனி மனிதர்களை மட்டும் ஆட்டுவிப்பதில்லை. நாடுகளையும் நாடுகளின் மூலம் சரித்திரத்தையும் ஆட்டுவிக்கிறது. இந்த நாட்டின் மீது கண்களை ஓட்டிப் பார். இது சிறிய நாடே அல்ல. உண்மையில் இது ஒரு உபகண்டம். இங்கு இஸ்லாமியரும் வாழலாம்; ஹிந்துக்களும் வாழலாம், சகோதரர் போல். சந்தாசாகிப்புக்கு மட்டும் பேராசை இல்லாவிட்டால், குர் ஆன் மீது இட்ட ஆணைப்படி என் தாயைச் சகோதரியாக நடத்தியிருந்தால் இப்போது பிரிட்டிஷார் எதிர்ப்பும் அவனுக்குத் தேவையில்லை. பிரெஞ்சு உதவியும் தேவையில்லை, என் விரோதமும் ஏற்பட்டிருக்காது. சந்தாசாகிப் என் அன்னையை அழித்தான், நான் அவனை அழிக்க விரும்புகிறேன். இப்போது பிரிட்டிஷாரும் அழிக்க விரும்புகிறார்கள். இந்த நாட்டின் சுதந்திரக் கதை இப்போது சந்தாசாகிபின் பேராசையால் அடிமைக் கதையாக மாறி இருக்கிறது. நீ சொன்னது போல் நான் கூடச் சரித்திர பாத்திரமாக மாறியிருக்கிறேன். ஆனால் அரசகுமாரி! நான் சரித்திரத்தில் ஜீவிக்க மாட்டேன், ஜீவிக்க விரும்பவில்லை'' என்று கூறினான் உணர்ச்சியுடன்.

நந்தினி அவன் சொற்களைக் கேட்டு மனம் நெகிழ்ந்தாள். ''அதில் உங்கள் விருப்பம் என்ன இருக்கிறது?'' என்றாள்.

விஜயகுமாரன் நின்ற நிலையில் சொன்னான், ''என் பெயரைச் சரித்திரத்தில் வராதபடி நானே அழித்து விடுவேன்!'' என்று.

''எப்படி?''

''என் சபதம் நிறைவேறியதும் நான் மறைந்து விடுவேன்.''

''எங்கு மறைந்து விடுவீர்கள்?''

''ஏதோ ஒரு மூலையில். அதை இப்போது கேட்காதே!''

''பின்னால் சொல்வீர்களாக்கும்?''

''ஆம்.''

''எப்பொழுதோ?''

''சந்தாசாகிபின் தலையைக் கொய்த பிறகு.''

''அது அத்தனை நிச்சயமா?''

''ஆம். அதில் சந்தேகம் வேண்டாம். அதற்காகவே நான் வாழ்கிறேன். நான் சிவகங்கையிலிருந்து கிளம்பிய போது தஞ்சைக்கு வர நினைக்க வில்லை. விதி இழுத்து வந்தது. அன்றிலிருந்து எது எது சந்தாசாகிப்புக்கு எதிரிடமோ, எந்த இடத்தில் சேர்ந்தால் சந்தாசாகிபை நான் அழிக்க முடியுமோ அங்கெல்லாம் சென்றேன்; சேர்ந்தேன். முதலில் தஞ்சை செயல்படுமென்று இங்குள்ள படையில் சேர்ந்தேன். பிறகு உன் தந்தை தீவிரமாகப் போரில் இறங்க மலைத்ததால் பிரிட்டிஷாரிடம் சேர்ந்தேன். இப்போதுள்ள நிலையில் என்றும் போர் துவங்கலாம். இன்று தமிழகம் போர் என்னும் எரிமலை மீது உட்கார்ந்திருக்கிறது, என்றும் மலை வெடிக்கலாம். எரிமலைப் பிழம்பு ஆறாக ஓடலாம், இந்நாட்டில். அந்த வெள்ளத்தில் அக்கினிப் பிழம்பில் தஞ்சை பிரிட்டனுடன் நிற்க வேண்டும். அப்போதுதான் தனி அரசாக நிற்கமுடியும்...'' என்று வேகத்துடன் சொல்லிக் கொண்டு போனவன் சற்றுப் பேச்சை நிறுத்தினான்.

''பிரெஞ்சு பலத்தைப் பிரிட்டன் உடைக்க முடியுமா?'' என்று வினவினாள் அரசகுமாரி.

''கண்டிப்பாய் உடைக்க முடியும். தாமஸ் ஸாண்டர்ஸ் சாதாரண மனிதரல்ல. கிளைவ் இன்று வெறும் காப்டனாக இருக்கலாம். ஆனால் அவன் இந்த நாட்டில் பிரிட்டனின் கதியை நிர்ணயிப்பான்'' என்றான் விஜயகுமாரன்.

''உங்கள் நண்பரிடம் உங்களுக்குப் பெரிதும் நம்பிக்கையிருக்க வேண்டும்'' என்றாள் நந்தினி.

www.thamizhthenee.blogspot.com

''முழு நம்பிக்கையிருக்கிறது. இல்லையேல் நான் அவன் படையில் சேர்ந்திருக்க மாட்டேன்; இங்கே தூதும் வந்திருக்க மாட்டேன், நந்தினி! பிரிட்டனுடன் சமயத்தில் சேருமென்று நீ கூறிய உறுதி சந்தாசாகிபின் கதியை நிர்ணயித்து விட்டது'' என்று உணர்ச்சியுடன் பேசினான் விஜயகுமாரன்.

அவன் காட்டிய உணர்ச்சியும் வேகமும் அரசகுமாரியையும் பாதித்திருக்க வேண்டும். அவள் கட்டிலை விட்டிறங்கி அவனை நோக்கி வந்தாள். ''ஒப்பந்தத்துக்கு ஒப்புக் கொள்கிறேன்'' என்று கூறித் தலை நிமிர்ந்தாள்.

அவன் அவள் கண்களிலிருந்த வேட்கையைக் கவனிக்க வில்லை. தலைவணங்கி, ''நன்றி நந்தினி'' என்று கூறிவிட்டுத் திரும்ப முயன்றான்.

''தூதரே!'' என்ற நந்தினியின் ஒரு சொல் அவனை நிற்க வைத்தது. அவளை நோக்கித் திரும்பவும் செய்தது.

''என்ன நந்தினி?'' என்று வினவினான் அவன்.

''ஒப்பந்தம்...'' என்ற நந்தினியின் கண்களில் ஏதோ மயக்கம் இருந்தது.

''அதற்கென்ன?''

''ஒப்பந்தம் எப்படிச் செய்கிறார்கள்?''

''காகிதத்தில் எழுதுகிறார்கள். அது தேவையில்லை எனக்கு. உன் சொற்களே போதும்.''

கடைசிச் சொற்களைக் கவனிக்காதது போல் பேசினாள் அரசகுமாரி. ''காகிதத்தில் எழுதிய பின்...?'' என்று வினவினாள்.

''முத்திரை வைக்கிறார்கள்'' என்ற விஜயகுமாரன், ''அதுவா! அதுவா!'' என்று உளறினான். உளறலில் ஆனந்தம் இருந்தது. அவன் பொறித்த முத்திரையில் இருவருக்கும் மயக்கமும் இருந்தது. முத்திரைக்குப் பின்பு சரேலென அவளைத் தூக்கிச் சென்று படுக்கையில் படுக்க வைத்து விட்டு வெளியேறினான், விஜயகுமாரன். வெகு வேகமாக அவன் போகும் வேகத்தைக் கண்ட நந்தினி புன்முறுவல் பூத்தாள். போன பின் நன்றாகப் பஞ்சணையில் மல்லாந்து இதயம் விட்டு நகைக்கவும் செய்தாள்.

ஆனால் வெளியே சென்ற விஜயகுமாரன் மனத்தில் நகைப்பில்லை. மயக்கமே அவனை உந்திச் சென்றது. தஞ்சை மன்னரிடம் விடைபெற்று வந்த காரியத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்ட திருப்தியைக்கூட அநுபவிக்காமல் அவன் கடமையை நாடி வேகமாகச் சென்றான், வேலூரை நோக்கி. நான்கு நாள் பயணத்துக்குப் பிறகு வேலூருக்கு அப்பாலிருந்த முராரிராவின் பாசறையை அடைந்து, அவரிடம் பல நாட்கள் தங்கினபோதும் நந்தினியைப் பற்றிய மயக்கம் தீரவில்லை, வேகமும் குறையவில்லை. கவர்னர் அனுப்பிய காரியங்களை

முடித்துக் கொண்டு அவன் சென்னைக்குக் கிளைவைச் சந்திக்க வந்த போது மாதம் இரண்டு முடிந்து விட்டது.

அந்த இரண்டு மாதங்களும் ஸெய்ன்ட் ஜார்ஜ் கோட்டையை மிகவும் கிளைவ் பலப்படுத்தியிருந்தாலும், அதில் பலவீனமும் இருந்ததைக் கவனித்த விஜயகுமாரன் கோட்டைக்குள் நுழைந்த போது, நன்றாக இருட்டிவிட்டது. இருட்டில் இரண்டு மூன்று வெள்ளைக்கார சோல்ஜர்கள் குடிவெறியில் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள். அது மட்டுமல்ல. ஒரு வெள்ளைக்காரப் பெண்ணைப் பிடித்து ரகளை செய்யவும் முயன்றார்கள். அவர்களில் ஒருவன் அந்தப் பெண்ணைப் பலவந்தமாக இழுத்து அணைக்கவும் முற்பட்டான். அந்தச் சமயத்தில் சரேலெனப் பயங்கரமாக ஒலித்தது விஜயகுமாரன் கைத்துப்பாக்கி. வெள்ளைக்காரன் அலறி விலகினான். அவன் விலகியதால் அப்பெண்ணின் முகத்தில் சார்லஸ் ஸ்ட்ரிட்டின் வீதி விளக்கு விழுந்தது. அந்த முகத்தைக் கண்ட விஜயகுமாரனுக்குத் திக் பிரமை மீறியது.

18. போர்க் காதல்

வீதி விளக்கில் தெரிந்த அழகு முகம் பல நாட்களுக்கு முன்பு கிளைவிடமிருந்த லாக்கெட்டிலிருந்த அதே முகம். அந்த முகத்துக்குடையவளை, கிளைவின் காதலியை, கையைப் பிடித்து இழுத்து அணைக்கவும் முயலக்கூடிய துணிவுள்ளவன் எவனாக இருக்க முடியும் என்பதை அறியக் கையில் புகைந்து கொண்டிருந்த துப்பாக்கியுடன் புரவியிலிருந்து குதித்த விஜயகுமாரன் புரவி மீது சேணத்தைப் போட்டு விட்டு வெள்ளை சோல்ஜர்கள் இருந்த இடத்தை அணுகலானான்.

அந்த இடம் கிளைவும் அவனது நண்பன் எட்மண்ட் மாஸ்கலீனும் தங்கியிருந்த சார்லஸ் ஸ்டிரீட் என்றழைக்கப்பட்ட வீதியின் முகப்பு. ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டையின் கிழக்கு வாயிலுக்கு நேர் எதிரில் செல்லும் பாதையை எதிர்த்து, செயின்ட் மேரீஸ் சர்ச்சுக்குப் பக்கத்தில் வடக்குத் தெற்காக ஓடும் சார்லஸ் தெருவில், அதுவும் கிளைவின் இருப்பிடத்துக்கு வெகு அருகில் அந்த அநீதத்தை விளைவிக்க க்கூடிய சோல்ஜர்கள் யாராக இருக்கலாம் என்று அறிந்து கொள்ள அவர்களை அணுகிய விஜயகுமாரன், ''வாட் டு யூ மின் பை திஸ்?'' என்று ஆங்கிலத்தில் சீற்றத்துடன் வினவினான்.

விஜயகுமாரன் கைத்துப்பாக்கிச் சுட்டதால் அலறிய சோல்ஜர் நன்றாகக் குடித்திருந்ததால் தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்து, ''ஹுஈத டெவில் ஆர் யூ?'' என்று வினவினான்.

விஜயகுமாரன் அவனை உற்று நோக்கினான் பல விநாடிகள். கைத்துப்பாக்கியால் அவனைப் பயமுறுத்த அவன் காலடிக் கருகில் விஜயகுமாரன் சுட்டானேயொழிய அவனைக் காயப்படுத்தவோ கொல்லவோ கூடவில்லையாகையால், அவனுக்கு எந்த வித ஹானியும் இல்லாதிருந்ததால், அவன் அசட்டுத் துணிச்சலை மீண்டும் காட்டத் தொடங்கி, ''யூ ஆர் எ நேடிவ்? வாட் ஆர் யூ டூயிங் ஹியர்?'' (நீ ஒரு சுதேசி! இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்)'' என்று வினவினான், சொற்களைக் குளறிக் கொட்டி.

அவனது துணைவர்களான மற்ற இரு சோல்ஜர்களும் ''எஸ், ஹு ஆழ் யூ?'' என்று குடிவெறியால் தமிழின் தவி எழுத்தான 'ழ்' ஐயும் ஆங்கிலத்தில் இணைத்து உச்சரித்துக் கொண்டே அவனை அணுக முற்பட்டார்கள்.

''ஸ்டே வேர் யூ ஆர்'' என்ற விஜயகுமாரன் அதிகார அதட்டலும் அதைத் தொடர்ந்து அவன் கையில் மீண்டும் எழுந்த துப்பாக்கியும் அவர்களை எட்டவே நிற்க வைத்தன.

''நான் லெப்டினட் விஜயகுமார்! திரும்பிச் செல்லுங்கள். காலையில் விசாரிக்கிறேன்'' என்று ஆங்கிலத்தில் கூறிய விஜயகுமாரன், ''ரைட் அபௌட் டர்ன், மார்ச்!'' என்று உத்தரவும் இட்டான் ராணுவ தோரணையில்.

இந்த உத்தரவு அவன் குரலில் தொனித்த அதிகார தோரணையும் எல்லாவற்றையும்மிட அவன் கையில் எழுந்து அவர்களை நோக்கிப் பயங்கரமாகக் குறி வைக்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கியின் புகையும் குழலும் அவர்களைத் திகைக்க வைத்ததாலும், குடிவெறியையும் ஓரளவு போக்கடித்ததாலும் அவர்கள் திரும்பிச் செய்ய ராணுவ பாணியில் கால்களைச் சேர்த்துச் சலாம் செய்தனர். ''நீ போவதற்கு முன்பு அந்தப் பெண்ணிடம் மன்னிப்புக் கேள்'' என்றும் கூறினான் விஜயகுமாரன் அவளை அவமதித்தவனை நோக்கி. அந்த சோல்ஜரும், ''ஸாரி மேடம்'' என்று கூறித் தலை வணங்கிவிட்டுத் திரும்பவே மூன்று சோல்ஜர்களும் பாசறையை நோக்கி நடந்தனர். நடந்தபோது கொஞ்சம் பாக்கியிருந்த குடிவெறியால் ஆங்கிலத்தில் பாடிக்கொண்டும் பரஸ்பரம் அணைத்துக் கொண்டும் சென்றனர்.

அவர்கள் செல்லும் வரை சிலைபோல் நின்றிருந்த அந்த வெள்ளைக்காரப் பெண், அவர்கள் சிறிது தூரம் சென்றதும் விஜயகுமாரனை நோக்கினாள் பிரமிப்பு நிரம்பிய கண்களுடன். ''உங்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்றும் கூறினாள்.

அவள் சுத்தத் தமிழைக் கண்டு பிரமித்த விஜயகுமாரன், ''உங்களுக்கு யார் தமிழ் கற்றுக் கொடுத்தது? எட்மண்டா, கினைவா?'' என்ற வினவினான்.

அவன் சொற்களிலிருந்து தான் யார் என்பதை அவன் ஏற்கெனவே புரிந்துகொண்டிருக்கிறான் என்பதை அந்தப் பெண் ஊகித்துக் கொண்டாளாகையால், ''அப்படியானால் என்னை உங்களுக்கு...'' என்று துவங்கி, பேச்சை நடுவில் நிறுத்தினாள்.

''தெரியும்'' என்று வாக்கியத்தைப் பூர்த்தி செய்த விஜயகுமாரன், ''நீங்கள் மார்கரெட் மாஸ்கலீன் என்பது தெரியும், எட்மண்டின் சகோதரி என்பது தெரியும், கினைவின் காதலி என்பது தெரியும். நீங்கள் உண்மையில் அதிர்ஷ்டசாலி'' என்று சொன்னான் புன்சிரிப்புடன்.

அவள் லேசாகை நகைத்தாள் தனது முத்துப் பற்களைக் காட்டி. அந்த நகைப்பின்போது நன்றாகச் சிவந்துவிட்டது அந்த வெள்ளை முகம். ''யூ ஆர் ப்ரில்லியமிங் டூ மச்'' என்று விஜயகுமாரனை நோக்கிக் கூறிய அவள் சொற்களில் வெட்க மிருந்தது. முகத்தில் குழப்பமிருந்தது.

''இல்லை மிஸ் பெக்கி! நான் ஊகித்து எதுவும் சொல்ல வில்லை'' என்று விஜயகுமாரன் கூறியதும் அந்தப் பெண்ணின் வியப்பு எல்லை மீறியது.

''யூ! யூ!'' என்று ஏதோ சொல்ல முயன்று முடியாமல் தவித்தாள்.

''தமிழில் பேசுங்கள், உங்களுக்குத்தான் தமிழ் தெரிகிறதே!''

அவள் சிறிது சிந்தித்துவிட்டு அவனை மெல்ல அணுகி அவன் கையின் மேல் தனது கையை வைத்தாள். வெள்ளைக் காரர்களின் வழிகளை நன்றாக அறிந்திருந்த விஜயகுமாரனும் தனது கையைச் சிறிது தூக்கி அவள் கை அத்துடன் இணைய இடங் கொடுத்தான். அந்த அவன் செய்கையைக் கண்டு பிரமித்த அந்த அழகி, ''வெள்ளைக்காரர் வழக்கங்கள் உங்களுக்கு நன்றாகப் படிந்திருக்கின்றன'' என்று கூறிக் கொண்டே அவன் கையில் மேல் தன் கையை வைத்து நடக்கலானாள். விஜயகுமாரனும் அவளுடன் நடந்து சென்றான், சாட்சாத் வெள்ளைக்காரனைப் போல். வெள்ளைக்காரர் பழக்க வழக்கங்கள் எனக்கு மட்டுமல்ல. இன்னும் பல தமிழருக்கும் படிந்திருக்கின்றன'' என்று அவளுடன் நடந்த வண்ணம் முந்திய அவள் கேள்விக்குப் பதிலும் சொன்னான்.

பெக்கி என்று செல்லமாக அழைக்கப்பட்ட மார்க்ரெட் அன்று வெள்ளை வெள்ளேரென்ற சிலக் கௌன் அணிந்திருந்தாள். காலையும் மறைத்துத் தொங்கிய அந்த கௌனுக்கு மேலேயிருந்த பகுதியின் 'ப்ரில்கள்' அந்தக் காலத்து வழக்கப்படி நிரம்ப வைக்கப் பட்டிருந்ததால் நன்றாகப் பருத்திருந்த அவள் மார்பகத்தைக்கூட கௌனின் மேல்பாகம் ஓரளவு மறைத்திருந்தது. இந்த அழகிக்குக் கினைவ் தனது இதயத்தைப் பறி கொடுத்ததில் தவறில்லையென்றே விஜயகுமாரன் நினைத்தான்.

அந்த நினைப்புடன் மௌனமாக நடந்த விஜயகுமாரனிடம் தானாகவே பேச்சைக் கொடுத்த மார்க்கரெட், ''என்னை பெக்கி என்று அழைத்தீர்கள்'' என்று குறிப்பிட்டாள் மெதுவாக.

''ஆம்'' என்ற விஜயகுமாரன், 'இந்த நிலையில் நந்தினி என்னைப் பார்த்தால் என்ன நினைப்பாள்?' என்று உள்ளூறக் கேட்டுக் கொண்டதால் அவன் உதடுகளில் புன்முறுவலும் தவழ்ந்தது.

நேரே தெருவைப் பார்த்துக் கொண்டு நடந்த அந்தப் பெண், ''அது என் தாய் தந்தையர் அழைக்கும் செல்லப் பெயர்'' என்று கூறினாள்.

''தெரியும்.''

''என் குடும்பத்தார் அப்படி என்னை அழைக்கலாம்...''

''சரி.''

''அல்லது...''

''உங்கள் காதலர் அழைக்கலாம்...''

இதைக் கேட்ட அவள் சட்டென்று நின்று திரும்பி அவனை நோக்கினாள். ''என்ன சொல்கிறீர்கள்?''

''உள்ளதைச் சொன்னேன்'' என்றான் விஜயகுமாரன்.

''எது உள்ளது?''

''செல்லப் பெயரால் உங்களை உங்கள் காதலரும் அழைக்கலாம் என்பது.''

''எனக்கு யார் காதலர்...?''

இந்தக் கேள்வி விஜயகுமாரனை அசர வைத்தது. ''அது கூடத் தெரியாதா?'' என்று வியப்புடன் கேட்டான்.

அத்துடன் ''ஐ தாட் ...'' என்றும் ஏதோ துவங்கினான்.

''யூ தாட்?'' இதைக் கேட்ட போது அவள் குரலில் கோபமில்லை. வியப்பு இருந்தது.

விஜயகுமாரன் அதற்கு உடனடியாகப் பதில் சொல்ல வில்லை. சிறிது நேரம் மௌனம் சாதித்தான். ''நெவர் மைண்ட் கம்'' என்று அவளை அழைத்துக் கொண்டு கிளைவும் எட்மண்டும் இருந்த விடுதிக்குச் சென்றான். அந்த விடுதிக்குள் கிளைவைக் காணோம். எட்மண்ட் மட்டுமே இருந்தான். ''ஓ விஜயகுமார்! யூ டு ஹாவ் பிகம் ஃப்ரண்ட்ஸ் (நீங்கள் இருவரும் நண்பர்களாக்கி விட்டீர்களா?)'' என்று வினவினான் எட்மண்ட்.

''இவர் என்னை இரு குடிகாரர்களிடமிருந்து காப்பாற்றினார்'' என்றாள் மார்க்கரெட் தனது குழப்பத்தை அடக்கிக் கொண்டு.

''சோல்ஜர்களிடமிருந்தா?''

''எஸ்'' என்றாள் அவள்.

''ஆல் ரைட். யூ கோ இன். (சரி, நீ உள்ளே போ)'' என்று எட்மண்ட் கூறி அவளை அனுப்பி விட்டு, ''தாங்க் யூ விஜயகுமார்'' என்று நன்றி கூறினான் எட்மண்ட்.

''எஸ்.''

''நீங்கள் தனியாக இருக்கிறீர்கள்; கிளைவ் எங்கே?''

''இதைக் குடும்ப விடுதியாக்கி விட்டார் காப்டன். அவர் நாலு வீடு தள்ளிச் சென்று விட்டார்'' என்று அறிவித்தான் எட்மண்ட்.

''இந்த பெண் இருப்பதாலா?''

''ஆம்.''

''இருந்தால் என்ன?''

''கல்யாணமாகாதவள்.''

''ஆக வேண்டியது தானே?''

''ஆம்.''

''அப்படியானால்...?'' என்று வினவினான் விஜயகுமார்.

எட்மண்ட் முகத்தில் திடீரென அச்சத்தின் சாயை படர்ந்தது. ''அப்படியானால் என்ன?'' என்று வினவினான் சற்று அச்சம் குரலிலும் ஒலிக்க.

எட்மண்ட் தனது தங்கையின் காதலை மறைக்க பார்க்கிறானென்பதை உணர்ந்து மேற்கொண்டு எதுவும் பேசாமல், ''பிறகு பேசலாம்'' என்று கூறிவிட்டு அந்தக் கட்டிடத்தை விட்டு வெளியே நடந்தான்.

அவன் போகுமிடமெல்லாம் அவனைப் பின்தொடரும் குணமுள்ள அவன் புரவி வாயிலில் நின்று கொண்டிருந்ததைக் கவனித்த விஜயகுமாரன் அதன் கன்னத்தைத் தடவிக் கொடுத்துவிட்டுக் காப்டன் கிளைவ் இருந்த விடுதியை நோக்கி நடந்தான்.

அவன் உள்ளே நுழைந்த போது முதல் அறையிலேயே காப்டன் கிளைவ் பெரிய 'மாப்' ஒன்றை மேஜை மீது பரப்பி அதை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்ததால் நண்பன் உள்ளே நுழைந்ததைக் கூட அவன் அறியவில்லை பல விநாடிகள். ''காப்டன் ராணுவ 'மாப்'பைப் பார்ப்பதில் அதிக சிரத்தை கொண்டிருக்கிறார் போலிருக்கிறது!'' என்று விஜயகுமாரன் கூறிய பிறகே அவனைக் கவனித்த கிளைவ், ''எப்போது வந்தாய் விஜயகுமார்?'' என்று வினவினான்.

''வந்து கொண்டே இருக்கிறேன்'' என்று பதில் கூறினான் விஜயகுமாரன்.

''போன வேலை?''

''வெற்றிதான்.''

''இங்கு...''

''வந்த வேலையும் வெற்றிதான்'' என்று விஜயகுமார் நகைத்தான்.

''என்ன விஜயகுமார்?'' கிளைவின் குரலில் லேசாக நகைப் பொலி இருந்தது.

''நான் உன் காதலியை பார்த்தேன்'' என்றான் விஜயகுமார். கிளைவின் அடுத்த கேள்வி விஜயகுமாரனைத் தூக்கி வாரிப் போட்டு விட்டது. ''யாரது?'' என்று கேட்டான் கிளைவ்.

''மிஸ் மார்க்கரெட்'' என்ற விஜயகுமார், ''இப்பொது தான் அவளைக் குடிகார சோல்ஜர்களிடமிருந்து காப்பாற்றி விட்டு வருகிறேன்'' என்று கூறினான்.

கிளைவ், ''தாங்க்ஸ்'' என்று சம்பிரதாயமாகக் கூறிவிட்டு, ''விஜயகுமார்! அவளை நான் காதலிப்பது அவளுக்குத் தெரியாது'' என்றும் ஒரு புதிரைப் போட்டு விட்டான்.

''ஏன்?''

''நான் சொல்ல வில்லை.''

''விசித்திரமாக இருக்கிறது.''

கிளைவ் சிறிது நேரம் நன்றாக நிமிர்ந்து நின்றான். ''விஜயகுமார், காரணம் சொல்லட்டுமா?'' என்று வினவினான்.

''சொல் கிளைவ்.''

''எனக்குக் காதலில் கவனம் செலுத்த இப்பொழுது அவகாசமில்லை.''

''ஏன்?''

''கர்நாடகத்தின் இறுதிப் போர் துவங்கி விட்டது. எனக்குப் பெண் காதலை விட போர்க் காதல் அதிகம்'' என்றான் கிளைவ்.

அவன் முகத்தில், மேலிருந்த பவர் விளக்கின் வெளிச்சம் நன்றாக விழுந்தது. அந்த வெளிச்சத்தில் கிளைவின் வீர வதனத்தில் ஜெயஸ்ரீ ஜொலித்தாள். அப்படி ஜொலித்த ஜெயஸ்ரீயுடன் தனது ஷர்ட் பையில் கையை விட்டு முத்திரை உடைக்கப் பட்டிருந்த ஒரு கடிதத்தை எடுத்த கிளைவ், ''இதைப் பார், புரியும்'' என்றும் கூறினான், விஜயகுமாரனிடம் கடிதத்தை நீட்டி. கடிதத்தை, கையில் வாங்கிய விஜயகுமாரன் உறையிலிருந்து அதை எடுத்துப் படித்தான். பிறகு கண்களை உயர்த்தினான் கிளைவை நோக்கி. ''திஸ் இஸ் ஸீரியஸ்'' என்று கூறவும் செய்தான்.

''திஸ் இஸ் வார், ரியல் வார்'' என்றான் கிளைவ் உற்சாகத்துடன்.

19. அன்புச் சதி

கிளைவ் தன்னிடம் காட்டிய கடிதத்தில் கண்ட விஷயம் கவலை உண்டாக்கக் கூடியதாக இருக்க, கவலைக்குப் பதில் கிளைவ் உற்சாகத்தை அதிகமாகக் காட்டவே, விஜயகுமாரன் விவரணத்துக்கும் அப்பாற்பட்ட வியப்பை அடைந்து, ''போர் மூளுவதில் என்ன அத்தனை உற்சாகம் உனக்கு?'' என்று விசாரித்தான் தனது நண்பனை ஏறெடுத்து நோக்கி.

''கடிதத்தைச் சரியாகப் பார்த்தாயா?'' என்று பதிலுக்கு வினவிய கிளைவின் குரலில் ஆரம்ப உற்சாகம் சிறிதளவும் குறையவில்லை.

''படித்தேன், கவர்னர் ஸாண்டர்ஸ் எழுதியிருக்கிறார், காப்டன் ஜின்ஜின்ஸை ஆற்காட்டின் மீது படையெடுக்க அனுப்பியிருப்பதாக...'' என்ற விஜயகுமாரனின் இதயத்தில் வேதனையிருந்ததால் அது அவன் குரலிலும் பிரதிபலித்தது.

கிளைவ் அந்த வேதனையில் பங்கு கொள்ளவில்லை. லேசாக நகைத்துக் கொண்டே சொன்னான், ''ஜின்ஜின்ஸுடன் 1000 ஐரோப்பிய சோல்ஜர்களும், 3,000 சிப்பாய்களும் சென்றிருக்கிறார்கள்'' என்று.

''ஆம்'' என்றான் விஜயகுமாரன் கடிதத்திலிருந்த விஷயத்தைக் கிளைவ் எதற்காகத் திருப்பிச் சொல்கிறான் என்பதை அறியாமல்.

''இதிலிருந்து என்ன தெரிகிறது?'' என்று வினவினான் கிளைவ்.

''பிரிட்டிஷ் கவர்னர் வலுச் சண்டையில் இறங்கிவிட்டார் என்று பரிபூரணமாகத் தெரிகிறது.'' விஜயகுமாரன் பதிலில் வெறுப்பு இருந்தது.

''அதல்ல பொருள்'' என்றான் கிளைவ்.

''வேறு என்ன?''

''முதல் முதலாகப் பிரிட்டிஷார் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளத் தீர்மானித்து விட்டார்கள் என்று அர்த்தம்...'' என்று சற்று நிதானித்த கிளைவ், விஜயகுமாரனை அணுகி மறுபடியும் இயற்கைத் தோஷத்தால் ஆங்கிலத்தைக் கலந்து, ''லுக் ஹியர் மை ஃப்ரண்ட்! இப்பொழுது பிரிட்டிஷார் திட்டமான நடவடிக்கை எடுக்காவிட்டால் தே வில் பி ஃபினிஷ்ட்'' என்று கூறினான்.

அது உண்மை என்று தெரிந்ததால் விஜயகுமாரனும் தலையை ஆட்டினான். ''தட் ஈஸ் ட்ரு'' என்றும் கூறினான்.

சந்தாசாகிப் ஆற்காட்டில் வலுவான படையுடன் இருக்கிறார். புதுச்சேரியில் டூப்ளே பூரண பலத்துடன் இருக்கிறார்.

தட்சிணசுபாவான அவுரங்காபாத்தில் டி புஸ்ஸியின் ஆட்சி நடக்கிறது. தட்சிணத்தில் முக்கிய ஸ்தானங்கள் பிரிட்டிஷ் படையைச் சுற்றிக் கொண்டிருக்கின்றன. இப்பொழுது ஒன்று நாம் முன்னேறித் தாக்க வேண்டும். அல்லது அழிபட வேண்டும். முன்னேறித் தாக்க கவர்னர் தீர்மானித்து விட்டார். இந்த ஒரே சந்தோஷச் செய்தியை முதல் முதலாக இப்பொழுது தான் நான் கேள்விப்படுகிறேன்'' என்று விளக்கினான் கிளைவ்.

விஜயகுமாரன் சிந்தனையில் இறங்கினான். கிளைவின் உற்சாகம் அவனுக்கு இல்லை. பிரெஞ்சு பலத்தையும் ஆற்காட்டு நவாப் பலத்தையும் ஒருங்கே தாக்க நமக்குப் பலம் இருக்கிறதா?'' என்று வினவினான் சிறிது நேரத்திற்குப் பிறகு சந்தேகத்துடன்.

''எந்தப் பலத்தைப் பற்றிக் கேட்கிறாய்?''

''பலத்தில் பல வகை இறக்கிறதா?''

''படை பலம், புத்தி பலம் என்ற இரண்டு இருக்கிறது.''

''டூப்ளே உங்களை விட இரண்டில் ஏதாவது ஒன்றில் குறைந்தவரா?''

''இப்பொழுது அவருக்குப் படை பலம் அதிகம். இதுவரை ஏற்பட்ட நிகழ்ச்சிகளைக் கொண்டு பார்த்தால் புத்தி பலமும் அதிகம் தான்.''

''இரண்டில் ஏதாவது ஒன்றில் இப்பொழுது குறைந்து இருக்கிறதா?''

''குறைந்திருக்கிறது என்று சொல்ல முடியாது...'' என்று கூறிய கிளைவ் மேலும் சொன்னான்: ''விஜயகுமார், டூப்ளே இதுவரையில் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டார். இப்போது அவரது போக்குச் சரியாய் இல்லை. பிரெஞ்சுப் படையின் சிறந்த தளபதியான டி புஸ்ஸியை ஔரங்காபாத்துக்கு அனுப்பிவிட்டார். செஞ்சிக் கொட்டையைப் பிடித்த அந்த மகாவீரன் சென்றதில் டூப்ளேயின் ஒரு கை உடைந்து விட்டது. தவிர, மனிதனுக்கு ஆசை இருக்கலாம்; பேராசை இருக்கக் கூடாது.''

''டூப்ளேக்கு என்ன பேராசை?'' என்று வினவினான் விஜயகுமாரன்.

''தென்னிந்தியாவைப் பிரெஞ்சு மாகாணமாக்கப் பார்க்கிறார். அதற்காகக் கையை அவுரங்கபாத் வரையில் நீட்டி விட்டார் . அது எட்டாத தூரம். நெருக்கடி இங்கே ஏற்பட்டால் அங்கிருந்து படையோ, டி புஸ்ஸியோ இங்கு வரமுடியாது. டூப்ளேக்கு உதவி சந்தா சாகிப் தான். அவருக்குச் சந்தா சாகிப் என்றால் நமக்கு முகம்மது அலி. சந்தாசாகிப் டூப்ளேயின் கருவி என்றால், முகம்மது அலி பிரிட்டனின் கருவி.''

''பிரெஞ்சுக் கருவி பலமானது'' என்று சுட்டிக் காட்டிப் புன்முறுவல் கொண்டான் விஜயகுமாரன்.

''பிரிட்டிஷ் கருவிக்கு நாம் பலம் தருவோம்'' என்றான் கிளைவ்.

''கருவிக்குப் பலம் தர முடியுமா?''

''கையாள்பவனைப் பொறுத்தது.''

''கருவி மொக்கையாய் இருந்தால்!''

''சாணை பிடிப்போம்.''

''எப்படியோ?''

''நாம் போரில் இறங்கினால் முகம்மது அலி திருச்சியில் உட்கார்ந்திருக்க முடியாது, போர் அவர் பெயரால் அவரைச் சாக்காக வைத்து நடப்பதால். நமது முயற்சி அவருக்கும் துணிவை உண்டாக்கும். அவரது படைகளும் நம்மோடு சேர்ந்து போராடும்'' என்ற கிளைவ், ''இப்போது சந்தேகம் தீர்ந்ததா?'' என்று கேட்டான்.

''இல்லை'' என்றான் விஜயகுமாரன் திட்டமாக.

''ஏனோ?'' கிளைவின் கேள்வியில் பிரமிப்பு இருந்தது.

''இந்தப் போரை நடத்தப் போவது காப்டன் ஜின்ஜின்ஸ்.''

''அதனால் என்ன?''

''திட்டமான முடிவுகளை எடுக்க முடியாதவன்.''

இதைக் கேட்ட கிளைவின் முகத்தில் வியப்பு பெரியதாக விரிந்தது. ''ஹொய் டூ யூ ஸே தட் ?'' உணர்ச்சி மிகுதியில் ஆங்கிலத்தில் இறங்கினான்.

''ஐ கான் ரீட் எ மான் ஆஸ் ஐ ரீட் எ புக் (புத்தகத்தைப் படிப்தைப் போல் ஒரு மனிதனையும் என்னால் எடை போட முடியும்)'' என்றான் விஜயகுமாரன்.

காப்டன் ஜின்ஜின்ஸைப் பார்த்து விஜயகுமாரன் போட்ட எடையில் தவறு இல்லை என்பது கிளைவுக்குத் தெரிந்தது. ஆனால் விஜயகுமாரன் படைத் தலைவர்களை அத்தனை தூரம் எடை போட முடியும் என்று அவன் அடியோடு நினைக்காததால் சிறிது நேரம் எதிரேயிருந்த மேஜை மீது கைகளை ஊன்றி மௌனமாக நின்றான். பிறகு கேட்டான், ''ஹாவ் யூ எனி ஆல்டர்நேடிவ்'' (வேறு மாற்று ஏதாவது இருக்கிறது)'' என்று.

''இருக்கிறது.'' விஜயகுமாரன் பதில் சந்தேகத்துக்கிடமின்றி வெளிவந்தது.

''என்ன மாற்று?''

''பிரிட்டிஷ் படையில் ஒருவன் இருக்கிறான் துணிவுடன் காரியங்களை நிறைவேற்ற.''

''அவன்?''

''ராபர்ட் கிளைவ்!'' இதை மிகச் சர்வசாதாரனமாகச் சொன்னான் விஜயகுமாரன். இருப்பினும் அவன் குரலில் பெரு உறதியும் நம்பிக்கையும் இருந்தது.

கிளைவ் தர்ம சங்கடத்துக்கு உள்ளானான். ''யூ ஆர் ஓவர் எஸ்டிமேடிங் மி'' என்றும் கூறினான் தனது பார்வையை மேஜை மீதிருந்த 'மாப்' பில் நாட்டி.

''ராபர்ட்!'' விஜயகுமாரன் அழைப்பில் உறுதியும் உணர்ச்சியும் கலந்திருந்தன.

''எஸ்!''

விஜயகுமாரனின் முகத்தில் சாந்தி நிலவிக் கிடந்தது. ''நான் முகஸ்துதி செய்பவனா?'' என்று வினவினான் அவன்.

''இல்லை'' என்றான் கிளைவ் சங்கடத்துடன்.

''உன் சக்தி எனக்குத் தெரியும், ஸாண்டர்ஸுக்குத் தெரியாவிட்டாலும். தேவிக் கோட்டையில் உன் துணிவைப் பார்த்திருக்கிறேன் இருமுறை. கோழையான காப்டன் கோப்புடன் வந்து தோல்வியடைத்த சமயத்திலும் நீ கோட்டையைத் தாக்கத் தயாராயிருந்தாய். ஆனால் தலைவன் சரியாக இல்லாததால் அன்று தோல்வி ஏற்பட்டது உனக்கு. மறு முறை வெற்றி கொண்டாய் தேவிக் கோட்டையை...''

''அப்படியா...?''

''பிரிட்டிஷ் கவர்னர் உன்னைச் சரியாக உபயோகப்படுத்த வில்லை. நீ ஏற்கனவே சாணை பிடிக்கப்பட்ட கருவி. நீ இருக்க மொக்கைகளை அனுப்புகிறார் கவர்னர் முக்கிய காரியங்களுக்கு.''

பிறகு இருவருமே பேசவில்லை. கடைசியில் கிளைவ் கேட்டான். ''இந்தக் கோட்டையை பார்த்தாயா?''

''பார்த்தேன்.''

''எப்படியிருக்கிறது?''

விஜயகுமாரன் அதற்கு உடனடியாகப் பதில் கூறவில்லை. கிளைவின் முன்பாக அறையில் மிறிது நேரம் உலாவினான். பிறகு கூறினான். ''கிளைவ்! இந்த *மதறாஸ் பட்டணம் சரியாக இணைக்கப்படவில்லை. மூன்று பகுதிகளாய்ப் பிரிந்து கிடக்கிறது. வொய்ட் டவுன் என்று அழைக்கப்படும் இந்தக் கோட்டைப் பகுதியில் வெள்ளையர் மட்டும் வசிக்கிறார்கள். இது சுமார் 700 கெஜம் சமுத்திரத்தை நோக்கியுள்ள கிழக்குப் பகுதியில் ஒடுகிறது. அகலம் உட்புறமாக 200 அடி. இதற்குப் புறம்பே மேற்கேயுள்ள பட்டணம் 1000 கெஜம் நீளம். இது பிளாக் டவுன். என்னைப் போன்ற கறுப்பர் வசிக்கும் பகுதி. பிளாக் டவுனுக்கு அப்பால் பெத்து நாயக்கன் பேட்டையும் முத்தியால் பேட்டையும் இருக்கின்றன. இங்கே கறுப்பர்களும் வெள்ளைக்காரர்களும் பங்களாக்கள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கடைசிப் பகுதியின் நீளமும் 1000 கெஜம், அகலம் 1000 கெஜம். இந்த மூன்று

* Vestiges of old Madras - Father Norbetth's Memoirs.

பிரிவுகளை இணைக்கக் காப்டன் கிளைவ் அல்ல, ஜெனரல் லாரன்ஸே வந்தாலும் முடியாது. இந்தக் கோட்டையை மட்டும் பாதுகாக்கக்கூடப் போதிய படைத்தளம் இங்கில்லை. இருந்தால் கிளைவின் காதலியைப் பகிரங்கமாகச் சோல்ஜர்கள் தொடத் துணிவார்களா?'' இதைச் சொன்ன விஜயகுமாரன் புன்னகை கொண்டான்.

நண்பனின் புன்னகையைப் பறக்க அடிக்க ஒர பதிலைச் சொன்னான் கிளைவ், ''முதலில் அவள் என் காதலி அல்ல. அப்படியே இருந்தாலும் அது சோல்ஜர்களுக்குத் தெரியக் காரணமில்லை.''

''என்ன சொல்கிறாய்?''

''அந்த பெண்ணை என் தலையில் கட்ட எட்மண்ட் பார்க்கிறான்'' என்ற கிளைவ் மீண்டும் நகைத்தான். ''நீ அன்று பார்த்த லாக்கெட்டை எட்மண்ட் நான் பார்க்கும் இடத்தில் வேண்டுமென்றே போட்டிருந்தான். அவனைத் திருப்தி செய்ய அதைத் திருடி வைத்துக் கொண்டேன். அவளை எனக்கு மனைவியாக்க அவன் தான் அவளை இங்கு வரவழைத்தான். இது அவன் அன்புச் சதி. அதனால் அந்த இடத்தைக் காலி செய்து இங்கு வந்தேன். அவள் இங்கே ஏன் வந்திருக்கிறாள் என்பது எட்மண்டைத் தவிர யாருக்கும் தெரியாது. தெரிந்தால் சோல்ஜர்கள் அவள் அருகே போயிருக்க மாட்டார்கள். அவளை மணம் செய்து கொள்வதில் எனக்கு ஆட்சேபம் இல்லை. ஆனால் இப்போது அது முடியாது. அதற்கு அவகாசமும் இல்லை. நாளைக் காலை நாம் புறப்படுகிறோம்.''

''எங்கு?''

''வால்கொண்டாவுக்கு'' என்றான் கிளைவ் சிரித்துக் கொண்டே. அந்தச் சிரிப்பில் போர் வெறி இருந்ததை விஜயகுமாரன் கண்டான். கண்டதால் பிரமிப்புடன் கிளைவை நோக்கவும் செய்தான்.

20. சொர்க்கானுபவம்

தேவனாம்பட்டணம் என்று அழைக்கப்பட்ட தேவநாதன் பட்டிணத்தின் ஸெய்ன்ட் டெவிட் கோட்டையில், தமது ஆலோசனை அறையில் கவர்னர் தாமஸ் ஸாண்டர்ஸ் தமது இரு கால்களையும் எதிரே இருந்த மேஜை மீது போட்டுக் கொண்டும் கால் பூட்ஸ்களின் நுனிகளை ஒன்றோடொன்று தட்டிக் கொண்டும், கையிலிருந்த நீள டம்ளரின் அடியிலிருந்த அரை பெக் விஸ்கியை லேசாக உறிஞ்சிக் கொண்டும் தீவிர சிந்தனையில் இருந்தபடியால்

முன்னறிவிப்பின்றிக் காப்டன் கிளைவ் உள்ளே நுழைந்ததைக்கூட அவர் கவனிக்கவில்லை. தன் வரவை அறிவிக்க கிளைவ் தொண்டையைக் கனைத்த பின் தனக்கு எதிரேயிருந்த சாளரத்தின் மூலம் தெரிந்த கடல் பகுதியைக் கவனிப்பதை விட்டு, கையிலிருந்த கண்ணாடி டம்ளரையும் மேஜை மீது வைத்து விட்டு, தமது கண்களைக் கிளைவ் மீது திருப்பினார் பிரிட்டிஷ் கவர்னர். 'காப்டன் கிளைவ் ரிப்போர்டிங் யுவர் எக்ஸலென்ஸி'' என்று தனது வரவை உத்தியோக முறையில் கிளைவ் அறிவித்தான்.

அதற்கும் கவர்னர் பதில் கூறவில்லை. தமது இரும்பு விழிகளைக் கிளைவின் மீது நாட்டினார் சில விநாடிகள். பிறகு டம்ளரிலிருந்த மீதி விஸ்கியையும் உறிஞ்சிவிட்டுத் தம் கால்களை மேஜையிலிருந்து விலக்கி ஆசனத்தில் செங்குத்தாக உடகார்ந்தார். அவரது இரும்புக் கண்கள் கிளைவின் மீது பதிந்தன.

'அந்தப் பார்வையின் பொருளைக் கிளைவ் புரிந்து கொண்டிருக்க வேண்டும் ''தங்கள் உத்தரவுப்படி காப்டன் ஜின்ஜின்ஸின் படைக்கு உணவுப் பொருள் பொதி வண்டிகள் கொண்டு வந்திருக்கிறேன்'' என்று தெரிவித்தான் ஆங்கிலத்தில் .

அதற்கும் கவர்னர் பதில் கூறவில்லையாதலால் கிளைவே விளக்கினான்: ''காப்டன் ஜின்ஜின்ஸ் ஆற்காட்டின் மீது படையெடுத்துச் சென்றிருப்பதாகத் தங்கள் உத்திரவில் கண்டிருந்தது. அவர்களுக்கு உணவுச் சப்ளை செய்ய வேண்டுமென்றும் கட்டளையிட்டிருந்தீர்கள். இருபது வண்டிகள்....''

கவர்னர் முதல் முதலாகத் தமது மௌன விரதத்தைக் கைவிட்டு, ''ஹொய் டிட் யூ பிரிங் தெம் ஹியர்?' (இங்கு எதற்காக அவற்றைக் கொண்டு வந்தாய்)'' என்று வினவினார்.

''ஹொயர் எல்ஸ் கான் ஐ டேக் தெம்? (அவற்றை வேறு எங்கே கொண்டு போவது?)'' என்ற கிளைவும் உறுதி கலந்த குரலில் பதில் கூறினான்.

''காப்டன்!'' கவர்னரின் ஒற்றைச் சொல்லில் அதிகாரம் இருந்தது.

''எஸ் எக்ஸ்லென்ஸி!''

''யூ ஆர் டூ டேக் ஸப்ளைஸ் டு காப்டன் ஜின்ஜின்ஸ், நாட் டு மி (சப்ளையைக் காப்டன் ஜின்ஜின்ஸுக்குத்தான் செய்ய, வேண்டும், எனக்கல்ல)'' என்றார் கவர்னர்.

''அது தெரியும் எனக்கு'' என்றான் கிளைவ்.

''தென்?''

''காப்டன் ஜின்ஜின்ஸ் ஆற்காட்டைப் பிடிக்க வேண்டும்.''

''எஸ்.''

''அதற்கு ஆற்காட்டை அடைய வேண்டும்.''

''ஷ்யூர்.''

''அடைய முடியாது. ஆற்காட்டுப் பாதையைச் சந்தாசாகிபின் படைகள் அடைத்து நிற்கின்றன. அது மட்டுமல்ல...'' இந்த இடத்தில் கிளைவ் பேச்சை நிறுத்திக் கவர்னரை நோக்கினான்.

எந்த வித உணர்ச்சியையும் காட்டாத கவர்னரின் முகத்தில் கூடச் சிறிது உணர்ச்சி தெரிந்திருந்தது. ''வேறென்ன?'' என்றார்.

கிளைவ் மெள்ள விளக்கத் தொடங்கி, ''இப்பொழுது பிரிட்டனும் பிரான்ஸும் சமாதானம் செய்து கொண்டிருக்கின்றன ஐரோப்பாவில். ஆகவே நாம் இங்கே நேரிடையாகப் போரில் இறங்க முடியாது. யாரையாவது முன் வைத்து நாம் அவர்களுக்கு உதவுவதாகப் பாசாங்கு செய்து போரிட வேண்டும். ஆகவே நீங்கள் முகம்மது அலியை ஆற்காட்டின் மீது படையெடுக்க உத்தரவு அனுப்பியிருக்க வேண்டும். அந்தப் படை வரும் வரையில் காப்டன் ஜின்ஜின்ஸ் மெதுவாக நகரவேண்டும். ஆகையால் காப்டன் ஜின்ஜின்ஸ் ஆற்காட்டை அடைய இன்னும் பதினைந்து நாட்களாவது ஆகும். ஆகவே நான் வால் கண்டா செல்லத் தீர்மானித்தேன்.

''ஹொய் வால் கொண்டா?'' என்ற வினவினார் ஸாண்டர்ஸ்.

''ஆற்காடு போகும் வழியில் இருக்கும் சிறிய கோட்டை அது தான். அதன் தலைவன் நடுநிலை வகிப்பதால் சந்தாசாகிபின் துருப்புகள் அதற்கு அப்புறமே நிற்கின்றன. ஆகவே முகம்மது அலியின் படைகள் வரும் வரையில் பிரிட்டிஷ் படை பந்தோபஸ்துடன் தங்க அது தான் சரியான இடம்'' என்று பதில் கூறினான் கிளைவ்.

இதைக் கேட்ட ஸாண்டர்ஸ் மீண்டும் மௌனம் சாதித்தார். கிளைவ் மேலும் தொடர்ந்தான். ''ஆற்காட்டுக்கும் மதராஸுக்கும் இடையிலுள்ள சாலையில் சந்தாசாகிபின் படைகள் இருக்கின்றன. உணவுப் பொருளைக் கொண்டு செல்ல அந்த வழி அபாயமானது. ஆகவே இங்கு வந்து வால் கொண்டா போகத் தீர்மானித்தேன். அதனால் தான் இங்கு வந்தேன்.''

கவர்னரின் இதழ்களில் புன்முறுவல் படர்ந்தது. ''காப்டன் ஜின்ஜின்ஸைப் பற்றி என்ன நினைக்கிறாய்?''

இதனால் ஒரு விநாடி கிளைவ் அசந்து போய் நின்றான். பிறகு பதில் சொன்னான், ''இருக்கிற காப்டன்களில் அவர் தான் ஸீனியர்'' என்று.

கவர்னரின் புன்முறுவல் மேலும் விகசித்தது. ''ஈஸ் ஹி காம்பிடண்ட்? (அவர் தகுதி வாய்ந்தவரா?)'' என்று வினவினார் கவர்னர்.

''எனது ஸீனியர்களைப் பற்றி நான் விவாதிப்பதில்லை.''

கிளைவ் எந்த விதச் சர்ச்சையிலும் ஈடுபடமாட்டான் என்பதைப் புரிந்து கொண்ட கவர்னர், பேச்சை லேசாக மாற்றினார். ''காப்டன் ஜின்ஜின்ஸ் இங்கிருந்து ஏப்ரல் முதல் வாரத்தில் கிளம்பினார். வால்கொண்டாவைப் பதினைந்தாம் தேதி அடைந்தார். அங்கேயே கோட்டைக்கெதிரே முகாம் செய்திருக்கிறார்'' என்று கூறியதன்றி ''நோ ஆக்டிவிடி, நோ டெஸ்பாட்சஸ் (நிகழ்ச்சிகளுமில்லை தபால்களும் இல்லை அவரிடமிருந்து)'' என்று விளக்கினார்.

''அவர் முகம்மது அலியின் படைகளுக்காகக் காத்திருக்கலாம்'' என்றான் கிளைவ்.

''முகம்மது அலியின் சகோதரன் அப்துல் வஹாப்கான் பெரும்படையுடன் வால்கொண்டாவை அடைந்து நான்கு நாட்களாகின்றன'' என்று சுட்டிக் காட்டினார் கவர்னர்.

''காப்டன் ஜின்ஜின்ஸ் சரியான சமயத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கலாம்.''

கவர்னர் திடீரெனத் தமது கைகளை மேஜை மீது குத்தி, ''ஆனால் சந்தா சாகிப் காத்திருக்க மாட்டான்'' என்று சீறினார். அத்துடன், 'மை பாய்! இன் எனி வார் டிலே இஸ் டேஞ்சரஸ் (மகனே! எந்தப் போரிலும் தாமதம் அபாயமானது)'' என்றும் சொன்னார், தமது சீற்றத்தை சிறிது அடக்கிக் கொண்டு. பிறகு கையைப் பின்னால் கட்டிக் கொண்டு அந்த அறையில் மௌனமாகப் பல விநாடிகள் உலாவினார். திடீரென்று நின்று கிளைவை அந்த இரும்பு விழிகளால் நோக்கிக் கொண்டே, ''கிளைவ்! காப்டன் ஜின்ஜின்ஸைப் பற்றி எனக்கு அதிக நம்பிக்கையில்லை. அவனுக்கு பதில் நீ போயிருந்தால் நான் நம்பிக்கையுடன் இருந்திருப்பேன். தட் ஸ்விஸ் பெலோ (காப்டன் ஜின்ஜின்ஸ்) காண்ட் டேக் டெஸிஷன்ஸ் (முடிவுகளை துரிதமாக எடுக்க மாட்டான்)'' என்ற தமது இதயத்திலுள்ள கருத்தை வெளியே திறந்து காட்டினார். ''ஐ காண்ட் ஹெல்ப் ஸெண்டிங் ஹிம் ஹி இஸ் தி ஸீனியர் மோஸ்ட்; டாம் த ஸீனியாரிடி! (நான் வேறெதும் செய்வதிற்கில்லை. அவன் தான் ஸீனியர். எழவெடுத்த ஸீனியாரிடி!)'' என்று எரிந்தும் விழுந்து தம்மை நொந்துக் கொண்டார் கவர்னர்.

அவரைச் சாந்தப்படுத்த முயன்ற கிளைவ், ''இதற்குள் நாம் எந்தத் தீர்மானித்திலும் இறங்க வேண்டாம். விளைவுகளைக் கவனிப்போம், காத்திருப்போம்'' என்றான்.

''காத்திருப்போம்! ஒரு நுற்றாண்டு காத்திருந்து விட்டோம். பிரான்ஸை இங்கு வேரூன்ற விட்டோம். மீதி நாளையும் காத்திருந்து கழிப்போம்'' என்ற கவர்னர் மெல்லச் சிரித்துக் கொண்டார்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?''

''ஸ்பெயினின் கடல் பலத்தை, முதுகெலும்பை முறித்த பிரிட்டன் இந்தச் சிறு காலனியில் அடங்கிக் கிடக்கிறது. அந்தப் பரிதாபத்தைப் பார்த்துச் சிரித்தேன்'' என்ற கவர்னர் மேலும் கேட்டார், ''கிளைவ்! எங்கும் வெற்றி வாகை சூடும் பிரிட்டிஷ் சோல்ஜர்கள் இங்கு ஏன் படுத்துக் கிடக்கிறார்கள்? சிங்கமான பிரிட்டன் இங்க ஏன் நரியாகிவிட்டது?'' என்று.

''பிரிட்டன் ஒரு நாளும் நரியாகாது. சிங்கம் பதுங்கிக் கிடக்கிறது, பாய்வதற்காக. அதுவும் தங்கள் தலைமையில் கண்டிப்பாக அது தன் சொரூபத்தைக் காட்டும்.''

''லெட் மீ ஹோப் ஸோ'' என்ற கவர்னர், 'யூ ஹாவ் எனிதிங் ஸ்பெஷல் டு டெல் மீ?'' என்றார்.

''நதிங்.''

''வென் ஆர் யூ ஸ்டார்ட்டிங்?''

''நௌ.''

''யூ டோண்ட் வாண்ட் டு ரெஸ்ட்?''

''நோ.''

இதைக் கேட்ட கவர்னர் பெருமூச்செறிந்தார். கடைசியில் ஒன்று கேட்டார், ''நீ வால்கொண்டாவிலிருந்து திரும்பும் போது இப்படி வரமுடியுமா?'' என்று.

''வருகிறேன்'' என்றான் கிளைவ்.

''அங்குள்ள நிலைமையை நன்கு அறிந்து வா'' என்றார்.

''சரி'' என்று கூறி விடை பெற்ற கிளைவ் அப்பொழுதே பொதி வண்டிகளுடன் வால்கொண்டாவுக்குப் புறப்பட்டான். அவன் வால்கொண்டாவை அடைய இரண்டு நாள் பிடித்தது. அங்கு அவன் கண்ட நிலை பயங்கர நிலை! காப்டன் ஜின்ஜின்ஸின் படைகள் கூடாரமடித்துக் கோட்டைக்கு வெளியே தங்கியிருந்தன. யாரும் அவற்றின் மீது பாய்ந்து அழித்து விடலாம். எங்கும் கோலாகலம் நிரம்பி நின்றது. அந்த நிலையைக் கண்டதால் வெகுண்ட கிளைவ் ஜின்ஜின்ஸின் கூடாரத்தை நோக்கிச் சென்றான். ஜின்ஜின்ஸ் தனியாயில்லை. அவன் நாற்காலியின் அருகே ஒரு பெண். ஜின்ஜின்ஸின் தலை மீது இடித்துக் குனிந்து மதுவையும் அவன் வாயில் கோப்பையின் மூலம் புகட்டிக் கொண்டிருந்தாள். ஜின்ஜின்ஸ் சொர்க்காநுபவத்தில் இருந்தான்.

www.thamizhthenee.blogspot.com

21. வஹாப்கான் வழி

காப்டன் ஜின்ஜின்ஸின் உல்லாச நிலை கண்டு கிளைவ் கோபத்தின் உச்ச நிலையை அடைந்தானானாலும் அவன் அந்தச் சமயத்தில் ஏதும் செய்ய மாட்டாமல் சிலையென நின்றான் பல விநாடிகள். பிறகு தன்னையும் மீறி, ''காப்டன்!'' என்று சீற்றத்துடன் ஜின்ஜின்ஸை அழைத்தான் ஒரு முறை. கிளைவின் குரலைக் கேட்டதும் அச்சமுற்ற அந்தப் பெண் விலகி ஓட முயன்றாலும், அதைக் குடி வெறியால் அனுமதிக்காத காப்டன் ஜின்ஜின்ஸ் தனது கழுத்தைச் சுற்றியிருந்த அவள் கையை இறுகப் பிடித்துக் கோப்பையிலிருந்த மீதி மதுவைத் தானாகவே வாயில் புகட்டிக் கொண்டதன்றி, ''ஹு ஆர் யூ?'' என்று கிளைவையும் நோக்கிக் குழறினான்.

''காப்டன் கிளைவ்!'' என்ற கிளைவின் குரல் அந்தக் கூடாரத்தைக் கத்தி போல் கிழித்தது.

ஜின்ஜின்ஸ் அப்பொழுதும் தெளியவில்லை. குடிவெறியிலிருந்து, ''யூ ஹாவ் ப்ராட் ஃபுட்? (நீ உணவு கொண்டு வந்திருக்கிறாயா?)'' என்று வினவினான், அதிகாரத் தோரணையில்.

''எஸ்'' என்றான் கிளைவ் எரிச்சலுடன்.

''ஹௌ மச் ஒயின்!'' என்று வினவினான் காப்டன் ஜின்ஜின்ஸ்.

அதற்கு மேல் பொறுக்காத கிளைவ் நான்கே அடிகளில் தனக்கும் ஜின்ஜின்ஸுக்கும் இருந்த இடத்தைத் தாண்டி, அந்தப் பெண்ணின் கையிலிருந்த கோப்பையை வாங்கித் தூர எறிந்து விட்டு அந்தப் பெண்ணையும், ''கெட் அவுட்'' என்று கூற, பெண் கூடாரத்தை விட்டுப் பறந்தாள். பிறகு கிளைவ் அந்தக் கூடாரத்தின் மூலைக்குச் சென்று அங்கிருந்த நீண்ட மண் கூஜாவிலிருந்த குளிர்ந்த நீரை எடுத்து ஜின்ஜின்ஸின் தலையில் அபிஷேகம் செய்தான். பிறகு, ''யாரோ! ஆர்டர்லி?'' என்று கூவினான். கூடார வாயிலை நோக்கி உள்ளே ஓடி வந்த ஆர்டர்லியிடம், ''காப்டனைப் படுக்கவை. அவர் தெளிந்த பின் சந்திக்கிறேன்'' என்று கூறிவிட்டு வெளியே சென்று அங்கிருந்த படைத் தளத்தின் மீது தன் கண்களைச் செலுத்தினான்.

பிரிட்டிஷ் படையும் அப்துல் வஹாப்கான் படையும் எதிரேயிருந்த கோட்டைக்கு வெளியே நன்றாகப் பரந்து முகாம் செய்திருந்தது. திருச்சியிலிருந்து நாற்பத்து ஐந்தாவது மைலில் ஆற்காட்டுச் சாலையில் இருந்த வாலிகண்டபுரம் என்ற வால் கொண்டாவின் கோட்டை அத்தனை பெரிதல்லவென்றாலும் வலுவுள்ளதாகவே இருந்தது. அதன் வாயிலுக்கு நேர் எதிரே

ஆழமான பெரிய நீர்நிலை இருந்தது. அந்த நீர் நிலையைத் தாண்டியே ஜின்ஜின்ஸ் முகாம் செய்திருந்ததால் அதை ஏன் அவன் பிடிக்கவில்லையென்பது கிளைவுக்குப் புரியவில்லை. ஆகவே அங்கிருந்த படைத்தளத்தின் மூலமே நடந்து சென்றவன் ஆங்காங்கு படை வீரர் படுத்துக் கிடப்பதையும் காப்டன்களின் கூடாரவாயில்களில் மட்டும் விளக்குள் எரிவதையும் பார்த்தான். அந்தக் கூடாரங்களின் ஒன்றின் வாயிலில் தான் அழைத்து வந்த பொதி வண்டிகள் அவிழ்த்து விடப்பட்டிருந்ததையும், அதன் முன்னணியில் நின்ற விஜயகுமாரன் மிகுந்த சினத்துடன் இரைந்து கொண்டிருந்ததையும் கண்ட கிளைவ் அந்த இடத்தை அடைந்து, ''என்ன விசேஷம் விஜயகுமார்?'' என்று வினவினான்.

''சென்னையிலிருந்து பொதி வண்டியைக் கொண்டு வந்திருக்கிறோம். உணவு பொருள்களை இறக்கவோ வாங்கவோ யாருமில்லை''என்றான் மிகுந்த கோபத்துடன் விஜயகுமாரன்.

இந்த இரைச்சலைக் கேட்டுக் கூடாரத்துக்குள்ளிருந்து வெளியே வந்தவனைப் பார்த்ததும் வியப்படைந்த கிளைவ், ''காப்டன் டால்டன்! நீ இங்கேயா இருக்கிறாய்?'' என்றான்.

காப்டன் டால்டனின் கூரிய விழிகள் கிளைவின் மீது பதிந்தன. ''கிளைவ்! இங்கு எதற்கு வந்தாய்?'' என்று வினவினான்.

''உணவுச் சப்ளை கொண்டு வந்தேன். இதோ, மீட் மை லெப்டினண்ட் மிஸ்டர் விஜயகுமார்'' என்று விஜயகுமாரனை அறிமுகப்படுத்தியதன்றி வந்த காரணத்தையும் விவரித்தான் கிளைவ்.

விஜயகுமாரனும் காப்டன் டால்டனும் கைகுலுக்கிய பிறகு விஜயகுமாரன் வினவினான், ''இந்த வண்டிகளை யாரிடம் ஒப்படைப்பது?'' என்று.

காப்டன் டால்டன் ஒரு விநாடி சிந்தித்தான். பிறகு ஒரு பிரிட்டிஷ் லெப்டினண்டை அழைத்து, ''லெப்டினண்ட்! டேக் சார்ஜ் ஆப் தி சப்ளைஸ்!'' என்று உத்தரவிட்டு, கிளைவையும் விஜயகுமாரனையும் தனது கூடாரத்துக்குள் அழைத்துச் சென்றான். கூடாரத்துக்குள் மூவரும் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டதும் கிளைவ் வினவினான், ''டால்டன்! வாட் ஈஸ் ஹாப்பனிங் ஹியர் (இங்கு என்ன நடக்கிறது)?'' என்று.

''நத்திங் (எதுவும் நடக்க வில்லை)'' என்றான் டால்டன் துக்கம் நிரம்பிய குரலில்.

''கோட்டை வாயிலில் கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கவா இங்கு நமது படை வந்திருக்கிறது?'' என்ற வினவினான் கிளைவ் ஆத்திரத்துடன்.

''அப்படித் தான் தெரிகிறது.''

''காப்டன் ஜின்ஜின்ஸ் என்ன செய்கிறார்?''

''குடிக்கிறர், யாராவது சுதேசிப் பெண்கள் அகப்பட்டால் உல்லாசமாக இருக்கிறார்.''

''கோட்டையை ஏன் பிடிக்கவில்லை?''

''கோட்டை அதிகாரி கதவுகளைத் திறக்க மறுக்கிறார்.''

''கதவுகளைத் திறக்க மறுக்கிறாரா?'' என்ற கிளைவின் கேள்வியில் ஏளனமும் வியப்புமும் கோபமும் எல்லாமே கலந்து தாண்டவமாடின.

''ஆம்'' என்றான் காப்டன் டால்டன் சர்வசாதாரணமாக.

''கோட்டைத் தலைவன் கதவுகளைத் திறந்துவிட்டு, பாண்டு முழங்க உங்களை வரவேற்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்களா?'' என்று சீறினான் கிளைவ்.

''அப்படித்தான் தோன்றுகிறது'' என்ற காப்டன் மெள்ள கிளைவை நோக்கி, ''கிளைவ், நீ எனக்கு ஒரு உபகாரம் செய்ய முடியுமா?'' என்று வினவினான்.

''முடிந்தால் செய்கிறேன்.'' கிளைவின் பதிலில் வியப்பு ஒலித்தது.

''என்னை இந்தத் தொடை நடுங்கியிடமிருந்து விலக்கி விட வேண்டும்.''

''யாரிடமிருந்து?''

''ஜின்ஜின்னிடமிருந்து.''

''ஏன்?''

''எனக்கு அவமானம் தாங்க வில்லை.''

''என்ன அவமானம்?''

''சுதேசி சிப்பாய்கள் நம்மை ஏளனம் செய்கிறார்கள். நேரிலல்ல. அவர்கள் பார்வையில் ஏளனம் இருக்கிறது. நம்மையும் பார்த்துக் கோட்டையையும் பார்க்கிறார்கள்.''

இதைக் கேட்ட கிளைவ் தீவிர சிந்தனையில் இறங்கினான். ''டால்டன்! நாளை ஜின்ஜின்ஸுடம் பேசுவோம். இப்பொழுது அவன் சுய நிலையில் இல்லை'' என்று சமாதானம் கூறினான். அத்துடன் சொன்னான், ''காப்டன்! ஜின்ஜின்ஸைத் தனியாக இந்தப் படையுடன் விட்டுப் போவது பிரிட்டனைச் சந்தாசாகிபின் கையில் ஒப்படைப்பதாகும். நீ அநுபவமுள்ள காப்டன். நீயும் நகர்ந்து விட்டால் பிரிட்டன் கர்நாடகத்திலிருந்து இங்கிலாந்துக்கு மூட்டை கட்டலாம்'' என்று. ''அது மட்டுமல்ல, கோழையான காப்டன் ஜின்ஜின்ஸை ஓரளவு நடவடிக்கைக்குத் தூண்ட உன்னைப் போன்ற ஒரு சீனியர் காப்டன் இங்கே தேவை'' என்றும் சுட்டிக் காட்டினான் கிளைவ்.

கிளைவின் உபதேசங்கள் காப்டன் டால்டன் காதில் ஏறவில்லை. ''சரி, படுத்துக் கொள் கிளைவ். லெப்டினண்ட்!

நீங்களும் இங்கேயே தங்கலாம்'' என்று இருவரும் படுக்க ஏற்பாடுகளைச் செய்தான் கிளைவ்.

அன்று இரவு கிளைவுக்குத் தூக்கம் அடியோடு பிடிக்காததால் நள்ளிரவில் விஜயகுமாரனுடன் கூடாரத்திலிருந்து கிளம்பிப் படைகளைப் பார்க்கப் போனான். படை உறங்கிக் கிடந்தது. ஆங்காங்கிருந்த காவலர் மட்டும் கிளைவைத் தடுத்தார்கள். யாரென்று தெரிந்ததும் தலைத் தாழ்த்தி வழி விட்டார்கள். படுத்திருந்த படையையும் சற்று அப்பாலிருந்த அப்துல் வஹாப் கான் கூடாரத்தையும் கோட்டையையும் கவனித்த கிளைவ், ''இத்தனை பெரிய படையை வைத்துக் கொண்டு ஜின்ஜின்ஸ் ஏன் போர் துவங்க மறுக்கிறான்?'' என்று பக்கத்தில் வந்து கொண்டிருந்த விஜயகுமாரனை விசாரித்தான்.

''ஜின்ஜின்ஸ் சாமாதானவாதி'' என்று கூறி நகைத்தான் விஜயகுமாரன்.

''நீயாக இருந்தால் என்ன செய்வாய் இந்த நிலையில்?'' என்று வினவினான் கிளைவ்.

''இந்தச் சிறு கோட்டை மீது இரண்டு பீரங்கிகளைக் கொண்டு குண்டு வீசுவேன். பிறகு ஒரு படைப் பிரிவுடன் சென்று கோட்டைக் கதவுகளைத் தாக்கிக் கோட்டைக்குள் நுழைந்து விடுவேன். பிறகு...''

''பிறகு?''

''சந்தாசாகிப்புக்காகக் காத்திருப்பேன்.''

''சந்தாசாகிப் வந்தால்?''

''கோட்டைக்கு வெளியில் உள்ள ஆழமான நீர்நிலையை அரணாகக் கொண்டு சந்தாசாகிபின் படை மீது பீரங்கிக் குண்டுகளை வீசுவேன். பிறகு இரவில் சுற்றிச் சென்று சந்தாசாகிபைப் பின்புறத்தில் எதிர்பாராத விதமாகத் தாக்குவேன். முடிவு உனக்குத் தெரியும்'' என்ற விஜயகுமாரன் விளக்கினான்.

கிளைவ் ஆமோதித்ததற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான். ''தட்ஸ் தீ கரெக்ட் மெதட் (அது தான் சரியான வழி)'' என்று கூறினான்.

அப்பொழுது அவர்களுக்குப் பின்னாலிருந்து, ''உங்கள் வழியை யார் கேட்கப் போகிறார்கள்?'' என்று ஒரு குரல் எழுந்தது.

திரும்பிப் பார்த்த இருவரும் திக்பிரமை பிடித்து நின்றார்கள். அவர்களுக்குப் பின்னால் ஆஜானுபாகுவான ஒரு முஸ்லீம் வீரன் நின்றிருந்தார். ''ஐ ஆம் அப்துல் வஹாப் கான்'' என்று தன்னை ஆங்கிலத்தில் அறிமுகம் செய்து கொண்டான்.

''ஐ ஆம்...'' என்று கிளைவ் துவங்கி வாசகத்தை முடிக்குமுன்பு முகம்மது அலியின் சகோதரரான அப்துல் வஹாப் கான். ''ஐ நோ யூ ஆர் கிளைவ். திஸ் பிரண்ட் ஈஸ் விஜயகுமார், யுவர்

லெப்டினண்ட்'' என்று வாசகத்தை முடித்தார். அத்துடன் நிற்காமல், ''காப்டன் கிளைவ்! ஐ ஆம் ஹாப்பி யூ ஆர் டேகிங் கமாண்ட் ஹியர் (காப்டன் கிளைவ்! இங்கே தலைமை ஏற்க நீங்கள் வந்தது எனக்கு மிக்க மகிழ்ச்சி)'' என்றும் உற்சாகத்துடன் கூறினார்.

காப்டன் கிளைவின் விழிகள் கம்பெனி நவாபின் சகோதரரை அநுதாபத்துடன் பார்த்தன. ''நான் இங்கே தலைமை ஏற்க வரவில்லை. உணவுப் பொருள் கொண்டு வந்தேன்'' என்றான்.

வஹாப்கானின் வதனம் சட்டென்று சுண்டி விட்டது. ''தலைமை ஏற்க வரவில்லையா?'' என்ற அவர் கேள்வியில் ஏக்கமும் இருந்தது.

''இல்லை.''

''ஆனால் நீங்கள் இந்த ஜின்ஜின்ஸைவிடச் செயல் வீரராயிற்றே?''

''யார் சொன்னது?''

வஹாப்கான் சிறிது சிந்தித்தார். ''நீங்கள் தேவிக் கோட்டையை வெற்றி கொண்டது எனக்குத் தெரியும். உங்கள் வீரம் கர்நாடகத்தில் பெரிதும் பரவியிருக்கிறது'' என்றார்.

கிளைவ் மிகவும் வியப்படைந்தான். ''நான் நம்பவில்லை'' என்றான் அடக்கத்துடன்.

''என் கூடாரத்துக்கு வாருங்கள்'' என்ற கூறிய வஹாப் கான் தமது கூடாரத்தை நோக்கி நடக்கலானார். அவர் நீண்ட கால்கள் வெகு வேகமாகவும் சீராகவும் பரவிச் சென்றன தரையில். அவரைப் பின் தொடர்ந்த கிளைவும் விஜயகுமாரனும் பெரிய வீரன் ஒருவனைத் தாங்கள் பின்பற்றுவதை உணர்ந்தார்கள். இத்தகைய வீரனைத் தம்பியாக உடைய முகம்மது அலி ஏன் கஷ்டத்தில் இருக்கிறார் என்பது இருவருக்கும் புரியவில்லை.

மூவரும் அப்துல் வஹாப்கான் கூடாரத்தை அடைந்ததும் அப்துல் வஹாப்கான் முதலில் உள்ளே நுழைந்த பிறகு மற்ற இருவரையும் உள்ளே வரும்படி சைகை செய்தார். உள்ளே சென்ற இருவரும் பெரும் பிரமைக்குள்ளானார்கள். ஜின்ஜின்ஸுக்கு மது புகட்டி மோகத்தையும் புகட்டிய அந்தச் சுதேசிப் பெண் கை கால்கள் கட்டப்பட்டுத் தரையில் உருட்டப்பட்டிருந்தாள். அவளை நோக்கி ஓர் ஆப்பிரிக்க வீரன் துப்பாக்கிப் பிடித்துக் கொண்டிருந்தான். அவளை அணுகிய அப்துல் வஹாப்கான், ''உம்! சொல். உன்னை அனுப்பியது யார்?'' என்று வினவினார்.

அவள் பதில் சொல்லாமல் மிரள மிரள விழித்தாள். ''சரி, அவளைக் கொன்று விடு'' என்று உத்தரவிட்ட அப்துல் வஹாப்கான் கிளைவையும் விஜயகுமாரனையும் பார்த்து, ''வாருங்கள் நாமும் சிறிது குடிப்போம்'' என்று அழைத்தார். அந்தச்

சமயத்தில் அந்தப் பெண் மீது குறிவைத்திருந்த துப்பாக்கியின் குதிரை இழுக்கப் பட்ட சத்தம் கேட்டது. ''வேண்டாம். சொல்லிவிடுகிறேன்'' என்று அந்தப் பெண் கிரீச்சென்று கத்தினாள்.

அப்துல் வஹாப்கான் திரும்பவும் அவளை நோக்கிச் சென்றார். ''சரி சொல்!'' என்றார்.

அந்தப் பெண் மடமடவென விஷயத்தைக் கக்கினாள். அதை கேட்ட கிளைவின் முகத்தில் கவலை பெரிதாகப் படர்ந்தது. ''இந்த ரகசியத்தை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?'' என்ற வினவினான் கிளைவ்.

''எங்களுக்கு வழிகள் பல இருக்கின்றன. அதில் இதுவும் ஒன்று'' என்ற அப்துல் வஹாப்கான் மர்மத்தை அவிழ்க்கத் துவங்கினார்.

22. *OMNIA AUDAX

அப்துல் வஹாப்கானின் கூடாரம் இந்திய நவாபுகளின் படாடோபத்துக்குத் தக்கபடி பெரிய பட்டுச் சீலைத் திரைகளுடனும், அழகிய விளக்குகளுடனும் இரண்டு பந்தங்களுடனும் காட்சியளித்தது. ஒரு கோடியிலிருந்த திரையின் சித்திர வேலை — அதை நீக்கினால் அடுத்தபடி வஹாப்கானின் பஞ்சணையிருக்கும் என நிரூபித்தது. கூடாரத்தின் ஒரு மூலையில் நவாபுகள் உபயோகப்படுத்தும் நீண்ட ஹுக்காகூட இருந்தது. இத்தகைய விமரிசையுடனிருந்த கூடாரத்தின் உள்ளே ஆஜானுபாகுவாய் நின்ற அப்துல் வஹாப்கானின் உருவம் மிகவும் கம்பீரமாகத் தெரிந்தது. கை கால் கட்டி உருட்டிவிடப்பட்டிருந்த பெண்ணைப் பார்த்து, ''உம். சொல்'' என்று அவர் விரட்டிய போது அவர் குரலில்கூட ஒரு தனி கம்பீரம் ஒலித்தது.

அந்தப் பெண் சொன்ன பதில்களை, அவற்றில் விளைந்த கதையை வஹாப்கான் மௌனமாகக் கேட்ட நிலையில் கூட ஓர் உறுதி இருந்தது.

ஆறடிக்கு மேலாகத் தன்னை நோக்கி நின்ற வஹாப்கானை நோக்கி அந்தப் பெண் சொன்னாள்:

''ஆற்காடு நவாப் சந்தாசாகிப் அவர்கள் இங்கு நடப்பதை வேவு பார்க்க என்னை அனுப்பினார். தினசரி நான் வேவு பார்த்து விஷயங்களைச் சொல்லியனுப்ப நள்ளிரவில் ஒரு வீரன் பிரிட்டிஷ் சிப்பாய்களின் உடையணிந்து படைத் தளத்தின் முகப்பில் நிற்பான். அவனிடம் விஷயங்களைக் கூற எனக்கு உத்தரவு. காப்டன்

* Omnia Audax (to Dare All) Chats on Military Curios - by Stanley c. Johnson, M.a., D.Sc., F.R.E.S. - Page 48.

ஜின்ஜின்ஸை முதலில் கையில் போட்டுக் கொள்ளும்படி எனக்கு உத்தரவு. அவரை மயக்குவது மிகச் சுலபம் என்று நவாப் சந்தாசாகிப் சொன்னார். 'காப்டன் ஜின்ஜின்ஸ் பெண் பித்துப் பிடித்தவன், தொடை நடுங்கி, அவனுக்கு நமது மதுவை நன்றாகப் புகட்டி விடு' என்று சொல்லி ஒரு மதுக் குப்பியையும் கொடுத்தார் நவாப். அவர் எதிர்பார்த்தது அப்படியே நடந்தது. மதுக் குப்பியை என் பாவாடைக்குள்ளிருந்த சராய் பையில் மறைத்த எடுத்து வந்தேன். என்னை ஜின்ஜின்ஸிடம் வீரர்கள் பிடித்துக் கொண்டு போய் விட்டதும் அவர்களை வெளியே செல்ல உத்தரவிட்டார் ஜின்ஜின்ஸ். அவரை மயக்க அவசியம் இல்லாது போயிற்று. அவரே என்னைப் பிடித்துக் கொண்டார் வெறியுடன். என் சராயிலிருந்த புட்டியையும் கையை விட்டு அவரே எடுத்தார். மதுவைப் புகட்டினேன். இங்கு இருக்கிற படை பலம், நீங்கள் கோட்டையைப் பிடிக்க முயன்று முடியாமல் போனது எல்லாவற்றையும் அவர் சொன்னார், மது மயக்கத்தில். வாலிகண்டபுறத்தில் அடிக்கடி என்னைப் போன்ற அழகிகள் கிடைப்பதால் இதை விட்டுப் போவதில்லையென்றும் கூறினார். அவர் பேசிக் கொண்டிருக்கையில் இவர் வந்தார்...''

இந்த இடத்தில் அந்தப் பெண் தயங்கவே, ''மேலே சொல்'' என்றார் வஹாப்கான்.

பெண் தொடர்ந்து, ''இவர் வந்து ஜின்ஜின்ஸின் மீது வெகுண்டு அவர் தலை மீது தண்ணீரைக் கொட்டி விட்டு வந்ததும் நான் பயமெடுத்து ஓடினேன் படைத் தளத்துக்கு, அப்பொழுது நீங்கள் பிடித்துக் கொண்டீர்கள்'' என்று கூறினாள்.

''சந்தாசாகிப் எந்த வித விவரங்களை அறியும்படி சொன்னார்?'' என்று வினவினார் வஹாப்.

''இங்கிருக்கிற படைகளின் எண்ணிக்கை சுமாராக, காப்டன்களின் பெயர்கள், உங்கள் கூடாரம் இருக்கும் இடம், உங்களைச் சுற்றியிருக்கும் பாதுகாப்பு'' என்றாள் அந்தப் பெண்.

வஹாப்கான் மெல்ல நகைத்தார். ''என்னைத் தீர்த்துக் கட்டப் பார்க்கிறார் சந்தாசாகிப்'' என்றும் கூறினார், கிளைவைப் பார்த்து. மீண்டும் அந்தப் பெண்ணை நோக்கி வினவினார்: ''அவ்வளவுதானா?'' என்று.

''ஆம்'' என்றாள் அவள்.

வஹாப்கான் திரும்பிப் பக்கத்தில் துப்பாக்கியைப் பிடித்துக் கொண்டிருந்த ஆப்பிரிக்க வீரனைப் பார்த்து, ''சரி, சுட்டுவிடு'' என்று உத்தரவிட்டுத் திரும்ப முயன்றார்.

''பொறுங்கள்'' என்று கூவினாள் அந்தப் பெண்.

''சொல், அந்த முக்கிய விஷயத்தை. எனக்கு ஏற்கனவே தெரியும்'' என்றார் வஹாப்கான்.

பெண் சற்று நேரம் மிரள மிரள விழித்தாள். கடைசியில் கிளைவின் மீதும் விஜயகுமாரின் மீதும் அவள் கண்கள் நிலைத்தன. கண்களை அவர்கள் மீதிருந்து அகற்றாமலே சொன்னாள்: 'காப்டன் கிளைவ் வந்திருக்கிறாரா என்பதையும், விஜயகுமாரன் என்ற ஒரு வீரன் வந்திருக்கிறாரா என்பதையும் அறிந்து வரச் சொன்னார். அவர்கள் வந்திருந்தால் அவர்கள் உறங்கும்போது அவர்களைப் பிச்சு வாளால் குத்தித் தீர்த்து விடவும் சொன்னார்.''

கிளைவின் விழிகள் வியப்பால் மலர்ந்தன. ''எதற்கு இந்த உத்தரவு? நான் என்ன செய்தேன் நவாபை?'' என்று வினவினான்.

''நீங்கள் இல்லாவிட்டால் இந்தப் பிரிட்டிஷ் படை ஜெயிக்க முடியாதென்று நவாப் அடிக்கடி தனது படைத் தலைவர்களிடம் சொல்கிறார். உங்கள் லெப்டினண்ட் அபாயகரமான வெறியன் என்றும் கூறுகிறார்'' என்றாள் அந்தப் பெண்.

அத்துடன் அந்தப் பெண்ணைக் கூடாரத்திலிருந்து அகற்றித் தனது அடிமைகளோடு சேர்த்துவிட உத்தரவிட்ட வஹாப்கான், ''காப்டன் கிளைவ்! இப்போது புரிகிறதா உங்கள் மகிமை? உங்கள் மகிமையென்ன, உங்கள் லெப்டினண்ட் மகிமையுங்கூடப் புரிந்து இருக்க வேண்டுமே உங்களுக்கு?'' என்று கேட்டுப் பெரியதாக நகைத்தார். ''சந்தாசாகிப் உங்கள் இருவர் உயிருக்கு ஈடாக ஆற்காட்டு ராஜ்யத்தில் பாதியை இனாமாகக் கொடுத்தார். இது எனக்கு முன்பே தெரியும்'' என்று விளக்கினார் நகைப்புக்கிடையே.

கிளைவ் கேட்டான், ''இந்த ரகசியம் உங்களுக்கு முன்பே எப்படித் தெரியும்?'' என்று.

''நான் பிடித்திருக்கும் மூன்றாவது வேவுகாரி இவள். முதல் வேவுகாரியே விஷயத்தைக் கூறிவிட்டாள். எனக்கு இங்கு வேறு வேலையும் இல்லை. இங்கு ஏப்ரல் முதல் வாரத்தில் ஜின்ஜின்ஸ் வந்தார். நான் அடுத்த வாரம் வந்தேன். இங்கு எங்களுக்குத் தூங்குவதைத் தவிர வேறு வேலை கிடையாது. வாலிகண்டபுரம் நகரத்தைப் பிடித்தோம், கோட்டையைப் பிடிக்க வில்லை. இந்த முகாமில் கோட்டைக்கு வெளியேயுள்ள இந்தச் சமநிலத்தில் சந்தாசாகிப் வந்து எங்களை அழிப்பதற்காகக் காத்திருக்கிறோம்'' என்று வெறுப்புடன் கூறினார் வஹாப்கான். ''சீக்கிரம் கோட்டையைத் தாக்கி உள்ளே நுழையுமாறோ, அல்லது முன்னேறிச் சந்தாசாகிபைப் தாக்குமாறோ காப்டன் ஜின்ஜின்ஸுக்குப் புத்தி சொல்லுங்கள்'' என்று துக்கம் நிரம்பிய குரலில் விண்ணப்பித்துக் கொண்டார்.

கிளைவின் கண்கள் மகாவீரரான அப்துல் வஹாப்கான் கண்களுடன் கலந்தன. ''காலையில் இதைப் பற்றி விவாதிப்போம்'' என்று கூறிய கிளைவ், கடைசியாக அந்தக் கூடாரத்தை விட்டு வெளியேறி, காப்டன் டால்டனுடைய கூடாரத்துக்கு வந்து

சேர்ந்தான். மறு நாள் பொழுது விடிந்ததும் காப்டன் டால்டனை நோக்கி, ''காப்டன்! அவசர ஆலோசனைக் கூட்டமென்று ஏற்பாடு செய்யும் படி ஜின்ஜின்ஸிடம் கூறு'' என்று உத்தரவிட்டான்.

''ஜின்ஜின்ஸ் மறுத்தால்...?'' என்று வினாவினான் டால்டன். கிளைவின் நிதானம் பறந்தது. ''மறுக்க முடியாது'' என்ற சீறினான் கடுங்குரலில்.

கிளைவ் எதிர்பார்த்தது சரியாயிற்று. காப்டன் ஜின்ஜின்ஸ் பேராலோசனை சபையைத் தன்னுடைய கூடாரத்தின் காலை வேளை உணவு முடிந்ததும் கூட்டினான். பிரிட்டிஷ் படையின் முக்கிய லெப்டினண்டுகள் இருவரும் காப்டன் டால்டனுடன் அப்துல் வஹாப்கானும், அவரது இருபடைத் தலைவர்களும் ஜின்ஜின்ஸின் கூடாரத்துக்குக் குறித்த நேரத்தில் வந்து சேர்ந்தார்கள். கடைசியாகக் கூடாரத்துக்குள் நுழைந்த கிளைவை, ஆசனத்திலிருந்து எழுந்திருக்காமலும் கை குலுக்காமலும் தலையை மட்டும் ஒரு புறம் கம்பீரமாகச் சாய்த்து வரவேற்றான் காப்டன் ஜின்ஜின்ஸ்.

கையாலாகாதவர்களுக்கு இயற்கையாக உள்ள அந்த வீம்பைச் சிறிதளவும் லட்சியம் செய்யாத கிளைவ் அங்கிருந்து ஒரு நாற்காலியில் அமர்ந்து விஜயகுமாரனையும் அமரச் சொன்னான். இருவரும் அமர்ந்ததும் காப்டன் ஜின்ஜின்ஸ் தனது தர்பாரைத் தொடங்கி, ''ஜென்டில்மேன்! வாட் வில் யூ ஹாவ்? குட் ஒயின், ஆர் விஸ்கி?'' என்று தனது விருந்தோம்பல் குணத்தைக் காட்டினான்.

கிளைவ் காப்டன் ஜின்ஜின்ஸைக் கொடுங்கண்களால் நோக்கினான். அந்தப் பார்வையைத் தொடர்ந்து, ''தாங்யூ காப்டன்! வி ஹாவ் நாட் கம் ஹியர் டு ட்ரிங் நார் டு டிபாச் (நன்றி காப்டன். இங்கு நாங்கள் குடிக்கவும் வரவில்லை; விபச்சாரத்துக்கும் வரவில்லை)'' என்று அவன் உதடுகள் சுடுச் சொற்களைக் கக்கின.

அவன் சொற்களின் காரணம் ஜின்ஜின்ஸுக்குப் புரிந்ததால் அவன் முகம் சிவக்கக் கம்பீரத்தை அதிகமாக கண்களில் காட்டி, ''யூ வாண்ட் டூ அட்வைஸ் மீ அபௌட் தி வார்? (போருக்கு எனக்கு யோசனை சொல்ல எண்ணுகிறாய்?)'' என்று வினவினான்.

கிளைவ் ஜின்ஜின்ஸை அலட்சியமாகப் பார்த்தான். ''யோசனையை நான் கண்டபடி விரயம் செய்வதில்லை. கேட்பவர்களுக்கு மட்டும் தான் சொல்வது வழக்கம்'' என்று பதிலும் சொன்னான், குரலிலும் அலட்சியம் ஒலிக்க. அத்துடன் நிற்கவில்லை கிளைவ். ''உனக்கு யோசனை சொல்ல இங்கு டால்டன் இருக்கிறார். அப்துல் வஹாப்கான் இருக்கிறார். இன்னொருவர் தேவையில்லை'' என்றும் கூறினான்.

காப்டன் ஜின்ஜின்ஸின் உதடுகளில் புன்சிரிப்புப் படர்ந்தது, ''யார் யோசனையும் தேவையில்லை எனக்கு. நாளைக்கு வால் கொண்டா கோட்டையைத் தாக்கப் போகிறேன்'' என்று தனது திட்டத்தையும் மெல்ல அவிழ்த்தான். இதைக் கேட்ட வஹாப்கான் நகைத்தார். ''அது தான் சரியான வழி'' என்றும் இகழ்ச்சியுடன் கூறினார் நகைப்புக்கிடையே.

இகழ்ச்சி ஒலியைக் கவனிக்க வில்லை ஜின்ஜின்ஸ். ''ஒப்புக் கொள்கிறீரா?'' என்று வினவினான் பெருமையுடன்.

''ஒப்புக் கொள்கிறேன். நம்மை அழித்துக் கொள்ள இதை விட சிறந்த வழி கிடையாது'' என்ற வஹாப்கான் புன்முறுவல் காட்டினான்.

வஹாப்கான் தன்னைக் கேலி செய்கிறார் என்பது அப்போது தான் ஜின்ஜின்ஸ் மூளையில் எட்டியது. ''போர்த் தந்திரம் என்னை விட உமக்குத் தெரியுமா?'' என்று வினவினான், ஜின்ஜின்ஸ் கடுமையுடன்.

''தந்திரம் தெரியாது. போர் தெரியும். நாம் கோட்டையை நோக்கி இப்பொழுது படையைத் திருப்பினால் பின்புறத்தில் சந்தாசாகிப் தாக்கத் தயாராக இருக்கிறார்'' என்றார் வஹாப்கான்.

''சந்தாசாகிபா?'' காப்டன் ஜின்ஜின்ஸின் குரல் லேசாக நடுங்கியது.

''எஸ்'' என்ற வஹாப்கான் ஆங்கிலத்தில் இறங்கினார்.

''வேர் ஈஸ் ஹி?''

''வித்தின் த்ரீ மைல்ஸ்.''

காப்டன் ஜின்ஜின்ஸ் முகத்தில் அதிர்ச்சி தெரிந்தது. ''யூ ஆர் ஷ்யூர்? (உங்களுக்கு நிச்சயமாகத் தெரியுமா?)'' என்று வினாவினான் ஜின்ஜின்ஸ்.

''டாம் ஷியூர்'' என்று எரிச்சலுடன் கூறினார் வஹாப்.

''வாட் டூ யூ வாண்ட் மி டு டூ? (இப்பொழுது என்னை என்ன செய்ய சொல்கிறீர்கள்?)'' என்று வினவினான் ஜின்ஜின்ஸ்.

அது வரை வாளாவிருந்த கிளைவ், ''அட்வான்ஸ் அண்டு அட்டாக் (முன்னேறித் தாக்கு)'' என்றான்.

''டேன்ஜரஸ் (அபாயமானது)'' என்றான் ஜின்ஜின்ஸ்.

கிளைவ் கடுமை நிரம்பிய கண்களால் உற்று நோக்கினான் ஜின்ஜின்ஸை. ''அவர் மாட்டோ மஸ்ட் பி ஆம்னியா ஆடாக்ஸ் (நமது லட்சியம் எந்த ஆபத்தையும் எதிர் கொள்ளத் தக்கதாய் இருக்க வேண்டும்)'' என்று ஆங்கிலமும் லத்தீனும் கலந்த மொழியில் மிக உக்கிரத்துடன் கூறினான் காப்டன் கிளைவ். தனது போர் முறையையும் விளக்கினான்.

www.thamizhthenee.blogspot.com

23. அடிமைப் பெண்

அசட்டுப் பிடிவாதம், அதைரியம், முடிவுகளை எடுக்க முடியாத மனம் - இந்த மூன்றில் ஏதாவது ஒன்று இருந்தாலே போதும் மனிதன் குட்டிச் சுவராவதற்கு. இந்த மூன்றும் காப்டன் ஜின்ஜின்ஸிடம் முழு அளவில் இணைந்திருந்ததால் அவன் கிளைவின் யோசனையையோ வஹாப்கான் யோசனையையோ கேட்க மறுத்தான். ''துணிவுடன் முன்னேறித் தாக்கு என்ற யோசனையைச் சொல்லி அதற்கு எடுத்துக்காட்டாக ராணுவ ஆணைகளில் ஒன்றான, ''ஆம்னியா ஆடாக்ஸையும்'' கிளைவ் சுட்டிக் காட்டிய போது, ''சந்தாசாகிப்பின் படையில் 500 பிரெஞ்சுக்காரர்கள் இருக்கிறார்கள். தவிர சுதேசிப் படையும் நம்மைவிட அதிகமானது'' என்று சொன்னான் ஜின்ஜின்ஸ்.

''உங்ளிடம் 600 பிரிட்டிஷ்காரர்கள் இருக்கிறார்களே'' என்று கிளைவ் கேட்டதற்கு, ''பெருவாரியான எதிரியின் சுதேசிப் படை பிரிட்டிஷ்காரர்களை அழித்துவிடும்'' என்று சால்ஜாப் சொன்னான், ஜின்ஜின்ஸ்.

''நான் 4000 வீரர்களை அழைத்து வந்திருக்கிறேன்'' என்று அப்துல் வஹாப்கான் கூறியதற்கு, ''அவர்களுக்குப் பயிற்சிப் போதாது'' என்றான் ஜின்ஜின்ஸ். இதைக் கேட்ட அப்துல் வஹாப்கான் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. ''எங்களுக்குப் பயிற்சி இருக்கிறதோ இல்லையோ, போரில் இறங்காமல் பெண்களிடம் குலாவவும் குடிக்கவும் உங்கள் காப்டனுக்குப் பயிற்சி இருக்கிறது'' என்று மற்றவர்களை நோக்கிச் சீறிவிட்டுச் சரேலென்று எழுந்து கூடாரத்தைவிட்டு வெளியேறினான் அப்துல் வஹாப் கான்.

அது வரையில் நிதானத்துடன் இருந்த கிளைவின் முகம் திடீரென நிதானத்தை இழந்து கோபத்தில் குப்பெனச் சிவந்தது. ''விஜயகுமார்! நீ சென்று நவாப்பைச் சாந்தப்படுத்து'' என்று விஜயகுமாரனுக்கு உத்தரவிட்டு, அவன் வெளியே சென்றதும் சுடுவிழிகளைக் காப்டன் ஜின்ஜின்ஸ் மீது திருப்பினான். ''காப்டன்! இந்த ஒரு சமயந்தான் இருக்கிறது வெற்றிக்கு. வெள்ளைக்கார சோல்ஜர்கள் உங்களிடம் அதிகம். நான் எடை போட்ட வரையில் அப்துல் வஹாப்கானும் அவரது சிப்பாய்களும் உயிரைவிடத் தயாராக இருக்கிறார்கள். இப்போது உடனே முன்னேறிக் கோட்டைக்குச் செல்லும் நீர்நிலையைக் கைப்பற்றுங்கள். பிறகு சந்தாசாகிப் வந்தால் நீர்நிலை உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும். கோட்டைச் சுவர் மறைவளிக்கும். மறைவிலிருந்து நீங்கள் தாக்கலாம். ஆகவே உடனடியாகக் கூடாரங்களைக் கழற்றிப்

போருக்குத் தயாராகுங்கள்'' என்று கூறினான். சொற்களில் கடுமையைக் காட்டி.

இதைக் கேட்டதும் காப்டன் ஜின்ஜின்ஸ் தனது உபதளபதிகளை ஒருமுறைச் சுற்றி நோக்கினான், 'கம்பீரமாக. பிறகு வினவினான் கிளைவை நோக்கி, ''உன் பதவி என்ன?'' என்று.

''காப்டன்''என்றான் கிளைவ், ஜின்ஜின்ஸின் கண்களுடன் தனது கண்களைக் கலந்து.

ஜின்ஜின்ஸ் அந்தக் கண்களின் கூரிய நோக்கைத் தாளாது டால்டனை நோக்கித் திருப்பினான் தனது கண்களை. ''காப்டன் டால்டன்! காப்டன் கிளைவ் இங்கு எதற்காக வந்திருக்கிறார்?'' என்று வினவினான்.

''உணவுப் பொருள் கொண்டு வந்திருக்கிறார்'' என்றான் காப்டன் டால்டன், குரலில் வெறுப்பைக் காட்டி.

அந்த வெறுப்பின் காரணத்தை உணர்ந்த ஜின்ஜின்ஸ் கிளைவை மீண்டும் நோக்கி, ''காப்டன் கிளைவ்! இந்தப் படையைத் தலைமை தாங்கி நடத்த வந்திருக்கிறீரா?'' என்று வினவினான்.

''இல்லை.''

''கவர்னர் உத்தரவு என்ன?''

''உணவுப் பொருள்களை உங்களுக்குச் சப்ளை செய்வது,''

''வேறு உத்தரவு இல்லையே?''

''இல்லை.''

''தென் யூ கான் கோ. போரை நான் கவனித்துக் கொள்கிறேன்'' என்றான் ஜின்ஜின்ஸ் திட்டவட்டமாக.

காப்டன் கிளைவ் ஜின்ஜின்ஸின் தோரணையைக் கண்டு சிறிதும் சளைக்கவில்லை. ''வேவு பார்க்க வரும் பெண்களைக் கட்டிக்கொண்டு போரை நடத்த முடியாது'' என்று கடுங்குரலில் சொன்னான்.

காப்டன் ஜின்ஜின்ஸின் முகத்தில் அப்போதான் திகில் உதயமாயிற்று. ''என்ன! வேவு பார்க்கும் பெண்களா!'' என்று வியப்பும் திகிலும் கலந்த குரலில் வினவினான்.

''ஆம்.''

''எங்கே பார்த்தாய் அவர்களை?''

''முதல் இரண்டு பேரைப் பார்க்கவில்லை. மூன்றாமவளை இந்தக் கூடாரத்தில் உங்கள் அணைப்பில் பார்த்தேன்.''

''அவள் வேவுகாரியென்று உனக்கு எப்படித் தெரியும்?''

''அவள் உன் படைத் தளத்தின் ஓரத்துக்குச் சென்று அங்கு வரும் சந்தாசாகிபின் வீரனுக்குச் செய்தி கொண்டு போவதற்கு முன்னால் வஹாப்கான் அவளைப் பிடித்து விஷயத்தைக் கக்க வைத்தார்.''

''இதை ஏன் என்னிடம் நீங்கள் சொல்ல வில்லை?''

''நான் கேவலம் உணவுப் பொருள் கொண்டு வரும் காபடன்'' என்றான் கிளைவ் இகழ்ச்சி நிரம்பிய குரலில். பிறகு தன் ஆசனத்திலிருந்து எழுந்து நின்று கொண்டு, ''ஜின்ஜின்ஸ்!'' என்று அழைத்தான் காப்டன் என்ற சொல்லைக் கைவிட்டு.

''யூ ஆர் டாக்கிங் டு காப்டன் ஜின்ஜின்ஸ்'' கடுமை கலந்திருந்தது ஜின்ஜின்ஸின் குரலில்.

''ஐ நோ'' என்ற கிளைவ், ஜின்ஜின்ஸைப் பரம இகழ்ச்சியுடன் நோக்கினான். ''எ மான் பிகம்ஸ் காப்டன் நாட் பை தி டைட்டில் பட் பை பர்ஃபாமன்ஸ் (ஒரு மனிதன் பட்டத்தால் காப்டனாவதில்லை, சாதனையால் ஆகிறான்)'' என்றும் மிகக் கடும் சொற்களை பிரயோகித்து மேலும் தொடர்ந்தான் அதே குரலில்: ''காப்டன்! உடனடியாகப் போரைத் துவக்குங்கள். இல்லையேல் கோட்டை வாயிலுக்கு எதிரிலுள்ள நீர்நிலையையாவது கைப்பற்றி எதிரி உங்களை அழிக்காத நிலையை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் யார் யோசனையும் தேவையில்லையென்று சொன்னாலும் நான் சொல்கிறேன் யோசனையை. கசப்பாயிருந்தாலும் உண்மையைக் காணவும், ஒப்புக் கொண்டு செயலாற்றவும் முற்படுங்கள். நான் உணவுப் பொருள் கொண்டும் வரும் காப்டன்தான். ஆனால் கவர்னரிடம் இங்குள்ள நிலைமையை நான் சொல்வதிலிருந்து என்னை யாரும் தடுக்க முடியாது. துரிதமாக நீங்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால் இரு குற்றங்கள் உங்கள் மேல் செலுத்தப்படும். 1. நீங்கள் தக்க சமயத்தில் நடவடிக்கை எடுக்காதது. 2. நீங்கள் நம்மை நம்பியுள்ள முகம்மது அலியைக் கைவிட்டது. நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.'' இதற்கு பிறகு அந்தக் கூடாரத்திலிருந்து வெளியேறினான் கிளைவ்.

''காப்டன்! காப்டன்!'' என்ற டால்டனின் அழைப்புக் குரல் சிறிது தடுக்கவே கிளைவ் நின்று திரும்பி நோக்கினான்.

''காப்டன்! இன்னும் ஒரு வாரம் இங்கே தங்க முடியாதா?'' என்று வினவினான் காப்டன் டால்டன்.

''முடியாது. கவர்னர் உத்தரவில்லை அதற்கு.''

''இங்குள்ள நிலைமையை எடுத்தெழுதி அனுமதி கேட்க முடியாதா?''

''அனுமதி கேட்டாலும் பயனில்லை. முட்டாளான ஜின்ஜின்ஸிடம் என்னால் வேலை செய்ய முடியாது.''

''ஜின்ஜின்ஸ்...''

''எனக்குச் சீனியர்.''

''இங்கு சீனியாரிடி எதற்கு? திறமைதானே தேவை?''

காப்டன் கிளைவ் இதற்கு உடனடியாகப் பதில் சொல்லவில்லை. சிறிது சிந்தித்துவிட்டு, ''காப்டன் டால்டன்!

பிரிட்டிஷ் படை சில சம்பிரதாயங்களால் கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறது. அதை மீறுவதற்கில்லை. கவர்னர் உத்தரவில்லாமல் சீனியரான காப்டன் ஜின்ஜின்ஸின் உத்தரவுகளை மீறி நான் எதுவும் செய்ய முடியாது. நீ இருக்கும் நிலையில் தான் நானும் இருப்பேன். எதற்கும் நான் போய்க் கவர்னரிடம் விஷயங்களைச் சொல்கிறேன். அப்துல் வஹாப்கான் நம்மிடமிருந்து நழுவ விடாமல் நீ பார்த்துக் கொள்'' என்று கூறி விட்டு அப்துல் வஹாப்கான் கூடாரத்தை நோக்கி நடந்தான். அங்கு வஹாப்கானுக்குத் தைரியம் சொன்னான்; ''நவாப்! பிரிட்டிஷ்காரர்கள் சிறந்த நண்பர்கள். உங்களையோ உங்கள் அண்ணனையோ கைவிடமாட்டார்கள். உறுதியாய் நம்புங்கள்'' என்று. அத்துடன் கவர்னரிடம் விஷயங்களை விவரிப்பதாகவும் கூறிவிட்டு விஜயகுமாரனை அழைத்துக் கொண்டு வஹாப்கானிடம் அனுமதி பெற்று வேவுகாரப் பெண்ணையும் கூட்டிக்கொண்டு ஸெய்ன்ட் டேவிட் கோட்டையை நோக்கிப் பயணமானான்.

அங்கிருந்து புறப்பட்ட மூன்றாம் நாள் ஸெயின்ட் டேவிட் கோட்டையை அடைந்து கவர்னரிடம் விஷயங்களை அறிவித்து, அந்த வேவுகாரியையும் அவர் முன்பு நிற்க வைத்தான். அன்றும் கவர்னர் அந்த ஆலோசனை அறையில் தானிருந்தார். வாலிகண்ட புறத்தின் பயங்கர நிலையைக் கேட்டபோதுகூட அவர் முகத்தில் எந்த வித உணர்ச்சியும் தெரியவில்லை. அவர் விழிகளில் அந்த இரும்பு நோக்கு மட்டும் இருந்து கொண்டே இருந்தது. சிறிது நேரம் எதிரே நின்ற அடிமைப் பெண்ணை உற்று நோக்கினார். பிறகு யாரும் கேட்காத ஒரு கேள்வியை மெல்லக் கேட்டார் ஸாண்டர்ஸ், 'ஹௌ ஆர் யூ ரிலெடட் டு சந்தாசாகிப்?'' என்ற அந்த கேள்வியைக் கேட்டு கிளைவ் அசந்து போனான். அந்தப் பெண்ணின் முகத்திலோ இணையிலா பிரமிப்பு பரவியது. அதிலிருந்து அவளுக்கு ஆங்கிலமும் சிறிது தெரியும் என்பதைப் புரிந்து கிளைவின் பிரமிப்பு எல்லை கடந்தது.

இத்தனைக்கும் அந்தப் பெண் வாயைத் திறக்கவில்லை. ஆகவே கவர்னர் ஸாண்டர்ஸே சொன்னார், ''யூ ஆர் ஹிஸ் டாட்டர்'' என்று.

இதற்கு அந்தப் பெண் தலை அசைத்தாள். கவர்னர் மந்திரவாதியாகத்தாள் இருக்க வேண்டும் என்றும் கிளைவ் தீர்மானித்தான். ''யுவர் எக்ஸலென்ஸி!'' என்று பிரமிப்புடன் துவங்கினான் பேச.

கவர்னர் கையசைப்பினாலேயே அவனை மேலே பேச விடாமல் அடக்கி விட்டு, ''லுக் அட் ஹர் பேஸ்'' என்று கூறினார்.

கிளைவ் அந்தப் பெண்ணின் முகத்தை நோக்கினான். சந்தாசாகிபின் முகச் சாயல் அதில் பூர்ணமாயிருந்ததை அப்போது

தான் கண்டான். இருப்பினும் கவர்னருக்கு அந்த விஷயம் எப்படித் தெரியும் என்று அவனால் புரிந்து கொள்ள முடியாததால் நிகைத்து நின்றான்.

புன்சிரிப்பையைக் காட்டிப் பழக்கமில்லாத கவர்னர் தாமஸ் ஸாண்டர்ஸின் முகமும் சிறிது உவகையின் சாயலைக் காட்டியது. கவர்னர் மௌனமாகவே தமது மேஜை டிராயரைத் திறந்து அங்கு எதையோ தேடி, முடிவில் ஒரு காகிதச் சித்திரத்தை எடுத்து மேஜைமீது போட்டார். அதில் சந்தாசாகிபின் உருவம் தத்ரூபமாகக் காட்சியளித்தது. ''ஐ லைக் டு நோ மை எனிமீஸ் அண்டு ப்ரண்ட்ஸ்'' என்று கூறி முகம்மது சித்திரமொன்றையும் எடுத்து மேஜை மீது போட்டார்.

''ஹௌ டிட் யூ கெட் திஸ்?'' என்று சந்தாசாகிபின் படத்தைச் சுட்டிக் காட்டி வினவினான் கிளைவ்.

''ஐ ஆஸ்க்ட் முகம்மது அலி டு ஸெண்ட் ஒன்'' என்றார் கவர்னர்.

கிளைவ் அதற்கு மேல் எதுவும் பேச வில்லை. கவர்னரின் உத்தரவுக்காக எதிர்பார்த்து நின்றான். கவர்னர் அவனைக் கவனிக்காமல் அந்தப் பெண்ணைப் பார்த்து, ''யூ வாண்ட் டு கோ டு யுவர் ஃபாதர்? (உன் தந்தையிடம் போக விரும்புகிறாயா)'' என்று வினவினார்.

''ஐ ஆம் நாட் ஹிஸ் ஸ்ட்ரெய்ட் டாட்டர் (நான் அவர் நேர் பெண்ணல்ல)'' என்ற கூறினாள் அவள்.

''டாட்டர் ஆப் எ ஸ்லேவ்? (அடிமைப் பெண்ணுக்குப் பிறந்தவளா)''

''எஸ்'' என்றாள் அவள்.

''எனிவே சந்தாசாகிப் ஹாஸ் ட்ரெய்ன்ட் யூ வெரி வெல் (எப்படியிருப்பினும் சந்தாசாகிப் உன்னை நன்றாகப் பழக்கியிருக்கிறார்)'' என்று கூறிய கவர்னர், ''காப்டன்! ரிலீஸ் ஹர் அண்டு ஹாவ் ஹர் லேப்லி டெலிவர்ட் டு ஹர் பாதர். (காப்டன்! இவளை விடுதலை செய்து ஜாக்கிரதையாகச் சந்தாசாகிபிடம் அனுப்பிவிடு!)'' என்றார்.

முடியாதென்பதற்கு அறிகுறியாகக் கிடுகிடுவென்று பக்கவாட்டில் தலையசைத்தாள் அவள். ''நான் போனால் நவாப்கொன்று விடுவார்'' என்றும் திட்டவட்டமாகக் கூறினாள் ஹிந்துஸ்தானியில்.

இதைக் கிளைவ் மொழிப் பெயர்த்தவுடன் கவர்னர் கேட்டார் ஆங்கிலத்தில், ''என்ன செய்யப் போகிறாய்?'' என்று.

அந்தப் பெண் சொன்ன பதிலைக் கேட்டதும் எதற்கும் அசையாத கவர்னரும் அசைந்து சிரித்தார் பலமாக. கிளைவோ சொல் செயல் இரண்டையும் இழந்து நின்றாள்.

''நான் இனி இவருக்குச் சொந்தம்'' என்று அவள் கிளைவை நோக்கி கையைக் காட்டினாள். அது மட்டுமல்ல. தனது உரிமையை ஊர்ஜிதம் செய்ய அவன் பக்கத்தில் போயும் நின்று கொண்டாள்.

24. காப்டனின் சங்கடம்

எதற்கும் பிரமிக்காத காப்டன் ராபர்ட் கிளைவ் அந்த அடிமைப் பெண்ணின் சொல்லைக் கேட்டும் செயலைக் கண்டும் அடியோடு அதிர்ச்சிக்குள்ளாகி, கவர்னர் ஸாண்டர்ஸ் முன்பு ஆடு திருடிய கள்ளன்போல் விழித்துக் கொண்டு நின்றாள் பல விநாடிகள். சிறிது அசைந்தாலும் பக்கத்தில் நிற்கும் அந்த அடிமைப் பெண்ணின் உடல் தன்மீது பட்டுவிடும் என்ற பயத்தில் பக்கவாட்டிலோ பின்னாலோகூட நகராமல் சிலை போலவே காட்சியளித்தான். ஆனால் அந்த அடிமைப் பெண் சும்மா இல்லை. கிளைவின் ஒரு கையுடன் தனது கையைப் பின்னிக் கொண்டாள். ''அடிமைக்கு உத்தரவிடுங்கள்'' என்று கேட்டாள் ஹிந்துஸ்தானியில்.

''நீ எனக்கு அடிமையுமில்லை, நான் உத்தரவிட ஏதுமில்லை'' என்று கடுப்புடன் பதில் கூறினான் கிளைவ் அரைகுறை ஹிந்துஸ்தானியில்.

அந்த நிலையில் ஸாண்டர்ஸின் இதழ்களிலும் புன்முறுவல் அரும்பி, அவரது வாயிலிருந்த பைப்பும் லேசாக அசைந்தது. அந்தப் பைப்பை எடுத்துக் கையில் வைத்துச் சிறிது நேரம் திருகிக் கொண்டே இருந்த கவர்னர், ''காப்டன்! தி கேர்ல் இஸ் ப்யூடிஃபுல்'' என்று குறிப்பிட்டார். அவர் சொற்களில் நேரடியாக உணர்ச்சி தெரியாவிட்டாலும் மறைமுகமாக விஷமம் ஊடுருவி நின்றது.

காப்டன் கிளைவ் நின்ற இடத்தில் லேசாக அசைந்து அவள் கையிலிருந்து தன் கையை விடுவித்துக் கொண்டான். பிறகு கவர்னரை நோக்கி, ''யுவர் எக்ஸலன்ஸி! பிரிட்டிஷ் படை அடிமைகளை ஏற்பது வழக்கமல்ல'' என்றான்.

கவர்னர் ஸாண்டர்ஸ் உற்சாக நிலையில் இருந்ததால் நாற்காலியில் சிறிது சாய்ந்து உட்கார்ந்து, ''காப்டன்! இன் தி ஆர்ட்டிகில்ஸ் கவர்னிங் மிலிடரி டிஸ்ப்ளின் ஐ டோன்ட ஃபைன்ட் எனி ரெபரென்ஸ் டு ஸ்டேட்டஸ் ஆப் ஸ்லேவ் கேர்ல்ஸ் (காப்டன், தமது ராணுவக் கட்டுப்பாட்டு விதிகளில் அடிமைப் பெண்களின் அந்தஸ்து பற்றிய குறிப்பு எதையும் காணவில்லை'') என்று கூறினார்.

இந்தச் சமயத்தில் அந்த அடிமைப் பெண்ணும் உரையாடலில் கலந்துக் கொண்டு, ''யுவர் எக்ஸலென்ஸி இஸ் ரைட்'' என்று சொன்னாள்.

இதைக் கேட்ட கிளைவ் அசந்து போய், ''உனக்கு இங்கிலீஷ் தெரியுமா?'' என்று வினவினான்.

''இங்கிலிஷ், பிரெஞ்சு இரண்டு மொழிகளில் எங்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது'' என்றாள் அவள்.

''எங்களுக்கு என்றால் சந்தாசாகிபின் பெண்களுக்கா?'' என்று வினவினான் கிளைவ்.

''இல்லை,'' என்றாள் அடிமைப் பெண்.

''வேறு யாருக்கு?''

''அடிமைகளுக்கு. நான் ஒரு பெண் இருக்கிறேன் என்பது கூட நவாபுக்குத் தெரியாது. எத்தனையோ அடிமைகள். எத்தனையோ பெண்கள். எல்லாரையும் நவாப் அறிய முடியாது. எங்களுக்குப் பயிற்சியளிக்கும் ஹவில்தார்களுக்குத்தான் தெரியும்.''

கிளைவ் சிந்தனையில் இறங்கினான். கவர்னர் ஸாண்டர்ஸும் சிறிது சிந்தித்தார். ''காப்டன்! பெட்டர் டேக் தி கேர்ல் டு யுவர் ரூம். வெயிட் ஹியர் ஃபார் ஃபிஃப்டீன் டேஸ் (காப்டன்! இந்தப் பெண்ணை உங்கள் அறைக்கு அழைத்துச் செல்லுங்கள். இங்கேயே பதினைந்து நாட்கள் தங்கட்டும்)'' என்று முடிவில் உத்தரவிட்டார்.

கிளைவும் ஒரு தீர்மானத்துக்கு வந்து கவர்னர் கதவைத் திறந்து, ''லெப்டினண்ட்!'' என்று அழைக்க விஜயகுமாரன் உள்ளே தோன்றிக் கவர்னரை வணங்கினான். ''காப்டன்'' என்று கிளைவையும் வணங்கி உத்தவை எதிர்பார்த்து நின்றான்.

அடுத்த விநாடி இடப்பட்ட கிளைவின் உத்தரவு விஜயகுமாரனைத் திகைக்க வைத்தது. ''லெப்டின்ட்! இவளை எனது அறைக்கு அழைத்துப் போ!'' என்று உத்தரவிட்டதைக் கேட்டதும், கிளைவுக்குச் சித்தப் பிரமையில்லையென்பதை உறுதி செய்துகொள்ள அவனை ஒரு கணம் கூர்ந்து நோக்கினான் விஜயகுமாரன். பிறகு ''உங்கள் அறைக்கா?'' என்று வினவினான்.

இந்தச் சமயத்தில் கவர்னர் இடைபுகுந்து, ''லெப்டினன்ட், காப்டன் கிளைவுக்கு இந்த மாளிகையில் ஒரு தனி அறை எப்போதும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதோ மாடியில் கோடி அறை'' என்று அறிவிப்பை விடுவித்தார்.

விஜயகுமாரனுக்குச் சிந்திக்கவும் அவகாசமில்லாததால், ''ஆம்'' என்று அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு அவள் பின்தொடர வெளியே சென்றான்.

அவ்விருவரும் சென்ற பிறகு கிளைவ் கவர்னரை நோக்கி, ''யுவர் எக்ஸலன்ஸி, வாட் இஸ் காமெடி அபௌட்? (யுவர் எக்ஸலென்ஸி! இந்த ஹாஸ்ய நாடத்துக்கு என்ன அர்த்தம்?)'' என்று வினவினான்.

கவர்னர் ஒரு முறை பைப்பை வாயில் வைத்துப் புகையை நன்றாக இழுத்து வெளியிட்டார். ''ஐவில் ராதர் டர்ம் இட் எ ட்ராஜடி (இதை நான் விபரீதம் என்று கருதுவேன்)'' என்றும் சொன்னான்.

''என்ன விபரீதம் இதில்?''

''ஒரு அழகி கிடைக்கிறாள்...''

''ஆம்.''

''அவள் பிரிட்டிஷ் காப்டனிடம் அடிமையாயிருக்க, அவன் எதைச் சொன்னாலும் செய்ய...''

''யுவர் எக்ஸலென்ஸி...''

''செய்யத் தயாராயிருக்கிறாள். அப்படியிருக்க ஒரு ராணுவ காப்டன் அவளைக் கண்டு நடுங்குகிறான்'' என்ற கவர்னர், ''மை பாய் யூ ஆர் லக்கி (தம்பி நீ அதிர்ஷ்டசாலி)'' என்றும் கூறி அவன் போகலாமென்பதற்கு அடையாளமாகக் கையை அசைத்தார்.

காப்டன் அவருக்குத் தலைவணங்கி வெளியே வந்து தனது அறையை அடைந்ததும் அங்கு உண்மையாகவே விபரீத நிலை இருந்தது. அறை வாயிற்படியில் விஜயகுமாரன் உட்கார்ந்திருந்தான். உள்ளே அடிமைப் பெண், கிளைவுக்குப் படுக்கையை அங்கிருந்த சிறு கட்டிலின்மீது விரித்துக் கொண்டிருந்தாள். அந்த நிலையைக் கண்ட கிளைவ் சினத்தின் வசப்பட்டு, ''லெப்டினன்ட்!'' என்று கண்டிப்பு நிரம்பிய குரலில் விஜயகுமாரனை அழைத்தான்.

விஜயகுமாரன் சட்டென்று எழுந்து சல்யூட் அடித்து, ''எஸ் காப்டன்!'' என்று உத்தரவுக்கு எதிர்பார்த்து நின்றான்.

''இங்கு ஏன் வாயிற்படியில் உட்கார்ந்திருக்கிறாய்?'' கிளைவின் குரலில் கோபம் நிரம்பி வழிந்தது.

''அவள் உள்ளே விட மறுக்கிறாள்.''

''அவள் உத்தரவுபடி நீ நடக்க வேண்டுமா?''

''இல்லை.''

''பின் உள்ளே செல்வதுதானே?''

''செல்ல முயன்றேன். தலையணையை எடுத்து வீசினாள் என்மீது.''

''பிறகு?''

''பிடித்தும் தள்ளினாள்.''

''இதைச் சொல்ல உனக்கு வெட்கமாயில்லை?''

''இல்லை. முதலில் அவள் பலசாலி, இரண்டாவது உங்கள்....''

''விஜயகுமார்!''

''அவள்தான் சொன்னாள்!''

''என்ன சொன்னாள்?''

''உங்களுக்குச் சொந்தமென்று.''

இதைச் சொன்ன விஜயகுமாரன் வெளிப்படையாகச் சிரிக்கவில்லையென்றாலும் உள்ளூற நகைப்பதை அவன் முகம் தெளிவாகக் காட்டியது.

கிளைவ் அவன் முகத்தைக் கவனித்த விஷயத்தை உணர்ந்து கொண்டாலும் உணராதது போலவே நடித்து, ''விஜயகுமார்! யூ கம் வித் மி'' என்று கட்டளையிட்டு அறைக்குள் சென்றான். விஜயகுமாரனும் பின்தொடர்ந்தான். கிளைவ் உள்ளே நுழைந்ததும் அவன் ஹாட்டை அந்தப் பெண்ணே கழற்றி எட்ட இருந்த கோட் ஸ்டாண்டில் மாட்டினாள். பிறகு அவன் கோட்டையும் அவிழ்த்து அதற்குப் பக்கத்தில் மாட்டி விட்டாள். கிளைவ் பிரமை பிடித்தவனாய்ச் சட்டென்று கட்டிலில் போய் உட்கார்ந்துகொண்டான். அந்தப் பெண் தூரத்திலிருந்த பீங்கான் பேஸினில் எட்ட இருந்த மண் கூஜாவிலிருந்து நீரை ஊற்றி ஒரு டவலையும் எடுத்துக் கிளைவிடம் நீட்டினாள். கிளைவ் ஏதோ சொப்பனத்தில் நடப்பவன்போல் பேஸினில் முகம் கைகள் கழுவி டவலால் துடைத்துக் கொண்டான். பிறகு கிளைவுக்கும் விஜயகுமாரனுக்கும் உணவை அந்தப் பெண்ணே பரிமாறினாள். அவர்கள் உணவருந்திய பின் தானும் நிதானமாகக் கிளைவின் பிளேட்டிலேயே உணவைப் பரிமாறிக் கொண்டு அருந்திக் கை கழுவினாள். ப்ளேட் முதலியவற்றைப் பக்கத்தறையில் அலம்பிக் கொண்டு வந்து சுத்தமாக வைத்தாள்.

அவள் நடவடிக்கைகளைக் கிளைவும் விஜயகுமாரனும் வேடிக்கையாகக் கவனித்துக் கொண்டு ஒருவன் படுக்கையிலும் இன்னொருவன் நாற்காலியிலும் உட்கார்ந்திருந்தார்கள். அலுவல்களைச் சீராக முடித்த பின் அவள் விஜயகுமாரனை நோக்கி, ''லெப்டினண்ட்!'' என்ற அழைத்தாள்.

''எஸ் மேடம்'' என்றான் விஜயகமாரன்.

''யூ நாட் ஸ்பீக் குட் இங்கிலீஷ்'' என்றாள் அப் பெண்.

''யூ மீன் மீ?''

''எஸ்.''

''ஹொய்?''

''ஐ ஆம் நோட் மேடம்; ஐ ஆம் மிஸ்.''

இதைக் கேட்ட கிளைவ் தன்னையும் மறந்து கைகளைத் தட்டி விட்டான்.

''யூ ஸீ! மை லார்ட் அப்ரிஷியேட்ஸ் மி (பார்த்தாயா? என் தலைவர் என்னைப் பாராட்டுகிறார்)'' என்றாள் அடிமைப் பெண்.

கிளைவின் முகம் திடீரெனப் பரிதாபகரமாக அவளை நோக்கியது. விஜயகுமாரன் நகைத்தான்.

கிளைவுக்கு ஒரு யுக்தி தோன்றவே, ''மை டியர் கேர்ல்'' என்று அழைத்தான் அவளை.

''எஸ் லார்ட்'' என்றாள் அவள் பூரித்த உள்ளத்தின் உவகை முகத்தில் விரிய.

''மை லெப்டினண்ட்'' என்று விஜயகுமாரனைக் காட்டினான்.

''எஸ்!'' என்ற அவள் புருவங்கள் கேள்விக் குறியால் உயர்ந்தன.

''அழகாயிருக்கிறான்'' என்றான் கிளைவ்.

''ட்ரூ'' என்றாள் அவள்.

''உனக்கு என்னைவிடத் தகுந்தவன்.''

இந்த உரையாடலைக் கேட்ட விஜயகுமாரன், ''மிஸ்'' என்று அவளை அழைத்தான்.

''எஸ்!''

''எனக்கு ஒரு காதலி இருக்கிறாள்.''

''குட்?''

''காப்டனுக்கு யாருமில்லை!''

''வெரி குட்!''

''தவிர, என்னைவிடப் பெரிய வீரர், தனிக்கட்டை, தவிர...''

''எஸ் எஸ்.''

''குட் மேட் டு யூ. டோண்ட் ஃபர்கெட் கவர்னர் கேவ் யூ டு ஹிம், நாட்டு மி (உனக்குச் சரியான ஜோடி. தவிர கவர்னர் உன்னை அவருக்குத்தான் தந்தாரே தவிர எனக்கல்ல)'' என்று விளக்கினான் விஜயகுமாரன்.

''யூ ஆர் ரைட் நௌ கெட் அவுட்'' என்ற அந்த அடிமைப் பெண் வாயிற்படியைச் சுட்டிக்காட்டினாள் விஜயகுமாரனுக்கு.

விஜயகுமாரன் ஏதோ பெரிய விபத்திலிருந்து தப்பியவன் போல் சரெலென எழுந்தான் நாற்காலியிலிருந்து. ஆனால், ''ஸிட் டௌன்'' என்ற கிளைவின் கடுமை அவனை மீண்டும் உட்கார வைத்தது.

கிளைவ் முடிவாகக் கூறினான், ''நாம் மூவரும் இந்த அறையில் படுக்கப் போகிறோம்'' என்று.

அன்றைய நாடகம் அந்தக் கட்டளையுடன் முடிந்தது. கிளைவ் ஆணையிட்டதும் அந்தப் பெண் அறை மூலைக்குச் சென்று சுருட்டிப் படுத்துக் கொண்டாள். அன்றும் அடுத்த

பதினைந்த நாளும் கிளைவுக்கும் விஜயகுமாரனுக்கும் வாழ்க்கை பரம நரகமாக இருந்தது. அவர்கள் எங்கே சென்றாலும் அடிமைப் பெண் அவர்களைத் தொடர்ந்து சென்றாள். ஸெய்ன்ட் டேவிட் கோட்டையிலிருந்த சோல்ஜர்கள் கிளைவையும் லெப்டினண்டையம் கேலியாகப் பார்த்தார்கள். பின்னால் ஏதோ கிசகிசு வென்று பேசினார்கள். இந்த நிலைக்குப் பரிகாரம் பதினைந்தாம் நாளன்றே வந்தது. அந்த இரவில் எங்கோ வெளியிலிருந்து வந்த அடிமைப் பெண் தூங்கிக்கொண்டிருந்த கிளைவை அசைத்து எழுப்பினாள். அவன் எழுந்து உட்கார்ந்ததும் பேச வேண்டாமென்று சைகை காட்டிவிட்டுக் கட்டிலில் பக்கத்தில் உட்கார்ந்து அவன் கழுத்தைத் தன் கையால் வளைத்துக் காதுக்கருகில் கிசுகிசுவென்று ஏதோ சொன்னாள்.

இந்தச் சமயத்தில், ''ஐ ஆம் ஸாரி'' என்ற குரல் வாயிற் படியிலிருந்து வந்தது. கிளைவ் திகிலுடன் பார்த்தான், வாயிற் படியை. கவர்னர் ஸாண்டர்ஸ் புன்முறுவலுடன் நின்று கொண்டிருந்தார்.

25. தோல்வி

கழுத்தை அடிமைப் பெண்ணின் கரம் வளைத்துக் கட்டிக் காதில் அவள் வாய் புதைத்து நின்ற நிலையில் கவர்னர் தன்னைக் கண்டதே பரம சங்கடமாயிருந்தது கிளைவுக்கு. அத்துடன் அவர் ''ஐ ஆம் ஸாரி'' என்று சொன்னதும் புன்முறுவல் பூத்ததும் கிளைவின் எரிச்சலைப் பல மடங்கு உயர்த்தவே, ''இதில் வருந்து வதற்கு எதுமில்லை'' என்றான் சுத்தத் தமிழில்.

கவர்னர் ஸாண்டர்ஸ் தாம் சாதாரண மனிதரல்ல என்பதை நிரூபித்தார். ''உண்மை உண்மை'' என்றார் அவரும் சுத்தத் தமிழில். அவரடைய தமிழைக் கண்டு அசந்து போனான் கிளைவ். ''யுவர் எக்ஸலன்ஸி'' என்று வியப்படன் ஏதோ சொல்லவும் தொடங்கினான்.

''சொல்'' என்றார் ஸாண்டர்ஸ்.

''தமிழை எப்படிக் கற்றுக்கொண்டீர்கள்?''

''தினம் இரண்டு மணி நேரம் செலவழித்து.''

''எதற்கு?''

''ஒரு தேசத்தில் நாம் இருப்பதாக முடிவு செய்துவிட்டால் அந்தத் தேசத்தின் மொழியை நாம் அறிந்து கொள்ள வேண்டும்'' என்று கூறினார் கவர்னர்.

கிளைவ் அவரை வியப்புடன் நோக்கினான். ''வாட் டு யு மீன் யுவர் எக்ஸலன்ஸி? (என்ன சொல்கிறீர்கள் எக்ஸலன்ஸி?)'' என்ற சொந்த மொழிக்குத் திரும்பினான் காப்டன்.

இந்தச் சமயத்தில் அடிமைப் பெண் இடை புகுந்தாள். ''ஹிஸ் எக்ஸலன்ஸி ஹாஸ் டிஸைடெட் (எக்ஸலன்ஸி ஒரு முடிவுக்கு வந்து விட்டார்)'' என்று ஆங்கிலத்தில் திட்டமாகப் பேசினாள்.

கவர்னர் அவள்மீது பார்வையைச் செலுத்திவிட்டு, ''யு ஆர் எ ஷ்ரூட் கேர்ள்'' என்றார்.

''ஹௌ?'' கிளைவ் வினவினான் வெறுப்படன்.

''ஷீ அண்டர்ஸ்டாண்ட்ஸ் (அவள் புரிந்து கொள்கிறாள்)'' என்றார் கவர்னர்.

கிளைவுக்குக் கவர்னரின் மனத்தில் ஓடியது என்னவென்று புரிந்தாலும் அவர் வாயாலேயே அதை வரவழைக்கத் தீர்மானித்து, ''அவள் எதைப் புரிந்து கொண்டிருக்கிறாள்?'' என்றான்.

''நான் இங்கிருந்து அசையப் போவதில்லை என்பதை'' என்றார் கவர்னர் திட்டவட்டமாக.

''இந்தியாவிலிருந்து, இப்போது கர்நாடகம் இருக்கும் நிலையில் ஒன்று பிரிட்டன் நிலைக்கும், அல்லது பிரான்ஸ் நிலைக்கும்'' என்று தமிழில் சொன்ன கவர்னர் உணர்ச்சி மேலிட்டு, ''ஐ ஹாவ் டிசைடெட் தட் இட் ஷல் பி அஸ் (இருக்கப் போவது நாம்தான் என்பதை நான் தீர்மானித்து விட்டேன்)'' என்றார்.

இந்த உரையாடலுக்கு முன்பே எழுந்து சற்று எட்டி நின் றிருந்த விஜயகுமாரன் , ''யுவர் எக்ஸலன்ஸி...'' என்று உரை யாடலில் உட்புகுந்தான்.

''எஸ், லெப்டினண்ட்!'' கவர்னர் கண்கள் அவன் இருந்த திசையை நாடின.

''இந்த நாட்டை நீங்கள் ஆள நினைக்கிறீர்கள்?'' என்று விஜயகுமாரன் வினவினான்.

''ஆம்.''

''இந்த நாட்டு மன்னர்கள், நவாபுகள் கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருப்பார்களா?''

''மாட்டார்கள். தங்களுக்குள் சண்டை பிடித்துக் கொண்டிருப்பார்கள். அங்கேதான் நாங்கள் வருகிறோம்'' என்ற கவர்னர், ''மை டியர் பாய்' ஸ்டாண்டிங் டிவைடெட் இஸ் யுவர் பர்த் ரைட் (பிரிந்து நிற்பது உங்கள் பிறவிக் குணம்)'' என்றும் சுட்டிக் காட்டினார்.

பிறகு கிளைவை நோக்கி, ''காப்டன்! நீங்களும் உங்கள்...! உம்...உம்... உங்கள் அடிமைப் பெண்ணும் இருந்த நிலையில் நான் உட்புகுந்தது சரியல்ல. ஆனால் விஷயம் அவசரம்... அதனால் தான் வந்தேன்'' என்றார்.

www.thamizhthenee.blogspot.com

''இஸ் இட் ஸோ அர்ஜண்ட் யுவர் எக்ஸலன்ஸி, (எக்ஸலன்ஸி அத்தனை அவசர வேலையா?)'' என்ற வினவினார் காப்டன்.

''காப்டன் டால்டன் இஸ் ஹியர்!'' என்றார் கவர்னர்.

''தட்ஸ் வாட் ஷி டெல்ஸ் மி'' என்றான் கிளைவ்.

''வி ஹாவ் லாஸ்ட் தி பாட்டில் அட் வால்கொண்ட (நாம் வால்கொண்டா போரில் தோற்றுவிட்டோம்)'' என்று கவர்னர் செய்தி சொன்னார்.

அதற்கும் வியப்புக் காட்டவில்லை கிளைவ். ''ஷி டோல்டு மி தட் ஆல்ஸோ (அதையும் சொன்னாள் இவள்)'' என்று அடிமைப் பெண்ணைச் சுட்டிக் காட்டினான்.

கவர்னர் மீண்டும் அவளை உற்று நோக்கினார். பிறகு கேட்டார். ''நானும் டால்டனும் பேசினதைப் பார்த்தாயா?'' என்று.

''பார்த்தேன். பிறகு கேட்டேன்.''

''எப்படி?''

''முதலில் சாவி போடும் கதவுத் துளையில் ஒரு கண்ணை வைத்தேன், பிறகு காதை வைத்தேன்'' என்றாள் அவள்.

கவர்னர் ஒரு விநாடிதான் சிந்தனையில் இறங்கினார். பிறகு, ''யூ வில் பி யூஸ்ஃபுல் டு அஸ் (நீ எங்களுக்கு உபயோகப் படுவாய்)'' என்ற கூறிவிட்டுக் கிளைவைத் தம்மைத் தொடரும்படி கையால் சைகை செய்து திரும்பி நடந்தார்.

'டக், டக்' என்ற சீரான பூட்ஸ் ஒலி தோல்வியிலும் அசையாத அவர் திட மனத்திற்கு அத்தாட்சி கூறியது.

அவர் சென்ற அடுத்த விநாடி கிளைவ் தனது ஹாட்டைத் தரித்துக்கொண்டு, ''விஜயகுமாரா! விஷயம் என்னவென்பதையும், அடுத்த திட்டம் என்னவென்பதையும் நான் அறிந்து வருகிறேன்'' என்று கூறிவிட்டு, கவர்னர் அறையை நோக்கிச் சென்று, அங்கே காப்டன் டால்டனுடன் கை குலுக்கியதும் இரு வரையும் அமரச் சொன்ன கவர்னர் ஸாண்டர்ஸ், ''காப்டன் டால்டன்! ரிலேட் வாட் ஹாப்பன்ட் இன் வால்கொண்டா இன் டூடெய்ல் (வால்கொண்டாவில் நடந்ததை விவரமாகச் சொல்)'' என்ற உத்தரவிட்டார்.

காப்டன் டால்டன் மிகுந்த வேதனையுடனும் வெறுப்புடனும் வாலிகண்டபுரத்தின் தோல்வியை விவரித்தான். அவன் சொன்னான் ஆங்கிலத்தில்: ''யுவர் எக்ஸலன்ஸி! வெற்றியாக வேண்டிய போர் தோல்வியை அளித்தது. இத்தனைக்கும் காப்டன் ஜின்ஜின்ஸின் திடமில்லாத மனமும் முடிவுகளை எடுக்க முடியாத மூளையுந்தான் காரணம். காப்டன் கிளைவ் வந்த பிறகும் அவர் யோசனை கூறிய பிறகும் ஜின்ஜின்ஸ்

முன்னேறிச் சந்தாசாகிபின் படையை எதிர்கொள்ள மறுத்தார். அநாவசியமான தாமதம் எதிரியின் கையை வலுப்படுத்தியது. கோட்டையைத் தாக்க நமது மார்ட்டர் பீரங்கிப் படை பின்வாங்கிப் பாசறைக்கு வந்தது. சந்தாசாகிப் படையின் முன்னோடிகள் மறுநாள் தூரத்திலிருந்த மலை உச்சிகளில் தெரிந்தார்கள். அந்த மலைப்பகுதிகள் எங்களுக்கும் எதிரிப் படைகளுக்கும் இடையில் இருந்தது. அந்த மலைப் பகுதியிலிருந்து கோட்டை வாயிலுக்குச் செல்லும் நீர் நிலையைக் கைப்பற்ற எதிரியின் படை முன்னேறியது. நீர் நிலையின் பக்கத்திலிருந்த நாங்கள், அதைச் சுலபமாகக் கைப்பற்றி இருக்கலாம். ஆனால் ஜின்ஜின்ஸ் அசைய வில்லை. அசைந்த போதும் அவரால் திட்டமாகக் கட்டளை இட முடியவில்லை. நாங்கள் அணிவகுத்து நின்றபோதும் எங்களை நோக்கிக் கேட்டார், 'நாம் முன்னேறித் தாக்க வேண்டும் என்பது உங்கள் கருத்தா?' என்று.

''இதனால் உபதலைவர்கள் அதைரியமடைந்தார்கள். இதற்குள் இருபடைகளும் கை கலந்துபோது சுதேசிகளே நன்றாகப் போரிட்டார்கள். அப்துல் வஹாப்கான் படை சீறிச் சென்றது சந்தாசாகிபின் மீது. வஹாப்கானின் குதிரை சுடப்பட்டு வீழ்ந்தபோதும்கூட அவர் மீண்டும் வேறு புரவி ஏறிப் போரிட்டார் - சுதேசிகளுடைய வீரம்கூட வெள்ளையரை ஊக்கவில்லை. இதைவிட மானக்கேடான போரை நான் பார்த்ததில்லை. அப்துல் வஹாப்பின் படையினர் நம் கோழைத்தனத்தைக் கண்டு வெறுத்தனர். இப்போது ஜின்ஜின்ஸ் தமது படையுடன் திருச்சிக்கு ஓடிக் கொண்டிருக்கிறார். சந்தாசாகிப் அவரைத்தொடர்ந்து செல்கிறார்.''

இந்தக் கதையைச் சொல்லி முடித்த காப்டன் டால்டன் தன் மன வேதனையை முகத்தில் நன்றாகக் காட்டினான். ''இதை எதிர்பார்த்துத்தான் உங்களை அங்கேயே தங்கிப் படையை நடத்தும்படி கேட்டுக் கொண்டேன்'' என்று கிளைவ் மீதும் குற்றம் சாட்டினான்.

கவர்னர் ஸாண்டர்ஸ் தீவிர சிந்தனையில் இறங்கிக் கண்களை மூடிக்கொண்டார். கடைசியாக அவர் கண் விழித்தபோது அவர் மனத்தில் ஏதோ திட்டமொன்று உருவாகி இருப்பது புலனாயிற்று. கவர்னர் ஸாண்டர்ஸ் கூறினார்: ''காப்டன் டால்டன்! யூ ஜாயின் ஜின்ஜின்ஸ். காப்டன் கிளைவ்! யூ கோ டு தேவிகோட்டா வித் யுவர் லெப்டினென்ட் அன்ட் தட் கேர்ள் (காப்டன் டால்டன், நீ போய் ஜின்ஜின்ஸுடன் சேர்ந்து கொள். காப்டன் கிளைவ், உன் லெப்டினன்டையும் அந்தப்

பெண்ணையும் அழைத்துக் கொண்டு தேவிக்கோட்டைக்குப் போ)'' என்று.

கட்டளை திட்டமாயிருக்வே இரு காப்டன்களும் எழுந்து கவர்னருக்குச் சல்யூட் செய்தார்கள். ''தேவிக்கோட்டையில்...'' என்ற கிளைவ் ஏதோ சொல்ல முற்பட்டான். அவனைத் தமது கையசைப்பால் நிறுத்திய ஸான்டர்ஸ், ''யூ வில் ரிஸீவ் மை ஆர்டர்ஸ் ஸூன் (விரைவில் என் உத்தரவு கிடைக்கும் எனக்கு)'' என்றார்.

அத்துடன் பேட்டி முடிந்துவிட்டதை அறிவிக்க கவர்னரும் ஆசனத்திலிருந்து எழுந்து அவர்கள் வணக்கத்திற்குப் பதிலாகத் தலையை லேசாக ஒரு புறமாகச் சாய்த்தார். காப்டன்கள் சென்றதும், ''எந்தத் தோல்வியையும் வெற்றியாகத் திருப்ப முடியும். எப்படி என்பதை அறிவாளிகள் தீர்மானிக்கிறார்கள்'' என்று தாமாகவே சொல்லிக் கொண்டார்.

26. மன ஓட்டம் நீராட்டம்

கிட்டத்தட்ட ஒரு மைல் சுற்றுளவுடனும், பதினெட்டு அடி உயரமுள்ள சுவர்களுடனும், இடையிலேயே வட்டமும் சதுரமுமான ஸ்தூபிகளுடனும், கொள்ளிட முகத் துவாரத்தில் மிகக் கம்பீரமாக வங்கக் கடலை நோக்கிக் கொண்டிருந்த தேவிக்கோட்டையை, கவர்னர் உத்தரவிட்ட அடுத்த நாளிரவே அடைந்த ராபர்ட் கிளைவ், அதன் பாதுகாப்பைப் புதுக் கவர்னர் மிகவும் பலப்படுத்தியிருப்பதைக் கண்டான். கோட்டையின் படை மட்டுமின்றி, கோட்டைக்குச் சற்றுத் தூரத்திலிருந்த புதர்கள் மறைவிலும் சிப்பாய்கள் படுத்துக் காவல் இருந்ததையும் கொள்ளிடத்தைத் தாண்டித் தானும் விஜயகுமாரனும் அடிமைப் பெண்ணுடன் காலடி வைத்த மறு விநாடி சிப்பாய்களால் 'சாலன்ஜ்' செய்யப்பட்டதையும் பார்த்த கிளைவ், அந்த நிலையில் இந்தக் கோட்டையை யாரும் திடீரெனத் தாக்க முடியாதென்ற முடிவுக்கு வந்தான். கோட்டைக்குப் பக்கத்திலோடிய கொள்ளிடத்தின் கரையிலும் சிறு சிறு படகுகள் தளைகளில் பிணிக்கப்பட்டிருந்ததையும், அவற்றில் ஒவ்வொன்றிலும் ஒரு துப்பாக்கி வீரன் இருப்பதையும் கவனித்த கிளைவ், கவர்னர் உத்தரவு வரும்வரையில் தான் நிம்மதியாகப் படுத்து உறங்கலாமென்று தீர்மானித்தான்.

ஆனால் வீரனுக்குக் கடமை முன்னாலிருக்கும்போது உற்க்கம் எங்கிருந்து வரும்? ஆகவே கோட்டையை அடைந்து அங்குள்ள காப்டனால் ராஜோபசாரத்துடன் வரவேற்கப்பட்டு

உணவுருந்திய பின்னும் கிளைவுக்கு உறக்கம் பிடிக்காததால், ''விஜயகுமாரா! சற்றுக் கோட்டைக்கு வெளியே சுற்றிப் பார்ப்போமா?'' என்று கேட்டான்.

விஜயகுமாரன் இதழ்களில் புன்முறுவல் அரும்பிற்று, பழைய நினைப்புகளால். ''பார்க்கலாம்'' என்ற அவன் பதிலிலும் லேசாக நகைப்பொலி இருந்தது.

அதன் காரணத்தைக் காப்டன் கிளைவ் உணர்ந்திருந்தாலும் உணராதது போலவே கேட்டான், வெளியே செல்லத் தனது கோட்டை எடுத்து அணிந்த வண்ணம், ''எதற்காக நகைக்கிறாய் விஜயகுமார்?'' என்று.

''நகைக்கவில்லையே'' என்றான் விஜயகுமாரனும் வெளியே செல்ல எழுந்து.

''பகிரங்கமாக நகைக்கவில்லை'' என்று ஒப்புக்கொண்டான் கிளைவ்.

''உள்ளே நகைப்பது உனக்குத் தெரிகிறதா?''

''ஆம், பதிலின் ஒலியிலிருந்து.''

இதற்கு உடனடியாகப் பதில் சொல்லவில்லை விஜய குமாரன். கிளைவின் கூரிய அறிவையும் எதையும் அறியும் ஆற்றலையும் வியக்கவே செய்தான் சில விநாடிகள். பிறகு சொன்னான், '' ஆமாம் கிளைவ்! இதே கோட்டையில் முன்பு சந்தித்தோம் எதிரிகளாக...'' என்று.

''இன்று வந்திருக்கிறோம் நண்பர்களாக'' என்ற சுட்டிக் காட்டினான் கிளைவ்.

''அப்போதும் நாம் நண்பர்கள்தான்.''

''ஆனால் எதிர்ப் படைகளில் இருந்தோம்.''

''அதனால் நட்பு எப்படிக் கெடும்?''

''கெடாது என்பதை அன்றே நிரூபித்தாய், நீ என் உயிரைக் காப்பாற்றி.''

காப்டனின் இந்த கடைசிச் சொற்களுக்குப் பதில் சொல்ல வில்லை விஜயகுமாரன். காப்டனுடன் வெளியே நடக்கவே செய்தான். ஜூன் மாதத்துச் சந்திரன் தேவிக் கோட்டையையும் அதன் மேற்குப் புறக் காடுகளையும் தென்புறக் கொள்ளிடத்தையும் கண்கொள்ளாக் காட்சியாகச் செய்து கொண்டிருந்தது. தூரத்தேயிருந்த கடலலைகளை உள்ளே வாங்கிக்கொண்டு பின்னோக்கி வந்த கொள்ளிடச் சிற்றலைகள் ஆயிரமாயிரம் கண்ணாடிகளைப் போல் ஜொலித்தன. இத்தகைய சூழ்நிலையில் நடந்து சென்று காப்டன் கிளைவின் மனமும் விஜயகுமாரன் மனமும் வெவ்வேறு நிலைகளில் இருந்தன.

கிளைவ் திருச்சிக்கு ஓடிக்கொண்டிருந்த பிரிட்டிஷ் படையின் கதியைப்பற்றியும் இந்தியாவில் பிரிட்டனின்

எதிர்காலத்தைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருந்தான். ''இப்போதைய நிலைகொண்டு பார்த்தால் இங்கே பிரிட்டனின் அரசியல் வானம் கறுத்துத்தான் கிடக்கிறது. ஆனால் ஒரு சிறு காற்று, நமக்கு அநுகூலமான ஒரு சிறு சம்பவம், இந்த மேகத்தை விரட்டி விடும். அந்தக் காற்று, சம்பவம், எப்போது வரும்?'' என்று எண்ணிப் பார்த்தான் கிளைவ்.

விஜயகுமாரன் மனம் காப்டன் நினைவுகளுக்கு எதிர் திக்கில் ஓடிக்கொண்டிருந்தது. இன்பமான சிந்தனைகள் அவன் சித்தத்தில் எழுந்து உலாவிக் கொண்டிருந்தன. ''அதோ அந்தப் புதருக்கருகில் தானே நானும் நந்தினியும் உட்கார்ந்திருந்தோம்! எத்தனை பேச்சுக்களைப் பேசியிருப்போம்! பேசாதபோது உள்ளங்கள் ஊமையாக இருந்ததில்லையே!'' இப்படிப்பட்ட நினைவுகள் அவன் சித்தத்தில் எழுந்துலாவின. நந்தினியின் அழகிய உருவம் பக்கத்துக் காடுகளில் தெரிந்தது, கொள்ளிட அலைகளில் தெரிந்தது, திடீரெனப் பக்கத்தில் நடப்பது போலவும் தோன்றியது. அவள் பாதச் சிலம்பின் ஒலிகூட அந்தச் சமயத்தில் அவன் மனக் காதில் விழுந்தது. 'இப்போது நந்தினி என்ன செய்துகொண்டிருப்பாள் தஞ்சை அரண்மனையில்?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான்.

இத்தகைய எண்ணங்கள் மேலோங்கிவிடவே நடையும் சற்று நிதானப்பட, கிளைவ் முன்னால் தனியே சென்றுவிட்டதைக்கூட அவன் கவனிக்கவில்லை. நினைவுச் சுழலில் ஈடுபட்ட காரணத்தால் திடீரென நடையை நிறுத்தி ஒரு புதருக்கருகில் உட்கார்ந்து கொண்டு விழித்தவண்ணமே சொப்பன உலகத்தில் சஞ்சரித்தான். அன்றும், நந்தினி அவன் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள். தன் மலர்க்கரத்தை அவன் கையுடன் பூட்டினாள். அந்த இன்பத்தால் அவன் தரையில் படுக்கவும் செய்தான். படுத்த இடம் தரையாகத் தெரியவில்லை. மலர் மடியில் படுத்துக் கிடப்பதாகவே தோன்றியது. தாயின் மடி எத்தனை இன்பமாயிருக்கிறது என்று நினைத்தான், அந்தத் தரையை நினைத்து. 'இதுவே நந்தினியின் மடியாயிருந்தால் எத்தனை சிறப்பாயிருக்கும்?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

நாழிகைகள் ஓடியது தெரியாமல் விண்ணை நோக்கி, வெண்ணிலவின் அழகை நோக்கி, இடையே சிந்தனையில் சுழன்ற எழில் நந்தினியை நோக்கிப் படுத்துக் கிடந்த விஜயகுமாரன் பக்கப் புதரில் ஏதோ சலசலப்பதைக் கேட்டுக் கண் விழித்துச் சுயநிலை வந்து திடீரென வெகுளவும் செய்தான். புதர்களின் மறைவிலிருந்து வந்த அடிமைப் பெண் அவன்

அருகில் வந்து மிகச் சொந்தமாக அமர்ந்து கொண்டாள். அவன் கையையும் பிடித்துத் தன் மடியில் வைத்துக்கொண்டு தடவி விட்டாள்.

''விடு கையை'' என்று சீறிய விஜயகுமாரன் தன் கையை இழுத்துக் கொண்டான். ''யார் வரச் சொன்னது உன்னை இங்கே?'' என்ற கடிந்தும் கொண்டான்.

''என் எஜமான்'' என்றாள் அடிமைப் பெண், அவன் அதட்டலைச் சிறிதும் லட்சியம் செய்யாமல்.

''எதற்காக?'' இம்முறை விஜயகுமாரன் குரலில் எரிச்சல் பன்மடங்கு அதிகமாயிற்று.

''உங்களுக்குத் துணையிருப்பதற்காக?''

''எனக்கு எதற்குத் துணை?''

''எனக்குத் தெரியாது.''

''அவருக்குத் தெரியுமாக்கும்?''

''ஆம்.''

''துணை என்றால் என்ன செய்யச் சொன்னார்?''

''உங்கள் கை கால்களைப் பிடிக்கச் சொன்னார்.''

''அவ்வளவுதானே?''

''இல்லை.''

''வேறென்ன?''

''நீங்கள் எந்த உபகாரத்தை விரும்பினாலும் செய்யச் சொன்னார்.''

இதைக் கேட்ட விஜயகுமாரனுக்கு என்ன பதில் சொல்வ தென்று தெரியாததால், ''பெண்ணே!'' என்று அனுதாபத்துடன் அழைத்தான்.

''ஏன்?'' என்றாள் அவள்.

''என் விருப்பம் எதுவாயினும் நீ செய்யவேண்டியது தானே?''

''ஆமாம்.''

''அப்படியானால் எழுந்து கோட்டைக்குப் போய்விடு. நான் தனியாக இருக்க விரும்புகிறேன்.''

இதற்கு அந்த அடிமைப் பெண் தலையைப் பக்கவாட்டில் விடு விடுவென அசைத்தாள். ''அந்த ஒரு விஷயம் நடக்காது. உங்களைத் தனியாக மட்டும் விடக்கூடாதென்று எசமான் உத்தரவு'' என்று திட்டமாக அறிவித்த அடிமைப் பெண் நன்றாகச் சப்பணம் கொட்டி உட்கார்ந்து விட்டாள் அவன் பக்கத்தில்.

இதனால் பெரிதும் சங்கடப்பட்ட விஜயகுமாரன், ''கிளைவ் எங்கே இப்பொழுது?'' என்ற வினவினான் ஆத்திரத்துடன்.

''கோட்டைக்குப் போய் விட்டார்.''

''எப்பொழுது?''

''ஒரு மணி நேரத்துக்கு முன்பு.''

''இப்பொழுது நேரம் என்ன?''

''பன்னிரண்டு மணி.'' இதை அவள் சொல்வதற்கும் கோட்டை மணி பன்னிரண்டு அடிப்பதற்கும் சரியாயிருந்தது.

அதைக் காதில் வாங்கிய விஜயகுமாரன், ''நள்ளிரவு வரையிலா தங்கிவிட்டேன்!'' என்று தன்னைத்தானே இரைந்து வினவிக்கொண்டு எழுந்திருந்தான் துரிதமாக. கோட்டைக்கு நடந்தான் வேகத்துடன். அவன் வேகத்துக்குச் சற்றும் சளைக் காமல் அடிமைப் பெண்ணும் அவனுடன் ஓடினாள். இப்படி அந்த இருவரும் ஜோடியாகக் கோட்டைக்குள் நுழைவதைக் கண்ட காவலர் ஒருவரையொருவர் பார்த்து லேசாகப் புன்னகை கோட்டினார்கள்.

அடுத்த இரண்டு நாட்களில் அந்தப் புன்னகையும் பின்பக்க ரகசியப் பேச்சுக்களும் அதிகமாயின. அவற்றைக் கவனிக்காதது போல் கவனிக்கவே செய்தான் விஜயகுமாரன். அந்த அடிமைப் பெண்ணே அவன் எங்கே சென்றாலும் அவனைத் தொடர்ந்து சென்றாள். இதைச் சகிக்க முடியாத விஜயகுமாரன் மூன்றாம் நாளிரவு கிளைவை மிக கோபத்துடன் அணுகி, ''எதற்காக இவளை என்மீது ஏவி இருக்கிறாய்?'' என்று வினவினான்.

''துணைக்கு...'' என்றான் கிளைவ், உள்ளே சிரித்துக் கொண்டாலும் முகத்தில் சிரிப்பைக் காட்டாமல்.

''எனக்கு எதற்குத் துணை, யார் என்னைத் தூக்கிக் கொண்டு போய்விடுவார்கள்?'' என்று சீறி விழுந்தான் விஜயகுமாரன்.

கிளைவ் தனது முகத்தில் கவலையைக் காட்டினான். ''விஜயகுமார்! யூ ஆர் எ ஸிக் ஃபெல்லோ நௌ'' என்று கூறினான்.

''நானா? நோயாளியா?''

''எஸ். வென் ஐ டேக் யூ ஃபார் எ வாக் யூ ஸிட் டௌன்'' என்றான் கிளைவ்.

''நோய் காரணமா அதற்கு?''

''எஸ்.''

''என்ன நோய்?''

''யூ ஆர் லவ் ஸிக் (உனக்குக் காதல் நோய்)'' என்று கூறிய கிளைவ், ''விஜயகுமார், சுரக்காரனைக்கூட நான் நம்புவேன். காதல் வியாதிக்காரனை நம்ப முடியாது. திடீரென்று அவனுக்கு மூளை பிசகும்; மறதி ஏற்படும். நாம் இப்போதுள்ள நிலையில்

இரண்டு ஆபத்து. இந்தக் கோட்டையில்கூட நாம் பாதுகாப்பில் இல்லை. எந்த நேரம் நம்மை யார் தாக்குவார்களோ சொல்ல முடியாது. நாம் விழித்திருக்க வேண்டிய சமயம் இது. அதற்காகத்தான் உனக்குத் துணை அனுப்புகிறேன்'' என்றான் கிளைவ்.

அடுத்த பல நாட்களுக்குக் கவர்னரிடமிருந்து எந்த உத்தரவும் வராதிருக்கவே அந்த அடிமைப் பெண்ணின் தொல்லை மிக அதிகமாயிற்று.

விஜயகுமாரன் கடைசியாக அவளை உதற ஒரு வழி கண்டு பிடித்தான். அதை நிறைவேற்ற ஒரு நாள் காலை கொள்ளிடக் கரைக்குச் சென்று தன் உடைகளைக் களைந்தான். அவனைப் பின் பற்றி வந்த அடிமைப் பெண் அதை லட்சியம் செய்யாமல் அருகே நின்றாள். கடைசியாக ஒரு ராணுவ டிராயரை மட்டுமே அணிந்து நின்ற விஜயகுமாரன் சரேலென்று கொள்ளிட நீரில் குதித்து நீந்திச் சென்றான். அடிமைப் பெண் முழங்காலைக் கட்டிக்கொண்டு அவன் நீந்துவதைப் பார்த்துக் கொண்டு கரையில் உட்கார்ந்திருந்தாள். நீண்ட நேரம் நீச்சலடித்த அவன் கரையேறவும் உதவினாள். சொட்டச் சொட்ட நனைந்த தேகத்துடன் கரையில் நின்ற விஜயகுமாரனைப் பார்த்து அடிமைப் பெண்ணும் சிரித்தாள். ஆனால் விஜயகுமாரன் சிரிப்புமட்டும் திடீரென உறைந்து விட்டது அவன் உதடுகளில். சற்று எட்ட நின்று இந்த வேடிக்கையைக் கவனித்துக் கொண்டிருந்தாள் நந்தினி.

27. அரசகுமாரி! நீங்கள் தீர்க்கதரிசி!

அசந்தர்ப்பமான அந்த நிலையில் விஜயகுமாரனின் நகைப்பு உறைந்ததே தவிர, கொள்ளிடத்தின் நகைப்பு உறைய வில்லை. காலைக் கதிரவனின் கிரண வீச்சினால் பளபளத்த கொள்ளிடத்தின் சிற்றலைகள் அவனைப் பார்த்துப் பலமாகவே நகைத்தன. நந்தினி நகைக்கவுமில்லை, இருந்த இடத்திலிருந்து நகரவுமில்லை. இகழ்ச்சி மிகுந்த பார்வை யொன்றை மட்டும் அவன்மீது விசினாள். போதாக்குறைக்கு இந்தச் சமயத்தில் அடிமைப் பெண் தன் கையிலிருந்த துண்டை எடுத்து, ''எசமான்! உடம்பைத் துடைத்து விடட்டுமா?'' என்று கேட்டுக் கொண்டு அவனை நெருங்கினாள்.

விஜயகுமாரன், ''சீ! பிரும்மஹத்தி! துடைக்கவும் வேண்டாம், ஒரு மண்ணாங்கட்டியும் வேண்டாம். கொடு அதை

www.thamizhthenee.blogspot.com

இங்கே'' என்று எரிந்து விழுந்து துண்டைப் பிடுங்கிக் கொண்டு, ''போ கோட்டைக்கு'' என்று கூறிக் கோட்டையையும் சுட்டிக் காட்டினான்.

''ஏன், அவள் துடைத்து விடுவாளா?'' என்று வினவினாள் அடிமைப் பெண், எட்ட நின்ற நந்தினியைக் காட்டி.

விஜயகுமாரன் நிலை அந்த அடிமைப் பெண் பேச்சினால் மிகப் பரிதாபமான கட்டத்தை அடையவே, அவன் சொன்னான் கடுமையாக, ''அட சனியனே! யார் எதைச் செய்தால் உனக்கென்ன? நீ போய் விடு'' என்று.

அடிமைப் பெண் ஒரு விநாடி அவனையும் நோக்கி நந்தினியையும் நோக்கினாள். ''சரி, சீக்கிரம் நீங்கள் கோட்டைக்கு வாருங்கள். இங்கு அதிக நேரம் கடத்த வேண்டாம்'' என்று சொல்லிவிட்டு மெள்ளக் கோட்டையை நோக்கிச் சென்றாள்.

விஜயகுமாரனும் மடமடவென்று தலை துவட்டி அந்தத் துண்டைத் தோளில் போட்டுக் கொண்டு தரையிலிருந்த தன் உடைகளைக் கையில் எடுத்துக் கொண்டு நந்தினியை அணுகினான். ''நீ எப்போது வந்தாய் நந்தினி?'' என்று வினவவும் செய்தான்.

நந்தினியின் இதழ்களில் மட்டுமன்றி வள் கண்களிலும் இகழ்ச்சிக் குறி நன்றாகப் படர்ந்திருந்தது. ''எப்போது வந்தாலும் இங்கு உங்கள் புனல் விளையாட்டுக்கு இடைஞ்சலாக வந்தேன்'' என்று பதில் சொன்னாள் நந்தினி, குரலிலும் இகழ்ச்சி தோன்ற.

விஜயகுமாரன் சித்தத்தில் சினம் லேசாகத் துளிர்த்தது. ''நீ தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறாய்'' என்ற அவன் விளக்கத்திலும் சினம் விரவிக் கிடந்தது.

''எதை?'' அலட்சியமாகக் கேட்டாள் நந்தினி.

''புனல் விளையாட்டுக்காக நான் வரவில்லை இங்கே. நீந்த வந்தேன். அந்தப் பிசாசு என்னைத் தொடர்ந்து வந்தது.''

''பிசாசாயிருந்தாலும் அழகான பிசாசுதான். உங்களிடம் பற்றுள்ள பிசாசுதான்.''

''நந்தினி!''

''என்ன வீரரே?''

''நீ தப்புக் கணக்குப் போடுகிறாய். அவளுக்கும் எனக்கும் எந்தவித சம்பந்முமில்லை.''

''அப்படியா?''

''ஆம். அவள் என்னைத் தொடர்ந்து நீச்சலை வேடிக்கை பார்க்க வந்தால் நான் என்ன செய்யமுடியும்?''

நந்தினி இகழ்ச்சி நகை காட்டினாள், ''முடியாது... முடியாது'' என்றாள் லேசாக நகைத்து.

''என்ன முடியாது?'' ஏதும் புரியாமல் கேட்டான் விஜயகுமாரன்.

''அவளைப் பிரிய முடியாது. அவள் வேடிக்கை பார்ப்பதைத் தவிர்க்க முடியாது?'' என்ற நந்தினி, ''அதுவும்...'' என்று ஒரு சொல்லைத் துவங்கி வாசகத்தை முடிக்காமல் விட்டாள்.

''அதுவும்?'' சீற்றத்துடன் எழுந்தது விஜயகுமாரன் கேள்வி.

''உங்களைக் கைலாகு கொடுத்துக் கரைக்குத் தூக்கியதைத் தவிர்க்க முடியாது'' என்று கூறிய நந்தினி சரேலென்று திரும்பி நடந்தாள் கோட்டையை நோக்கி.

இரண்டே எட்டில் அவளை அணுகி அவள் இரண்டு தோள்களையும் பிடித்துத் தன்னை நோக்கித் திருப்பிய விஜயகுமாரன், அவள் விழிகளைத் தைரியமாகவே சந்தித்தான். ''சத்தியமாகச் சொல்கிறேன் நந்தினி. அவளுக்கும் எனக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை. எல்லாம் அந்தக் கிளைவின் வேலை. கோட்டைக்கு வா, அவனையே சொல்ல வைக்கிறேன்'' என்று ெஞ்சினான் நந்தினியை நோக்கி.

இதைக் கேட்ட நந்தினியின் விழிகள் நகைத்தன. ''கிளைவ் தான் என்னை இங்கே அனுப்பினார்....'' என்று சொன்னாள் நந்தினி.

''அவன் வேலைதானா இது? அடிமைப் பெண்ணை என்மேல் ஏவி விட்டு உன்னையும் இங்கு அனுப்பி என்னை வேடிக்கையா பார்க்கிறான் கிளைவ்?'' என்று சீறிய விஜயகுமாரன், நந்தினியைக் கையைப் பிடித்துச் சரசரவென்று இழுத்துக் கொண்டு கோட்டையை நோக்கி நடந்தான்.

''விடுங்கள் கையை. முதலில் உடைகளை அணிந்து கொள்ளுங்கள்.யாராவது உங்களுடன் இந்த நிலையில் என்னைப் பார்த்தால் ஏதாவது நினைப்பார்கள்'' என்ற நந்தினி கையை விடுவித்துக் கொண்டாள்.

விஜயகுமாரன் பக்கத்திலிருந்த புதருக்குச் சென்று அதன் மறைவில் தனது ஆடைகளை அணிந்து கொண்டு வெளியே வர, இருவரும் கோட்டையை நோக்கி நடந்தார்கள் மௌனமாக. கோட்டையின் முன் வாசலிலேயே நின்றிருந்த கிளைவ் அவர்ள் இருவரையும் பார்த்துப் பன்னகை புரிந்தான். ''காதல் பறவைகள் வருகின்றன'' என்று கூறவும் செய்தான் விஷமமாக.

நந்தினி இதைக் கேட்டுச் சிறிதும் வெட்கப்பட்டாளில்லை. ''காதல் ஜோடிகளைச் சேர்ப்பதில் காப்டனுக்குத் திறமை அதிகம் என்பதை இன்றுதான் அறிந்தேன்'' என்றாள் நந்தினி இகழ்ச்சி ததும்பிய குரலில்.

''என்ன சொல்கிறீர்கள் அரசகுமாரி?'' என்று வினவினான் கிளைவ் ஏதுமறியாதவன் போல்.

''முதலில் அந்த அழகியையும் இவரையும் அனுப்பினீர்கள். கொள்ளிட நீரில் விளையாட.....'' நந்தினி பேச்சை முடிக்க வில்லை, அவள் பார்வை முடித்தது.

''யார் அவள்?'' கிளைவ் கேட்டான் உணர்ச்சியற்ற குரலில்.

''யாரோ அடிமைப் பெண்ணாம்.''

''அவளா? இன்னும் விஜயகுமாரனை விடவில்லையா?''

''இல்லை அவளையும் அனுப்பி என்னையும் அனுப்பினீர்கள்.''

''நானாக அனுப்பவில்லையே அரசகுமாரி. நீங்கள்தான் கேட்டீர்கள் லெப்டினண்ட் எங்கேயென்று. போன இடத்தைச் சொன்னனேன். நீங்கள் உடனடியாக அங்கே பறப்பீர்களென்று எனக்குத் தெரியுமா?'' என்றான் கிளைவ். அரசகுமாரி சட்டென்று திரும்பி, தான் தங்கியிருந்த அறையை நோக்கிச் சென்றாள்.

கிளைவை நோக்கி விஷப் பார்வையை வீசிய விஜயகுமாரன் அரசகுமாரியைத் தொடர்ந்து சென்றான். அப்படி விரைந்த இருவரையும் நோக்கிப் புன்முறுவல் கொண்ட கிளைவ், ''காதல் என்பது பைத்தியம்தான். நல்லவேளை, அது என்னைப் பிடிக்க வில்லை'' என்று தனக்குள் சொல்லி நகைத்துக் கொண்டான்.

பிறகு பக்கத்திலிருந்த ஒரு சிப்பாயை அழைத்து, ''அவர்கள் இருவரும் சிற்றுண்டியருந்தியதும் என் அறைக்கு அழைத்து வா'' என்ற உத்தரவிட்டுவிட்டுக் கோட்டையின் மத்தியிலிருந்த தனது அறையை நாடிச் சென்றான்.

சுமார் ஒரு மணி நேரத்துக்குப் பின்பு கிளைவின் அறையை விஜயகுமாரனும் நந்தினியும் அடைந்தபோது, கிளைவ் சுவரில் தீட்டப்பட்டிருந்த கர்நாடக நாட்டுப் படத்தைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான். அவன் தீவிர ஆலோசனையில் இருந்ததால் தாங்கள் வந்ததை அவன் அடியோடு கவனிக்கவில்லையென்பதை இருவருமே உணர்ந்தார்கள். அந்தப் படத்திலிருந்து அவர்களை நோக்கித் திரும்பிய கிளைவ், சற்று முன்பு விளையாட்டுப் பேச்சு பேசிய கிளைவ் அல்லவென்பதையும், காப்டன் கிளைவ் என்பதையும் இருவருமே புரிந்துகொண்டனர். அவன் பேச்சின் தோரணையும் ராணுவ முறையில் கட்டுத்திட்டமாக இருந்தது.

கிளைவின் சீரிய விழிகள் அவர்கள் இருவரையும் ஒரு விநாடிதான் கவனித்தன. அவன் இதழ்களிலிருந்து சொற்கள்

பதுமையின் வாயிலிருந்து உதிருவன போல் வறட்சியுடன் உதிர்ந்தன. ''உங்கள் தந்தை சொல்லியனுப்பிய செய்தியைச் சொல்லுங்கள்'' என்று கேட்டான் நந்தினியை நோக்கி.

நந்தினியின் விழிகளில் வியப்பு நிரம்பி நின்றது. ''தந்தையின் செய்தியா?'' அவள் சொற்களிலும் வியப்பின் சாயை இருந்தது.

''ஆம். மகாராஜா பிரதாப்சிங் என்ன சொல்லியனுப்பியிருக்கிறார்?'' என்று வினவினான் கிளைவ்.

''மகாராஜா என்னைத் தூதனுப்பியதாக யார் சொன்னது?'' என்று கேட்டாள் நந்தினி மிக்க கம்பீரமாக.

''பிரிட்டிஷ் படையிருக்கும் இந்தத் தனிக் கோட்டையை வேடிக்கை பார்க்க உங்களை மகாராஜா அனுப்பியிருக்க மாட்டார்'' என்றான் கிளைவ்.

''நானாக வந்தால் என்னை யார் தடை செய்ய முடியும்?''

''எனது சோல்ஜர்கள். மகாராஜா பிரதாப்சிங் அல்லது பிரிட்டிஷ் கவர்னர் - இந்த இருவரிடமிருந்து வருபவர்களை மட்டுமே இந்தக் கரையில் காலடி எடுத்து வைக்க உத்தரவிட்டிருக்கிறேன்'' என்றான் கிளைவ்.

''அப்படி வந்தாலும் செய்தி ஏன் கொண்டுவர வேண்டும்?''

''இப்போதுள்ள போர் நிலைமையால்...'' என்ற கிளைவ், ''அரசகுமாரி! சொல்லுங்கள் செய்தியை'' என்று ஆணையிட்டான்.

நந்தினி சிறிது நேரம் பதில் ஏதும் பேசவில்லை. பிறகு தனது மடியிலிருந்து முத்திரையிட்ட கடிதம் ஒன்றை எடுத்துக் கிளைவிடம் நீட்டி, ''இது திருச்சியிலுள்ள நவாப் முகம்மது அலிக்கு எழுதப்பட்டிருக்கிறது. இதை அவரிடம் சேர்த்துவிட மகாராஜா உத்தரவு'' என்று கூறினாள்.

கடிதத்தை வாங்கிய கிளைவ் அதன் விலாசத்தைப் படித்தான் இருமுறை. பிறகு அதைத் தனது பையில் வைத்துக் கொண்டான். அடுத்தபடி கேட்டான். ''அரசகுமாரி, நான் திருச்சிக்குப் போகாவிட்டால்?'' என்று.

''போவீர்கள் என்று மகாராஜா திட்டமாக நம்புகிறார்.''

''நம்புவதற்குக் காரணம்?''

''இப்போதுள்ள போர் நிலைமை.'' நந்தினி, முன்பு கிளைவ் சொன்ன சொற்களைத் திருப்பினாள்.

கிளைவ் கூறினான். ''அரசகுமாரி! மகாராஜாவுக்கு மட்டும் குடும்ப எதிரிகள் இல்லாவிட்டால் இன்று அவர் தஞ்சையை மட்டுமல்ல, இந்தக் கர்நாடகத்தையே ஆளத் தகுதியுள்ளவர்'' என்று.

அந்தப் பாராட்டுதலைத் தலை தாழ்த்தி ஏற்றுக் கொண்டாள் நந்தினி. கிளைவ் மேலும் சொன்னான், ''அரசகுமாரி! பெரும் இக்கட்டான நிலையில் இன்று தஞ்சை இருக்கிறது. நாம் ஒருவரையொருவர் கைவிடாத வரையில் சந்தாசாகிபை முறியடிக்கலாம். இதை உங்கள் தந்தையிடம் கூறுங்கள். இக் கடிதத்தை நான் திருச்சிக்குப் போகும்போது முகம்மது அலியிடம் கொடுக்கிறேன்'' என்று பையிலிருந்த கடிதத்தையும் தட்டிக் காட்டினான்.

''அந்தக் கடிதம் இன்னும் பதினைந்து நாட்களுக்குள் நவாபின் கைகளில் இருக்கவேண்டும். இல்லையேல் நிலைமை எப்படி மாறும் என்று சொல்லமுடியாது'' என்றான் நந்தினி.

காப்டன் கிளைவ் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. ''கவர்னர் உத்தரவிட்டால்தான் நான் திருச்சி போகமுடியும்'' என்று கூறினான் சிறிது சிந்தித்துவிட்டு.

''உங்கள் கவர்னர் அறிவாளியாயிருந்தால் உங்களை உடனடியாகத் திருச்சிக்கு அனுப்புவார்.''

கிளைவ் தலையசைத்தான். ''இப்பொழுது வந்திருக்கும் கவர்னர் எதிலும் தாமதம் காட்டாதவர். ஆனால் எப்போது உத்தரவு வருமோ தெரியாது'' என்றான்.

அந்தச் சமயத்தில் உள்ளே நுழைந்த ஆர்டர்லி, ''காப்டன்! கவர்னரிடமிருந்து தூதன் வந்திருக்கிறான்'' என்ற அறிவித்தான்.

''வரச் சொல்.''

அடுத்த விநாடி உள்ளே நுழைந்த ஒரு சோல்ஜர் காப்டனிடம் ஒரு கவரை நீட்டினான். கவரைப் பிரித்து உள்ளிருந்த கடிதத்தைப் படித்த கிளைவின் முகத்தில் சந்துஷ்டி, கவலை ஆகிய இருவித உணர்ச்சிகள் ஆட்கொண்டன. கையில் பிடித்திருந்த கவர்னரின் கடிதத்துடன் திரும்பிச் சுவரிலிருந்த படத்தை நோக்கினான் கிளைவ். பிறகு, ''அபாயம்! மிகுந்த அபாயம்!'' என்று சற்று இரைந்தே சொன்னான். கடைசியில் அரச குமாரியை நோக்கி, ''நீங்கள் தீர்க்கதரிசி'' என்றும் பாராட்டினான்.

28. ஜூலை, 1751

கவர்னரின் கடிதத்தைப் படித்துச் சுவரிலிருந்த கர்நாடக தேசப் படத்தையும் பார்த்து, 'அபாயம் அபாயம்' என்று கிளைவ் கூறியதன்றி, அரசகுமாரியை நோக்கி, 'நீங்கள் தீர்க்கதரிசி' என்று பாராட்டியதால் கவர்னர் கடிதத்தில் முக்கியமான விஷயம் ஏதோ அடங்கியிருக்கிறதென்பதை விஜயகுமாரன் நந்தினி இருவரும் புரிந்துகொண்டாலும், விளக்கம் காப்டன் வாயிலிருந்தே

வரட்டுமென்று இருவரும் அவனையே நோக்கிக் கொண்டிருந்தனர். கிளைவ் நீண்ட நேரம் தீர்க்க சிந்தனையில் இருந்தான். பிறகு கையிலிருந்த கவர்னரின் கடிதத்தை விஜயகுமாரிடம் நீட்டி, ''இதைப் படி. அரசகுமாரிக்கும் காட்டு'' என்று கூறினான்.

விஜயகுமாரன் கடிதத்தைப் பிரித்து அரசகுமாரிக்கும் காட்டித் தானும் படித்தான். தலையோடு தலையிடிக்கக் கவர்னர் கடிதத்தைப் படித்த இருவரும் மீண்டும் கிளைவை நோக்கிய போது இருவர் கண்களிலும் பிரமிப்பின் சாயை இருந்தாலும் விஜயகுமாரன் மட்டுமே சொன்னான், ''கிளைவ்! நீ சொன்னது சரி. அரசகுமாரி தீர்க்கதரிசிதான்'' என்று.

''ஆம்! அரசகுமாரி என்னைப் பதினைந்து நாட்களுக்குள் முகம்மது அலியிடம் கடிதத்தைச் சேர்க்கச் சொன்னார்கள். கவர்னரும் உடனடியாக திருச்சிக்குச் செல்ல உத்தரவிடுகிறார். கவர்னருக்கும் அரசகுமாரிக்கும் நிரம்ப ஒற்றுமையிருக்கிறது'' என்றான் கிளைவ்.

''கடிதம் கொடுத்திருப்பது நானல்ல. மகாராஜா பிரதாப் சிம்மர்'' என்ற நினைவூட்டினாள் நந்தினி.

கிளைவ் அதை ஆமோதிப்பதற்கு அறிகுறியாக லேசாகத் தலையை ஆட்டினாலும், ''கடிதத்தில் கண்ட விஷயம் மிக முக்கியமானதாக இருக்க வேண்டும்'' என்றான் நந்தினியை நோக்கி. மேலும் சொன்னான், ''இல்லாவிட்டால் கடிதத்தை இங்கே கொண்டுவர சொந்தப் பெண்ணை அனுப்பியிருக்க மாட்டார் மகாராஜா'' என்று.

விஜயகுமாரன், ''ஆம் ஆம்'' என்றான்.

''என்ன ஆம் ஆம்?'' என்று சினத்துடன் கேட்டாள் நந்தினி.

''அரசாங்க விஷயமான முக்கியமான முடிவுகளை உன்னிடம் தானே விடுகிறார் மகாராஜா?'' என்ற வினவினான் விஜயகுமாரன்.

''யார் சொன்னது? டபீர் பண்டிதரில்லையா? மானாஜி அப்பா இல்லையா?'' என்ற கேட்டாள் நந்தினி.

''அவர்களும் இருக்கிறார்கள், இன்னும் பல பேரும் இருக்கிறார்கள். ஆனால் நான் பிரிட்டிஷார் சார்பாகத் தூது வந்த போது முடிவெடுக்க உன் அறைக்குத்தானே மகாராஜா என்னை அழைத்து வந்தார்கள்?'' என்ற கேட்டான் விஜயகுமாரன்.

அந்தத் தூதின்போது நடந்த சம்பவங்கள் நந்தினியின் நினைவுக்கு வரவே அவள் நாணத்தால் தலை குனிந்தாள். அந்த அசந்தர்ப்ப நிலையிலிருந்து அவளை விடுவிக்க கிளைவ் இடைபுகுந்து, ''நடந்த விஷயங்களைப்பற்றி இப்போது பேச அவசியமில்லை. நடக்க வேண்டிய விஷயங்கள், எடுக்க

வேண்டிய முடிவுகள் அபாயமானவை. அவற்றைக் கவனிப் போம்'' என்ற கூறி, ''விஜயகுமார்! கவர்னர் நம்மை உடனடியாகத் திருச்சி செல்ல உத்தர விடுகிறார். அதுவும் அங்கிருக்கும் முகம்மது அலியின் படைகளுக்கும் நமது படைகளுக்கும் உணவு எடுத்துச் செல்ல பணிக்கிறார். ஒரு பெரும் படைக்கு, திருச்சியின் முற்றுகையில் கோட்டைக்குள் சிறைப்பட்டுக் கிடக்கும் ஒரு படைக்கு உணவு எடுத்துச் செல்வதென்றால் குறைந்த பட்சம் பதினைந்து பொதி வண்டிகளாவது வேண்டும். வழி நெடுக எதிரி இருக்கிறான். சந்தாசாகேபும் பிரெஞ்சுக்காரரும் திருச்சியை வளைத்து நிற்கிறார்கள். அந்தத் தடையைப் பிளந்து நாம் உட்செல்ல வேண்டும். ஆகவே உணவுப் பொதி வண்டிகளைக் காக்க ஐம்பது சோல்ஜர்களாவது வேண்டும்'' என்று விளக்கினான்.

அத்தகைய உணவுப் பொதி வண்டிக் கூட்டத்தைக் கொண்டு போய்த் திருச்சியில் சேர்ப்பதிலுள்ள கஷ்டத்தைத் திட்டமாகத் தெரிந்து கொண்ட விஜயகுமாரன், ''இத்தனை வண்டிக் கூட்டத்தை எதிரி கண்ணிலிருந்து மறைக்க ஒரே வழிதான் இருக் கிறது'' என்றான்.

''என்ன வழி?'' என்று ஆவலுடன் கேட்டாள் நந்தினி.

''எதிரி சோல்ஜர்களையும் சிப்பாய்களையும் குருடர் களாக அடிக்க வேண்டும்'' என்றான் விஜயகுமாரன் அலுப்புடன்.

விஜயகுமாரன் அலுப்பின் காரணத்தைக் கிளைவ் உணர்ந் திருந்தானாகையால் அதற்குப் பதில் சொல்லவில்லை அவன். ஏதோ யோசித்தான் பல விநாடிகள். கடைசியாகச் சொன்னான்: ''விஜயகுமாரா! அரசகுமாரியின் உதவி கொண்டு கொள்ளிடத் துக்கு அக்கரையிலிருக்கும் கிராமங்களில் பொதி வண்டிகளைத் தயார் செய். நான் லெயின்ட் டேவிட் கோட்டைக்குச் சென்று கவர்னருடன் பேசிவிட்டுத் தேவனாம்படினத்தில் உணவுப் பொருள்களைத் திரட்டி வருகிறேன். அப்புறம் அதைக் கொண்டு செல்லும் வழியைப்பற்றி யோசிப்போம்'' என்ற கூறி விட்டு அவர்கள் இருவரும் போகலாம் என்று கையாலும் சைகை செய்தான்.

அவர்கள் சென்ற இரண்டு மணி நேரத்துக்கெல்லாம் இரண்டு சோல்ஜர்களுடன் கிளைவ் லெய்ன்ட் டேவிட் கோட்டையை நோக்கிப் பயணமானான். அவன் புரவியைத் தட்டிவிடுமுன்பாக விஜயகுமாரனை நோக்கிச் சீக்கிரம் பொதி வண்டிகளை ஏற்பாடு செய்யுமாறு கூறினான். அத்துடன் புரவி யிலிருந்தபடியே குனிந்து, ''அந்த அடிமைப் பெண்மீது ஒரு கண் வைத்திரு, அவளை எக்காரணத்தை முன்னிட்டும் தப்ப விடாதே'' என்ற எச்சரிக்கவும் செய்தான்.

''ஏன்? அவள்...'' என்று ஆரம்பித்த விஜயகுமாரனைக் கண்ணைக் காட்டியே அடக்கி, ''காரணம் கேட்காதே. எந்த நிமிஷத்திலும் அவள் தப்பப் பார்க்கலாம்'' என்று சொல்லி விட்டுக் குதிரையைத் தட்டி நடக்கவிட்டுச் சற்றுத் தூரம் சென்றதும் பறக்க விட்டான்.

கிளைவின் புரவி கண்ணுக்கு மறைந்ததும் விஜயகுமாரன் பக்கத்தில் நின்ற நந்தினி, தான் அரசகுமாரியாக இருந்தாலும், வந்ததும் தூதுக்காகத்தான் என்றாலும், பெண்தான் என்பதைக் காட்டிக் கொண்டாள். ''உங்களிடம் காதில் ரகசியமாக அடிமைப் பெண்ணைப் பற்றிச் சொன்னாரே, அது என்ன?'' என்று வினவினாள் சந்தேகத்துடன் விஜயகுமாரனை நோக்கி.

''கிளைவ் ரகசியமாகச் சொன்னது உன் காதில் விழுந்து விட்டதா?'' என்று கேட்டான் விஜயகுமாரன் நகைத்து.

''ஆம், எனக்குப் பாம்புச் செவி'' என்றாள் அரசகுமாரி சினம் உதயமான விழிகளால் அவனை நோக்கி.

''அப்படியானால் நீ பாம்பா?''

''ஆம்.''

''கடிப்பாய் போலிருக்கிறது?''

''அதற்கு நாள் தேவையில்லை.''

''ஏன்?''

''நீங்கள் கண்ணை வைக்க வேண்டிய வேவுகாரி இருக்கிறாள்.''

இதைக் கேட்ட விஜயகுமாரன் புன்முறுவல் கொண்டான். ''கிளைவ் சொன்னது முழுதுமே உன் காதில் விழுந்திருக்கிறது!'' என்றம் கூறினாள் முறுவலின் ஊடே.

''விழாமல் எப்படியிருக்கும்? உங்கள் காதருகில் ரகசியம் பேசுவதுபோல் காப்டன் குனிந்தாரே தவிர, விஷயத்தை என் காதில் விழும்படியாகத்தானே சொன்னார்'' என்ற அரசகுமாரி, ''சரி சரி, நீங்கள் போய் அடிமைப் பெண்மீது கண்ணை வையுங்கள்'' என்ற கூறிவிட்டு வேகமாகக் கொள்விடத்தை நோக்கி நடந்தான்.

விஜயகுமாரன் அவள் சென்ற வேகத்தைக் கவனித்தான். ஒரு விநாடியில் கோட்டையை நெருங்கினான். கோட்டைத் தளத்தில் அந்த அடிமைப் பெண் நின்றிருந்தாள். அவன் கிளைவ் சொன்ன ரகசியத்தையும் மீறி, தனக்கும் நந்தினிக்கும் நடந்த விவாதத்தையும் கவனித்திருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்த விஜயகுமாரன் ஒரு சிப்பாயை அழைத்து அந்தப் பெண்ணைக் கண்காணிக்கும்படி உத்தரவிட்டு, நந்தினி சென்ற வழியைப் பின் பற்றிச் சென்றான்.

அவனை விட்டு வெக வேகமாகச் சென்ற நந்தினி கொள்ளிடக் கரைக்குச் சற்று முன்பிருந்த ஒரு பெரிய மரத்தின் மீது சாய்ந்து உட்கார்ந்து கொண்டு கொள்ளிடத்தை நோக்கினாள். விஜயகுமாரனும் வந்து அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, ''நந்தினி!'' என்று அழைத்து அவள் இடையில் தன் கையைச் செலுத்தினான்.

அந்த ஸாகசத்துக்கு அவள் நெளியவுமில்லை; பதில் சொல்லவுமில்லை. மரக்கட்டை போல் உணர்ச்சியற்று உட்கார்ந் திருந்தாள். அவள் இடுப்பை அவள் இறுக்கி அவளைத் தன் பக்கத்தில் இழுத்தான். இழுபட்டபோதும் அவள் எந்த உணர்ச்சியையும் காட்டவில்லை. அவனைத் தடை செய்யவுமில்லை, அதற்கு இழைந்து கொடுக்கவுமில்லை. ''நந்தினி!'' என்று மீண்டும் அழைத்தான் விஜயகுமாரன்.

''என்ன?'' சுட்டது பதில்.

''இந்த மாதிரி ஊடலுக்கு இது வேளை அல்ல'' என்றான் விஜயகுமாரன்.

''ஊடல் செய்ததாக யார் சொன்னது?''

''யாரும் சொல்ல வேண்டாம்; உன் போக்கு சொல்கிறது.''

''என்ன என் போக்குக்கு?''

''எதற்கு இங்கு வந்தாய்?''

''கொள்ளிடத்தைப் பார்க்க.''

''இதுவரை பார்த்ததில்லையா?''

''பார்த்திருக்கிறேன். மனச்சாந்தி குலையும்போதெல்லாம் இதைப் பார்ப்பேன். எத்தனையோ முறை இங்கு வந்தும் இருக்கிறேன், அமைதியை நாடி.''

விஜயகுமாரன் வலக் கை அவள் தலையைக் கோதிக் கொடுத்தது. ''கொள்ளிடம் ஒரு வெறும் நதி. அதில் ஏது சாந்தி?'' என்று வினவின அவன் உதடுகள்.

''கொள்ளிடமும் காவிரியும் வெறும் நதிகளல்ல. இந்த நாட்டின் புண்ணிய நதிகள். எதுவுமே வெறும் நதிகளல்ல. மக்களுக்கு அவை தாய்மாதிரி. தாயைப் பார்ப்பதும் சாந்தி, அமிழ்ந்து அவள் அலைக்கரங்களால் அணையப்படுவதும் சாந்தி'' என்ற நந்தினி பெருமூச்செறிந்தாள்.

அவள் மன வேதனையைப் புரிந்து கொண்டான் விஜயகுமாரன். ''நந்தினி! வீணாக மனத்தை அலைய விடுகிறாய். இந்த ஜன்மத்தில் இந்த மனம் வேறொரு பெண்ணை நாடாது. என்னால் ஏற்படும் வேதனைக்காக நீ கொள்ளிடத்திடமோ காவிரியிடமோ சாந்திக்குச் செல்லவேண்டாம். இன்று நீயும் நானும் நாட்டின் பெரும் மாறுதல்களுக்கு முன்பு நிற்கிறோம்.

வரலாற்று வாயில் எப்படித் திறக்கும், எப்பொழுது திறக்கும், யார் அதில் நுழைவார்கள் வெற்றி வாகையுடன் என்ற சொல்ல முடியாத நிலையில் இருக்கிறோம். இந்தச் சமயத்தில் சிறு விஷயங்களை நினைத்து உன் மனத்தைச் சஞ்சலத்துக்கு உள்ளாக்காதே.

''இளைவின் மனம் எனக்குத் தெரியும். இந்த அடிமைப் பெண்ணை உபயோகப்படுத்தி உணவுப் பொதிகளைத் திருச்சிக்குக் கொண்டு செல்ல ஏதோ திட்டமிடுகிறான். அவன் வந்தவுடன் விஷயம் தெளிவாகும். நந்தினி! அரசகுமாரியாக நடந்துகொள். என் சபதம், தஞ்சை அரசின் பிற்காலம், நமது வாழ்க்கை எல்லாமே இந்தச் சந்தாசாகிப்—முகம்மது அலி போரிலும், பிரிட்டிஷ்—பிரெஞ்சு சர்ச்சையிலும் அடங்கியிருக்கின்றன. விளைவுகளை நமக்கு அனுகூலமாகத் திருப்பப் பார்க்கிறேன். அதற்கு, உன் நிர்மலமான மனம், அந்த மனம் அளிக்கும் துணை இரண்டும் எனக்குத் தேவை. அவற்றை மறுக்காதே'' என்று கூறி அவளை இரு கைகளாலும் இழுத் தணைத்தான்.

அவள் மறுக்கவில்லை. மனத்தின் மாசுத் திரை நீங்க அவள் இதழ்களை அவனுக்குப் பறிகொடுத்தாள் ஒரு நிமிடம். நீண்ட நேரத்துக்குப் பின் கோட்டையை அடைந்த இருவர் மனத்திலும் சாந்தியும் சந்துஷ்டியும் நிரம்பி நின்றன.

அந்தச் சந்துஷ்டியின் விளைவாக மறுநாளே கொள்ளிடத்துக்கு அக்கரை சென்ற விஜயகுமாரன் பொதி வண்டிகளை ஏற்பாடு செய்தான். நான்காம் நாள் கிளைவும் பல உணவுப் பொதிகளுடன் ஸெய்ன்ட் டேவிட் கோட்டையிலிருந்து வந்து சேர்ந்தான். வந்ததும் வராததுமாகப் பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்தான். ஆனால் புறப்படுமுன்பு இரண்டு நாட்களைக் கர்நாடக நாட்டுப் படத்தைப் பார்ப்பதிலேயே கழித்தான். பிறகு தனிக் காகிதத்தில் ஒரு பகுதியைத் தானே வரைந்து பையில் வைத்துக்கொண்டான்.

1751 ஜூலை மாதத்தின் முதல் வார முடிவில் பொதி வண்டிகளை அழைத்துக் கொண்டு விஜயகுமாரனுடனும், அடிமைப் பெண்ணுடனும் மிக அபாயமான தனது பயணத்தைத் துவங்கினான் கிளைவ். தேவிக்கோட்டையிலிருந்து ஐந்து மைல் தூரத்திலிருந்த ஆச்சாளபுரத்தை அடைந்ததும் விஜயகுமாரனைத் தனிமையில் அழைத்துப் புரவியிலிருந்து குதித்து, ''விஜயகுமார்! நாம் சிறிது மாறவேண்டும் உருவத்திலும் உடையிலும். அதுமட்டுமல்ல, சம்பிரதாயமான வழியிலிருந்தும் மாற வேண்டும். இப்படி உட்கார்'' என்று கூறி ஆச்சாள்புரம் கோயில்

www.thamizhthenee.blogspot.com

வாசலில் உட்கார்ந்து பையிலிருந்த காகிதத்தைப் பிரித்துக் காட்டினான், விவரித்தான்.

கிளைவின் திட்டம் மிகச் சாமர்த்தியமானதாக இருந்தது. இருந்தும் அபாயமும் எதிர்நோக்கும் திட்டம் அது. ''திருச்சிக்கு உயிருடன் போய்ச் சேர்ந்தால் பெரும் விசித்திரம்!'' என்று கிளைவிடம் வாய்விட்டுச் சொன்னான் விஜயகுமாரன்.

29. சொத்தும் சொர்க்கமும்

தேவிக் கோட்டையிலிருந்து ஐந்து மைல் தூரத்திலிருந்த ஆச்சாள்புரம் சிவலோக தியாகராஜ ஸ்வாமி கோயிலின் கோபுர வாசற்படியில் உட்கார்ந்து பையிலிருந்த கர்நாடக தேசப் படத்தைப் பிரித்து விஜயகுமாரனுக்குக் காட்டிய கிளைவ், ''விஜயகுமார்! படத்தை நன்றாகக் கவனி. தேவிக் கோட்டையிலிருந்து திருச்சிக்கு மூன்று வழிகள் இருக்கின்றன. கொள்ளிடத்தைச் சற்று மேற்கில் தாண்டி வடபுறம் சென்று, போர்ட்டோநோவோவிலிருந்து நேராக வால்கொண்டாவை அடைந்து, திருச்சி ஆற்காட்டுப் பெருஞ்சாலை மூலமாகத் திருச்சியை அடைவது ஒரு வழி. சற்றுச் சுற்று வழிதான். இருப்பினும் சாலைகளும் பாதைகளும் பயணத்துக்கு மிக அனுகூலம். இரண்டாவது வழி இங்கிருந்து சீர்காழி வழியாகத் தஞ்சை சென்று அங்கிருந்து மேற்கில் பயணம் செய்து திருச்சியை அடைவது. மூன்றவது வழி சீர்காழியை அடைந்ததும் காவிரிப்பூம்பட்டினம் சென்று, அங்கிருந்து நேர் மேற்கில் திரும்பித் தஞ்சையை அடைந்து திருச்சி செல்வது. இம்மூன்றில் எது நமக்கு அனுகூலம்?'' என்று வினவினான்.

விஜயகுமாரன் தரையில் விரிக்கப்பட்டிருந்த அந்தப் படத்தை நன்றாகக் கவனித்தான். ''முதல் வழியில் செல்வது சுற்றுமட்டுமல்ல, தற்கொலைக்கு ஒப்பானதும்கூட. வால் கொண்டா சந்தாசாகிப் வசம் இருக்கிறது. அங்கிருந்து திருச்சி செல்லும் பெருஞ்சாலையில் ஆற்காட்டுப் படைகள் கண் காணிப்பு மிக அதிகமாயிருக்கும். நெடுக உள்ள வேவுப் படைகளின் கண்ணில் மண்ணைத் தூவுவதும் மிகவும் கஷ்டம்'' என்று கடைசியாகச் சொல்லவும் செய்தான்.

கிளைவ் விஜயகுமாரன் பேச்சை ஆட்சேபிக்கவும் இல்லை, அங்கீகரிக்கவும் இல்லை. ''அடுத்த வழி?'' என்று மட்டும் வினவினான்.

விஜயகுமாரன் கண்ணைப் படத்திலிருந்து எடுக்கவில்லை. இரண்டாவது வழியைத் தன் ஆள்காட்டி

விரலால் நீளத் தடவினான் ஒருமுறை. பிறகு சொன்னான், ''இந்த வழியில் தஞ்சை வரையில் பாதுகாப்பு இருக்கிறது நமக்கு. அதற்குபின் நேராகத் திருச்சியை முற்றுகையிட்டிருக்கும் சந்தாசாகிபின் வாயில் நுழைவோம்'' என்று.

அதற்கும் பதில் சொல்லவில்லை காப்டன் கிளைவ். விஜயகுமாரன் மூன்றாவது வழியையும் ஆராய்ந்தான். ''இது மிக அபாயம். காரைக்கால் பிரெஞ்சு தளம். அதில் போய் மாட்டிக் கொள்வதைவிட இந்த ஆச்சாள்புரத்திலேயே தற்கொலை செய்து கொள்ளலாம்'' என்றான்.

''உபயோகமில்லை என்ற சொல்லவில்லை. ஆபத்து இருப்பதைச் சுட்டிக் காட்டினேன்'' என்றான் விஜயகுமாரன்.

''நாம் திருச்சிக்குச் செல்வது சந்தாசாகிபின் பாராட்டுதலைப் பெறுவதற்கல்ல. முகம்மது அலியைச் சந்திக்கச் செல்கிறோம். ஆகையால் காரணத்திலேயே ஆபத்து இருக்கிறது...'' என்ற கிளைவ், தனது கண்களைப் படத்திலிருந்து உயர்த்திச் சற்று எட்ட நின்ற இருந்த அடிமைப் பெண்ணை நோக்கினான் சில விநாடிகள். பிறகு அவளை அருகில் வரும்படி சைகை செய்து, ''பெண்ணே! நீ என் அடிமைதானே?'' என்று வினவினான்.

''என் உயிரைக் காத்திருக்கிறீர்கள், முகம்மது அலியின் சகோதரிடமிருந்து'' என்றாள் அடிமைப் பெண்.

''எனக்காக உன் உயிரைக் கொடுப்பாயா?'' என்று வினவினான் கிளைவ்.

''என் உயிர் உங்களுடையது. உங்கள் விருப்பப்படி அதை உபயோகிக்கலாம்'' என்றாள் அவள் முகத்தில் எந்தவிதச் சலனமுமின்றி.

''உன் தந்தைக்கு நான் எதிரி'' என்று சுட்டிக் காட்டினான் கிளைவ்.

''ஆம்.''

''அவருக்கு எதிராக நான் எடுக்கும் நடவடிக்கைகளில் நீ எப்படி எனக்கு உதவ முடியும்?''

''தந்தை என்னைப் பார்த்ததில்லை. நான் அவரைப் பார்த்ததில்லை, பாசத்திற்கு இடமில்லை.''

''வேறு எதற்கு இடம்?''

''கடமைக்கு.''

''சரி. நீ போ'' என்று கிளைவ் அவளை அனுப்பிவிட்டு மீண்டும் படத்தில் கண்களைச் செலுத்தினான். கடைசியாகத் தன் விரலால் தான் செல்ல உத்தேசித்திருந்த வழியைக் காட்டினான் விஜயகுமாரனுக்கு.

''விஜயகுமார்! மேற்படி மூன்று வழிகளிலும் நாம் போகப் போவதில்லை. தஞ்சையை நாம் புறக்கணிப்போம். இங்கிருந்து கொள்ளிடக்கரையே சென்று தெற்கே திரும்பி, கோயிலடிக் கோட்டையை அடைகிறோம் நேராக. கோயிலடி பிரெஞ்சுக்காரர் தளம். அங்கு ஒரு நாள் இளைப்பாறிக் காவிரியைக் கடந்து திருச்சி எல்லையை அடைகிறோம் பிறகு திருச்சி பெருஞ்சாலையையும் சிறுவீதிகளையும் புறக்கணித்து வயல்கள் வழியாக இரவில் திருச்சிக்கோட்டை மதிளை அடைகிறோம். மதிளை அடைந்ததும் ஓர் அம்பை எறிகிறோம் கோட்டைக்குள். அந்த அம்பு ஓர் ஓலையைத் தாங்கிச் செல்லும். பிறகு வெகு வேகமாகப் பொதி வண்டிகளைச் செலுத்தித் தெற்குக் கோட்டை வாசலில் நுழைகிறோம். அங்கிருக்கும் சிறு பிரெஞ்சுப் படையுடன் மோத வேண்டியிருக்கும். நாம் எதிரியைத் தாக்கியவுடன் உள்ளிருந்து நமக்கு உதவி கிடைக்கும்'' என்று விவரித்தான் கிளைவ்.

விஜயகுமாரன் அது மிகவும் ஆபத்தான வழி என்பதை உணர்ந்தாலும், அதைவிடச் சிறந்த வழியை அவன் அறியாததால் ஒரு கேள்வி கேட்டான். ''கோயிலடி பிரெஞ்சு தளமானால் அங்குள்ள படைப் பிரிவை எப்படி ஏமாற்ற முடியும்? அங்கு எப்படி இளைப்பாற முடியும்?'' என்று வினவினான் விஜயகுமாரன்.

''இங்கேதான் நாம் மாறுகிறோம். இங்கிருந்து நாம் கிளம்பு முன்பே நானும் நம்முடன் வரும் ஐந்து பிரிட்டிஷ் சோல்ஜர்களும் பிரெஞ்சு ராணுவ உடைகளை அணிந்து கொள்வோம். எனக்குப் பிரெஞ்சு பேசத் தெரியும். நீ முகம்மதிய உடை அணிவாய். நீ சந்தாசாகிபின் படையில் ஹவில்தார் அல்லவா?'' என்று கேட்டான் கிளைவ்.

''ஹவில்தாரா! சந்தாசாகிபின் படையிலா!'' வியப்பு குரலிலும் மிதமிஞ்சி ஒலிக்கக் கேட்டான் விஜயகுமாரன்.

''ஆம்.'' கிளைவ் பதிலில் ஏளனமிருந்தது.

''யார் நம்புவார்கள் இதை?''

''பிரெஞ்சுக்காரர்.''

''எப்படி?''

''சந்தாசாகிபின் மகள் அதற்கு அத்தாட்சி கூறுவாள்.''

''அடிமைப் பெண்ணா?''

''ஆம். அவளை வேவுக்குத் தயார் செய்தது நீ தானே?''

இந்த விபரீதத் திட்டத்தைக் கேட்டதும் வாயைப் பிளந்தான் விஜயகுமாரன். ''இந்தக் கட்டுக் கதையை யார் நம்புவார்கள்?'' என வினவினான்.

''பிரெஞ்சுக்காரர்'' என்றான் கிளைவ்.

''எதற்காக நம்ப வேண்டும்?''

''நாம் செல்வதே சந்தாசாகிபின் படைகளுக்கும் உணவு சப்ளை செய்வதற்காக. அதில் சிறிது கோவிலடி படைகளுக்கும் அளிக்க டுப்ளே உத்தரவிட்டிருக்கிறார். அதற்காகத் தான் கோவிலடிப் போகிறோம்'' என்று சர்வசகஜமாகச் சொன்னான் கிளைவ்.

இந்தக் கோட்டைப் புளுகைப் பிரிஞ்சு தள அதிகாரி ஜீரணிப்பாரா என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான் விஜயகுமாரன். ''கண்டிப்பாக இந்தப் புரட்டு வெளிப்பட்டுவிடும்'' என்றே நம்பவும் செய்தான்.

இருப்பினும் கிளைவ் தனது திட்டத்தை உடும்புப் பிடியாகப் பிடித்து அன்றிரவே பிரிட்டிஷ் சோல்ஜர்களையும், பொதி வண்டி ஓட்டுபவரையும் அழைத்து விஜயத்தைக் கூறி எச்சரித்தான். ''பிரிட்டிஷ் சோல்ஜர்கள் பிரெஞ்சு ராணுவ உடை தரிக்க வேண்டும். நமது உடைக்கும் அதற்கும் செங்குத்தாக உள்ள அவர்கள் ஹாட்டைத் தவிர வேறு வித்தியாசம் கிடையாது. மற்றவர்கள் முகம்மதிய உடைகளில் வருவார்கள். என்னைத் தவிர யாரும் பேசக்கூடாது. பேசுவதானால் அடிமைப் பெண் பேசுவாள். உத்தரவை மீறி யார் வாயைத் திறந்தாலும் அந்த இடத்திலேயே சுட்டுவிடுவேன்'' என்று திட்டமாகக் கூறவும் செய்தான். பிறகு அரசகுமாரியைத் தனிப்பட அழைத்து, ''அரசகுமாரி! நீங்கள் தஞ்சை சென்று உங்கள் தந்தையிடம் கூறுங்கள், அவர் ஆணைப்படி இன்னும் பதினைந்து நாளல்ல, ஒரு வாரத்துக்குள்ளாகவே அவர் கடிதம் மும்மது அலியின் கையிலிருக்குமென்று'' எனக் கூறினான்.

''ஏன்? நீங்கள் தஞ்சை வரவில்லையா?'' என்று கேட்டாள் நந்தினி.

''தஞ்சை வந்தால் நாங்கள் வருவது எதிரிக்குத் தெரிந்து விடும். பிறகு நாங்கள் திருச்சியை அணுகுவது குதிரைக் கொம்பாகிவிடும். தவிர, உங்கள் தந்தையின் விருப்பமும் அதுவல்ல'' என்றான் கிளைவ்.

''தந்தையின் விருப்பம் அதுவல்லவா?'' என்று கேட்டாள் நந்தினி வியப்புடன்.

''அல்ல.''

''எப்படித் தெரியும் உங்களுக்கு?''

''தஞ்சையில் எங்களை எதிர்பார்த்தால் உங்களிடம் ஓலையை அனுப்பியிருக்க மாட்டார், உங்கள் தந்தை. தற்சமயம் அவர் சந்தாசாகிபின் சந்தேகத்துக்கு ஆளாவதும் உசிதமல்ல.''

இதைக் கூறிய கிளைவ் நேராக எதிரிலிருந்த ஒரு வீட்டுக்குச் சென்றான். அங்கே சென்று தங்கியதும் மறுநாள்

உடைகளை மாற்றி இரவிலேயே பயணம் செய்யத் துவங்கினான். விஜயகுமாரனும் மாற்றுடை அணிந்து அரசகுமாரி இருந்த இல்லத்துக்குச் சென்று அவளிடம் விடை பெற்றுக் கொண்டான். விடை பெற்றபோது அவளைக் கட்டியணைக்கவும் செய்தான். ''விடுங்கள்! யாராவது பார்த்தால் நான் சந்தாசாகிபின் ஹவில்தாரின் மனைவியென்று நினைப்பார்கள்'' என்று கூறி வருத்தம் கலந்த புன்முறுவல் ஒன்றை வெளியிட்டாள் நந்தினி. பெரிய ஆபத்தை நோக்கி அவன் செல்கிறானென்பதை உணர்ந்ததால் அவள் இதயம் துடித்துக் கொண்டிருந்தது. கண்களில் நீர் திரண்டது. அவற்றைத் தனது உதடுகளால் அழித்த விஜயகுமாரன், ''அஞ்சாதே நந்தினி! கண்டிப்பாய்த் திரும்புவேன் உயிருடன். நிறைவேற்ற வேண்டிய சபதம் இருக்கிறது; அனுபவிக்க வேண்டிய சொத்து இருக்கிறது. இரண்டையும் விடமாட்டேன்'' என்று ஆறுதல் சொன்னான்.

''சொத்தா!'' கண்ணீருக்கிடையில் கேட்டாள் நந்தினி.

''ஆம்.''

''எங்கே?''

''இதோ'' என்று அவள் மார்பைத் தொட்டுக் காட்டி, ''இந்தப் பயணத்திலும் சரி, பின்னால் ஏற்படவிருக்கும் போரிலும் சரி ஒன்று வீரசொர்க்கமடைவேன் வீரனாக அல்லது இன்ப சொர்க்கம் நாடி வருவேன் காதலனாக'' என்று சொன்ன விஜயகுமாரன், அவளை இழுத்து நெறுக்கியணைத்து, முத்திரை பொதித்து விலகிச் சென்றான்.

விக்கினாள் அரசகுமாரி. அவள் உள்ளம் சுக்குநூறாக வெடித்துக் கொண்டிருந்தது. ''அரங்கன்தான் உங்களைக் காத்து என்னிடம் அனுப்ப வேண்டும்'' என்று பள்ளிகொண்ட பரமனை மனத்துள் வேண்டவும் செய்தாள்.

30. சாம்ராஜ்யப் புயல்

மறுநாளிரவு மாற்றுடை யணிந்து விஜயகுமாரனுடனும் மற்ற வீரர்களுடனும் தனது பயங்கரப் பயணத்தைத் துவங்கிய கிளைவ், அரசகுமாரியை ஜாக்கிரதையாகத் தஞ்சைக்கு அழைத்துச் செல்லப் போதிய காப்பு அளித்துவிட்டு, ''அரசகுமாரி! இந்தப் பயணம் இந்த நாட்டின் சரித்திரத்தைத் திருப்பலாம் என்று மகாராஜா பிரதாப் சிங்கிடம் சொல்லுங்கள்'' என இறுதியாகக் கூறிவிட்டு, பொதி வண்டிகளைப் பின்தொடரப் பணித்து, தான் மட்டும் விஜயகுமாரனுடன் புரவில் ஏறி முன்னதாக வழிகாட்டிக் கொண்டு சென்றான். கொள்ளிடக் கரையின் தென்புறத்தில் ஒற்றை

வண்டி போகும் குறுகிய பாதையே இருந்ததால் மற்றச் சோல்ஜர்களும் சிப்பாய்களும் அடிமைப் பெண்ணும் பொதி வண்டித் தொடரின் பின்பகுதியில் சென்றார்கள். அந்தப் பவனியைத் தன் வீட்டு வாசலிலிருந்து கவனித்துக் கொண்டிருந்த அரமகுமாரி, புரவியில் கிளைவும் விஜயகுமாரனும் அமர்ந்திருந்த கம்பீரத்தைப் பார்த்து, இருவரும் கர்ம வீரர்கள் என்று புரிந்த கொண்டாலும், அந்த இருவரில் தன் காதலனும் ஒருவன் என்பதையும், அவன் தன்னைப் பிரிந்து அபாயத்தை நோக்கிச் செல்கிறான் என்பதையும் உணர்ந்ததன் விளைவாக ஒரு பெருமூச்சும் விட்டாள். அவளது கலங்கிய கண்கன், முன்பே சென்ற இரு காளைகளையும் கண்டன. வண்டிகளை இழுத்த காளைகள்மீது பதிந்தன. பதிந்த கண்களில் நீரும் திரண்டன. திரணட நீரில் தூரத்தே சென்றவர்கள் நிழல்கள் போலத் தெரிந்தனர். அந்த நிழல்களும் இருட்டளித்த நிழலில் கலந்துவிடவே, அந்தகாரம் அவள் கண்களை என்ன, இதயத்தையும்கூடச் சூழ்ந்து கொண்டது.

கிளைவும் இருட்டளித்த கருமையில், அந்தகாரத்திலேயே அடுத்த வாரம் முழுவதும் பயணம் செய்தான். கொள்ளிடக்கரையை அடுத்துத் தஞ்சை மன்னர்களால் விவசாயிகளுக்காகப் போடப்பட்டிருந்த வண்டிப் பாதை அவ்வப்போது சீர்படுத்தப்பட்டு வந்தாலும், ஆற்றின் அருகாமையால் அடிக்கடி வெடிப்புக் கொடுத்திருந்ததால் பயணம் மிகக் கஷ்டமாகவே இருந்தது.

கொள்ளடத்தின் தென்கரை தஞ்சை அரசைச் சேர்ந்ததானாலும் தாங்கள் வருவது யாருக்கும் தெரியக் கூடாதென்ற காரணத்தால் கிளைவ் பகல் பயணத்தை அடியோடு கைவிட்டான். பகலில் கொள்ளிடக்கரையை அடுத்த அடர்ந்த தோப்புகளில் தங்கி இரவு மூண்டதும் பயணத்தைச் செய்து வந்தான். இப்படி மறைந்தும் நிதானமாகவும் பயணம் செய்ததன் விளைவாக, சீக்கிரமாகத் திருச்சியை அடைய முடியவில்லை கிளைவினால். அத்தனை நிதானத்திலும்கூட சில சமயங்களில் விபத்துக்கள் நேர்ந்தன. பாதை மடிப்பில் தட்டி இருமுறை இருவண்டிகள் குடை சாய்ந்தன. அந்தக் குடை சாய்ந்த வண்டிகளின் மாடுகளை அவிழ்த்துவிட்டுச் சிப்பாய்களைக் கொண்டு வண்டிகளை நிமிர்த்தி, பிரித்துக் கொட்டிய பருப்பு மூட்டையொன்றைத் தைத்து கூடப் பயணம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

இரண்டு வண்டிகளில் ஒன்று குடை சாய்ந்தபோது உடன் வந்த சிப்பாய்களோ, சோல்ஜயர்களோ அதை நிமிர்த்த முடியாமல் திண்டாடியபோது, கிளைவ் தன் குதிரையிலிருந்து குதித்துத் தனது

தோளை வண்டியில் சாய்ந்த கூண்டில் கொடுத்து மற்றவர்களுடன் தூக்கவும் செய்தான். இப்படி எந்தப் பணியையும் குறைந்த பணியாக நினைக்காமல் குறிக்கோளொன்றையே பிரதானமாக நினைத்து, சொல்லவொண்ணா கஷ்டங்களை ஒரு வார்த்தைகூடப் பேசாமல் அநுபவித்துக் கொண்ட கிளைவை ஒவ்வொரு நாளும் உள்ளூறப் பாராட்டிக் கொண்டிருந்தான் விஜயகுமாரன்.

ஆச்சான்புரத்திலிருந்து புறப்பட்ட ஒரு வாரம் கழித்துக் கொள்விடக் கரைத் தோப்பு ஒன்றில் ஒரு நாள் இரவு கள்ளிகளை உடைத்துப் போட்டு நெருப்பு உண்டாக்கிக் கிளைவ் குளிர் காய்ந்து கொண்டிருந்தான். கல்கத்தா சென்று குணம் பெற்று வந்த பிறகும்கூட அந்தப் பழைய குளிர் காய்ச்சல் எப்போதாவது ஒருமுறை கிளைவைப் பாதித்துக் கொண்டுதான் இருந்தது. இந்தப் பயணத்தின்போது அந்தக் குளிர் காய்ச்சல் பிடித்துக் கொள்ளவே, அன்றிரவு பயணத்தை நிறுத்தியிருந்தான் காப்டன்.

கொய்னாவை எடுத்து நீரில் கலக்கிக் குடித்துவிட்டுப் படுத்து விட்ட கிளைவ், இரவு ஒன்பது மணிக்கு மெள்ள விழித்துச் சுள்ளிகளைப் போட்டுக் குளிர்காயத் தீமூட்டச் செய்தான். அந்தத் தீயில் மிலிடெரி தடிப் போர்வையை உடல் முழுவதும் போர்த்திய வண்ணம் குளிரும் காய்ந்தான். அவன் ஜுரத்திலிருந்தபோது அவன் பக்கத்தில் உட்கார்ந்து அவன் நெற்றியைப் பிடித்து விட்ட அடிமைப் பெண், அப்போதும் அவளருகில் இணைந்து உட்கார்ந்து நெற்றிப் பொட்டுகளை அழுத்திக் கொண்டிருந்தாள். எதிரே உட்கார்ந்திருந்த விஜயகுமாரன் அந்த நிலையில் கிளைவை நோக்கிச் சொன்னான். ''கிளைவ்! உன்னைப் பார்த்தால் எனக்குப் பொறாமையா யிருக்கிறது'' என்று.

கிளைவின் ஜுரக் கண்கள் அவனை விஷமத்துடன் ஏறெடுத்து நோக்கின. ''இவளை வேண்டுமானால் உன் தலையைப் பிடிக்கச் சொல்.''

விஜயகுமாரன் மேலும் பார்த்தான் வியப்புடன், ''ஜுரம் எனக்கில்லை'' என்றான் மெதுவாக.

''இருக்கிறது'' என்று கூறினாள் கிளைவ்.

''என்ன ஜுரம்?''

''பிரிவு ஜுரம்''

''பிரிவு ஜுரமா?''

''அரசகுமாரியின் பிரிவினால் உள்ளூற அடிக்கும் ஜுரம்.''

இதைச் சொன்ன கிளைவ் நகைத்தான்.

''கிளைவ்!'' விஜயகுமாரன் அழைப்பில் சங்கடமுமில்லை; வியப்புமில்லை.

''ஏன்ன விஜயகுமார்?''

''என் விஷயம் கிடக்கட்டும்...''

''என் விஷயத்துக் கென்ன?''

''இந்த உடல்நிலையில் எந்தக் காப்டனும் இத்தகைய பயங்கரப் பயணத்தை மேற்கொள்ள மாட்டான்'' என்று கூறிய விஜயகுமாரன் மேலும் சொன்னாள். ''உன் மனத்தில் என்ன இருக்கிறதென்பது எனக்குத் தெரியாது. எதுவாயிருந்தாலும் அது பெரும் படைகளால் சாதிக்க முடியாது. எப்போதோ உதயமாகும் ஒரு மகாவீரனால்தான் சாதிக்க முடியும். அத்தகைய வீரனில் நீ ஒருவன். பிரெஞ்சு ஆதிக்கத்தைக் குலைக்க, பிரிட்டனை உச்ச நிலைக்குக் கொண்டு செல்ல நீ பிறந்திருக்கிறாய். உன்னிடம் சேவை செய்வது என் நாட்டுக்கு நல்லதல்ல. இருப்பினும் அதை நான் பெருமையாகக் கருதுகிறேன். எனக்கு எது வேண்டும் என்பதே இப்போது புரியவில்லை. நாட்டுச் சுதந்திரமா? அல்லது சபதத்தின் வெற்றியா? எதுவுமே தெரியவில்லை எனக்கு. ஜுரத்தில்கூடச் சளைக்காத உன் மன உறுதி என்னை மயக்கியிருக்கிறது.''

இப்படிச் சொல்லி முடித்த விஜயகுமாரன் சட்டென்று எரிந்த கள்ளிகள் அளித்த வெளிச்சத்திலிருந்து எழுந்து கொள்விடக் கரையை நோக்கிச் சென்றான். அவள் போவதைப் பார்த்த கிளைவ் மெல்லப் புன்முறுவல் செய்தாள். ''எப்படிப்பட்ட வீரர்களை இந்த இந்தியா படைத்திருக்கிறது...! இருந்தும் எப்படித் தத்தளிக்கிறது சிலரின் சுயநலத்தால்?'' என்று முணுமுணுத்துக் கொண்டான்.

மறுநாளிரவு மீண்டும் பொதி வண்டிகளின் சக்கரங்கள் உருண்டன. தேவிக்கோட்டையிலிருந்து புறப்பட்ட பத்தாவது நாளிரவு, ஆச்சான்புரத்திலிருந்து பயணப்பட்ட எட்டாவது நாளிரவு, கிளைவ் கோயிலடிக் கோட்டையை அடைந்தான். கோட்டையின் மேற்கு வாயிலை அடைந்ததும் புரவியின் லகானைப் பிடித்து இழுத்த கிளைவ் தனது கத்தியை உயர்த்தி, ''கவர்னர் டுப்ளேயின் தூதுவனுக்குக் கதவு திறக்கட்டும்'' என்று கூவினான் பிரெஞ்சு மொழியில்.

கோட்டைக் கதவுகள் மெள்ளத் திறந்தன. கிளைவ் மட்டும் உள்ளே சென்றான். அங்கு அவன் என்ன பேசினானோ யாருக்கும் தெரியாது. அடுத்த ஒரு மணியில் கதவுகள் திறந்து பொதிகள் கோட்டைக்குள் நுழைந்தன. கிளைவைச் சுமார் இரண்டு மணி நேரத்துக்கு விஜயகுமாரன் பார்க்கவில்லை. பார்த்தபோது கிளைவ் மகா சிடுமூஞ்சியாக இந்தான். ''நவாப் மகள் எங்கே?'' என்று ஹிந்துஸ்தானியில் வினவினான்

எரிச்சலுடன். பிறகு அடிமைப் பெண்ணைக் கண்டதும் தலைவணங்கி, ''வாருங்கள்'' என்று எதிரே தெரிந்த கோயிலுக்கருகிலிருந்த ஒரு வீட்டிற்கு அழைத்துச் சென்றான். போகும்போது விஜயகுமாரனை நோக்கி,''ஹவில்தார்! நான்கு பருப்பு மூட்டைகளைக் கோட்டைக் கிடங்குக்கு அனுப்பு'' என்று ஹிந்துஸ்தானியில் கூறிச் சென்றான். சற்று நேரத்திற்கெல்லாம் வந்த சில ஆற்காட்டுச் சிப்பாய்களிடம் விஜயகுமாரன் நான்கு மூட்டைகளை எடுத்துக் கொடுத்தான். அந்தச் சிப்பாய்கள் மூட்டைகளை முதுகில் சுமந்து சென்றபோது போட்ட முனகல் சப்தம், கோவிலை அணைத்து ஓடிய காவிரி நீரின் சலசலத்த ஒலியுடன் கலந்து கொண்டது.

பொதிகள் இறங்கிய ஒரு மணி நேரத்திற்குப் பிறகு வந்த கிளைவுடன் பிரெஞ்சு காப்டனும் வந்தான். ஹவில்தார் விஜயகுமாரனுக்கும் மற்றவர்களுக்கும் உணவு அளிக்குமாறு பிரெஞ்சு சோல்ஜர்களுக்கு உத்தரவிட்ட பிரெஞ்சு காப்டன், கிளைவை அங்கேயே விட்டுச் சென்றான். அவன் சென்றதும் விஜயகுமாரனை அணுகிய கிளைவ், ''விஜயகுமாரா, கோட்டையைப் பார்த்தாயா?'' என்ற வினவினான் ரகசியமாக.

''முன்பே பார்த்திருக்கிறேன்'' என்றான் விஜயகுமாரன்.

''பலமான கோட்டை'' என்றான் கிளைவ்.

''என்ன கோயில் இது?''

''அப்பக் குடத்தான்.''

''அப்படியென்றால்?''

''சொன்னால் உனக்கு விளங்காது.''

''சரி, விளங்க வேண்டாம். இதிலிருந்து உடனடியாக நாம் தப்ப வேண்டும்.''

''ஏன்?''

''காப்டன் ஏதோ சந்தேகப்படுகிறான். அடிமைப் பெண்ணின் முகம் நல்ல வேளையாகச் சந்தாசாகிபின் முகத்தைப் போலிருக்கிறது. அதைக் கண்டுதான் மாறினான்'' என்ற கிளைவ் மேலும் சொன்னான்: ''இந்த மாதிரி பொதி வருமென்று டூப்ளேயிடமிருந்து செய்தி கிடையாது என்று ஆட்சேபணை கிளப்பினான் பிரெஞ்சுக் காப்டன். பிறகு சந்தாசாகிபின் குமாரத்தி மாறு வேடத்தில் வந்திருப்பதாகவும் நவாபின் உத்தரவின்மேல் அவர்களுக்காக இந்தப் பொதிகள் வந்திருப்பதாகவும் சொன்னேன். பிறகு அடிமைப் பெண்ணையும் காட்டினேன். மெள்ள திருப்தியடைந்தான். பிறகு ஒரு சேதி சொன்னான், 'நாளைக்குப் பிரெஞ்சு தளபதி டூ ஆதுனில் இங்கு வரப்போவதாக. இந்த நிலையில் நாம் இங்கு அதிக நேரம் தங்குவது பிசகு. விடியற்காலையில் கிளம்பி விடுவோம்' என்று.

அம்மாதிரியே பொதி வண்டிகளை விடிவதற்கு முன்பே பூட்டிய கிளைவ், காவிரிக்குள் இறக்கினான் வண்டிகளை. பிரெஞ்சுக் காப்டன் அவர்களுக்கு வழி காட்டவோ எதற்கோ துணையாக ஒரு பிரெஞ்சு சோல்ஜரையும் புரவியில் அனுப்பியிருந்தான். காவிரி மணலில் புரவிகள் தத்தளித்து நடந்தன. வண்டியிழுத்த காளைகள் திண்டாடின. இருப்பினும் அவற்றுக்கு வண்டியோட்டிகள் தார்க்குச்சி போட்டும் வாலை முடுக்கியும் ஓட்டினார்கள். காவிரிப் பயணம் மிகக் கஷ்டப்பட்டு நடந்தது.

அந்தக் கஷ்டத்தைத் தாங்காத ஒரு பிரிட்டிஷ் சோல்ஜர், ''டாமிட், வாட் எ டெரிபிள் திங்'' என்ற ஆங்கிலத்தில் இறைந்து விட்டான். அதைக் கேட்டதும் கிளைவை உற்று நோக்கிய பிரெஞ்சு சோல்ஜர் எதையோ புரிந்துகொண்டு விட்டவன் போல் கோட்டையை நோக்கித் திரும்பினான். அதுதான் அவன் செய்த தவறு. கிளைவின் கைத்துப்பாக்கி அதன் உறையிலிருந்து வெகு வேகமாக வெளி வந்தது. அதைத் திருப்பி அதன் பிடியில் பிரெஞ்சுக்காரன் பொட்டில் அடித்த கிளைவ் அவன் நிலத்தில் சாய்ந்ததும் அவனை எடுத்துப் பொதி வண்டி யொன்றில் போடச் செய்தான்.

அதற்குப் பிறகு அதிக தடையில்லாமல் பயணம் நடந்தது. மூன்று இரவு பயணம் செய்து நான்காம் நாளிரவு வயல்களின் பக்கமாகத் திருச்சிக் கோட்டை மதிளை அடைந்ததும், அதற்காகத் தயாராக வைத்திருந்த வில்லால் அம்பு ஒன்றைப் பறக்க விட்டான் கோட்டைக்குள். பிறகு பொதி வண்டிகளைப் பின் தொடரச் சொல்லிக் கிழக்கு வாயிலை அடைந்து உள்ளே புகுந்தான்.

கோட்டையின் உட்புறத்தை அடைந்ததும் பொதி வண்டி களைத் தொடரச் சொல்லிக் காப்டன் ஜீன்ஜின்ஸ் தங்கியிருந்த வீட்டை அடைந்தான். அது வீடு மாதிரியில்லாமல் பல அறை களுடன் பாசறை மாதிரியே இருந்ததைக் கண்டு வியந்த கிளைவ், இந்தச் சூழ்நிலையில் காப்டன் ஜின்ஜின்ஸ் எதிரிகளுக்குத் தண்ணீர் காட்டியிருக்கலாம் என்ற எண்ணினான். ஆனால் மறு நாளைக்குள் காப்டன் ஜின்ஜின்ஸுக்கும் படை வீரர்களுக்கும் உபதளபதிகளுக்கும் இருந்த கிலியைப் பார்த்து அனேகமாக முகம்மது அலி முடிந்தார் என்ற தீர்மானித்தான். இத்தனையிலும் கிலி பிடிக்காத ஒரு மனிதனைக் கண்டு கிளைவ் உற்சாகம் கொண்டான்.

அவன் வந்த மறுநாளே அவனைத் தமது ஆஸ்தான அறையில் சந்தித்த முகம்மது அலி, கிளைவுக்கு நன்றி கூறினார். ''எதிரி சூழ்ந்துள்ள இந்தக் கோட்டையை நீங்கள் எப்படி நாடினீர்களோ புரியவில்லை எனக்கு. ஆனால் இந்த உணவு

எங்கள் பட்டினியைத் தீர்க்கும். படைகளுக்குச் சிறிது ஆறுதலையும் அளிக்கும்'' என்றார் நவாப் முகம்மது அலி. அவர் முகத்தில் துன்பப் புன்முறுவலின் சாயை படர்ந்து கிடந்தது.

முகம்மது அலி, கிளைவைத் தமது அரண்மனையிலேயே இரண்டு நாள் இருத்திக் கொண்டார். மூன்றாவது நாள் சொன்னார், ''காப்டன் கிளைவ்! சந்தாசாகிபின் படைகள் பூராவும் இங்கே தூங்குகின்றன. இப்போது ஆற்காட்டை யாராவது தாக்கினால் பிடிப்பது சுலபம். ஆற்காடு பிடிபட்டால் சந்தாசாகிப் மீண்டும் அங்கே திரும்பும்படி இருக்கும். அதை நீங்கள் செய்ய முடியுமா?'' என்று.

கிளைவ் சிந்தனையில் இறங்கினான். ''நான் எந்த முடிவும் எடுக்க முடியாது யுவர் மெஜஸ்டி! கவர்னரிடம் சொல்லிப் பார்க்கிறேன்'' என்றான் முடிவில். ஆனால் மும்மது அலி விதைத்த வித்து மெள்ள ஊன்றியது, முளைவிட்டது, கிளைவின் சாம்ராஜ்யக் கனவில்.

அந்தக் கனவுடன் 1751 ஆகஸ்ட் இரண்டாவது வாரத்தில் வந்தான் கிளைவ் ஸெய்ன்ட் டேவிட் கோட்டைக்கு. அந்த வருகை, வருகையிலிருந்த கனவு, உள்ளே எழுந்திருந்த போர் வெறி மெள்ள மெள்ள உருவாயிற்று, சாம்ராஜ்யப் புயலாக. அந்தப் புயலில் கிளைவுடன் கவர்னர் ஸாண்டர்ஸும் கலந்து கொண்டார்.

இரண்டாம் பாகம் முற்றும்

www.thamizhthenee.blogspot.com